


நீயின்றி நானில்லை

- தலைவர் கலைஞர்

நீயின்றி நானில்லை!



தலைவர் கலைஞர்

தலைவர் கலைஞர் அவர்கள் 2011ல் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலையொட்டி தமிழகமெங்கும் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு

வெளியீடு:

திராவிட முன்னேற்றக் கழகம்

"அண்ணா அறிவாலயம்"

367 & 369, அண்ணா சாலை,

சென்னை – 600 018.

முதற்பதிப்பு : ஏப்ரல் 2011.

விலை : ரூ. 30/–

B894.8115
கலை

அச்சிட்டோர் : அஸ்வின் பிரிண்டிங் ஏஜென்சி, சென்னை–14.

நிலையம்
சென்னை-6
நினைவக அறிவ

திருவாரூர் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் எழுச்சியுரை!

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரத் தொடக்க விழா தலைவர் கலைஞர் அவர்கள் போட்டியிடும் திருவாரூரில் 23.3.2011 அன்று எழுச்சியுடன் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வேட்பாளரை அறிமுகப்படுத்துகின்ற இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கின்ற வாய்ப்பைப் பெற்றமைக்காக மகிழ்ச்சியடைவதோடு, வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள என்னை, வாழ்த்துவதற்கு முன்வந்துள்ள கூட்டத்தினுடைய தலைவர் தம்பி பூண்டி கலைவாணன் அவர்களே, முன்னிலை ஏற்றுள்ள ஏ.கே.எஸ்.விஜயன், எம்.பி., அவர்களே, எனது இளமைக்கால ஆருயிர் நண்பர், வரவேற்புரையாற்றிய தென்னன் அவர்களே, இந்த எழுச்சி மிகுந்த நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் நண்பர் கே.வீ. தங்கபாலு அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் – சமூகநீதிப் போராளி மருத்துவர் அய்யா ராமதாசு அவர்களே, தமிழர் தலைவர் வீரமணி அவர்களே, 'வைகைப் புயல்' வடிவேலு அவர்களே, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவர் தம்பி தொல்.திருமாவளவன் அவர்களே, பேராசிரியர் காதர்மொகிதீன் அவர்களே, பெஸ்ட் ராமசாமி அவர்களே, ஸ்ரீதர் வாண்டையார் அவர்களே, என்.ஆர்.தனபாலன் அவர்களே, பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களே, நண்பர் செல்லமுத்து அவர்களே, நண்பர் சந்தானம் அவர்களே, திரு.பஷீர் அகமது அவர்களே, வலசை ரவிச்சந்திரன் அவர்களே, லியாகத் அலிகான் அவர்களே,

சுப.வீரபாண்டியன் அவர்களே, துணை முதலமைச்சர் – கழகத்தினுடைய பொருளாளர் தம்பி ஸ்டாலின் அவர்களே, தென்மாவட்டங்களினுடைய செயலாளர் தம்பி மு.க.அழகிரி அவர்களே, மத்திய – மாநில அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களே, தோழமைக் கட்சிகளைச் சார்ந்த அன்புக்குரிய முன்னணியினர்களே, நன்றியுரை நவில இருக்கின்ற தம்பி இரா.சங்கர் அவர்களே, தாய்மார்களே, பெரியோர்களே, என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே (பலத்த கைதட்டல்)

எந்த மண்ணில் என் தோழர்களோடு விளையாடிக் களித்தேனோ, அந்த மண்ணில் – எந்த மண்ணில் என் நண்பர்களோடு படித்தேனோ அந்த மண்ணில் – எந்த மண்ணில் தந்தை பெரியாருடைய தலைமையேற்று வழி நடந்தேனோ, அந்த மண்ணில் – எந்த மண்ணில் அறிஞர் அண்ணா அவர்களுடைய அறிவுரை கேட்டு, அவர் வழியைப் பின்பற்றத் தொடங்கினேனோ, அந்த மண்ணில் நான் இப்போது சட்டப்பேரவைக்கான வேட்பாளனாம். நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள், வேறு வழியின்றி நான் ஒப்புக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லமாட்டேன். எனக்கே ஏற்பட்ட ஆசையின் காரணமாகத்தான் தமிழ்நாட்டில் பல திக்கிலும் சென்று சட்டப்பேரவைக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறோம். கேட்கமாட்டார்களா – இங்கே வந்து உன் வீரத்தைக் காட்டுகிறாயே, சொந்த மண்ணில் வீரத்தைக் காட்ட உனக்கு ஆற்றல் உண்டா? என்று யாராவது கேட்டுவிடமாட்டார்களா? என்ற அந்த அச்சத்தின் காரணமாகத்தான் சொந்த மண்ணிலே உங்கள் மடியில் அமர்ந்து – உங்கள் கரம் பிடித்து – உங்கள் வழி நடந்து – உங்களுடைய ஆதரவைப் பெற்று இந்த முறை சட்டப் பேரவைக்குச் செல்லலாம் என்று எண்ணி இங்கே வந்திருக்கிறேன்.

திருவாரூர் எனக்குப் புதிய இடமல்ல. 1957 ஆம் ஆண்டிலிருந்து திருவாரூரிலே தேர்தலிலே போட்டியிட வேண்டும்

என்று நான் விரும்பியபோது வேறு இயக்கத்திலே உள்ள சில பேர் இவனை இங்கே போட்டியிடவிடக் கூடாது என்று இந்தத் தொகுதியையே தனித் தொகுதியாக ஆக்கி எனக்கு இடம் கிடைக்காத ஒரு நிலையை ஏற்படுத்தினார்கள். இத்தனை ஆண்டு காலம் பொறுத்திருந்து வாய்ப்புக் கிடைத்தபோது விட்டுவிடக் கூடாது என்பதற்காக – கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு உங்களுக்காக பணியாற்ற – உங்களுக்காக உழைக்க – உங்களுக்கு தொண்டு செய்ய – உங்களுக்கு வேலை செய்ய உங்கள் உத்தரவை நாடி இன்றைக்கு நான் வந்திருக்கிறேன்.

நீங்கள் வாக்களித்து அந்த உத்தரவை வழங்கினால் உங்களுக்காக நான் பணியாற்ற, பாடுபடத் தயாராக இருக்கின்றேன். இங்கே நம்முடைய டாக்டர் அவர்கள் பேசும்போது இந்த அணி எத்தகைய உறுதி வாய்ந்தது, உண்மையானது, உங்களுடைய கொள்கைகளுக்கு உடன்பாடானது என்பவைகளையெல்லாம் சொன்னார்கள். இந்த அணி இவ்வளவு உறுதியாக இருப்பதற்குக் காரணமே, கொள்கைதான்.

இந்த அணி பதவி ஆசையால் ஒன்றோடு ஒன்று ஒட்டப்பட்ட கட்சிகளின் கூட்டல்ல. இது நம்முடைய கொள்கைகளை, லட்சியங்களை நிறைவேற்ற அமைந்த பாசறை இந்த அணி. நான் இந்தத் தேர்தலைப் பொறுத்த வரையில் எனக்கு வாக்களியுங்கள் – தி.மு.க. அணிக்கு வாக்களியுங்கள் – ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் இருக்கின்ற வேட்பாளர்களுக்கெல்லாம் வாக்களியுங்கள் என்று கேட்பேனே தவிர, யாருக்கு வாக்களிக்கக் கூடாது என்றெல்லாம் பேச விரும்பவில்லை. ஏனென்றால் திருவாரூரிலே இருக்கின்ற அத்தனை பேரும் எனக்குச் சொந்தக்காரர்கள் (பலத்த கைதட்டல்). என்னுடைய உறவினர்கள். அரசியலில் நான் அங்குலம் அங்குலமாக உயர்ந்ததற்கு காரணமாக இருந்தவர்கள். நான் அவர்கள் மீது எதிர்ப்புக்கணைகளை வீசி ஒரு லேசான காயத்தைக் கூட

அவர்களுடைய உள்ளத்திலே ஏற்படுத்த விரும்பவில்லை. நான் தப்பித்தவறி அப்படி ஒரு சிராய்ப்பை உங்கள் இருதயத்திலே ஏற்படுத்தினேனேயானால் மன்னித்து விடுங்கள் என்று முதலிலே கேட்டுக் கொண்டு என்னுடைய வேண்டுகோளை உங்கள் முன்னால் வைக்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அண்மையில் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டதை நம்முடைய தம்பி திருமாவளவன் அவர்கள், அவருக்கே உரிய வெங்கலக் குரலில் இங்கே எடுத்துச் சொல்லி, அவரைத் தொடர்ந்து பேசியவர்களும், அவருக்கு முன்பு பேசியவர்களும் இந்தத் திட்டங்கள் எவ்வளவு சிலாக்கியமானவை – மக்களுக்கு எவ்வளவு தேவையானது என்பதையெல்லாம் விளக்கியிருக்கின்றார்கள். ஆனால் தேர்தல் அறிக்கையிலே சொன்னதை மாத்திரம் தான் நிறைவேற்றுவோம் என்று இல்லை. சொல்லாதவைகளையும் நிறைவேற்றுவோம். சொல்லாதவைகள் மற்றவர்களால் நினைவூட்டப்பட்டவைகள், கோடிட்டுக்காட்டப்பட்டவைகள், ஞாபகப்படுத்தப்பட்டவைகள், புதிதாக சேர்ந்தால் இதுவும் பரவாயில்லையே என்று அந்தத் திட்டத்தின் மீது உள்ள வசீகரத்தால் அல்ல, இதனால் தமிழகத்திலே உள்ள ஏழைபாழைகள், நடுத்தர மக்கள், சாதாரண சாமான்ய மக்கள் பயன்பெறுவார்களே என்ற அந்த நல்ல எண்ணத்தால் அவைகளை நான் இணைத்து நிறைவேற்றியிருக்கின்றேன். உங்களை நான் கேட்கிறேன். எண்ணிப் பாருங்கள். கடந்த தேர்தலுக்கு நான் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் உங்களுக்கு லட்சக் கணக்கான கூரை வீடுகளையெல்லாம் மாற்றி, கருங்கல் வீடுகளாக அல்லது கான்கிரீட் வீடுகளாக கட்டித்தருவேன் என்று அந்த தேர்தல் அறிக்கையிலே சொன்னது உண்டா? இல்லை. போகப்போக இந்த வீடுகள் கட்டப்பட கட்டப்பட அந்த எழுச்சியை பார்த்துப் பார்த்து மகிழ்ந்து இதுமாத்திரம் அல்ல, ஆயிரக்கணக்கான வீடுகளை அல்ல – லட்சக்கணக்கான வீடுகளை உங்களுக்கு கட்டித் தரப்படும் என்று அறிவித்து, பல்லாயிரக்கணக்கான வீடுகளை தமிழகமெங்கும் இந்த

அரசின் சார்பில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ள வீடுகளும் தொடர்ந்து கட்டப்படுகின்றன. இன்னொன்று – நான் சென்னையிலே தமிழகத்திலே பதவிப்பிரமாணம் செய்து கொண்டபோது, அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த வெளிமாநில அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் அவர்களுடைய முன்னிலையிலே சொன்னேன், நான் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்று அப்பொழுது அறிவித்தேன். ஆனால் அறிவித்ததை அதிகாரப் பூர்வமாக அமலாக்கும் பொழுது ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்கு தருவேன் என்றதற்கு மாறாக ஒரு கிலோ அரிசியை ஒரு ரூபாய்க்கே மக்களுக்கு வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இதை சொல்வதற்குக் காரணம் அறிவிக்கும்பொழுது சொன்ன ஒன்றை ஒன்றை மேலும் விரிவுபடுத்தி அதனை அறிவிப்பது தவறாகாது. அந்த முறையில் இந்தத் தேர்தல் அறிக்கையில் அரசு கல்லூரிகளிலும், அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் தொழிற்கல்வி பயில வரும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு "மடிக் கணினி'' அதாவது "லேப்–டாப்'' வழங்குவோம் என்று உறுதி அளித்திருக்கிறோம்.

மற்ற அறிவிப்புகளைப்போல இந்த அறிவிப்புக்கும் பெரும் வரவேற்பு கிடைத்திருக்கிறது. அத்தோடு அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும் "லேப்–டாப்'' வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் வைக்கப்பட்டிருக்கிறது. இதில் தாழ்த்தப்பட்டோர், பொருளாதார அடிப்படையிலே பிரிக்கப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், முன்னேறிய சமுதாயத்தினர் என்றெல்லாம் பார்க்காமல் இந்த "லேப் – டாப்'' வழங்குவதை எல்லாப் பிரிவு மாணவர்களுக்கும் வழங்கினால் என்ன என்று தோழமைக் கட்சியிலே உள்ள தலைவர்கள், நண்பர்கள் என்னிடத்திலே கிசுகிசுத்தார்கள். கிசுகிசுப்பு என்பது அபாயகரமானது. ஆகவே அதை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக, இப்போது அறிவிக்கிறேன். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட

வகுப்பு, முன்னேறிய வகுப்பினர் என்றெல்லாம் வகுத்துப் பார்க்காமல் கழக அரசு பல்வேறுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதைப் போல இந்த திட்டத்திலும் இந்த "லேப்–டாப்'' எல்லா பிரிவு மாணவர்களுக்கும் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். (கைதட்டல்)

இன்னொன்று 60 வயதுக்கு மேல் உள்ள மூத்தவர்களுக்கு, நான் இதை அறிவிக்கும்பொழுதே சொன்னேன், என்னைப் போல, பேராசிரியரைப் போல இருப்பவர்களுக்கு பஸ் பாஸ் வழங்கப்படும் என்று அன்றைக்கு அறிவித்திருந்தேன். இதிலே 59 வயது, 58 வயது உள்ளவர்களுக்கெல்லாம் ஒரு குறை, நாங்கள் அந்த அறுபதை தொட எவ்வளவு நாளாகிவிடும், கவலைப்பட்டே கவலைப்பட்டே எங்களுக்கு கிடைக்காதா என்று கவலைப்பட்டே எங்களுக்கு 60 வயதாகிவிடுமே, ஆகவே அதையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டார்கள். எனவே அவர்களுடைய ஓய்வு பெறும் வயது 58. அந்த 58 வயது வரையில் அவர்கள் வேலை பார்த்து ஓய்வு பெறுகிறார்கள். 58 வயதில் அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு அவர்களுக்கு பஸ் பாஸ் வழங்கப்படும் என்பதை இந்தக் கூட்டத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுபோலவே முதலிலே மணல் கடத்தல், அரிசி கடத்தல் போன்ற சமூக தீமைகளை ஒழிப்பதற்கும், கந்து வட்டி கொடுமை நீங்குவதற்கும் சட்டரீதியான வழிகளை காண்போம் என்று 19.3.2011 அன்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறேன். இந்த கொடுமைகளைப் போன்ற மற்றொரு கொடுமை கட்டப் பஞ்சாயத்துக் கொடுமை. மற்றவர்களின் சொத்தை அபகரிப்பவர்கள், பெருந்தொகையை வசூலித்துக் கொண்டு குடும்பப் பிரச்சினைகளை தலையிட்டு தீர்ப்பதாகக் கூறி, ஊர்ப்புறங்களிலே இரு சாராரிடையே உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் இதுபோன்ற பிரச்சினைகளில் பலப்பிரயோகம் செய்து, அச்சுறுத்தி, மிரட்டி, பிரச்சினைகளை நியாயமான முறையிலே சட்டரீதியாக தீர்ப்பதைவிட, பணம் பறிப்பதையே நோக்கமாகக் கொண்டு சட்ட விதிமுறைக்கு எந்த வகையிலும்

சம்மந்தமில்லாமல் கட்டப் பஞ்சாயத்து செய்துவரும் நடைமுறை இன்னமும் ஆங்காங்கே தலைத் தூக்கிக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே இந்தக் கொடுமைக்கும் நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்க கழக அரசு நிச்சயமாக உரிய வழிமுறைகளை வகுத்து செயல்படுத்தும் என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனவே தீமைகள் அகலவும் – வெளியிடப்பட்டிருக்கின்ற திட்டங்கள் விரிவுப்படுத்தப்படவும் இந்தக் கூட்டத்திலே நான் இந்தக் கருத்துக்களையெல்லாம் வெளியிட்டிருக்கின்றேன்.

இந்தத் தொகுதி வேட்பாளராக ஆகி விட்டக் காரணத்தால் அடிக்கடி உங்களை சந்திப்பேன் (பலத்த கைதட்டல்)

தெருவுக்கு தெரு வாக்கு கேட்க வருவேன். இது உங்களுக்கு லாபம், எனக்கு உடல் கஷ்டம் என்றாலுங்கூட உங்களுடைய மகிழ்ச்சியில் எனக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களெல்லாம் சாதாரணமானது. உங்களுடைய புன்னகை, உங்களுடைய புளகாங்கிதம், உங்களுடைய முகமலர்ச்சி, நம் வீட்டு பிள்ளை வருகிறான், என்னதான் 86 வயது ஆனாலும் என்னை விட வயதானவர்களுக்கு நான் பிள்ளைதான் – அவர்களுடைய தம்பிதான், சகோதரன்தான், அந்த உணர்வோடு இரத்த பாசப் பந்தத்தோடு, என்னை இத்தனை ஆண்டு காலமாக அரவணைத்து வளர்த்ததைப்போல், தொடர்ந்து வளர்த்து வரவேண்டும் என்று உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னை நீங்கள் வெற்றி பெற வைப்பீர்களோ, இல்லையோ என்ற சந்தேகத்தால் அல்ல, எனக்கும் உங்களுக்கும் ஊக்கமருந்து தரவேண்டும் என்பதற்காக நம்முடைய தலைவர்கள் எல்லாம், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் எல்லாம் வந்து, எனக்கு நீங்கள் வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவர்கள் விரும்பியதைப் போல, ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு நான் வரவேண்டும் என்று, அவர்கள் சொன்ன கருத்தை அவர்கள் இட்ட கட்டளையாகயேற்றுக் கொண்டு; வர முயற்சிக்கிறேன். அந்த முயற்சிக்கு நீங்களெல்லாம் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். நான் எத்தனை முறை முதலமைச்சராக ஆனாலும் திருவாரூர் தொகுதியிலே வெற்றி பெற்று, எம்.எல்.ஏ. ஆகி அதனால் முதலமைச்சராக ஆவேன் என்றால் அது திருவாரூர் தொகுதிக்கு பெருமை அல்ல. என்னுடைய ஊர், அது என்னை கைவிடவில்லை என்று நான் மற்றவர்களிடத்திலே கம்பீரமாக நின்று பேச, அது துணை நிற்கும் என்பதால் உங்களுக்காக உழைப்பதற்கு என்றென்றும் தயாராக இருக்கிறேன். உத்தரவிடுங்கள், உத்தரவிடுங்கள், ஆணை பிறப்பியுங்கள், அதன்படி நடக்கிறேன் என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

தஞ்சை திலகர் திடலில் நடைபெற்ற பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் வேண்டுகோள்

‘‘தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கையின் மூலம் தாய்மார்களின் தேவைகள் அனைத்தும் நிறைவேறும் – ஏழை எளிய மக்களை வாழ வைப்பதே நமது குறிக்கோள் – லட்சியம். அதற்கான திட்டங்களை நிறைவேற்ற தி.மு.கழகக் கூட்டணியை மாபெரும் வெற்றி பெறச் செய்வீர்!’’ என்று தஞ்சை திலகர் திடலில் 24.3.2011 அன்று நடைபெற்ற பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய தலைவர் கலைஞர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

நடைபெற இருக்கின்ற சட்டப் பேரவைத் தேர்தலில் தமிழகத்தில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய வேட்பாளர்கள் பல்வேறு தொகுதிகளிலே நிறுத்தப்பட்டு, அவர்களையெல்லாம் ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பை திருவாரூரில் நேற்று பெற்றேன்.

நேற்று நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் திருவாரூர் மக்களைப் பார்த்து இனிமேல் என்னை நீங்கள் முதலமைச்சர் என்று அழைக்கத் தேவையில்லை. திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் என்று அழைத்தால் அதற்காக மிகவும் பெருமை அடைவேன் என்ற விதத்தில் என்னுடைய கருத்துக் களை எடுத்து வைத்து, இன்று காலையிலே வேட்புமனுவை தாக்கல் செய்வதற்கு முன்பு என் அன்னையார் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்ற காட்டூர் கிராமத்திற்குச் சென்று வணக்கம்

தெரிவித்து, அங்கிருந்து புறப்பட்டு தேர்தல் வேட்பு மனுக்களை பெறுகின்ற அதிகாரி அமர்ந்து இருக்கின்ற அலுவலகத்திற்குச் சென்று வேட்புமனுவைத் தாக்கல் செய்து விட்டு, வருகிற வழியெல்லாம் தஞ்சைத் தரணி மக்கள் வழங்கிய வாழ்த்துக்களையெல்லாம் பெற்று, இன்று தஞ்சாவூரிலே நடைபெறுகின்ற இந்தப் பொதுக்கூட்டத்திலே உங்களையெல்லாம் காணுகின்ற அரிய வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன்.

இந்த ஊரும் எனக்குப் புதிதல்ல. நான் பேசுகின்ற இந்த இடமும் எனக்குப் புதிதல்ல. நான் என்ன உணருகிறேன் என்றால், வித்தியாசமாக என்ன உணர்கிறேன் என்றால் ஒவ்வொரு முறையும் நான் தஞ்சாவூர் வருகிற நேரத்தில் பழைய காலத்தில் இந்த மேடையிலே யார் யார் வீற்றிருந்தார்கள், யார் யார் என்னை ரயிலடியிலே வந்து அழைத்துச் சென்றார்கள், யார் யார் எனக்கு துண்டு அணிவித்தார்கள், யார் யார் மாலை அணிவித்தார்கள், யார் யார் என்னோடு இருந்து என்னை உபசரித்தார்கள் என்பதையெல்லாம் இன்றைய தினத்திலே நான் நினைத்துப் பார்க்கிறேன். இல்லாவிட்டால் நான் நன்றி மறந்தவனாவேன்.

எனக்கு 87 வயது. இன்னும் நானும் வாழப் போகிற ஆண்டுகள் பத்தோ பனிரெண்டோ. இந்த ஆண்டுக்குள் நான் பழைய நினைவுகளை யெல்லாம் அசைபோட்டு அதிலே ஒரு இன்பம் காண விரும்புகிறேன். இந்த மேடை யிலே என்னை வாயார, மனமார அழைத்து இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடுகளைச் செய்த – என்னை பாராட்டுங்கள் என்று விழிகளால் சொல்லாமல், இதயத்தால் மொழிந்த என்னுடைய அருமை நண்பர் தஞ்சை நடராஜன் இந்த மேடையிலே இன்றைக்கு இல்லை.

அருமை நண்பர் தஞ்சை மாவட்டத்திலே மாத்திரமல்ல, தஞ்சை நகரத்திலும் கழகத்தை வளர்த்த பெத்தண்ணன் இங்கே இல்லை. கேலியாகப் பேசினாலும், கோபமாகப் பேசினாலும் அதைத் தாங்கிக்

கொண்டு எங்களுக்கெல்லாம் கட்சி வளர்ப்பதுதான் முக்கியம் என்று இணைந்து இருந்த ஏவி.பதி இன்று இல்லை.

எதையும் தாங்கக்கூடிய இதயம் படைத்தவராக, எனக்கு பாதுகாப்பு அரணாக இருந்த தங்கமுத்து இந்த மேடையிலே இல்லை. சேவியர் இல்லை, டி.கே.கோவிந்தன் இல்லை, நகராட்சி மன்றத்தை எப்படி நடத்துவது என்ற நிர்வாகத்தை நண்பர்களுக்கெல்லாம் கற்றுத் தந்த நேர்மையாளர் – உழைப்பாளி – மக்களிடத்திலே பற்றும் பாசம் வைத்த தஞ்சை சுல்தான் இல்லை, டி.கே.சீனிவாசன் இல்லை, சுழன்று சுழன்று பணியாற்றக் கூடிய தம்பி பூபதி இல்லை, கோபாலகிருஷ்ணன் இல்லை, டி.பி.கண்ணன் இல்லை, என்னுடைய அருமை நண்பர் வழக்கறிஞர் சாமிநாதன் இல்லை, மாணிக்கவாசகம் இல்லை. இவர்களெல்லாம் இல்லாத மேடையை நான் பார்க்கிறேன். அந்த சூன்யம் தெரிகிறது. ஆனாலும், வெற்றிடத்தை காற்று நிரப்பும் என்ற மொழிக்கேற்ப, திராவிட முன்னேற்றக் கழகத்திலே இதுபோன்ற வெற்றிடங்கள் ஏற்படுமேயானால் அதை நிரப்புகின்ற காற்றாக நாங்கள் இருப்போம் என்று சொல்கின்ற அளவுக்கு இன்று திலகர் திடலிலே உங்களையெல்லாம் காணுகின்றேன், உங்களைப் பார்க்கின்றேன். பரவசமடைகின்றேன்.

இந்தப் படை வரிசையில் – அறப்போர் படைவரிசையில் ஆக்கரீதியான காரியங்களைச் செய்கின்ற படை வரிசையில் அண்ணா வழியில் அயராது உழைக்கின்ற இந்த படை வரிசையில் நீங்களெல்லாம் அதே உணர்வோடு – அதே எழுச்சியோடு, அதே எண்ணத்தோடு இங்கே அமர்ந்திருக்கின்ற காட்சியைப் பார்க்கின்ற போது, நான் சொன்னேனே, இவர்களெல்லாம் மறைந்து விட்டார்கள். என்னோடு இல்லை என்று. அவர்கள் மறையவில்லை. என்னோடுதான் இருக்கிறார்கள் என்பதற்கு நீங்கள் சாட்சி என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன் (பலத்த கைதட்டல்).

அவர்கள் உழைத்த உழைப்பு, அவர்கள் கண்ணீரை தண்ணீராக வடித்து வளர்த்த மரம், அது உருவாக்கிய தரு. அந்த தரு நிழலில் அமர்ந்து நாம் இன்றைக்கு கழகத்தை ஆக்கப்பூர்வமான – அமைப்புரீதியான – அயல்நாட்டாரும் பார்த்து வியக்கின்ற அளவிற்கு வளர்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்த இயக்கம் ஜனநாயகத்தினுடைய அடிப்படையிலே தோன்றிய ஒரு இயக்கம். அந்த ஜனநாயகத்தை வளர்ப்பதற்காக பாடுபடுகின்ற அறப்போர் இயக்கம். அவசரச் சட்டம் இந்தியத் திருநாட்டின் மீது பாய்ந்த போது நெருக்கடி நிலை ஏற்பட்டபோது, யாரையும் குறை சொல்லாமல் அன்றைக்கு இருந்த நிலைமைகளை யெல்லாம் மக்களுக்கு விளக்கி, மக்கள் அவசர சட்டத்தை, நெருக்கடி கால நிலையை எதிர்த்திருக்கவேண்டிய அவசியத்தை எல்லாம் எடுத்துக் கூறி, தன்னையும் காப்பாற்றிக் கொண்டு, தமிழர்களையும் காப்பாற்றி, இந்த தாயகத்தையும் காப்பாற்றிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. அதனால்தான் அவைகளெல்லாம் நடந்து முடிந்து ஓய்ந்த பிறகு, சென்னை மாநகரத்திலே கடற்கரையிலே உரையாற்றுவதற்காக வந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள் சொன்னார்கள், "சில தவறுகள் ஏற்பட்டு விட்டன. அந்தத் தவறுகளுக்கெல்லாம் நான் நேரடியாக காரணம் அல்ல. நாங்கள் இட்ட கட்டளையை தவறாகப் புரிந்து கொண்டோ, அல்லது எஜமானை விட வேலைக்காரர்கள் ஆர்வமுடையவர்கள் என்பதைக் காட்டுவதற்காகவோ சில அதிகாரிகள் செய்த தீ வினையால், நாட்டில் ஏராளமானவர்களுக்கு கொடுமை இழைக்கப்பட்டுவிட்டது. அதற்காக நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் – வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அன்னை இந்திரா காந்தி அவர்கள் சென்னை கடற்கரையில் பேசினார்கள் என்றால், அந்த வார்த்தைகளை அவர்கள் வெளியிடுவதற்கு என்ன காரணம்? நாம் ஆர்த்தெழுந்து அல்லது உணர்ச்சிவயப்பட்டு தலைகீழாக சில நிலைமைகளை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு

அன்றைக்கு நாம் செயல்பட்டிருந்தால், நான் நடந்தவைகளுக்காக வருந்துகிறேன் என்று அன்னை இந்திரா காந்தி அவர்கள் சென்னை கடற்கரையிலே – பரந்தவெளியிலே அப்படி பேசியிருக்க மாட்டார்கள். அப்படி அவர்களைப் பேச வைத்தது நம்முடைய உறுதி. நாம் கொண்டிருந்த கொள்கை உரம். என்னிடத்திலே இருந்த லட்சிய தாகம். அதனால்தான் அம்மையார் அவர்கள் வருத்தம் தெரிவித்துக் கொண்டார்கள். அவர்கள் வருத்தம் தெரிவித்த சில மாதங்களில் அவர்களோடு தி.மு.கழகம் இணைந்து தேர்தலிலே போட்டியிட்டது.

அந்தத் தேர்தலில் பெருவெற்றியை பெற்று ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அரசை இந்திய திருநாட்டிலே அமைத்தது என்றால், நெருக்கடி கால நெருப்பிலே நாம் எங்கே சுருண்டு போய் விடுவோமோ, வெந்து போய் விடுவோமோ என்று பயப்படாமல் அதை எதிர்த்து நின்று, நெருப்பையும் நீராக்குகின்ற சக்தி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு (பலத்த கைதட்டல்) என்ற அந்த நிலையினால்தான் அம்மையார் அவர்களுடைய பாராட்டை அன்றைக்குப் பெற்றோம்.

அப்படிப்பட்ட நிலைமைகளை காரியங்களைத்தான் இன்றைக்கு தி.மு.கழகம் தமிழகத்திலே உள்ள மற்றக் கட்சிகளோடு இணைந்து ஜனநாயகத்தை காப்பாற்றுகின்ற, ஜனநாயகத்திற்கு வருகின்ற ஆபத்துக்களை தடுக்கின்ற பெரும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றது. இந்தக் கூட்டணியில் யார் யார் இருக்கிறார்கள் என்று உங்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டணியில் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கின்றது. குறிப்பாக இந்திய தேசிய காங்கிரஸ் இருக்கின்றது. பாட்டாளி மக்கள்கட்சி இருக்கின்றது, விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கொங்கு நாடு முன்னேற்றக் கழகம், மூவேந்தர் முன்னேற்றக் கழகம் போன்ற இன்னும் பல கட்சிகளெல்லாம் இந்தக் கூட்டணியிலே இன்றைக்கு இருக்கின்றன. நேரம் இல்லாத காரணத்தால் ஒவ்வொரு கட்சியினுடைய

பெயரையும், அதன் தலைவர்களுடைய பெயர்களையும் நான் இங்கே சொல்ல இயலவில்லை. ஏனென்றால் ஏழு எட்டு கட்சிகள் தமிழகத்திலே ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் இன்றைக்கு இணைந்து இந்த ஜனநாயகத்தை மீட்கின்ற போராட்டத்திலே ஈடுபட்டிருக்கின்ற நிலையை நீங்கள் காணுகின்றீர்கள்.

இந்த நிலையை நான் உங்களுக்கு சொல்லும்போது ஜனநாயகத்தை எப்படி காப்பாற்றுவது, அதை இதுபோன்ற தேர்தல்கள் தான் தெரிவிக்கின்றன. மக்கள் சக்தி, மக்களுடைய எண்ணம், எந்த பக்கம் இருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கமா? காங்கிரசின் பக்கமா, கம்யூனிஸ்ட்களின் பக்கமா, வேறு கட்சிகளின் பக்கமா என்பதையெல்லாம் கணிக்கக்கூடியது – எடுத்துக்காட்டக் கூடியது ஏன் திருப்பிக் காட்டக்கூடியது வேறு ஒன்றும் இல்லை, மக்களால், மக்கள் ஆட்சி தேர்ந்தெடுக்கப்பட்டால் அதை தேர்ந்தெடுப்பதற்கு மக்கள் எந்த வகையில் எல்லாம் பாடுபட்டார்கள், பயன்பட்டார்கள் என்பதை நாம் பகுத்துணரக்கூடிய அந்த நிலைதான் தேவை. அதைத்தான் ஒரு தேர்தல் என்று நாம் அழைத்து, அதிலே போர் வீரர்களை, தளபதிகளை நிறுத்துவதைப் போல் ஆங்காங்கு தேர்தலிலே ஈடுபடக்கூடிய – போட்டியிடக் கூடிய வேட்பாளர்களை நிறுத்துகின்றோம். அப்படிப்பட்ட வேட்பாளர்கள் இன்றைக்கு தஞ்சை மேடையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் வெற்றி வாகை சூடுங்கள் என்று நீங்கள் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கின்றீர்கள்.

தமிழர்களைப் பொறுத்தவரையில் ஒருவரை தேர்ந்தெடுத்து தங்களை ஆளுங்கள், தங்களை வழி நடத்திச் செல்லுங்கள் என்று சொல்லுகின்ற இந்த நிலை இன்றைக்கோ, நேற்றைக்கோ ஏற்பட்டதல்ல, பழைய காலத்திலே, பழந்தமிழர் காலத்திலே, சோழ சாம்ராஜ்யம் வாழ்ந்த அந்தக் காலத்தில், பாண்டிய நாடு இருந்த அந்தக் காலத்தில், அப்பொழுது ஒரு ஊருக்கு ஒரு தலைவரை தேர்ந்தெடுப்பது என்றால்

அதற்கு ஆளைக் காட்டி நீதான் தலைவர் என்று யாரும் சொன்னது கிடையாது. ஒழுக்கம் உள்ளவர்களாக, நன்னடத்தை உள்ளவர்களாக, கல்வியாளர்களாக, தாங்கள் சொன்னதை தாங்களே நடத்திக் காட்டுபவர்களாக, மக்களுக்கு சேவை செய்யக் கூடியவர்களாக, பொது நல மனப்பாங்கு உள்ளவர்களை எல்லோரும் சேர்ந்து ஒரு குழுவிலே இடம் பெற்று, அந்தக் குழுவிலே உள்ளவர்கள் சேர்ந்து ஒரு குடத்திலே – பெரிய கலையத்திலே – மண் பாண்டத்திலே – ஓலைகளில் பெயர்களை எழுதி அவைகளை அந்த மண் பாண்டத் திலே போட்டு, அதை எடுத்து அந்த ஊர் பெரியவர்கள் பொது மண்டபத்தில் வைத்து எண்ணிப் பார்த்து அப்படி எண்ணிய வகையிலே யாருக்கு அதிக ஓலைச் சுவடிகளில் வாக்குகள் கிடைத்திருக்கின்றதோ அவர்கள்தான் அந்த ஊர் தலைவர்கள் என்று இன்று நேற்றல்ல, பராந்தகச் சோழர் காலத்திலேயே கிராமங்களில் தேர்தல் முறை இருந்தது என்பதை இன்றைக்கும் செங்கல்பட்டுக்குப் பக்கத்திலே உள்ள உத்திரமேரூர் கல்வெட்டு நமக்கு சொல்கிறது. அதற்கு உதாரணமாக இன்னும் சொல்ல வேண்டுமேயானால் ஒரு புலவன் பாடுகின்றான். அந்தப் பாடலில் பெயர்கள் எழுதப்பட்ட அந்த ஓலைச் சுவடிகளை கைவிட்டு எடுத்து எண்ணுவது எப்படி இருக்கிறது என்றால் போர்க்களத்தில் அவருக்கு, அந்த போரைத் தவிர வேறு உதாரணம் தெரியவில்லை.

போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கின்ற பிணங்களின் வயிற்றிலே இருந்து பருந்தும், கழுகும் அந்தப் பிணத்தினுடைய குடலை உருவுகின்றதே அதைப்போல போர்க்களத்தில் பிணங்களின் குடலை உருவுவதைப் போல இந்த மண்பாண்டங்களில் போடப்பட்ட ஓலைச் சுவடிகளை எடுத்து எண்ணுகிறார்கள். அப்பொழுது சொன்ன அவரது உதாரணம், போரைப் பற்றி அல்ல, போர்க் களத்திலே வீரர்களுடைய உடலைப் பற்றியதாக, அந்த உடலிலிருந்து வெளியே எடுக்கப்படுகின்ற குடலைப் பற்றியதாக, அந்தக் குடலைப்போல இந்த ஓலைச் சுவடிகள்

எடுக்கப்படுகின்றன – எண்ணப்படுகின்றன. நூறு ஓலைகள் யாருக்கு, 70 ஓலைகள் யாருக்கு, 30 ஓலைகள் யாருக்கு என்று படித்துப் பார்த்து 100 ஓலைகளுக்குரிய பெயரை உடையவர் அந்த ஊர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இது பராந்தகச் சோழன் காலத்திலேயிருந்து நடைபெற்று வருகின்ற தேர்தல் முறை.

எனவே மக்களாட்சி தத்துவத்தில் பெரும்பான்மையோர் யாரை தேர்ந்தெடுக்கின்றார்களோ அவர்கள்தான் அந்த ஊரை ஆள தகுதி உடையவர்கள், மரியாதை உடையவர்கள், பெருமை உடையவர்கள், மதிப்பு உடையவர்கள் என்று சோழன் காலத்தில், பாண்டியன் காலத்தில், சேரன் காலத்தில் – மூவேந்தர் காலத்தில் கையாளப்பட்ட அந்த முறையைத் தான் இன்றைக்கும் நாம் மக்களாட்சி தத்துவம் என்ற முறையிலே பின்பற்றி வருகின்றோம். அப்படி பின்பற்றி வருகின்ற அந்த முறையில் நாம் நம்முடைய மக்களுக்காக என்ன செய்தோம், என்ன செய்யப் போகிறோம், என்பவைகளையெல்லாம் அறிவிப்பது, அந்த தேர்தலிலே வாக்குகளை சேகரிக்க நாம் விடுகின்ற வேண்டுகோளாகும். அந்த வேண்டுகோளை விடுகின்ற முறையிலேதான் கடந்த சில நாட்களுக்கு முன்பு, தி.மு.கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை, குறிப்பாக சொல்லப்போனால் இந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய சாயல் கொண்ட தேர்தல் அறிக்கை கம்யூனிஸ்ட் கட்சிகள்கூட வெறுப்படையக்கூடிய நிலையில் விடுக்கப்பட்ட தேர்தல் அறிக்கை.

தோழமைக் கட்சிகள் அத்தனையும் பாராட்டுகின்ற தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டு, நேற்றைய தினம் அந்த அறிக்கையைப் பற்றி, நம்முடைய கழகத்தினுடைய பொது மேடையில் பல்வேறு கட்சித் தலைவர்கள் சிலாகித்து பேசியதைக் கேட்டேன். அவர்கள் பேசும்போது தேர்தல் அறிக்கைகளிலே இதுவரையில் வந்தவற்றில் மேலும் சிலவற்றை சேர்க்கலாமே என்று கேட்டுக் கொண்ட காரணத்தால் அவைகளையும் சேர்த்து அவைகள் எல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு அவற்றிற்குப் போட்டியாக நீ நான்கு என்றால் நான் ஐந்து என்கிறேன். நீ ஐந்து என்றால் நான் ஆறு என்கிறேன் என்று ஏதோ இதை ஏலம் விடுவதை போல தேர்தல் அறிக்கையை ஆக்கியிருக்கிறார்கள். நாம் அந்த ஏலம் விடுகிற வேலைக்குப்போக விரும்பவில்லை. எனக்கு ஏலமும் பிடிக்காது, ஜாலமும் பிடிக்காது (பலத்த கை தட்டல்) நாம், சொன்னதைச் செய்வோம் என்று எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே இன்றல்ல கடந்த காலத்திலே சொல்லியிருக்கிறோம். அந்த தேர்தல் அறிக்கையை பற்றி மத்திய நிதி அமைச்சராக இருந்த நண்பர் சிதம்பரம் அவர்கள், இந்த தேர்தல் அறிக்கைதான் இந்தத் தேர்தலில் கதாநாயகன் என்று சொன்னார்கள். இப்பொழுது எழுதப்பட்ட தேர்தல் அறிக்கையைப் பற்றி நம்முடைய பத்திரிகை நிருபர்கள் எல்லாம் என்னை சூழ்ந்து கொண்டு கேட்டார்கள், அப்பொழுது தேர்தல் அறிக்கையை கதாநாயகன் என்று சிதம்பரம் சொன்னாரே, இப்பொழுது என்ன சொல்வார் என்று என்னை கேட்டார்கள், அது கதாநாயகன் என்றால் இது கதாநாயகி என்று சொன்னேன். வில்லன் யார்? வில்லன்கள் வருவார்கள், போவார்கள். எந்தக் காட்சியிலும், எந்த நாடகத்திலும் எந்த திரைப்படத்திலும் வில்லன் வருவது தவறுவது இல்லை. ஆனால் அந்த வில்லன் வீழ்ந்தான் என்பதுதான் அந்தப் படத்தினுடைய முடிவாக, நாடகத்தினுடைய முடிவாக இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஆகவே கதாநாயகி என்று போற்றப்பட்ட காரணம் இந்தத் தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்ற எல்லா அறிவிப்புகளும், எல்லா வாக்குறுதிகளும் தமிழகத்தினுடைய தாய்மார்களுக்காக சொல்லப்பட்டவைதான். கடந்த காலத்திலே எல்லோருக்கும் ஒரு டி.வி. தரப்படும் என்று சொன்னோம். டி.வி.யாவது மண்ணாங்கட்டியாவது கருணாநிதி கதை விடுகிறார். நம்பாதீர்கள் என்று சொன்ன குரல், நம்முடைய காதுகளிலே கேட்டுக் கொண்டிருக்கிறது. சொன்னார்களா? இல்லையா? (கூட்டத்தினர்

சொன்னார்கள், சொன்னார்கள் என்று குரல் எழுப்பினர்) இவர்கள் டி.வி. கொடுப்பார்கள் என்று நம்பாதீர்கள் என்று சொன்னார்கள், ஆனால் கொடுத்தோம். கொடுத்துவிட்டு – இலட்சக்கணக்கிலே கொடுத்து விட்டு இன்றைக்கும் மிச்சம் யாருக்காவது கொடுக்க இருந்தால் அவர்களுக்கு எல்லாம் அடையாளச் சான்று கொடுத்து விட்டு, நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வரும்போது அல்லது வேறு யாராவது ஆட்சிக்கு வந்தால் அவர்களிடத்தில் அதைக் கொடுத்து டி.வி.யை வாங்கிக் கொள்ளுங்கள் அடையாளச் சான்று கொடுத்திருக்கிறோம் என்றால் எங்களைப்போன்ற சத்தியசீலர்களை நீங்கள் அரசியல் வட்டாரத்திலே காண முடியும் என்று கருதுகிறீர்களா? அதனால்தான் சொன்னதைச் செய்வோம், செய்வதை சொல்வோம், எங்களால் செய்ய முடிந்ததைதான் சொல்வோம். மகராசியாக இரு என்று வீட்டில் உள்ள தாய்மார்கள் வீட்டிற்கு புதியதாக வந்த மணமகளை மருமகளை வாழ்த்துவார்கள் என்றால் அவர் மகாராசியாக, மகாராணியாக தலையிலே கிரீடம் வைத்துக் கொண்டு, கைகளிலே சூலத்தை வைத்துக்கொண்டு வாழ வேண்டும் என்று அர்த்தமல்ல. எல்லோரும் பாராட்டுகின்ற அளவுக்கு குழந்தை குட்டிகளைப் பெற்று நல்ல விதமாக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் தாய்மார்கள் வாழ்த்துவார்கள், அப்படித் தான் தி.மு.க. தேர்தல் அறிக்கை அமைந்திருக்கின்றது.

ஒவ்வொரு பெண்ணுக்கும், ஒவ்வொரு தாய்மாருக்கும் தேவையானவற்றை எங்களால் முடிந்த அளவிற்கு செய்வோம் என்றுதான் கூறியிருக்கிறோம், போட்டி போட அல்ல, நாங்கள் தேர்தலில் போட்டி போடுவோமே தவிர, தேர்தல் வாக்குறுதியில் போட்டி போடவரவில்லை. எனக்கு அந்தப் போட்டியெல்லாம் பிடிக்காது. முடியவும் முடியாது. செய்ய முடியாத காரியங்களில் ஈடுபடுவோம் என்று சொல்லத் தெரியாது. யாரையும் ஏமாற்ற எங்களுக்குத் தெரியாது. மணலை கயிறாகத் திரிப்போம் என்று

சொல்லத் தெரியாது. ஏனென்றால் யாரும் திரித்ததே கிடையாது. ஆகவே செய்ய முடிந்ததைத்தான் சொல்வோம், உங்களுக்குத் தெரியாதா?

கடந்த தேர்தலில் வெற்றி பெற்று பல்வேறு மாநில கட்சித் தலைவர்களெல்லாம் வந்து என்னை வாழ்த்தி, சென்னையிலே ஒரு பெரிய மண்டபத்திலே பதவிப் பிரமாணம் செய்கிறபோது – முதலமைச்சராக நான் பொறுப்பேற்ற போது என்ன சொன்னேன், தேர்தல் அறிக்கையிலே நான் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்குத் தருகிறேன் என்று சொல்லியிருந்தேன். அதை படித்துக் காட்டி கையெழுத்துப் போட்டு பத்திரிகைகளுக்குக் கொடுத்தேன். கொஞ்ச நாள் ஆயிற்று. அதிகாரிகளோடு அமர்ந்து கணக்குப் பார்த்தபோது, இன்னமும் கூட மலிவாகத் தரலாம் போலிருக்கிறதே என்று தெரிந்தவுடன் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என்று மாற்றி அறிவித்தேன். யார் கேட்பது என்னை?

நீ ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்று அன்றைக்கு சொன்னாயே, எப்படி ஒரு ரூபாயாக குறைத்தாய் என்று யாரும் என்னைக் கேட்கவில்லை. கேட்க முடியாது. என் இஷ்டம். என் இஷ்டம் நான் எதையும் செய்வேன் என்றால், எனக்காக அல்ல. இந்த நாட்டு மக்களுக்காக. ஏழை எளியோருக்காக. பாட்டாளி மக்களுக்காக. பஞ்சபராரிகளுக்காக. அதனால்தான் ஏழைகளுக்கு ஒரு கிலோ அரிசி 1 ரூபாய் என்ற நிலையிலேயிருந்து மாற்றி, பஞ்சபராரிகளுக்கு – ஏழையிலும் ஏழை. அவர்களுக்கு இந்தத் தேர்தல் அறிக்கையிலே – அவர்களுடைய வேதனையை குறைப்பதற்காக ஏற்கனவே வெளியிட்ட அந்த அறிக்கையிலிருந்து மாறுபட்டு, இந்தத் தேர்தல் அறிக்கையிலே 35 கிலோ அரிசி (பலத்த கைதட்டல்) ஏழையிலும் ஏழையாக இருக்கின்ற பரம ஏழைகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்தேன். இதெல்லாம் யாரையும் ஏமாற்ற அல்ல. நடக்கக் கூடியவை. நாளைக்கு செய்யக் கூடியவை. இல்லாவிட்டால் என்

துண்டைப் பிடித்து இழுத்து கேட்கமாட்டீர் களா? என் காதைப் பிடித்து திருகி கேட்க மாட்டீர்களா? எங்கே இலவசமாக கொடுப்பதாகச் சொன்ன அரிசி என்று. அதனால்தான் ஏழைகளுக்காக இந்த அரசு இருக்கிறது.

என்னைப் பார்த்து சொன்னார்கள் அப்பொழுது. எல்லாம் இலவசம் இலவசம் என்கிறாயே, இலவசம் கொடுத்தே நீ வாழ்ந்து விடுவாயா என்று. நான் சொன்னேன். தமிழகத்திலே கடைசி ஏழை இருக்கிற வரையில் இந்த இலவசத் திட்டங்கள் நீடிக்கும் என்று சொன்னேன் (பலத்த கைதட்டல்). இன்றைக்கும் இந்த தஞ்சாவூர் திலகர் திடலிலே நின்று கொண்டு சொல்கிறேன், கடைசியாக ஒரு ஏழை தமிழ் நாட்டில் இருக்கிற வரையில், ஏழைகளுக்கான இலவசத் திட்டங்களை நான் நிறுத்த மாட்டேன். என்னை எங்கே கொண்டு போய் நிறுத்தினாலும், எந்த விசாரணை மன்றத்திலே கொண்டு போய் நிறுத்தினாலும் அங்கே நான் சொல்லப் போவது ஏழைகளுக்காக நான் செய்கின்ற இந்தக் காரியங்களை – பரம ஏழைகளுக்காக செய்கின்ற காரியங்களை நிறுத்தமாட்டேன். என்னை நீங்கள் பதவியிலே உட்கார வைப்பதற்குக் காரணம் என்னை வாழ வைப்பதற்காக அல்ல, நீங்கள் வாழ்வதற்காக. உங்களை நாங்கள் வாழ வைப்பதற்காக (பலத்த கைதட்டல்). இந்த நாட்டு மக்கள் எத்தனையோ ஆட்சிகளைப் பார்த்தவர்கள். இந்த நாட்டு மக்கள் நான் உட்பட, பார்த்த ஆட்சிகளில் ஒன்றுதான் வெள்ளைக்கார ஆட்சி. வெள்ளைக்காரன் ஆட்சியைப் பார்த்து, அதற்குப் பிறகு வந்த காங்கிரஸ் ஆட்சியைப் பார்த்து, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியைப் பார்த்து, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பார்த்து, இன்றைக்கும் அந்த ஆட்சி தொடர்ந்து நீடிப்பதைப் பார்த்து, அந்த ஆட்சி மூலமாக கிடைக்கின்ற நன்மைக ளெல்லாம் திராவிடர்களை வாழ வைக்க – தமிழர்களை வாழ வைக்க என்ற அந்த உண்மையை உணர்ந்த மக்கள்தான் இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்றீர்கள்.

நான் கட்சி பேதத்தோடு சொல்லவில்லை. காங்கிரஸ்காரராக இருந்தாலும், கம்யூனிஸ்டாக இருந்தாலும், பா.ஜ.க. வைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர் லீக்காக இருந்தாலும், கிறிஸ்துவ சங்கமாக இருந்தாலும், யாராக இருந்தாலும் தமிழர், தமிழர், தமிழர் (பலத்த கைதட்டல்), திராவிடர், திராவிடர், திராவிடர் என்பதில் எந்தவிதமான மாற்றம் இல்லை.

அந்த திராவிடர்களுக்காக – அந்தத் தமிழர்களுக்காக என் உடலில் உயிர் உள்ளவரை உழைப்பேன் என்று நான் எடுத்துக் கொண்டிருக்கின்ற சபதத்தால், இந்தத் தேர்தல் அறிக்கையின் முகப்பு – நான் தேர்தல் அறிக்கையில் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று சொல்லாமல், ஒரே வரியில் சொல்லவேண்டுமேயானால், என் உயிரைத் தருவேன், உங்களுக்காக என் உயிரையும் தருவேன். என் வாழ்வையும் தருவேன். உங்களை மீட்பதற்காக! யாரிடமிருந்து? மாய் மாலக்காரர்களிடமிருந்து! யாரிடமிருந்து ஜாலக்காரர்களிடமிருந்து! யாரிடமிருந்து? எங்களை குறை சொல்லி, குறை சொல்வதையே தொழிலாகக் கொண்டிருக்கின்றவர்கள் குறை குடமாகத் தளும்பிக் கொண்டிருக்கிறார்களே, அவர்களை உங்களுக்கு சுட்டிக் காட்டி, யார் அவர்கள்? எங்களை திட்டிக் கொண்டிருப்பவர்கள் யார்? எங்களை வசைமாரி பொழிந்து கொண்டிருப்பவர்கள் யார்? இதற்கெல்லாம் ஒரே பதில் என்னைப் பார்த்து இதே மேடையிலே என்னை வளர்த்த அண்ணா சொன்னார், ‘‘தம்பீ! வாழ்க வசவாளர்கள் என்று சொல். நீ அவர்களுக்குப் போட்டி யான வார்த்தைகளை தயாரித்து வெளியிடத் தேவை யில்லை. என்ன வசைமாரி பொழிகின்ற நிலை ஏற்பட்ட ாலும், என்ன திட்டுக்கள், என்ன கோபங்கள், அதிலே உதிர்கின்ற ஆவேச வார்த்தைகள் இருந்தாலும் நீ சொல்ல வேண்டிய ஒரே பதில்,

''வாழ்க வசவாளர்கள்'' என்பதுதான். அவர்கள் பிறகு வாழவும் மாட்டார்கள். அந்த வசவு நாட்டிலே பரவவும் விட மாட்டார்கள். ஆகவே வாழ்க வசவாளர்கள் என்று சொல். நான் வாழ்க வசவாளர்கள் என்று வாழ்த்துகிறேன்.

எத்தனை திட்டங்கள் தீட்டினாலும், எத்தனை சாதனைகளைப் புரிந்தாலும் அவைகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய சுபாவம் எல்லா மனிதர்களுக்கும் வந்து விடாது. அதை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் – அதை பாராட்டக் கூடியவர்கள் – அதற்கு கட்டுப்பட்டு நடக்கக் கூடியவர்கள் – அதை கனிவோடு ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் தொகை குறைவாகத்தான் இருக்கும். ஆனால், அவர்கள் சிந்திக்க ஆரம்பித்தால், அவர்கள் நம்முடைய செயல்பாட்டை கவனிக்க ஆரம்பித்தால் நம்மோடு ஐக்கியமாகி விடுவார்கள். அப்படி ஐக்கியமாகிய காரியம் கடந்த சில மாதங்களாக வேகமாக நடைபெற்று வருகின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தோடு நம்முடைய கூட்டணியிலே வந்து சேர்ந்திருக்கின்ற கட்சிகள் மாத்திரம் அல்ல, வேறு பல கட்சிகளெல்லாம் கூட திராவிட முன்னேற்றக் கழகத்திலே இன்றைக்கு சேர்ந்திருக்கின்றன. இன்னும் சில கட்சிகள் நான் எதிர்பார்க்கின்ற கட்சிகள் இங்கே வராமல் எங்கே போவது என்று எண்ணுகின்ற கட்சிகள் எல்லாம்கூட திராவிட முன்னேற்றக் கழகத்திலே வந்து ''அண்ணே! என்னை மன்னித்து விடு''என்று சொல்கின்ற (பலத்த கைதட்டல்) நிலையை எதிர்பார்க்கிறோம்.

நான் யாரிடத்திலும் மன்னிப்பை எதிர்பார்க்கவில்லை. நான் யாரிடத்திலும் அத்தகைய கேவலமான முறையை கடைப்பிடிக்க விரும்பவில்லை. வெற்றி பெற்றவர்கள், தோல்வி அடைந்தவர்கள் என்றெல்லாம் அரசியலிலே இல்லை. அவர்களால் முடிந்ததை செய்தார்கள். நம்மால் முடிந்ததை செய்தார்கள். நாம் அந்த அளவுதான் மக்களிடத்திலே செல்ல முடிந்தது. அவர்கள் இந்த அளவுக்கு மக்களிடத்திலே வர முடிந்தது.

எனவே, இரு கட்சிகளாக இருக்கிறோம், பிரிந்தோம், பிரிந்தவர்கள் கூடுவது இல்லை என்று சாஸ்திரம் ஒன்றும் இல்லை. பிரிந்தவர்கள் கூடுவதும் உண்டு. அப்படிப் பிரிந்தவர்கள் கூடிய பிறகு அந்த ஒற்றுமையால் – அந்த ஒற்றுமைக் கனவால் நம்மை ஒழிக்க எண்ணுகின்றவர்கள் ஒழிந்து போனது உண்டு.

இலங்கையிலே ஈழத் தமிழர்களிடத்திலே ஏற்பட்ட அந்தக் கொந்தளிப்பு – அவர்கள் நடத்திய போராட்டம், நாம் கண்ணீர் விடுகின்ற அளவிற்கு முடிந்தது ஏன்? என்ன காரணம்? அந்தப் போராட்டம் தமிழ் ஈழத்தை தராமல், தாழ்ந்து போனது ஏன்? என்ன காரணம்? சகோதர யுத்தம். இதைத்தான் நான் பல ஆண்டுக்காலமாக சொல்லி வந்தேன். அதை யாரும் காதிலே போட்டுக் கொள்ளவில்லை. நீங்கள் வீரர்கள். விடுதலைக் கனல் பொழிபவர்கள். மறுக்கவில்லை. ஆனால், யாரை எதிர்த்து நாம் இன்றைக்கு போர்க் களத்தில் நிற்கிறோமோ, அவர்களை விட மோசமாக ஒருவருக்கு ஒருவர் சண்டை போட்டுக் கொள்கிறோம். நம்மிடத்திலே ஒற்றுமை இல்லை. ஒற்றுமை மாத்திரம் நமக்கு ஏற்பட்டால் அவர்கள் எங்கேயோ ஓடி விடுவார்கள் என்று சொல்லியும் கூட கேட்கவில்லை. கேட்காத காரணத்தால் அடியோடு வீழ்ந்தோம் என்ற நிலைமை ஏற்பட்டது.

தமிழன் வீழ்ந்தது போலத் தெரியலாம். ஆனால் தமிழ்ச் சமுதாயம் எத்தனையோ முறை விழுந்து விழுந்து எழுந்த சமுதாயம்தான். அதை யாரும் அடியோடு வீழ்த்தி விட முடியாது. அதை யாரும் அறவே அழித்து விட முடியாது. அந்தக் கடலில் – அந்தத் தணலில் இன்னும் பல சமுதாயங்கள் எழுச்சிகள் ஏற்பட்டே தீரும். அந்த நம்பிக்கையோடு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆனாலும், அந்தக் கழகத்தோடு இன்று அணி சேர்ந்திருக்கின்ற கூட்டணிக் கட்சிகளின் தலைவர் களானாலும், நண்பர் களானாலும் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து உழைத் தால், எதற்காக நாம் பல கட்சிகளாக பிரிந்து இருக்

கிறோம், ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கை உண்டு. ஒவ்வொரு கட்சியும் மக்களை வாழ வைப்பதற் காக, மக்களுக்கு பணியாற்றுவதற்காகத்தான் தொடங் கப்படுகிறது. அந்த ஒவ்வொரு கட்சியும் மக்களை வாழ வைக்கத் தொடங்கப்படும்போது எப்படி இவர்கள் மட்டும் வாழாமல் போய் விடுவார்கள். மக்கள் வாழ முடி யாமல் போனால், அது அந்தக் கட்சியினுடைய குற்றம். அந்தக் கட்சியினுடைய ஒற்றுமையின்மை. இதுதான் காரணமாக இருக்க முடியும். ஆகவே, மக்களை வாழ வைக்க வேண்டும் என்பது நம்மு டைய குறிக்கோள். ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினு டைய லட்சியம். அந்த லட்சியத்திற்காகத்தான் நாம் கூட்டணி சேர்ந்திருக்கின்றோம். அதை நிறைவேற்று வதற்குத்தான் உங்களிடையே வாக்குகளைக் கேட்கிறோம். உங்களுடைய வாக்குகளை கேட்பது இந்தக் கூட்டணி தமிழகத்தில் மீண்டும் ஆள்வதற்கு. உங்கள் உத்தரவை கேட்கிறது. கட்டளையிடுங்கள், கழகக் கூட்டணி நீங்கள் காலால் இடுகின்ற பணிகளை தலையால் செய்வதற்கு தயாராக இருக்கின்ற கூட்டணி என்பதை எடுத்து வைத்து இதிலே கலந்து கொண்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களுக் கெல்லாம் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து நேரம் அதிகமாகி விட்ட காரணத்தால், சட்டப்படி பத்து மணிக்கு மேல் பேசக்கூடாது என்ற சூழ்நிலையில், நாம் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதைக் காட்டுகின்ற வகையில் இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

திருச்சியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் ஆற்றிய உரை

திருச்சியில் வெள்ளமெனத் திரண்ட மக்களிடையே 25.3.2011 அன்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

1956 ஆம் ஆண்டு வாக்கில் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டிற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையேற்று இந்த இயக்கம் சட்டமன்றத் தேர்தல்களில் – நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு மக்கள் பிரச்சினைகளுக் காக வாதாட– போராட முன்வரலாமா என்ற கேள்வியை முன்வைத்து, அந்த மாநாட்டில் குழுமியிருந்த லட்சக் கணக்கான மக்களிடத்திலே கருத்து கேட்டபோது, பெரும்பாலானவர்கள் தேர்தலிலே போட்டியிட வேண்டும் என்று சொன்ன ஜனநாயக தீர்ப்பையேற்று 57ஆம் ஆண்டு கழகம் தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்தி யது. அப்படி நிறுத்தப்பட்ட வேட்பாளர்களில் நானும் ஒருவன். என்னை அண்ணா அவர்கள் எந்தத் தொகுதியில் நிறுத்தியிருக்கிறார் என்று அறிவதற்கு முடியாமல், நான் வெளியூர் சுற்றுப் பயணத்திலே இருந்து ரயிலில் சென்னைக்கு திரும்பிக் கொண்டிருந்தேன். சென்னை வந்து சேர்ந்த பிறகுதான், அண்ணா ராயபுரம் அறிவகத்திலே இருக்கிறார். அவரோடு கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சிறிது நேரத்திலே பட்டியலை – யார் யார் எங்கே நிற்பது என்ற பட்டியலை வெளியிடப் போகிறார் என்று சொன்னபோது, நான் அந்தப் பட்டியலை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பரபரப்போடு, வடசென்னை ராயபுரத்திலே உள்ள அறிவகத்திற்குச் சென்றேன்.

அண்ணா அவர்கள் கட்சித் தலைவர்கள் ஐந்தாறு பேரோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். ஆனால் என்னைப் பார்த்தவுடன், நீ எந்தத் தொகுதியில் நிற்கிறாய் என்று அவர் கேட்கவில்லை. 'நம்நாடு' பத்திரிகையை தூக்கிக் கையில் கொடுத்தார். அதை வாங்கிப் படித்துப் பார்த்தேன். நான் குளித்தலை தொகுதி என்று அண்ணா அவர்கள் கையெழுத்திட்ட அறிக்கை 'நம்நாடு' நாளிதழில் வெளிவந்திருந்தது. "என்ன அண்ணா! குளித்தலை எனக்கு அறிமுகம் இல்லாத ஊர் அல்லவே, நான் அங்கு உள்ள பல நண்பர்களை அறிந்திருந்தாலும் கூட, தேர்தலில் நிற்கின்ற அளவுக்கு அங்கு எனக்கு அவ்வளவு வல்லமை, வலிமை, நண்பர்களை இணைத்துக் கொள்கின்ற நிலைமை இல்லையே என்றபோது, "இல்லை, இல்லை, நீ குளித்தலையில்தான் நிற்கிறாய் என்று கண்டிப்பாக அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதற்கு முன்பு நான், திருவாரூர் நாகப்பட்டினத்தில் நிற்பதாக அறிவித்து விட்டு, சென்னைக்கு வந்திருந்தேன்.

நான் எதிர்பார்த்தது – நான் அறிவித்தவாறு நாகப்பட்டினம் தொகுதிதான் அண்ணா என்னை நிற்க வைப்பார் என்ற கருத்து. ஆனால், என்னை குளித்தலை யிலே நில் என்று அண்ணா சொன்னபோது ஆச்சரியப் பட்டேன். வேறு ஒரு கட்சியாக இருந்தால் – மன்னிக்க வேண்டும். வேறு ஒரு கட்சித் தோழனாக இருந்தால் – இன்னமும் மன்னிக்க வேண்டும். கட்சிக்குள்ளேயே உள்ள இன்னொரு கட்சிக்காரராக இருந்தால் அவர் எனக்கு குளித்தலை தொகுதி வேண்டாம். நான் முதலில் நிற்பதாகத் தெரிவித்த நாகப்பட்டினத்திலேதான் நிற்பேன் என்று சொல்லியிருப்பார். நாங்கள் அண்ணனுக்குத் தம்பிகள். ஆகவே, அண்ணன் சொல்லை தம்பி தட்டக் கூடாது என்பதற்காக நான் சொன்ன கருத்து எடுபடாத நிலையிலேகூட, "நீ குளித்தலையிலே நிற்கிறாய், நான் அதை அன்பிலிடம் கேட்டு விட்டேன். அவரும் அங்கே நின்றால் வெற்றி வாய்ப்பு அதிகம் என்று சொல்கின்றார்கள்'' என்று அண்ணா அவர்கள் என்னை குளித்தலையில் நிற்க ஆணையிட்டார்கள்.

குளித்தலையில் வந்து பார்த்தேன். நான் பார்த்த குளித்தலை நடுவிலே நீரோடை. காவிரியிலே இருந்து வருகின்ற பெரிய வாய்க்கால். இருபுறமும் தழைத்து வளர்ந்து இருக்கும் செடிகொடிகள். நீண்ட சாலைகள், இடையிடையே சிறிய பெரிய பாலங்கள். இப்படிப்பட்ட வளமான ஒரு பகுதியாக காட்சியளித்த குளித்தலையில்தான் நின்றிருக்கின்றேன். அண்ணா அவர்களுடைய கட்டளையையேற்று, தொகுதிக்குச் சென்று பார்த்தால், நான் நின்ற குளித்தலை அல்ல அது. பக்கத்திலே வெள்ளியணை என்ற ஒரு பகுதி. லால்பேட்டை என்ற ஒரு பகுதி. இவைகளெல்லாம் வளம் செழித்தவைகள் அல்ல. இவைகளெல்லாம் நீர் சூழ்ந்த இடங்கள் அல்ல. இவைகளெல்லாம் வறண்ட நிலங்கள். இவைகளெல் லாம் பாலைவனங்கள் போல் இருக்கின்ற இடங்கள். இந்த இடத்திலா நான் நிற்க வேண்டும் என்று யோசித் தேன். பிறகு அண்ணா சொல்லிவிட்டார். அதை தட்டக் கூடாது என்று, அவர் சொன்ன குளித்தலை தொகுதியிலேயே வேட்பு மனுவைத் தாக்கல் செய்தேன். வென்றேன். சட்டமன்றத்திற்குச் சென்றேன்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு தொகுதிக ளெல்லாம் உறுதிபடுத்தப் பட்டு, ஆங்காங்கு இன்னன்னார் நிற்கிறார்கள் என்று அறிவிக்கப்பட் டுள்ள இந்தச் சூழ்நிலையில், ஒரு கட்சியிலே தலைவர் இடுகின்ற ஆணையை – கட்டளையை எதிர்வாதம் செய்யாமல் உடனடியாக ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அண்ணா அவர்களுடைய கட்டளையை அன்றைக்கு நான் ஏற்றுக் கொண்டு குளித்தலைக்குச் சென்றது அமைந்தது. அந்த ஆண்டு குளித்தலையிலே வென்று, அதற்கடுத்து தஞ்சையிலே நின்று அங்கேயும் வென்று, இடையிலே சைதாப்பேட்டையிலே நின்று அங்கேயும் வென்று, இப்படி ஏறத்தாழ 12 இடங்களிலே நின்று வென்று, இன்றைய தினம் இதுவரையில் எனக்கு இடம் கிடைக்காத தனித் தொகுதியாக இருந்து விடுபட்டுள்ள

என்னுடைய சொந்த மண்ணில் – திருவாரூரில் நிற்கின்ற பேறு பெற்றிருக்கின்றேன். அங்கே என்னை வாழ்த்தி, வரவேற்று, நீ வெல்ல வேண்டும், வென்றிட வேண்டும் என்று எனக்கு வாழ்த்துக் கூறியவர்களெல்லாம் பல பேர் இந்த மேடையிலே இருக்கின்றார்கள்.

நம்முடைய தம்பி திருமாவளவன் ஆனாலும், பேராசிரியர் காதர் மொகீதின் ஆனாலும், மற்றும் தம்பி செல்வேந்திரன் ஆனாலும், தம்பி சிவா ஆனாலும், தம்பி செல்வராஜ் ஆனாலும் இவர்களெல்லாம் கழகத்தினுடைய ஆர்வலர்கள். எனக்கு இனிய நண்பர்கள். அவர்கள் என்னை வென்றிடுக என்று வாழ்த்தி அனுப்புவது ஆச்சரியமான ஒன்று அல்ல. அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். நம்முடைய திருமாவளவன் அவர்கள் பேசும்போதும், பேராசிரியர் காதர்மொகீதின் அவர்கள் பேசும்போதும், எனக்கே மலைப்பு. என்னை நானே சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டேன். இவ்வளவு பெரியவனா நான். இவ்வளவு புகழ்கிறார்களே, உண்மையாக இருக்குமா? உண்மையிலே பக்கத்திலே மனைவி இருந்திருந்தால் கண்ணாடியைக் கொண்டு வா, முகத்தைப் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு, என்னை இங்கே புகழ்ந்திருக்கிறார்கள். எதற்காக? என்னைப் புகழ வேண்டும் என்பதற்காக அல்ல. இவ்வளவு புகழுக்குரிய ஒருவரை உங்களிடத்திலே – உங்களுடைய கைகளிலே வேட்பாளராக ஒப்படைக் கிறேன், ஆகவே இவருக்கு வெற்றி தந்து, தமிழகத்தினு டைய முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைமையை ஏற்படுத்துங்கள் என்று உங்களுக் குச் சொல்வதற்காக என்னைப் பாராட்டியிருக்கிறார்கள்.

இவ்வளவு பாராட்டுக்கும், புகழுக்கும் உரியவனா நான் என்றால் இல்லை. நான் மிகமிகச் சாதாரணமானவன். இங்கே நண்பர்களெல்லாம் – பேசியவர்களெல் லாம் குறிப்பிட்டதைப் போல, ஏறத்தாழ எண்ப தாண்டுகளுக்கு முன்பு, தஞ்சைத் தரணியில் திருக் குவளை என்ற கிராமத்தில் மிகச் சாதாரணமான –

சாமான்யமான ஒரு குடும்பத்தில் ஜாதிகள், மத ஆதிக்கம், பணக்காரத் திமிர் இவைகளெல்லாம் சூழ்ந்திருந்த பகுதியில் நான் ஒருவன் அன்றைக்கு குருத்துவிட்டு எழுந்து தந்தை பெரியார் அவர்களுடைய கருத்துக்களை காதால் கேட்டு, அவருடைய கருத்துக்களைக் கேட்டு, தமிழகத்தை உய்விக்க வந்த அறிஞர் அண்ணா அவர்களை கண்ணால் பார்த்து, இந்த இருவருடைய அறிவுரைகளையும் கேட்டு இந்த இயக்கத்தை நடத்துகின்ற அளவிற்கு வலிமை பெற்றிருப்பவன்.

இந்த வலிமை நண்பர்களெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல, எனக்கு நானே உருவாக்கிக் கொண்டது அல்ல. நீங்களெல்லாம் ஒவ்வொருவரும் தந்த பிச்சை அந்த வலிமை. அதைத்தான் ஒன்று திரட்டி – திரட்டப்பட்ட அந்த வலிமையை இந்த மக்களுக்காக – யார் இந்த வலிமையை வழங்கியிருக்கிறார்களோ, அவர்களுக்காக செலவழிக்க வேண்டும் என்று இருப்பவன்தான் இந்தக் கருணாநிதி என்பதை நான் இங்கே உறுதிபடச் சொல்லிக் கொள்கின்றேன்.

இந்தத் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய நம்முடைய காதர் மொகீதின் அவர்கள் தெள்ளிய நடையில், தெம்மாங்கு நடையில் ஒரு அருவி போல அரிய கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். எனக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. திருச்சியில் ஏதாவது ஒரு காரியம் நடைபெற வேண்டுமென்று நானும், நாவலர் நெடுஞ்செழியனும், பேராசிரியர் அன்பழகனும் எண்ணி, அன்றைய மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த அன்பில் தர்மலிங்கம் அவர்களி டம் அது பற்றி கருத்துக் கேட்டால், அவர்கள், எதற்கும் அண்ணாவைக் கேட்போமே என்று அவர் எங்களிடத்திலே சொல்வார். நாங்கள் அண்ணாவிடத்திலே திருச்சியிலே இன்ன ஒரு காரியத்தை கழகத்தின் சார்பாக தொடங்க நாங்கள் எண்ணியிருக்கிறோம். எப்படி அதைச் செய்யலாம் என்று கேட்போம். அப்போது அண்ணா சொல்வார்,

எதற்கும், நம்முடைய காதர் மொகீதின் அவர்களை ஒரு வார்த்தைக் கேளுங்கள். அவர் என்ன சொல்கிறாரோ அதைக் கேட்டு, என்னிடத்திலே சொல்லுங்கள். அவர் சொல்வது சரியாக இருக்கும். அதன்படி உங்கள் திட்டங்களை அங்கே தீட்டுங்கள் என்றுதான் அறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கு எங்களுக்குச் சொல்வார்கள்.

அந்த காதர்மொகீதின் இன்றைக்கு இந்த மேடை யிலே என்னை, இந்திரன் சந்திரன் என்று வானளாவ புகழ்ந்தபோது நான் அண்ணா அன்றைக்குச் சொன்ன அந்த வார்த்தைகளைத்தான் எண்ணிக் கொண்டேன். அவரா இவர்? என்று எண்ணிக் கொண்டேன். அதைப் போலவே என்னுடைய வாழ்வுக்கு – என்னுடைய அரசியல் ஏற்றத்திற்கு – சமுதாயப் பணிகளுக்கு வழிவிட்ட, உதவி புரிந்த, துணை நின்ற பகுதிகளிலே ஒன்று திருச்சி மாவட்டம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், கருணாநிதி அரசியலுக்கு வந்ததே முதல் முதலாக திருச்சி மாவட்டத்திலேதான் (பலத்த கைதட்டல்).

என்னுடைய அரசியல் வாழ்வு ஆரம்பத்திலே போராட்ட வாழ்வுதான். அன்றைக்குத்தான் கல்லக்குடியில் காலடி எடுத்து வைத்தேன். கல்லக்குடி போராட்டத்தில் நீங்கள் வழங்கிய துணையும், ஆதரவும் இந்த மாவட்டத்து மக்கள் என் பக்கத்திலே நின்ற அந்த நிலையும் டால்மியாபுரத்தை கல்லக்குடி என்று ஆக்கியே தீருவோம் என்ற அந்த வீரமொழிகளை – அந்த ஸ்லோகத்தை – இடையிலே நாள் கடந்தாலும், தாமதமானாலும் கூட நிறைவேற்றிக் காட்டுகின்ற தன்மையைப் பெற்றிருக்கிறோம் என்றால், அது திருச்சி மாநகரத்தினுடைய – திருச்சி மாவட்டத்தினுடைய வீரர்களுடைய உழைப்புதான், ஒத்துழைப்புதான்.

இந்த திருச்சியிலேதான் மறைந்தும் மறையாத நண்பர்களையெல்லாம் இந்த மேடையிலே நான் எண்ணிப் பார்த்து அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். அன்பில் தர்மலிங்கம், அழைத்தபோதெல்லாம் ஓடி வந்து அபயக் குரலுக்கு

ஆறுதல் அளிக்கக் கூடிய சிங்கம் அன்பில் தர்மலிங்கம். து.ப.அழகுமுத்து – பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தில் – குறிப்பாக யாதவர் சமுதாயத்தில் என்னிடத்திலே வேடிக்கையாக, விளையாட்டாக பழகி எதையும் துணிவாகக் கேட்கக்கூடிய ஆற்றல் பெற்றவர் – நெருக்கம் மிகுந்தவர். எங்களுக்கெல்லாம் மந்திரி பதவி கிடையாதா என்று ஒரு முறை என்னிடத்திலே கேட்டார். ஏன் அப்படிக் கேட்கிறீர்கள் என்றேன். எல்லா வகுப்பினரும் இருக்கிறார்கள் உங்கள் மந்திரி சபையில். யாதவர் இல்லையே என்றார். நான் சொன்னேன் அவரிடத்திலே, யாதவர் என்றாலே மந்திரிதான். ஆகவே, என்னிடத்திலே இருக்கின்ற மந்திரிகளுடைய எண்ணிக்கை ஒன்றல்ல, இரண்டல்ல. பனிரெண்டு மந்திரிகள் இருக்கிறார்கள். பனிரெண்டு யாதவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னேன். அவர், அந்த வேடிக்கையான விடையை ஏற்றுக் கொண்டு, அதற்குப் பிறகு எந்தவிதமான மனக்கசப்பும் காட்டாமல் இறுதி வரை என்னோடு பழகிய அன்புத் தோழர் து.ப.அழகுமுத்து.

எம்.எஸ்.மணி – நகரக் கழகத்தினுடைய கணக்குகள் ஆனாலும், மாவட்டக் கழக கணக்குகள் ஆனாலும் இந்தக் கணக்குகளையெல்லாம் பார்ப்பதற்கு திராவிடப் பண்ணை என்ற இடத்திலே – மாடியிலே அமர்ந்து காலையிலும் மாலையிலும் நடுப்பகலிலும் உழைத்துக் கொண்டே இருக்கக் கூடியவர் – எங்கள் கட்சியின் கணக்குப்பிள்ளை என்று சொல்லக் கூடிய அளவிற்கு பாடுபட்டவர். பாட்டாளி மக்களுக்காக உழைத்தவர். அவர் இன்றைக்கு இங்கு இல்லை.

பராங்குசம் – பொன்மலை ரயில்வே தொழிலாளர் போராட்டத்திலும், அந்தத் தொழிலாளர்களையெல்லாம் ஒன்று திரட்டுகின்ற அந்த அறப்பணியிலும் எங்களை விட்டு நீங்காமல் இருந்தவர். அவர் இன்றைக்கு இல்லை. அடிக்கடி அரசியல் அறிவுரைகளை எங்களுக்குச் சொல்லக் கூடிய அருமை நண்பர் நாகசுந்தரம் மறைந்து விட்டார். இன்றைக்கு அவர் இல்லை.

நாடகக் கம்பெனி பாண்டுரங்கன், நான் 57 ஆம் ஆண்டு தேர்தலில் நின்றபோது, முதன் முதலாக என்னுடைய உருவப்படத்தை வண்ணப்படமாக ஆக்கி வெளியிட்டு, தொடர்ந்து கட்சித் தலைவர்களுடைய படங்களையெல்லாம் வெளியிட்ட அற்புதமான மனிதர்.

காமாட்சி. அவரும் நானும் சிறைச் சாலைக்குச்சென்ற போது பத்திரிகைகளிலே வெளியிட்டார்கள் ''கருணாநிதி ஒரு பெண் உட்பட 5 பேர் சிறைச்சாலைக்கு சென்றிருக்கிறார்கள்'' என்று போட்டார்கள். எனக்கே ஆச்சரியம், என்னுடன் எந்தப் பெண்ணும் வரவில்லையே என்று. பிறகுதான் தெரிந்தது, காமாட்சி சுந்தரத்தை, காமாட்சி என்று நாங்கள் அழைத்து, அழைத்து காமாட்சி பெண் என்று அவர்கள் அதனை தவறாக புரிந்துகொண்டதை பிறகுதான் நாங்கள் தெரிந்து கொண்டோம்.

ராபி என்ற இஸ்லாமியப் பெருமகன். எங்களுடைய இனிய நண்பனாக திகழ்ந்தார். அவர் இல்லை. திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணன். முதன் முதலாக திராவிட இயக்கத்தின் புத்தகங்களை எல்லாம் வண்ண வண்ணமாக அச்சி இயற்றி வழங்கியவர். கிருஷ்ணமூர்த்தி அருமையாக ஆங்கிலத்திலே பேசி, கட்சியினுடைய கருத்துக்களையெல்லாம் பலரும் தெரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு, வெளிநாட்டவரும் தெரிந்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு வாழ்ந்த வித்தகர் அவர் இல்லை.

எம்.எஸ்.வெங்கடாசலம் சிறந்த எழுத்தாளர். கடைசிவரையிலும் எழுதிக்கொண்டே இருந்து மறைந்தவர். இளமுருகு பொற்செல்வி, பக்கத்திலே உள்ள குளித்தலையில் ஆசிரியராக வேலை பார்த்து, அவருடைய மனைவி பொற்செல்வியும் அவரும் கட்சிப் பணியாற்றியவர்கள் மறைந்துவிட்டவர், அந்த இளமுருகு அவர்கள்.

குளித்தலை முத்துக்கிருஷ்ணன் எங்களுக்கெல்லாம் தேர்தல் நேரத்திலே தளபதியாக விளங்கியவர் அவர் இல்லை. வெற்றி கொண்டான் நீங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டேயிருக்கலாம், அந்த வெடி முழக்கத்துப் பேச்சை. அந்த வெற்றிகொண்டான் இன்றைக்கு இல்லை. இந்த மேடையிலே நீங்கள் காண முடியவில்லை. அவர்களுக் கெல்லாம் ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டால் அது அனுதாபம் ஆகிவிடாது. என்னுடைய ரத்தத்தை சுண்ட வைத்து, அதை அவர்களுக்கு அர்ப்பணிக்க வேண்டிய அளவிற்கு இந்த இயக்கத்திற்காக பாடுபட்ட குலக்கொழுந்துகள். அண்ணாவின் தம்பிகள், என்னுடைய அருமை நண்பர்கள். என் இனிய தோழர்கள், அவர்களெல்லாம் இல்லாத இந்த நேரத்தில் இந்த மேடையிலே இதுவரையிலே பேசிய நண்பர்கள், இங்கு அமர்ந்திருக்கின்ற கூட்டணிக் கட்சித் தோழர்கள் இவர்களெல்லாம் இருக்கின்றார்கள் என்ற அந்த மனஎழுச்சியோடும், வலிமையோடும் நான் இந்த தேர்தலில் ஆறாவது முறையாக முதலமைச்சராவதற்கான பதவிப் போட்டியிலே இறங்கி இருக்கின்றேன். எனக்குப் போட்டியாக யார் என்ற அந்த கேள்விக்கு பதில் நீங்களே தெரிந்துக் கொண்டிருக்கின்றீர்கள். நான் அவர்களை எதிரி என்று கூறமாட்டேன், எதிர்ப்பாளர்கள் என்று கூறமாட்டேன். என்னைப் பிடிக்காதவர்கள் என்ற முறையிலே மாத்திரம் நான் அவர்களை அறிவேனே தவிர, நம்முடைய தம்பி திருமாவளவன் குறிப்பிட்டதைப்போல எதிரி என்றோ, பகைவர் என்றோ சொல்ல விரும்பவில்லை. என்னைப் பிடிக்காதவர் அவ்வளவுதான்.

ஒரு காலத்திலே திரை உலகத்திலே என்னைப் பிடித்தவர்களாக இருந்தவர்களெல்லாம் அரசியல் உலகத்திலே பிடிக்காதவர்களாக மாறிவிடுவார்கள். அப்படி மாறினால்தான் அந்த நடிப்பைவிட இந்த நடிப்பு, அவர்களுக்கு கைதேர்ந்த நடிப்பாக இருக்கும் என்ற காரணத்தால் அப்படி மாறி விடுவார்கள். இதை நான் சொன்னாலே பத்திரிகைக்காரர்கள் தயவு செய்து குறும்புத்தனமாக

எழுத வேண்டாம். நான் யாரைக் குறிப்பிட்டு பேசுகிறேன் என்று யாரும் அடையாளங்காட்டி வீண்வம்பை வளர்த்துவிட வேண்டாம். வளர்த்தால்தான் நான்கு நாள் பத்திரிகைகள் விற்கும் என்று எண்ணுவீர்களே யானால், அதில் நான் குறுக்கே நிற்க விரும்பவில்லை.

பொதுவாக தமிழ்நாட்டில் பத்திரிகை உலகம் தன்னை எந்த அளவிற்கு இப்பொழுது இறக்கிக்கொண்டிருக்கிறது என்பதை நான் ஒரு பத்திரிகைக்காரன் என்ற முறையில் மிகுந்த வேதனையோடு வெளிப்படுத்த விரும்புகின்றேன். உங்களுக்குத் தெரியும், அந்தக் காலத்திலே கிராமப்புறங்களில் ஒரு அதிசயமான செய்தியை சொன்னால் யார் சொன்னது அந்த செய்தியை என்றால், யாரும் சொன்ன செய்தி அல்ல. பத்திரிகையிலே வந்திருக்கிறது இதோ பார் என்று எடுத்துப் படித்துக்காட்டுவார்கள். ஓ! பத்திரிகையிலேயே வந்திருக்கிறதா? அப்படியானால் உண்மையாகத்தான் இருக்கும் என்று கருதிய காலம், ஒரு காலம். இப்பொழுது அப்படியல்ல, பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி என்றால், ஆ பத்திரிகையில்தானே வந்திருக்கிறது, உள்ளபடியே உண்மை என்ன? என்று கேட்டுத் தெரிந்து கொள்கின்ற அந்த ஆர்வம் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

எனவே பத்திரிகைகள் தங்களுடைய தரத்தை தாழ்த்திக் கொண்டு, அரசியல் தலைவர்களைப் பற்றி, நாட்டுக்காக பாடுபடுகின்ற தலைவர்களைப் பற்றி யாரானாலும் , நானானாலும் அல்லது எதிர் பாசறையிலே இருக்கின்றவர்களானாலும், யாரானாலும் அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றி வெளியிடுகின்ற செய்திகள் நாணயமானவைகளாக, நம்பத்தகுந்த செய்திகளாக, கேவலமான, நிலையற்ற செய்திகளாக மோசமான சூழ்நிலைகளை உருவாக்கக் கூடிய செய்திகளாக அல்லாத செய்திகளாக வெளியிடவேண்டும் என்று நான் பத்திரிகையாளர் என்ற முறையில் சொன்னீர்களே, இன்று நேற்றல்ல, 1945 ஆம் ஆண்டு முதல் நான் பத்திரிகைக்காரன்.

இன்றைக்கு யார் யாரோ பத்திரிகை ஆண்டு விழாக்கள், பொன் விழாக்கள். நூற்றாண்டு விழாக்கள் எல்லாம் கொண்டாடுவார்கள்.

நான் என்னுடைய பத்திரிகை முரசொலிக்கு எத்தனையாவது ஆண்டு விழா, எத்தனையாவது பிறந்த நாள் விழா என்றெல்லாம் அளவிடமுடியாத அளவிற்கு அந்தக் காலத்திலேயே எழுத்தாளன், அந்த எழுத்தை பயன்படுத்தித்தான், நான் இயக்கத்தை வளர்த்தேன். அந்த எழுத்தைப் பயன்படுத்தித்தான் சமுதாயத்திற்கு ஆவன செய்ய எழுந்தேன். அந்த எழுத்தை பயன்படுத்திதான் அண்ணாவை அடையாளம் கண்டேன். அண்ணா காலத்தில் 'துடிக்கும் இளமை' என்று எழுதிய அந்தக் காலத்து கட்டுரை 'இளமைப் பலி' என்று நான் எழுதிய கட்டுரை இவைகளெல்லாம் அண்ணாவை கவர்ந்த காரணத்தால்தான் அண்ணா என்னை அழைத்து சொன்னார், அவர் அரசியல்வாதியாக மட்டும் இருந்தால் அவர் அப்படி சொல்லியிருக்க மாட்டார். அவர் 'அண்ணா' என்ற காரணத்தால்! 'அவர் தம்பியைப் பெற்றவர் என்ற காரணத்தால்! அவர் இந்த இனம் நல்ல முறையிலே வாழ வேண்டும் என்ற காரணத்தால்! நீ தான் கருணாநிதியா?'' 'ஆமாம்' என்றேன். படித்தேன் 'இளமைப் பலி' என்ற நீ எழுதிய கட்டுரையை! எனக்கு ஒரே மகிழ்ச்சி! அப்போது அண்ணா ''இனிமேல் கொஞ்சநாளைக்கு எழுதாமல் இரு'' என்று சொன்னார். ஆச்சரியப்பட்டு ஏன் என்று கேட்டேன். நன்றாக படி, படித்து முடித்த பிறகு எழுதலாம் என்று சொன்னார். அண்ணா சொல்லி நான் கேட்காமல் போனது அது ஒன்றுதான். நன்றாக படி என்று சொன்னாரே, அதைத் தான் நான் கேட்காமல் போனேன். படித்திருந்தால் இன்றைக்கு கருணாநிதி எம்.ஏ., பி.ஏ. என்று இருந்திருப்பேன். ஆனால் இன்றைக்கு வெறும் கலைஞராக இருக்கிறேன் என்றால் கட்சித் தொண்டன் கருணாநிதி என்று சொல்வதை விட, கருணாநிதி எம்.ஏ., பி.ஏ., பி.ஏ. பி.எல். என்று சொல்வதிலே பெருமை இருப்பதாக நான் கருதவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக பெரியாரின் தொண்டன், அண்ணாவின்

தம்பி என்பதிலே எனக்கு இருக்கிற பெருமை வேறு எதிலும் இல்லை. அந்த பெருமை எனக்கு இருக்கிற காரணத்தால்தான் ஆறாவது முறையாக நீங்கள் என்னை ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்துங்கள் என்று கேட்டுக் கொள்கின்ற வேட்பாளராக உங்கள் முன்னால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றேன்.

ஐந்து முறை நான் தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்றேன். முதல் முறை ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு நான் தமிழக சட்டசபையிலே நுழைந்த பொழுது உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். எனக்கு எப்படி இந்த எண்ணம் உதித்து, வளர்ந்து, தழைத்து பெருகியது என்பதை உங்களுக்கு சொல்ல விரும்புகின்றேன்.

அங்கே வைக்கப்பட்டிருந்த பல தாள்கள், சட்ட மன்றத்திலே பல குறிப்புகள் வைக்கப்பட்டிருக்கும். அப்போது பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சர். கக்கன் அவர்கள் தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர். என் முன்னால் வைக்கப்பட்டிருந்த தாள்களிலே ஒன்றை எடுத்துப் படித்துப் பார்த்தேன். தமிழகத்திலே உள்ள சாதிகள் பற்றிய குறிப்புகள் எல்லாம் இருந்தது. முன்னேறிய சமுதாயம், பிற்படுத்தப்பட்ட சமுதாயம், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் என்ற குறிப்புகள் எல்லாம் இருந்தது. முன்னேறிய சமுதாயத்தையும் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தையும் பற்றி என்ன சொல்கிறார் என்று உன்னிப்பாக பார்த்தபோது, முன்னேறிய சமுதாயத்தினர் பிராமணர்கள், முதலியார்கள், செட்டியார்கள், பிள்ளைமார்கள் என்றெல்லாம் வரிசையாக குறிப்பிடப்பட்டிருந்தன.

அதற்கு அடுத்து, பிற்படுத்தப்பட்ட சமுதாயம் பற்றி யது. அதை படித்துப் பார்த்தேன், நான் பிறந்த சமுதாயம் / இசை வேளாளர் சமுதாயத்தைப் பற்றி என்ன போட்டிருக்கிறது என்றுப் பார்த்தேன், இசை வேளாளர் சமுதாயம், பிற்படுத்தப்பட்ட சமுதாயம் என்று அதிலே

போடப்பட்டிருக்கிறது. நான் மகிழ்ச்சியோடு அடுத்த பக்கத்தைப் பார்த்தால், கருமான் வேலை செய்கிறான், குயவன் பானை செய்கிறான், உழவன் ஏர் உழுகிறான் என்று போட்டுவிட்டு அதற்கு அடுத்த பக்கத்தில், அய்யர் பூஜை செய்கிறார் என்று இருந்தது. எனக்கு அய்யர் என்பதிலோ, அய்யங்கார் என்பதிலோ எந்தக் கோபமும் இல்லை. அந்த 'ர்' என்ற சொல் உழவனுக்கு ஏன் வரவில்லை. உழவர் என்று இல்லை. அந்த 'ர்' என்ற எழுத்து ஏன் குயவருக்கு வரவில்லை என்ற அந்தக் கோபம் எனக்கு உடனே எழுந்தது. அப்பொழுதுதான் சட்டமன்றத்தில் நுழைந்திருக்கின்றேன். அப்போது நான் எழுந்து, "அமைச்சர் அவர்களே ஒரு சந்தேகம்" என்றேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய துறையை நிர்வகிக்கின்ற அமைச்சர் கக்கன் அவர்களே ஒரு சந்தேகம் என்றேன். என்ன என்று கேட்டார். அதைப் படித்துக் காட்டி உழவன் ஏர் உழுகிறான், தச்சன் மேஜை செய்கிறான், குயவன் பானை செய்கிறான் என்று இவர்களுக்கெல்லாம் 'ன்' விகுதி போட்டிருக்கின்றீர்களே – அய்யர் பூஜை செய்கிறார் என்று அங்கே மாத்திரம் 'ர்' போட்டிருக்கிறீர்களே மரியாதையாக! இது சாதிய உயர்வு தாழ்வை குறிப்பிடுவது அல்லவா? தூண்டுவது அல்லவா? என்று கேட்டவுடன், கக்கன் அவர்கள் உணர்ந்துகொண்டு தவறுதான் திருத்திக் கொள்கிறோம் என்று அமைச்சர் கக்கன் சொன்னார். நான் முதன்முதலாக சட்டசபைக்கு சென்ற அதேநாளில் இதைச் சொன்னார்.

பெருந்தலைவர் காமராசர் கக்கனைப் பார்த்து என்ன சொல்லுகிறார் என்று கேட்டார், அவர் நான் சொன்னதை விளக்கியதும், அந்தப் புத்தகத்தை வாங்கிப் படித்துப் பார்த்து, பின்னாலிருந்த செயலாளரைக் கூப்பிட்டு அந்தப் புத்தகத்தைக் கொடுத்து, ஒரே வரியில் "திருத்து போ" என்று காமராசர் கட்டளையிட்டார். இது என்னுடைய வாழ்க்கையிலே, அரசியல் வாழ்க்கை ஆரம்பித்த அந்தக் காலகட்டத்திலே சட்டமன்றத்திலே நடந்தது. இன்றைக்கும் அந்தத் தேதியைப் பார்த்து, அந்தப் புத்தகத்தைத் தேடிப் பார்த்தால் நான்

சொன்ன அந்த வார்த்தைகள் அதிலே இருக்கும். நான் இதைச் சொல்வதற்கு என்ன காரணம்? தாழ்த்தப்பட்டவர்கள் என்று இருந்தாலும் அல்லது சாதாரண தொழிலாளர்களாக இருந்தாலும், சாதியின் பெயரால் அவர்கள் அந்தத் தொழிலைச் செய்யும் பொழுது, அவர்களை 'அவன்' 'இவன்' என்றும் ஒரு சாராரை மாத்திரம் 'அவர்' 'இவர்' என்றும் அழைப்பதால் இந்த "அவனுக்கும், அவருக்கும்" இடையே ஏற்படுகின்ற பேதம் எவ்வளவு பெரிய நிலையை உருவாக்கிவிடும் என்பதை நான் எடுத்துக் காட்டுவதற்காகத்தான் அதைச் சொன்னேன். இது பெரியார் என்னுடைய உள்ளத்திலே விதைத்த விதை. அண்ணா என்னுடைய உள்ளத்திலே விதைத்த விதை. அந்த விதைதான் அன்றைக்கு இந்த வினாவை எழுப்புவதற்கு காரணமாக இருந்தது.

இப்படி, தொடக்க காலத்திலேயிருந்து சட்டசபையிலே நான் பணியாற்றிய காலத்திலும், அதற்குப் பிறகு என்னுடைய தொகுதிக்காக நான் எத்தகைய போராட்டங்களை நடத்தினேன். நான் பொறுப்பேற்ற குளித்தலை தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் கல்யாணசுந்தரம் அவர்களுடன் சேர்ந்து, நங்கவரம் போராட்டத்தை நடத்தியவன் நான். நங்கவரம் என்றால், நாடு பாதி – நங்கவரம் பாதி என்பார்கள். அப்படிப்பட்ட நங்கவரம் ஒரு பெரிய ஜமீன்தாருக்கு சொந்தமான நங்கவரம். அங்கே கையேறுவாரம் – மாட்டேறுவாரம் என்று உழவர்களுக்குத் தரப்படுகின்ற கூலிகள் பிரிக்கப்பட்டு பெரிய வித்தியாசம் – பெரிய வேறுபாடு கடைபிடிக்கப்பட்டது. அந்த வேறுபாட்டைக் களைய வேண்டுமென்று போராடினோம். அந்தப் போராட்டத்தை நான் நடத்தியபோது எல்லாக் கட்சிகளும் இதிலே கலந்துகொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்ற கூட்டத்திற்கு குளித்தலைக்கு பேரறிஞர் அண்ணா வந்தார் – கல்யாண சுந்தரம் கலந்து கொண்டார் – கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் கலந்து கொண்டார்கள். எல்லோரும் சேர்ந்து நடத்திய போராட்டம்தான் குளித்தலையிலே நாங்கள் நடத்திய இந்தப் போராட்டம்.

அந்தப் போராட்டத்திலே நங்கவரத்திலே நாங்கள் பெற்ற வெற்றி அண்ணா அவர்களுக்கு எங்களின்மீது நம்பிக்கையை இன்னும் ஆழமாக அதிகமாக ஆக்கியது. அப்பொழுதுதான் குளித்தலையிலே இருந்த ஒரு பாலம் – குளித்தலைக்கும் முசிறிக்கும் இடையே இருந்த பாலம். மரப்பாலம். இதை நல்ல கற்பாலமாக – கான்கிரீட் பால மாக அமைக்க வேண்டும். குளித்தலையிலேயிருந்து முசிறிக்கு செல்ல 20 மைல் தூரம் சுற்றிக்கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. திருச்சியை சுற்றிக்கொண்டு நாங்கள் முசிறிக்கு செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, நேரடியாக ஒரு பாலம் தேவை என்று எனக்கு வாக்களித்த மக்கள் கேட்டார்கள். நான் சொன்னேன். நிச்சயமாக நான் நிறைவேற்றித் தருவேன். எனக்கு வாக்களித்த மக்களே உங்கள் நம்பிக்கையை வீணாக்க மாட்டேன் – நிறைவேற்றித் தருவேன் என்று சொன்னேன். எம்.எல்.ஏ.வாக இருக்கும்போது நிறைவேற்ற முடியவில்லை. பிறகு நானே முதலமைச்சராக வந்து அந்த முசிறி – குளித்தலை பாலத்தைக் கட்டிக் கொடுத்து நிறைவேற்றினேன். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் மக்கள் பிரச்சினைகளைக் கேட்டு, தெரிந்து அதற்கு பரிகாரம் காண்பதற்கும், சமுதாயப் பிரச்சினைக்களுக்குத் தீர்வு காண்பதற்கும் என்னுடைய பொதுவாழ்வில் பெரும் பகுதியை செலவழித்திருக்கிறேன் என்பதற்கு அடையாளம்தான் நான் சொன்ன நிகழ்ச்சிகள்.

குளித்தலை தொகுதியில் நான் ஆற்றிய பணிகளையெல்லாம் வரிசைப்படுத்தி சொல்வதாக இருந்தால் தேர்தல் கமிஷன் குறித்திருக்கிற தேதி மாறிவிடும். தடைபட்டு விடும். ஏனென்றால் இப்போது இருக்கிற தேர்தல் கமிஷன் மிகுந்த கண்டிப்பான கமிஷன். எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் – இப்போது நாம்தானே எதிர்க்கட்சி அவர்களுக்கு கண்டிப்பான கமிஷன். நமக்கு எதிர்க்கட்சியாக இருப்பவர்களை ஆளவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு ஒரு தேர்தல் கமிஷன் இந்தியாவிலே இன்றைக்கு

இயங்கிக் கொண்டிருக்கிறது. காரணம் அந்த கமிஷனிலே இருக்கின்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், அவர்களுடைய போக்கு எப்படிப்பட்டது என்பதை சென்னை உயர்நீதிமன்றமே எடுத்துக் காட்டி எச்சரித்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

உயர்நீதிமன்றம் எச்சரிக்கின்ற அளவிற்கு தேர்தல் கமிஷன் நடந்து கொள்கிறது என்றால், நான் உள்ளபடியே வருத்தப்படுகின்றேன். தேர்தல் கமிஷன் என்றால் எந்தக் கட்சியிலும் இடம் பெறாத, எந்தக் கட்சியும் அவர்களுக்கு வக்காலத்து வாங்காத நடுநிலையான ஒரு ஆணையம் தான் தேர்தல் ஆணையம் என்று நான் இன்னமும் நம்பிக் கொண்டிருக்கின்றேன். இந்த உயர்நீதிமன்ற உத்தரவிற்குப் பிறகாவது இந்த கமிஷன் – இந்த ஆணையம் நடுநிலையோடு பணியாற்ற வேண்டும். நடுநிலையாக நின்று பெறுகின்ற வெற்றியைத்தான் வெற்றியாக நாங்கள் கருதுகின்றோம். இதிலிருந்து நடுநிலை தவறி எங்களை நசுக்கலாம் என்று யாராவது எண்ணுவார்களேயானால் அது நான் அடிக்கடி சொல்வேனே ஒரு கதை – மாவலி மன்னனுடைய கதை.

கேரளத்தில் மாவலி என்ற ஒரு மன்னன் இருந்தான். அந்த மன்னன் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் போல எல்லோருக்கும் நன்மைகளைச் செய்பவன். எல்லோரிடத்திலும் அன்பு செலுத்தி அவர்களை அரவணைப்பவன். எல்லோருக்கும் தேவையான உதவி களைச் செய்பவன். திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி யவன். கேரளத்து மண்ணில் அந்த மன்னனுடைய புகழும் செல்வாக்கும் பரவி அவனை யாரும் அசைக்க முடியாது. இவன் மக்களிடத்திலே பெற்றிருக்கின்ற செல்வாக்கு – வேர் விட்ட செல்வாக்கு. அதை யாரும் அழிக்க முடியாது என்கின்ற அளவுக்கு அவன் வளர்ந்தபோது, அய்யோ! இவனை அழிக்க முடியாதாமே, இவனை ஒழிக்க முடியாதாமே என்று எண்ணிய சில பேர் அவனை ஒழிப்பதற்கு என்ன வழி என்று திட்டமிட்டு மகாவிஷ்ணு விடத்திலே ஓடி போய், விஷ்ணு பெருமானே

இந்த மாவலி மன்னன் மக்களுக்கெல்லாம் நல்லவனாக இருக் கிறான். அவர்களுக்குத் தேவையான திட்டங்களையெல் லாம் தீட்டித் தருகிறான். அவர்கள் நிலம் கேட்டால் நிலம் தருகிறான். வீடு கேட்டால் வீடு தருகிறான். அரிசி கேட்டால் அரிசி தருகிறான். கிலோ அரிசி 2 ரூபாய் என்றாலும் சரி என்கின்றான். ஒரு ரூபாய்க்கு கொடு என்றாலும் சரி என்கின்றான். இப்படி உணவு, உடை, உறையுள் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றான். இவனை வீழ்த்த எங்களால் முடியவில்லை. நீதான் வரவேண்டும் என்று மகாவிஷ்ணுவை அழைக்க – யார்? தேவர்கள் அழைக்க, மகாவிஷ்ணுவும் ஒரு அந்தணர் வேடம் கொண்டு அங்கே வந்து, மாவலி மன்னிடத்திலே மூன்று அடி மண் கொடு என்று கேட்டு, அவன் மூன்று அடி அளந்து கொடுக்கும்போது, மூன்றடி போதாது என்று அளந்து இரண்டடி அவன் கொடுத்த மண்ணை பெற்றுக் கொண்டு, மூன்றாவது அடிக்கு இடம் இல்லை. ஆகவே உன் தலையிலே கால் வைக்கிறேன் என்று சொல்லி, தலையிலே கால் வைத்து அந்த மன்னனை வீழ்த்தினான் மகாவிஷ்ணு. அதற்குப் பிறகு அங்கிருந்த தேவர்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைந்தார்கள். நம்முடைய பரம எதிரி ஒழிந்தானே என்று மகிழ்ச்சியடைந்தார்கள். தங்களுடைய இன எதிரி ஒழிந்தான் என்று மகிழ்ச்சியடைந்தார்கள். எங்களுடைய குல எதிரி ஒழிந்தான் என்று மகிழ்ச்சியடைந்தார்கள் அப்படி மகிழ்ச்சி அடைந்த அந்த மக்கள்தான் ஆண்டுதோறும் மலையாளத்திலே ஓணம் பண்டிகை கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். இது நான் சொல்வது அல்ல. இது மலையாளத்து, கேரளத்துப் புராணம்.

அந்த மாவலி மன்னன் இறந்தபோது, தன்னை அழித்த விஷ்ணுவைப் பார்த்து ஒரு வரம் கேட்டான். என்ன வரம் என்று கேட்டான் மகாவிஷ்ணு. பெரிய வரமாக ஒன்றும் இல்லை. என்னை ஏதோ அழித்து விட்டாய். நான் செய்த நன்மைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் என்னை வீழ்த்திவிட்டாய். பரவாயில்லை,

ஆனாலும் எனக்கு ஒரே ஒரு வரம் கொடு. என்ன வரம் என்றால் ஆண்டுதோறும் ஒரு பண்டிகை. அந்தப் பண்டிகையில் என்னுடைய மக்களைப் பார்த்து அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதை பார்த்து நான் மனம் பூரிக்க வேண்டும். அந்த நாள்தான் ஆண்டுதோறும் வரும் ஓணம் பண்டிகை என்று கேட்டான். சரி என்று அந்த வரத்தைக் கொடுத்தார் விஷ்ணு. இது கதை. அந்தக் கதையின்படிதான் ஆண்டுதோறும் ஓணம் பண்டிகை கேரளத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அந்த ஓணம் பண்டிகை தமிழ்நாட்டிலே வரவேண்டும் என்று சில பேர் விரும்புகிறார்கள். அந்த ஓணம் பண்டிகையை நாம் எப்படியாவது நடத்த வேண்டும். இங்கே இருக்கிற இனத்திற்காக பாடுபடுகின்ற ஒரு இயக்கத்தை அழித்து விட்டு, தமிழ்ச் சமுதாயத்திற்காக பாடுபடுகின்ற ஒரு இயக்கத்தை தரைமட்டமாக்கி விட்டு, ஒரு இயக்கத்திற்கு அழிவைத் தேடிக்கொடுத்து விட்டு, நாம் வந்தால்தான், நாம் ஆளுகின்ற வாய்ப்பைப் பெற்றால்தான் நம்முடைய மக்கள் வாழ முடியும் என்று சொந்த ஜாதிக்காக, சுய ஜாதிக்காக இன்றைக்கு கொடி உயர்த்திக் கொண்டிருக்கின்ற ஒரு கூட்டத்தைக் காணுகின்றோம். நான் அவர்களுக்கு எச்சரிக்க விரும்புகின்றேன். இது கேரளமும் அல்ல. கேரளத்து மக்களைப் போல ஏமாந்தவர்களும் அல்ல. இது தந்தை பெரியாரால் விழிப்பூட்டப்பட்ட தமிழ்நாட்டு மக்கள். அண்ணாவால் உணர்ச்சிவயப்பட்டு வாழ்கின்ற தமிழகத்து மக்கள். இவர்கள் யார் நம்மை ஏமாற்றுகிறார்கள், யார் நம்மை சூழ்ச்சியால் வெல்ல வருகிறார்கள் என்பதையெல்லாம் அறிந்த மக்கள் தமிழ்நாட்டு மக்கள்.

அந்த தமிழ்நாட்டு மக்களுக்கு நான் சொல்வேன். உங்களை அல்ல. என்னை முதலமைச்சராக வரக் கூடாது, ஆட்சிப் பொறுப்புக்கு வரக்கூடாது என்று யாராவது சொல்கிறார்கள் என்றால், அதற்கு ஒரே அர்த்தம் கருணாநிதி வரக்கூடாது என்பதல்ல. பகுத்தறிவாளர்கள்,

மறுமலர்ச்சியை விரும்புகிறவர்கள், தமிழ் இன உணர்வைக் கட்டிக் காப்பவர்கள் ஆளுகின்ற பொறுப்புக்கு வரக் கூடாது என்றுதான் பொருள். நான் உங்களைக் கேட்கிறேன். சுயமரியாதை வேண்டுமா? வேண்டாமா? தன்மானம் வேண்டுமா? வேண்டாமா? நம்முடைய இனம் வாழ வேண்டுமா? வேண்டாமா? இதுதான் உங்கள் முன்னால் வைக்கப்படுகின்ற கேள்விகள். வாழ வேண்டும் என்றால், வாரீர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்க! வாழ வேண்டும் என்றால் வாரீர் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு ஆதரவு தர! வாழ வேண்டும் என்றால் வாரீர் வாரீர் எங்களோடு இருக்கின்ற இந்த தேர்தல் அணிக்கு வாக்களியுங்கள் என்று உங்களையெல்லாம் அழைத்து, மறவாதீர்கள் நம்முடைய கூட்டணிக் கட்சியினுடைய சின்னங்களை என்று உரைத்து இந்த அளவில் விடைபெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

கோவையில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் உரை

ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் 30.3.2011 அன்று கோவையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

இவ்வளவு பெரிய கூட்டணி அமைத்திருக்கிறோம் – ஏராளமான மக்கள் கோவை மாநகரத்தில் குழுமி, இந்தக் கூட்டணியினுடைய வெற்றிக்காக அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இந்தக் கூட்டணி வெற்றி பெறுமா என்கின்ற கேள்விக்குறியோடு வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு குழுமியிருக்கின்றீர்கள். இந்தக் கூட்டணி அமைந்திருக்கின்ற முறையைப் பார்த்தாலே உங்களுக்கு ஒரு தெளிவு பிறக்கும். நம்பிக்கை பிறக்கும். ஏனென்றால், இந்தக் கூட்டணியில் நம்முடைய சின்னையன், பெஸ்ட் ராமசாமி, கோவை தங்கம், செல்லமுத்து போன்ற பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த தலைவர்கள் மாத்திரமல்ல, கொங்குச் சீமையிலே உள்ள மக்களோடு பழகுகின்ற – அந்த மக்களின் நண்பர்களாக இருக்கின்ற பலரும் இந்தக் கூட்டணியினுடைய வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கொங்குச் சீமையிலே இந்தக் கூட்டணி பெரு வெற்றியைப் பெற முடியாமல் கடந்த காலத்திலே ஏற்பட்டதற்குக் காரணம் இங்கே உருவாகிக் கொண்டிருக்கின்ற கொங்குநாடு முன்னேற்ற கழகத்தை நீங்கள் கூட்டணியிலே இணைத்துக் கொள்ளவில்லை, அதனால் பெரு வெற்றியைப் பெற முடியவில்லை என்றெல்லாம் என்னிடத்திலே சொல்லப்பட்டது. இப்பொழுது அந்த கொங்குநாடு முன்னேற்றக்

கழகத்தையும் கூட்டணியிலே இணைத்திருக்கிறோம். அதுவும் ஈஸ்வரனுடைய தயவு நமக்கு நிச்சயமாக இருக்கிறது என்பதற்கு அடையாளமாக இந்தக் கூட்டணியிலே நண்பர் ஈஸ்வரன் ஒரு வேட்பாளராகப் போட்டியிடுகிறார் – பெஸ்ட் ராமசாமி போன்றவர்களை நான் அண்மையிலே இந்தக் கூட்டணி உருவானதற்காக ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டபோது, சந்தித்தேன். அவர்கள் என்னிடத்திலே நிறைந்த நம்பிக்கையோடு, இந்தக் கூட்டணியை வெற்றி பெறச் செய்கிறோம் என்ற உறுதியான நம்பிக்கையை எனக்கு வழங்கினார்கள். அந்த உறுதி நிச்சயமாக காப்பாற்றப்படும் என்ற எண்ணம் இன்று காலையிலிருந்து இதுவரையிலே கோவை மாநகரத்திலே நான் காணுகின்ற மலர்ந்த முகங்கள் எனக்கு சான்று கூறிக் கொண்டிருக்கின்றன.

கோவை ஏதோ அரசியலுக்காக நான் வந்து போகின்ற இடம் அல்ல. கோவை நகரம் என்னுடைய வாழ்க்கையில் இடம் பெற்ற முக்கியமான இடங்களிலே ஒன்று. நான் தஞ்சை மாவட்டத்தில் திருக்குவளை என்ற கிராமத்தில் பிறந்தவன். என்னுடைய படிப்பு பக்கத்திலே பத்து கல் தொலைவிலே உள்ள திருவாரூரில் தொடங்கப்பட்டு, படிப்பு மாத்திரமல்ல, பகுத்தறிவுச் சுடரும் கொளுத்தப் பட்டு, அறிஞர் அண்ணாவைக் காணுகின்ற வாய்ப்பும், அய்யா பெரியாரைக் காணுகின்ற வாய்ப்பும் ஏற்பட்டு, அரசியலிலே அடியெடுத்து வைத்து, ஏறத்தாழ இன்றைக்கு 75 ஆண்டுகளுக்கும் மேலாக என்னுடைய 87வது வயதில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன் என்றால், நான் உள்ளபடியே எண்ணிப்பார்க்கிறேன் – 87 வயது நமக்கு ஆகிவிட்டதா என்று நான் எண்ணிப் பார்க்கும்போது, எத்தனையோ மகிழ்ச்சியான நினைவுகள் உண்டு. சோகமான – துக்கமான நிகழ்வுகளும் என்னுடைய உள்ளத்தை தாக்குவதுண்டு.

இதே கோவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை சென்னை – இராயபுரத்திலே அறிஞர் அண்ணா தொடங்கிய போது

அருகிலிருந்த பெத்தாம்பாளையம் பழனிச்சாமி – இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பழனிச்சாமி அருகில் இருந்தார். இன்றைக்கு அவர் நம்மிடையே இல்லை. என்னுடைய இனிய நண்பர் சாதிக் பாட்சா இருந்தார். இன்றைக்கு இல்லை. நீண்ட நெடிய உருவம் எஸ்.ஏ. ராஜமாணிக்கம் இருந்தார் – இன்றைக்கு இல்லை. எதற்கும் அசையாத கருங்கல் உள்ளம் படைத்த உடுமலை நாராயணன் அன்றைக்கு இருந்தார். இன்றைக்கு இல்லை. அருமைத் தம்பி சி.டி.தண்டபாணி இன்றைக்கு இல்லை. கொங்குமண்டலத்தில் தீரன் சின்னமலையினுடைய சிலையை வைக்க வேண்டும் என்று வாதாடி – போராடி இன்னும் சொல்லப் போனால் கண்ணப்பன் போன்றவர்களோடு இணைந்து கொங்கு மக்களை பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே சேர்க்க வேண்டும் என்று வாதாடி வெற்றி பெற்ற என்னுடைய அருமைத் தம்பி கோவை செழியன் இருந்தார், ஆனால் இன்றைக்கு இல்லை. பட்டுலிங்கம் காணவில்லை, தேவசகாயம் மறைந்து விட்டார். பி.ஏ. சாமிநாதனும் அண்மையிலே காலமாகி விட்டார். காட்டூர் கோபால் இல்லை. மேட்டுப்பாளையம் தூயமணியை காணவில்லை. விஜயலட்சுமி பழனிச்சாமி விபத்தொன்றில் பலியாகி விட்டார். பல்லடம் பொன்னுசாமி கட்டாய இந்தியை எதிர்த்து பட்டினிப் போர் நடத்தியவர் இன்று இல்லை. தம்பி திருப்பூர் முத்து ரத்தினம் இன்றைக்கு இல்லை. கலை உலகத்திற்கு என்னை கோவை மாவட்டத்திலே அறிமுகப்படுத்திய பட்சிராஜா ஸ்டுடியோ ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள் இன்று இல்லை. இத்தனை பேர் இல்லாத வேளையில் நான் கோவை பெருநகரில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற இந்த வாய்ப்பைப் பெற்றிக்கின்றேன்.

ஆனால், அவர்கள் எல்லாம் இல்லையென்றாலும், அவர்கள் என்னோடு இருந்து எனக்கு ஊட்டிய உணர்வு, என்னோடு இருந்து எனக்குத் துணை புரிந்த காட்சி இவைகளெல்லாம் நெஞ்சில் இன்னும் அகலாமல் இருக்கின்ற காரணத்தால், கோவை என்றால் – அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை, கோவை என்றால் அது கொள்கை வீரர்களின் கோட்டை, கோவை என்றால் நம்மை தாலாட்டிய

தொட்டில், கோவை என்றால் நம்மை விளையாட விட்ட தாழ்வாரம். நம்மை கலை உலகில் அடியெடுத்து வைக்க, காலை தூக்கி வைப்பதற்கு துணை புரிந்த பகுதி என்ற உணர்வோடுதான் இந்த கோவை மாநகரத்திலே நான் உங்களையெல்லாம் சந்திக்கின்றேன்.

இந்தக் கோவை நகரில் 1945 ஆம் ஆண்டிற்கு முன்பு, நானும் என்னுடைய அருமை நண்பர் – 40 ஆண்டுகால நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும் ஒரே வீட்டிலே குடியிருந்தோம். ஏன் அப்படி குடியிருந்தோம் என்றால் தொத்து வியாதியாகி மாறி பக்கத்திலே உள்ள ஊர்களுக்கும் பரவிடக் கூடிய பேராபத்தை விளைவிக்கக் கூடிய 'பிளேக்' என்ற நோயிலிருந்து எங்களைக் காப்பாற்றிக் கொள்ள, எங்கள் பக்கத்திலே இருந்தவர்களைக் காப்பாற்ற, மக்களைக் காப்பாற்ற அன்றைக்கு நாங்கள் சிங்கநல்லூரிலே நான் இருந்ததால் கோவையிலே உள்ள ராமநாதபுரத்திலே இருந்த எம்.ஜி.ஆர். அவர்களுடைய வீட்டில் நானும் அவரும் சில மாதங்கள் தங்கியிருந்தோம்.

இந்த பழைய கதைகளையெல்லாம் சொல்வதற்குக் காரணம் நமக்குள்ளே உள்ள சொந்தம் சாதாரணமானதல்ல, நமக்குள்ளே உள்ள இணைப்பு அலட்சியப் படுத்தக் கூடியதல்ல. நமக்குள்ளே உள்ள இணைப்பு இன்று நேற்றல்ல, ஏறத்தாழ 40 ஆண்டுக்காலத்திற்கு மேலான நட்பு – மேலான உறவு – அந்த உறவைப் புதுப்பிக்கின்ற நாளாக இந்த நாள் அமைந்திருக்கின்றது என்று எண்ணியெண்ணி நான் மகிழ்ச்சியடை கின்றேன்.

நான் இங்கே பார்க்கின்றேன். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களோடு காங்கிரஸ் கட்சி நண்பர்களோடு, பாட்டாளி மக்கள் கட்சித் தோழர்களோடு, முஸ்லீம் லீக் நண்பர்களோடு, கொங்குநாடு முன்னேற்றக் கழக உடன்பிறப்புகளோடு, விடுதலைச் சிறுத்தைகளுடைய தொண்டர்களோடு, தலைவர்களோடு, இங்கே பேசிய சொற்பொழிவாளர்களோடு இன்றைக்கு நான் இந்த மேடையிலே

அமர்ந்திருக்கின்றேன் என்றால், ஒரு காலத்திலே இந்த மேடையில் ஒருவர், இருவர் அதிகமானால் மூவர் என்ற அளவிற்குத்தான் சொற் பொழிவாளர்கள் இருந்தோம். "இன்றைக்கு நேரம் இல்லாத காரணத்தால், தலைவர் பேச வேண்டி இருக்கிற காரணத்தால் விரைவில் முடித்துக் கொள்கிறோம்'' என்று சொல்கின்ற அளவிற்கு சொற்பொழிவாளர்கள் இந்த மேடையிலே இருக்கிறார்கள் என்றால் இதற்கு என்ன காரணம்? இந்த இயக்கம் வளர்ந்து இருக்கிறது, வளர்ந்து கொண்டே போகிறது, இன்னும் வளரும் என்பதைத் தவிர வேறு காரணம் இல்லை.

நான் இன்றைக்கு மேடையிலே நம்முடைய ஈஸ்வரனையும், பெஸ்ட் ராமசாமியையும் காணுகிற போது, எண்ணிக் கொண்டேன். இவர்களெல்லாம் இந்த ஊரில் நான் எம்.ஜி. ராமசாமி அவர்களுடைய இல்லத்திலே குடியிருந்து அன்றைக்கு எதிரிகளால் எம்.ஜி. ராமசாமி வேட்டையாடப்பட்டு, அதற்குப் பிறகு அந்த ராமசாமியினுடைய இல்லத்திலே தங்கியிருந்து, அவர்களுடைய வீட்டுப் பிள்ளைகளோடு பழகி, இவ்வளவு காலம் எம்.ஜி.ஆர்., போன்ற நண்பர்களைப் பெற்றிருக்காவிட்டால், அவர்களுடைய மைத்துனர் அண்ணாசாமி போன்றவர்களை பெற்றிருக்காவிட்டால், இன்றைக்கு நான் கோவை மாநகரத்திற்கு வரும்பொழுது இவ்வளவு தோழர்களைக் காணுகின்றபோது ஏற்படுகின்ற பூரிப்பு ஏற்பட்டிருக்குமா என்று நான் எண்ணி பெருமிதம் கொள்கின்றேன்.

தம்பி ராமநாதன் இங்கே பேசும்போது குறிப்பிட்டார். அதையேதான் மற்றவர்களும் சொன்னார்கள். நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்தத் தேர்தலிலே பெருவாரியான இடங்களைப் பெற்று, வெற்றி பெறச் செய்து தலைவருடைய காலடியிலே அந்த வெற்றியைக் கொண்டு வந்து வைப்போம் என்றெல்லாம் சொன்னார்கள். அது தேவையில்லை. காலடியிலே கொண்டு வந்து

வெற்றியை வைப்பது பூஜா மனப்பான்மை. அது தேவையில்லை. அந்த பூஜா மனப்பான்மையை நான் என்றைக்கும் ஏற்றுக் கொள்பவன் அல்ல. வெற்றி பெறுங்கள், அதை என்னுடைய கழுத்திலே கொண்டு வந்து மாலையாகப் போடுங்கள், காலடியில் வைக்க வேண்டாம் என்று (பலத்த கைதட்டல்) நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

கோவையினுடைய சிறப்புக்களைப் பற்றிச் சொல்லும்போது – திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஏற்பட்ட சிறப்புக்களைச் சொல்லும்போது, ஒரு நண்பர் செம்மொழி மாநாடு இங்கேதான் நடைபெற்றது. அந்த மகாநாட்டின்போது அறிவிக்கப் பட்ட திட்டங்கள் அனைத்தும் இன்றைக்கு ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன என்று நெஞ்சை நிமிர்த்தி சொன்னார்.

செம்மொழி மாநாடு நடைபெற்ற அந்தக் காலத்தையும் அது நடைபெற்றபோது, அதைப் பற்றி யார், யார் என்னென்ன பேசினார்கள் என்பதை நான் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

எந்த ஒரு நிகழ்ச்சி நம்முடைய காலத்திலே நடத்தப் பட்டாலும் – அது தமிழ்ப் புலவர்கள் கூடி நடத்துகிற நிகழ்ச்சி ஆனாலும் எந்தக் கட்சியும் சாராத தமிழர்கள் நடத்துகிற நிகழ்ச்சியானாலும் அதிலே நான் இருந்தால் அதற்கு அரசியல் சாயம் பூசி, அந்த நிகழ்ச்சிக்குரிய கருப்பொருளை வீணாக்குவது, கலைப்பது, தமிழ் நாட்டிலே உள்ள சில எதிர்க் கட்சிகளுக்கு, சில நண்பர் களுக்கு இன்றைக்கு வழக்கமாகி விட்டது, வாடிக்கையாகி விட்டது. செம்மொழி மாநாடு நடைபெற்றபோது, இவ்வளவு திட்டங்கள் நிறைவேறும் என்று நான் அறிவித்த நேரத்தில் அந்த திட்டங்களுக்கெல்லாம் அடிக்கல் நாட்டிய நேரத்தில் என்ன சொன்னார்கள்? இது கருணாநிதி தன்னுடைய விளம்பரத்திற்காக தன்னை முத்தமிழ்க் காவலர் என்று நாட்டிலே முரசுக் கொட்டுவதற்காக நடத்தப்படுகின்ற மாநாடு என்று சொன்னார்கள்.

ஆனால் அவர்கள் நடத்திய உலகத் தமிழ் மாநாட்டிலே என்ன விளம்பரம் செய்தார்கள், நாம் நடத்திய செம்மொழி மாநாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்துகூட – தமிழ்த்தாயைப் பற்றிய வாழ்த்தாகத்தான் இருந்தது. நம்முடைய மாநாட்டில் வேறு யாரையும் புகழ்ந்து பாட நான் இடம் தரவில்லை. ஆனால் அதற்கு முன்பு நடைபெற்ற தஞ்சை உலகத் தமிழ் மொழி மாநாட்டின்போது ஜெயலலிதா அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். நான் அம்மையார் என்றுதான் சொல்வேன். அவர்கள் வேண்டுமானால் என்னை "கருணாநிதி", "கருணாநிதி" என்று குறிப்பிடட்டும். அதற்காக நான் கவலைப்பட மாட்டேன்.

சில பேர் கூட கேட்டார்கள், என்ன "கருணாநிதி", "கருணாநிதி" என்று உங்களை பெயரைச் சொல்லி அழைக்கிறாரே என்று. எங்கள் அம்மா, அப்பா வைத்த பெயரை அவர்கள் விடாமல் சொல்கிறார்கள், அதில் என்ன தவறு என்று நான் கேட்டேன். சில பேர் தங்களுடைய பெயரை மாற்றிக்கொள்வார்கள், நான் என் பெயரை என்றைக்கும் மாற்றிக்கொள்ள விரும்பவில்லை. கருணாநிதி என்று என் தந்தை, தாயார் எனக்கு அளித்த பெயரே நிலைக்கட்டும். ஏனென்றால் என் தந்தை, தாயின் நினைவுச் சின்னமாக அவர்களுக்கு நான் இருந்துவிட்டுப் போகிறேன் என்று நான் பெயரை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை. ஒருவேளை என்னுடைய பெயரை என்னுடைய கொள்கைக்கு விரோதமான செயலாக – பெரியாருடைய கொள்கைக்கு விரோதமான பெயராக – அண்ணாவினுடைய லட்சியத்திற்கு விரோதமானப் பெயராக என் தாய், தந்தை வைத்திருப்பார்களேயானால் – நான் அந்த பெயரை பெரியார் தலைமையில், அண்ணா தலைமையில் மாற்றிக்கொண்டிருப்பேன். ஆனால் அப்படி வைக்கப்பட்ட பெயர் அல்ல.

கருணாநிதி என்பது பொதுவான பெயர். எல்லா கடவுளுக்கும் பொருந்தக்கூடிய பெயர். கருணை யார் யார் கேட்டாலும் அந்தக்

கடவுளுக்கெல்லாம் பொருந்தக்கூடிய பெயர். கிறித்துவ மதத்தினரும், இயேசுநாதரை கருணாநிதி என்பார்கள். இஸ்லாமிய மதத்தினரும் கருணாநிதி என்பார்கள். இந்துக்களிலும் கருணாநிதி இருப்பார்கள். எல்லா மதமும் சம்மதமே என்று பொதுவான பெயராக கருணாநிதி இருந்தக் காரணத்தால் அவர்கள் சொல்வதால் என்ன குறை? சொல்லிவிட்டுப் போகட்டும் என்று நான் அனுமதிப்பேன். ஆனால் என்னுடைய பெயர் விளங்க விளம்பரத்திற்காகத்தான் நான் செம்மொழி மாநாடு நடத்தினேன் என்று சொன்னார்களே – அவர்கள் நடத்திய தஞ்சாவூர் மாநாடு – அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முன்நின்று நடத்திய தஞ்சாவூர் மாநாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்தே ஜெயலலிதா வாழ்த்தாகத்தான் இருந்தது. நான் எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்து உங்களுக்குத் தெரியும்.

செம்மொழி மாநாட்டில் ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்ற சொற்றொடரை ஆரம்பமாகக் கொண்டதுதான் நான் எழுதிய பாட்டு. ஆனால் ஜெயலலிதா நடத்திய தஞ்சாவூர் மாநாட்டிலே என்ன பாட்டு தெரியுமா? அவ்வை ஆண்டாள் அம்மையுமே, அழகுறப் பாடி தமிழ் வளர்த்தார், அன்னை முதல்வர் ஜெயலலிதா, ஆட்சியில் இருந்து தமிழ் வளர்க்கின்றார் – தமிழ்த் தாய் இந்த அம்மாவிற்கு சமமாக இருக்கிறாராம். நான் தமிழ்த்தாயினுடைய மகன் என்று சொல்லிக் கொள்வதிலேதான் பெருமையடைகிறேனேதவிர, தமிழன் என்று சொல்லிக் கொள்வதிலேதான் நான் இறுமாப்பு அடைவேனே தவிர, நானே தமிழ்த்தாய் என்று சொல்லிக்கொள்ளும் அளவிற்கு அகம்பாவம் பிடித்தவன் அல்ல. சுய விளம்பரம் தேடுபவனும் அல்ல என்பதற்காகத்தான் – இதை சொன்னேனே தவிர வேறல்ல.

இந்த மாவட்டத்தினுடைய பெருமைகள், இந்த மாவட்டத்தினுடைய புகழ், இந்த மாவட்டத்திலே நாம் வளர்த்திருக்கின்ற விவசாய, பாட்டாளி மக்கள், உழவர் பெருமக்களுக்கான நன்மைகள், திட்டங்கள் இவைகளைப்

பற்றியெல்லாம் எனக்கு முன்னால் இங்கே பேசிய நம்முடைய நண்பர்களெல்லாம் விரிவாக எடுத்துச் சொல்லி யிருக்கின்றார்கள்.

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான் முன்பு சொன்னதைப்போல இந்த மாவட்ட மக்கள் மாத்திரமல்ல, இந்த மாவட்டத்தில் வழிபடக்கூடிய தீரர்களையும் நான் மதிக்கக் கூடியவன். அதனால்தான் தீரன் சின்னமலை சிலை சென்னையிலே வைக்கப்பட்டது – கழக ஆட்சியில். சின்னமலையினுடைய சிலை இங்கே வைக்கப்பட்டு, நேற்றைய தினம் நம்முடைய பெஸ்ட் ராமசாமியும், அவரது நண்பர்களும் சென்னைக்கு வந்து நான் எழுதிய ''பொன்னர் சங்கர்'' படத்தை திரையிட்டபோது பார்த்தார்கள். பார்த்துவிட்டு, அதைப் பற்றி பேசும்போது பெஸ்ட் இராமசாமி அவர்கள் இதைப்போல தீரன் சின்னமலையினுடைய கதையையும் கலைஞர் எழுதி அதைப் படமாக ஆக்க வேண்டும், நாங்களெல்லாம் பார்க்க வேண்டும் என்று சொன்னார்.

எனக்கு தீரன் சின்னமலையைப் பற்றிய கதை நன்றாகத் தெரியும். அவர் எந்த அளவிற்கு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்றார், எப்படியெல்லாம் தம்முடைய வீரர்களை ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கு பழக்கினார். எப்படி எல்லாம் அவர்களது வீர சாகசங்கள் வெளிப்பட்டன என்பதையெல்லாம் குறித்து வைத்திருக்கிறேன். ஒருநாள் பெஸ்ட் ராமசாமி போன்றவர்கள் வருவார்கள், தீரன் சின்னமலையைப் பற்றி எழுதுங்கள் என்று கேட்பார்கள், எப்படி பொன்னர்–சங்கரை நினைவு வைத்துக் கொண்டு எழுதி யிருக்கிறேனோ, அதைப்போல இதையும் எழுதுவோம் என்ற அந்த எதிர்பார்ப்புக்காக அப்பொழுதே நான் தீரன் சின்னமலையைப் பற்றியும் எழுதியிருக்கிறேன். எழுதி வைத்திருக்கிறேன். விரைவில் இந்தப் படம் வந்த பிறகு, அந்தப் படம் வரும் என்பதையும் (கைதட்டல்) நான் பெஸ்ட் இராமசாமி அவர்களுக்கு நேற்றைக்கும் சொன்னேன், இன்றைக்கும் சொல்கிறேன்.

எழுதுவார்கள். கருணாநிதியை அழைத்து கூட்டம் போட சொன்னால், அவர் தான் எழுதப் போகிற படங்களுக்கு விளம்பரம் செய்துவிட்டு போய் விட்டான் என்று சொல்வார்கள். எந்தவொரு படத்திற்கும் நான் வாங்கிய பணத்தை என் சொந்த பொறுப்பிலே வைத்துக்கொண்டு எனக்காகவோ, என் வீட்டாருக்காகவோ இதுவரையிலே நான் செலவழித்துக் கொள்ளவில்லை.

அந்தப் பணம் முழுவதும் ஏழை எளியவர்களுக்கு, நலிந்த மக்களுக்கு அவ்வப்போது காசோலை மூலமாக, ட்ராப்ட் மூலமாக அவர்களுக்கெல்லாம் வழங்கப்படுகிறது. அதைப்போலத்தான் பொன்னர்சங்கருக்கு அதனுடைய தயாரிப்பாளர்கள் தந்த பணமும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அதே நம்பிக்கையோடு நீங்கள் தீரன் சின்னமலை படத்தையும் தயாரிக்கும் போது அதற்கு வருகின்ற பணத்தை எல்லாம் கோவையிலே வாழ்கின்ற ஏழை, எளிய மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு நிதியாக வழங்குவேன் (கைதட்டல்) என்ற அந்த உத்தரவாதத்தோடு அதற்காக பேனாவை நான் கையிலே எடுக்கப் போகிறேன்.

இந்தக் கூட்டத்தில் கழகத்தின் தேர்தல் அறிக்கையை வெகுவாகப் புகழ்ந்து விட்டு இன்னும் சிலவற்றை அதிலே சேர்க்க வேண்டும் என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். ஆக, இவர்கள் இப்போதே சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகிவிட்டார்கள் என்று பொருள். ஏனென்றால் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆனால்தான், ஒரு கோரிக்கை நிறைவேறிய பிறகு, இன்னொரு கோரிக்கை பற்றி அப்போது பேசுவார்கள். அதைப்போல, இப்பொழுது மேடையிலே வீற்றிருக்கின்ற அல்லது மேடையிலே பேசிய, மேடையிலே பல கருத்துக்களை எடுத்துச் சொன்ன நண்பர்களெல்லாம் வேறு பல கோரிக்கைகளை இங்கே வைத்திருக்கிறார்கள்.

ஏன், இன்று காலையிலே இங்கே வந்தவுடனேயே பல கோரிக்கைகள் என்னிடம் வைக்கப்பட்டன. அதுபற்றி பரிசீலித்து ஏற்க,

முடிந்த சில அறிவிப்புகளை மாத்திரம் இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். பால் உற்பத்தியைப் பெருக்கிட கால் நடை தீவனங்களை மானிய விலையில் வழங்கிட வேண்டும் என்று ஒரு கோரிக்கை. காலையிலே அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. நிச்சயமாக இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுவதற்கு அரசு ஆவன செய்யும் (பலத்த கைதட்டல்) என்பதை எங்கள் தேர்தல் அறிக்கையோடு இன்னொரு வாக்குறுதியாக இதைத் தர நான் விரும்புகின்றேன்.

தென்னை விவசாயத்தை ஊக்கப்படுத்தும் வகையில், உயர் ரக தென்னை மரக் கன்றுகளை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கவேண்டும் என்றொரு கோரிக்கை. நிச்சயமாக வழங்கப்படும் (பலத்த கைதட்டல்). அதற்கான உறுதியை இந்தக் கூட்டத்திலே அறிவிக்கின்ற வகையிலே – தென்னை விவசாயத்தை ஊக்குவிக்கின்ற வகையில் உயர்ரக தென்னை மரக் கன்றுகளை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைபடி நிச்சயமாக வழங்கப் படும்.

அடுத்து, திருப்பூர் சாயக் கழிவு நீர்ப் பிரச்சினை. அதற்கு நிரந்தரத் தீர்வு காண தமிழக அரசு எடுத்த முயற்சிகளெல்லாம் நீதிமன்ற நடவடிக்கைகளால் தாமதப்படுகின்றன என்றாலும், மீண்டும் மலர உள்ள கழக ஆட்சியில் சாயக் கழிவு பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். என்னுடைய நனவிலும், கனவிலும் ஒவ்வொரு மணித் துளியிலும் என்னை துன்புறுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு பிரச்சினை திருப்பூர் சாயக் கழிவுப் பிரச்சினை என்பதை நான் மறந்து விடவில்லை. அதற்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசினுடைய ஒத்துழைப்பை பெற்று, சோனியா காந்தி அவர்களிடத்திலே நேரிடையாகப் பேசி, மன்மோகன் சிங் அவர்களிடத்திலே அதுபற்றிய விவரத்தை எடுத்துக் கூறி, நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற அமைச்சர்களையெல்லாம் ஒன்று கூட்டி இதிலே இருக்கின்ற சிக்கல்கள் என்ன என்பதை ஆராய்ந்து அந்த

சிக்கல்களைத் தீர்த்து வெகுவிரைவிலே சாயக் கழிவுப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்படும் என்ற உறுதியை (பலத்த கைதட்டல்) இந்த மாபெரும் பொதுக்கூட்டத்திலே நான் அளிக்க விரும்புகின்றேன்.

கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலமாக நடுத்தர மக்கள் பலரும் வீடுகளைக் கட்டுவதற்காக கடன் பெற்று, அசலை கட்ட முடியாத நிலையில், வட்டியும் அதிகமாகிக் கொண்டே இருப்பதால், பெரும் சிரமப்படுவதாக தகவல் வந்துள்ளது. எனவே, அவர்களுடைய சிரமங்களை கருத்தில் கொண்டு வீடுகளை கட்டுவதற்காக கூட்டுறவு சங்கங்களிலே பெற்ற கடன் தொகைக்கான வட்டியை அறவே தள்ளுபடி செய்வோம் (பலத்த கைதட்டல்) என்பது நம்முடைய தேர்தல் வாக்குறுதியினுடைய அடுத்த கட்டமாக அளிக்கப்படுகின்ற மற்றொரு வாக்குறுதியாகும்.

சூரிய ஒளி மற்றும் காற்றாலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கு மாநில அரசின் சார்பில் ஊக்கத் தொகை வழங்குவது பற்றி கேட்டிருக்கிறார்கள். அதுவும் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். இங்கே காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பெரியவர் சின்னையன் என்னை வாழ்த்திப் பேசிவிட்டு, "நீங்கள் மீண்டும் முதலமைச்சராக வரவேண்டும்" என்றெல்லாம் எனக்கு ஆணையிட்டு விட்டு, ஒன்றைச் சொன்னார், "நீங்கள் எவ்வளவோ செய்திருக்கிறீர்கள். இருந்தாலும் இந்த மின்சாரத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற கஷ்டத்தைப் போக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். நான் அவருக்கு பதில் சொல்வது மூலமாக, மின்சாரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்கும், விவசாயிகள் ஆனாலும், தொழிலாளர்கள் ஆனாலும், வீடுகளிலே குடியிருப்பவர்கள் ஆனாலும் எல்லோருக்கும் பொதுவாக நான் ஒன்றை அறிவிக்க விரும்புகின்றேன். இன்றைக்கு

தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தி ஓரளவோடு நின்று, ஆனால் மின்சாரம் தேவைப்படுகின்ற தொழில்கள் ஏராளமாக ஆகிவிட்ட காரணத்தால், உற்பத்தியாகிற மின்சாரம் விவசாயிக்கு, வீடுகளுக்கு, சிறிய தொழில்களுக்கு போதுமானதாக இல்லை. ஆகவே இந்த எதிர்பாராத கஷ்டங்கள் நமக்கு ஏற்படுகின்றன. என்ன காரணம் என்று பார்த்தால், எந்தவொரு அரசும் எதிர்காலத் திட்டங்களைத் தீட்டும்போது, சர்வ ஜாக்கிரதையாக இருந்து இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகு, எவ்வளவு மின்சாரம் தேவைப்படும், மக்களுக்கு எவ்வளவு உணவு தேவைப் படும் என்றெல்லாம் திட்டங்களை முன்கூட்டியே வகுத்துக் கொண்டு செயல்பட்டால் இந்தக் கஷ்டம் வந்திருக்காது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மின்சாரத் திட்டங்கள் நிறைய நிறைவேற்றப்பட்டன. ஆனால், கடந்த காலத்தில் 2006–க்கு முன்பு இருந்த அம்மையார் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கவில்லை. அப்படி ஆரம்பிக்காத காரணத்தால் இன்றைக்கு நாம் கஷ்டப்படுகிறோம். ஆனால், அவர்களுக்கும் உங்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். இன்னும் ஓரிரு ஆண்டுகளில் நம்முடைய மின்தேவை முழுவதும் நிறைவு செய்யப் பட்டு, பக்கத்து மாநிலங்களுக்கு வழங்கப்படக் கூடிய அளவிற்கு மின் உற்பத்திக்கான திட்டங்கள் தமிழகத்திலே தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே அப்போது மின் உற்பத்தி அதிகமாகும் (பலத்த கைதட்டல்) அந்த வாக்குறுதியை நீங்கள் நம்பலாம். கருணாநிதி அளிக்கின்ற வாக்குறுதி நம்பகமான வாக்குறுதி.

தமிழகத்திலே தற்போது முக்கியமாக இரண்டு தேர்தல் அறிக்கைகள் வந்திருக்கின்றன. நாம் வெளியிட்ட தேர்தல் அறிக்கை ஒன்று. இன்னொரு அறிக்கையும் வெளி வந்திருக்கிறது. நம்முடைய அறிக்கையில் நாம் வானத்தை படம் பிடிப்போம் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால், அவர்களுடைய அறிக்கையில்

வானத்தை வில்லாக வளைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் படித்துப் பார்க்கின்ற சாதாரண பாமர மக்கள் கருணாநிதி சொல்லியிருப்பதெல்லாம் நம்பக் கூடிய விஷயங்கள். இன்னொரு அறிக்கையிலே இருப்பதெல்லாம் நம்ப முடியாத விஷயங்கள், ஏனென்று கேட்டால், கடந்த காலத்தில் நம்பகமான மனிதனாக கருணாநிதியும், நம்பகமான ஆட்சியாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்திருக்கிறது. ஆகவே அவர்களை நம்பலாம். அ.தி.மு.க. ஆட்சி ஜெயலலிதா தலைமையிலே நடைபெற்ற ஆட்சி. நடைபாதை வாசிகளை நடமாட விடவில்லை. ஜெயலலிதா ஆட்சியில் சாதாரண மக்கள் வாழ முடியவில்லை. அரசு ஊழியர்கள் சிறையிலே இருந்தார்கள். ஆசிரியப் பெருமக்கள் அடிபட்டார்கள், உதைபட்டார்கள். இதுதான் அந்த ஆட்சியில் நடைபெற்ற காரியங்கள். அவ்வளவு ஏன்? எதிர்க்கட்சித் தலைவராக இருந்த என்னையே சிறையிலே பூட்டி, என்னையே அடித்து உதைத்து வெளியிலே அனுப்பினார்கள்.

இவைகளெல்லாம் அந்த அம்மையார் ஆட்சியினுடைய சிறப்பு அம்சங்கள். அதையும் இதையும் ஒப்பிட்டுப் பார்த்து, அந்தப் படம் தேவையா? இந்தப் படம் தேவையா? எதை நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்கள் என்பதைத்தான் இந்தத் தேர்தல் நாள் உங்களிடத்திலே கேள்வியாக முன்வைக்க விரும்புகிறது. அந்த நாளில் உங்களை நீங்கள் திரும்பிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

கடந்த கால ஆட்சியில், தமிழ்நாட்டில் நடைபெற்ற அநியாயங்கள், அக்கிரமங்கள் எல்லாம் எண்ணிப் பாருங்கள். இன்றைக்கு தொழிலாளர்களைப் பற்றி, பாட்டாளிகளைப் பற்றிப் பேசுகின்ற ஜெயலலிதா அம்மையார் என்ன சொன்னார்? சட்டமன்றத்திலேயே எங்களையெல்லாம் உட்கார வைத்துக் கொண்டு சொன்னார். பார்த்தீர்களா; அரசாங்க ஊழியர்களை – எப்படி நான் வேலை வாங்குகிறேன் பார்த்தீர்களா என்று சவால் விட்டுச் சொன்னார். நான் கொடுத்த சவுக்கடி அரசு ஊழியர்களையெல்லாம்

ஒழுங்காக ஆக்கிவிட்டது. ஆகவே அரசாங்க அதிகாரிகளை நான் சவுக்கடி கொடுத்து அடக்கி வைப்பேன் என்று ஹிட்லர் பெண் வேஷம் போட்டுக் கொண்டு வந்ததைப் போல, சட்டமன்றத்திலே பேசியவர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள். இன்றைக்கு அவர்கள் உங்களுடைய வாக்குகளைப் பறிப்பதற்காக, உத்தமி வேடம் போடுகிறார். இவர் பேசாத பேச்சா? இவர் ஆடாத ஆட்டமா? இவர் அடிக்காத கொள்ளையா? எல்லாவற்றிலும் ஊழல், எல்லா மந்திரிகளும் ஊழல் என்று சொல்கின்ற அம்மையார் ஜெயலலிதாவைக் கேட்கிறேன், பெங்களூரிலே நடைபெறுகிற வழக்கு எதற்காக நடைபெறுகிறது? ஏறத்தாழ 12 ஆண்டுகாலமாக ஒரு வழக்கு. அந்த வழக்கை நடத்த விடாமல் அதிலே புள்ளி சரியில்லை, கமா சரியில்லை, மொழி பெயர்ப்பு சரியில்லை என்று கெடு வாங்கி, கெடு வாங்கி கடைசியாக இந்தத் தேர்தலுக்குப் பிறகுதான் – தேர்தல் முடிந்த பிறகுதான் தீர்ப்பே சொல்லப்படும் என்ற அளவிற்கு வந்திருக்கிறது. ஏன் தெரியுமா? தேர்தலுக்கு முன்பு தீர்ப்பு சொல்லப்பட்டால், அரசாங்கப் பணத்தை மக்களின் வரிப் பணத்தை கொள்ளையடித்து அளவுக்கு மீறி வருமானத்திற்கு மீறிய சொத்தை ஜெயலலிதா சேர்த்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டு உண்மையாகி தண்டனை கிடைக்கும். தண்டனை கிடைத்தால் பிறகு தேர்தலில் நிற்க முடியாது. அதற்காக பெரும்பாடுபட்டு, புள்ளி சரியில்லை, கமா சரியில்லை, கேள்விக்குறி சரியில்லை, மொழி பெயர்ப்பு சரியில்லை என்றெல்லாம் சொல்லி ஒத்தி வாங்கிக் கொண்டே போகிறார்கள். ஒத்தி வைக்கப்படலாம் எது? தவணைகள் கிடைக்கலாம் எதற்கு? தண்டனை காலத்திற்கு வேண்டுமானால் தவணை கிடைக்கலாம். தண்டனை காலம் வேண்டுமானால் ஒத்தி வைக்கப்படலாம். ஆனால் தண்டனையே கிடைக்காமலா போய்விடும்?

எவ்வளவு கோடி ரூபாய் சொத்து? நீங்கள் பார்த்திருப்பீர்களே படங்களை? அந்தப் படங்களில் எவ்வளவு நகை நட்டுக்களோடு,

காதுக்கு மாத்திரம் அல்ல, இடுப்புக்கு மாத்திரம் அல்ல, கழுத்துக்கு மாத்திரம் அல்ல, தலைக்குக்கூட அலங்காரம் செய்து கொண்டு இருவரும் நின்ற படங்களைப் பார்த்திருப்பீர்களே – அந்தப் படங்களிலே இருக்கின்ற நகைகள், வைர ஒட்டியாணங்கள், நவரத்தின ஆபரணங்கள் இவைகளெல்லாம் யாருடைய சொத்து? இவைகளெல்லாம் யார் தந்த வரிப்பணம்? யாருடைய பூர்வீக சொத்து என்று சொல்ல முடியுமா? தமிழர்களுடைய சொத்து – ஏழைத் தமிழர்களுடைய சொத்து – ஏழைத் தொழிலாளர்களுடைய சொத்து, அவன் வரியாக கொடுத்த சொத்தல்லவா? அவைகளையெல்லாம் வைத்துக் கொண்டு "நான் ஏழை, நான் ஏதுமறியாதவள், ஆகவே எனக்கு வாக்களியுங்கள்'' என்று அம்மையார் கேட்பார்களேயானால் தமிழன் ஒருமுறை ஏமாறுவான், இருமுறை ஏமாறுவான், என்றைக்கும் ஏமாறுவான் என்று யாரும் நினைத்து விடாதீர்கள் (பலத்த கைதட்டல்).

எனவே, என்னை ஆறாவது முறையாக முதலமைச்சராக ஆகுங்கள் என்று நீங்கள் கேட்பது எனக்குப் பதவி அளிப்பதற்காக அல்ல. உங்களுக்கு பணிவிடை செய்ய – "இந்த வேலைக்காரன்தான் தகுதியானவன்'' என்று கருதி – "இவன்தான் ஒழுங்காக ஊழியம் புரிவான்'' என்று எண்ணி, "ஆறாவது முறையும் நீ தான் எங்கள் வீட்டு வேலைக்காரன்'' என்று சொல்வதைப் போல, இந்த நாட்டுக்கு நீங்கள்தான் முதலமைச்சர் என்று கட்டளையிட்டிருக்கிறீர்கள். நான் உங்களுடைய கட்டளையை சிரமேல் தாங்கி இந்த நாட்டு மக்களுக்கு – மொழிக்கு – கலைக்கு – ஏழை எளியோர்களுக்கு – கூலித் தொழிலாளர் கள் முதல் நடுத்தர மக்கள் வரையில் அத்தனை பேருக்கும் பாடுபடுவேன், பாடுபடுவேன் என்ற உறுதியை சூளுரையாக இந்தக் கூட்டத்திலே அறிவித்து, நீங்கள் காலை முதலே விமான நிலையத்திலிருந்து இதுவரையில் என் மீது பொழிகின்ற அன்புக்கு என்ன நான் பரிசளிக்கப் போகிறேன், உங்களுடைய ஆர்வத்திற்கு என்ன நான் நன்கொடை தரப்போகிறேன், என்னை நானே தருவதைத்

தவிர, உங்களுக்காக என்னை நானே தருவேன் என்று மாத்திரம் உங்களுக்கு உறுதியளித்து நீங்கள் என்னை பயன்படுத்திக் கொள்கிற வரையில் பயன்படுத்துங்கள். எனக்குப் பிறகு இந்த நாட்டில் நான் விட்டுச் செல்கின்ற பணிகள் – தந்தை பெரியாருடைய, அறிஞர் அண்ணா வினுடைய கொள்கைகள் – இவைகள் ஒரு சமுதாயத்தை மேலும் மேலும் வீறு கொள்ளச் செய்யும் பணிகளாக அமைய வேண்டும், அப்படி அமையும் என்ற நம்பிக்கையோடு உங்கள் அத்தனை பேரிடமிருந்தும் நான் விடை பெறுகின்றேன். மறவாதீர்கள் உதயசூரியன் சின்னம் – மறவாதீர்கள் கை சின்னம் – மறவாதீர்கள் கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்திற்கான சிலிண்டர் சின்னம் – இந்தச் சின்னங்களுக்கெல்லாம் வாக்களித்து இந்தத் தொகுதியிலே உள்ள அத்தனை பேரும் வெற்றி பெறக் கூடிய அந்த ஆற்றலைப் பெறுங்கள். ஒற்றுமையாக பணியாற்றுங்கள். சில இடங்களில் ஒற்றுமைதான் கொஞ்சம் குறைவு என்று கேள்விப்பட்டேன். அந்த ஒற்றுமைக்கும் நீங்கள் வழிகோலி – அந்த ஒற்றுமையை உரமாக்கி, உறுதியாக்கி வெற்றியைத் தேடித் தாருங்கள், தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றி னார்.

ஈரோட்டில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் ஆற்றிய உரை!

ஈரோடு, ஏப்.1 –

ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து 31.3.2011 அன்று ஈரோட்டில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

கடந்த ஒரு வார காலத்திற்கும் மேலாக தமிழகத்திலே – தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களிலே கலந்து கொண்டு, இன்று பிற்பகல் குருகுலத்திற்கு வந்து சேர்ந்தேன். என்னுடைய குருகுலம் தமிழகத்திலே ஈரோடு நகரம் என்பதை நீங்களெல்லாம் நன்கு அறிவீர்கள். இந்த குருகுலத்தில் பேசுவதென்றாலே, எனக்கு உடம்பெல்லாம் புல்லரிக்கும், உள்ளமெல்லாம் களி கொள்ளும். நெஞ்சமெல்லாம் இனிக்கும். நினைவெல்லாம் சுழலும். அத்தகைய குருகுலத்தில் இங்கு நான் பல்லாயிரக்கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் காணும்போது, பேசவும் வேண்டுமோ என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

தம்பி இளங்கோவன் இங்கு பேசும்போது, நான் நீண்ட நேரம் பல கருத்துக்களை இந்தக் கூட்டத்திலே சொல்ல இருக்கிறேன் என்றெல்லாம் குறிப்பிட்டார். இந்தக் கூட்டத்தினுடைய மொத்த விளைவாக நாளையதினம் பத்திரிகைகளில் வரக்கூடிய செய்தி "கருணாநிதியும் இளங்கோவனும் ஒரே மேடையில்!'' என்பதுதான். (கைதட்டல்) இதுதான் பெரிய அதிசயமான செய்தியாக நாளைக்கு

வெளிவரும். எனக்குத் தெரியும். நான் அப்படி செய்தி வெளியிடுபவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இளங்கோவன் இன்றைக்கு இந்த மேடையிலே ஒரே வரிசையிலே எனக்குப் பக்கத்திலே அமர்ந்திருக்கலாம். ஆனால் இந்த இளங்கோவன் தந்தை பெரியார் வாழ்ந்த காலத்தில் – நான் இந்த குருகுலத்திலே பயின்ற காலத்தில் என்னுடைய மடியிலே தவழ்ந்த பிள்ளைதான் இந்த இளங்கோவன். (பலத்த கைதட்டல்) அப்படிப்பட்ட இளங்கோவனை நான் காலையிலே வந்து இறங்கியபோது சந்தித்த நேரத்தில் சொன்னேன், பரவாயில்லை ஜெயித்து விடுவோம் என்று சொன்னேன்.

ஏனென்றால், எங்கெங்கே பிளவுகளை உண்டாக்கி, பிரிவுகளை ஏற்படுத்தி, பேதங்களை வடிவமைத்து இந்த இயக்கத்தை – இதனுடைய வெற்றிகளைத் தடுக்க வேண்டும் என்று யார் யார் கருதுகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் கிஞ்சிற்றும் இடம் தர மாட்டோம் என்பதற்கு அடையாளமாகத்தான் இன்றைய நிகழ்ச்சி நடைபெறுகிறது. கருத்துக்களை எடுத்துச் சொல்வதிலே ஆயிரம் வேறுபாடுகள் இருக்கலாம். ஒருவருடைய கருத்தைத்தான் இன்னொருவர் சொல்ல வேண்டும் என்று இல்லை. ஆனால், நோக்கம் சரியாக இருந்து, குறிக்கோள் ஒழுங்காக இருந்து – அந்தக் குறிக்கோளை அடைவதற்கான மார்க்கம் சில நேரங்களிலே ஒன்றோடு ஒன்று மாறுபாடு கொள்ளுமேயானால் அதனால் குறிக்கோள் ஒன்றும் குறைந்து விடாது.

தந்தை பெரியார் அவர்களுடைய மாணவனாக 1945 ஆம் ஆண்டில் ஈரோடு குருகுலத்திலே சென்று அவரிடத்திலே பயிற்சி பெற்று, அதைத் தொடர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே அவருடைய தம்பியாக இருக்கும் அந்தப் பேறு பெற்று இன்றைக்கு உங்களோடு சேர்ந்த உடன்பிறப்புக்களிலே ஒன்றாக ஆகியிருக்கிறேன் என்றால், இதற்கெல்லாம் காரணம் நாம் கொண்டிருக்கின்ற கொள்கை உணர்வுதான். அந்த கொள்கை உணர்வை வென்றெடுக்க தந்தை

பெரியார் அவர்கள் எடுத்த முயற்சி – திராவிட இயக்கத்தை தமிழகத்தில் – தென்னகத்தில் – அதைத் தொடர்ந்து வடபுலத்திலே கூட பரவச் செய்ய வேண்டும் என்பதுதான்.

ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள் இந்தியா முழுவதும் இந்த இயக்கத்தை இதே கொள்கையோடு பரப்புவது என்பது இயலாத காரியம் என்பதால் இந்த இயக்கத்தினுடைய உள்ளார்ந்த கருத்துக்களை – மையக் கருத்துக்களை எடுத்து வைத்து, இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டும், இந்தியாவினுடைய இறையாண்மையைக் காப்பாற்றுவதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அதே நேரத்தில் திராவிட இன உணர்வு – திராவிட சமுதாயம் என்ற இந்த பெரிய சமுதாயத்தினுடைய உணர்வுகளையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசியல் இயக்கமாக மாற்றி, தேர்தலிலே ஈடுபட்டு, முதல் தேர்தலில் அதிகமான வெற்றியை நாம் பெற முடியாவிட்டாலும், அதிலே பெற்ற வெற்றிகளைத் தொடர்ந்து, ஆட்சியை பிடிக்கின்ற அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து, இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பிலே கழகம் அமர்ந்திருக்கின்ற காட்சியை நீங்களெல்லாம் காணுகிறீர்கள் என்றால், அது தனிப்பட்ட முறையிலே யாருடைய முயற்சியும் அல்ல.

இந்த முயற்சிக்கு வித்திட்ட பெரியாரும், நீரூற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களும், அவர்களெல்லாம் உருவாக்கிய பெரும் தருதான் இந்த இயக்கம் என்பதையும், அந்த தருவிலே இருந்து கிடைக்கின்ற பயன்களையெல்லாம் இன்றைக்கு நாம் உய்த்திடுகின் றோம். இன்றைக்கு நாம் அனுபவிக்கின்றோம் என்பதையும் யாரும் மறந்து விட இயலாது. நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று இங்கே பேசிய நம்முடைய கூட்டணிக் கட்சித் தலைவர்கள் உங்களுக் கெல்லாம் எடுத்துரைத்தார்கள். ஆம்; நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். யாருக்கு? ஏதோ ஒரு காரியத்திற்காக நன்மை

செய்தவர்களிடத் திலே, நமக்கு வேண்டியவர்களிடத்திலே, வேண்டியதைக் கொடுத்தவர்களிடத்திலே நன்றியுடையவர்களாக இருப்பது என்பது வேறு. ஆனால் மொத்த சமுதாயத்திற்கும் உழைத்து, இந்த சமுதாயத்தையே ஒளிமிக்க இனமாக ஆக்கியவர்களுக்கு எப்படி நன்றி கூறுவது. "திராவிடம்'' என்ற இந்த சொல்லை – திராவிட இயக்கம் என்கின்ற அந்த சொற்றொடரை தமிழகத்திலே இணைத்து – அதனுடைய பெரும் பயனை நாமெல்லாம் பெறுகின்ற அளவிற்கு பாடுபட்ட பெரியாருக்கும், அண்ணாவுக்கும் நாம் நன்றியுடைய வர்களாக இருக்க வேண்டும்.

காலமெல்லாம் பெரியார் எதற்காக பாடுபட்டார்? எதற்காக உழைத்தார்? பேரறிஞர் அண்ணா எதற்காக எழுதி எழுதி குவித்தார்? அவர்களுக்கெல்லாம் நன்றியுடையவர்களாக இருப்போம் என்றால், இந்த இனம் இன்றைக்கு ஒன்றாக இருக்கிறது, இந்த இனத்தை இனப் பகைவர்கள் யாரும் தொட்டுக்கூடப் பார்க்க முடியாது. இந்த இனத்தை அழிக்க எவனும் நினைக்கவே முடியாது. நினைத்தால் – நினைத்த மாத்திரத்திலே, அவன் நிலைக்காமல் போய்விடுவான் என்று எடுக்கின்ற அந்த சபதம் ஈரோடு மாநகரத்திலே – தந்தை பெரியார் பிறந்த மண்ணிலே பேரொளியாக இன்றைக்குக் கிளம்புகிறது என்றால், இந்த பேரொளிக்கு என்றைக்கும் தோல்வி இல்லை. வெற்றி பெற்றே தீருவோம் (பலத்த கைதட்டல்).

தோல்வி என்பது பெரியார் அவர்களுடைய வாழ்க்கையிலே அடிக்கடி சந்தித்ததுதான். அண்ணா அவருடைய தேர்தலிலே முதல் முதலாக இல்லாவிட்டாலும், இரண்டாவது முறையாக சந்தித்ததுதான். ஆனால், வெற்றி தோல்விகள் ஒரு இயக்கத்தினுடைய கொள்கைகளுக்கு – ஒரு தலைவருடைய லட்சியங்களுக்கு முத்திரை அல்ல. அவைகளை மேலும் கொண்டெடுத்துச் செல்கின்ற – மேலும் மேலும் வெற்றி பெறச் செய்கின்ற அத்தகைய பாதைகளாகத்தான் அவைகள் அமைந்திருக்கின்றன.

இந்த மூலக் கருத்தை உள்ளடக்கி இன்றைக்கு நடைபெறுகின்ற சட்டமன்றத் தேர்தலை நாமெல்லாம் நோக்க வேண்டும். ஒரு இயக்கத்தை உருவாக்குவது என்பது சாதாரணமான காரியமல்ல. தந்தை பெரியார் மாத்திரமல்ல, அறிஞர் அண்ணா மாத்திரம் அல்ல, நாங்கள் மாத்திரமல்ல, இந்த மேடையைப் பார்க்கிறேன், ஈரோடு நகரத்திற்கு நான் வரும்போதெல்லாம் காணுகின்ற இந்த மேடையிலே எங்களோடு வீற்றிருக்கின்ற எத்தனையோ பேர் இன்று இல்லை. அவர்களெல்லாம் வளர்த்த தருதான் – ஆலவிருட்சம்தான் இந்த இயக்கம் என்பதை எண்ணிப்பார்க்கின்றேன்.

என்னை வளர்த்த – என்னை ஆளாக்கிய – என்னைப் போன்ற நாலு கோடி தமிழர்களை உருவாக்கிய தந்தை பெரியார் இந்த மேடையிலே இல்லை. அந்தப் பெரியாரின் புதல்வராக – எனக்குள்ள ஆருயிர் நண்பர்களிலே ஒருவராக – அரசியல் வித்தகராக – எந்தத் தலைப்பிலே பேசு என்று சொன்னாலும் அந்தத் தலைப்புக்கு உயிர் கொடுத்து பேசுகின்ற – வீரமிக்க சொற்பொழிவாளராக விளங்கிய எனது ஆருயிர் நண்பர் ஈ.வி.கே. சம்பத் இன்றைக்கு இல்லை.

எஸ்.ஆர்.சந்தானம் இன்றைக்கு இல்லை. ஈரோடு அப்பாவு இன்றைக்கு இல்லை. ஈரோடு சின்னச்சாமி, அண்ணா மறைந்த பிறகு நீதான் முதலமைச்சராக ஆக வேண்டும் என்று அங்கேயிருந்த சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் ஒன்று திரட்டி, என்னை கரம்பிடித்து தூக்கிக் கொண்டே போய் எம்.எல்.ஏ.க்களுடைய கூட்டத்தில் இவரைத்தான் முதலமைச்சராக ஆக்க வேண்டும் என்று அன்றைய தினம் சங்கல்பம் செய்து அதிலே வெற்றிபெற்ற பாட்டாளிகளின் தோழன் – பகுத்தறிவுச் சிங்கம் ஈரோடு சின்னச்சாமி இன்றைக்கு இல்லை.

கோபி ராஜூ இந்த மேடையிலே அமர்ந்திருக்கக் கூடிய வாய்ப்பு இன்றைக்கு இல்லை. ஈரோடு அரங்கராசன், மாநகராட்சி

மன்றத் தலைவராக இருந்து மகத்தான சாதனைகளை இந்த நகருக்குத் தந்த அரங்கராசன் இன்றைக்கு இல்லை. மதார்ஷா இல்லை. பழையகோட்டை அர்ஜுனன், கூட்டம் நடைபெறும் போதெல்லாம், ஈரோடு மேடையிலே அமர்ந்திருக்கக் கூடிய அந்த வாலிபர் இல்லை. விஸ்வநாதன் இல்லை. தவமணி ராஜன் – எளிய உருவம் – ஏழைகளுக்காகவே சிந்திக்கின்ற இதயம் படைத்த அருமை நண்பர் தவமணி ராஜன் இன்றைக்கு இல்லை. என்னுடைய ஆருயிர் நண்பர் குடியரசு அலுவலகத்திலே என்னை அழைத்து வந்து அய்யாவினுடைய கரம் பிடித்து இணைத்து வைத்த கவிஞர் கருணானந்தம் இன்றைக்கு இல்லை. அரிவரத சாமி குடியரசு அலுவலகத்தில் எங்களுக்கெல்லாம் காப்பாளராக இருந்து – எங்களை வாழ வைத்த அரிவரத சாமி இந்த மேடையிலே இன்றைக்கு இல்லை. இத்தனைக்கும் மேலாக அடிக்கடி எங்களை குடியரசு அலுவலகத்திலே சந்தித்து அறிவுரைகள் கூறி, எங்களுக்கு ஆற்றல் வழங்கிய அருமை நண்பர் சண்முகவேலாயுதம் இன்றைக்கு இல்லை.

இன்று மாலையிலே சண்முகவேலாயுதத்தின் பேரன் என்று சொல்லிக் கொண்டு அவருடைய புகைப்படத்தை என்னிடத்திலே காட்டினார் ஒரு இளைஞன். பகுத்தறிவு பேழையாக சண்முக வேலாயுதம் நடத்திய ஈரோட்டுப் பாதை என்ற புத்தகத்தையும் என்னிடத்திலே வழங்கினார். இவர்களையெல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன். இத்தகைய ஆற்றல் மறவர்களால், லட்சிய வீரர்களால் வளர்ந்த இயக்கம் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் இங்கே வீற்றிருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய ஆதரவோடு, ஆட்சி புரிகின்ற இந்த சூழ்நிலையில் இப்பொழுது இதே குருகுலத்தில் உங்களையெல்லாம் பார்த்து, எங்களுக்கு ஆதரவு தாருங்கள் என்று கேட்பதற்கு வந்திருக்கிறோம் என்றால், வாக்குகளைப் பெற்று, வசதியான வாழ்வுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. வாக்குகளைத்

தருகின்றவர்களுக்கு வசதியான வாழ்வை அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகமானாலும், அதன் தலைமையிலே உள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலே உள்ள கட்சிகளானாலும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன்.

ஏழைகளுக்காக, பரம ஏழைகளுக்காக, பாட்டாளி மக்களுக்காக, தொழிலாளர்களுக்காக, அன்றாடங் காய்ச்சி களுக்காக, அடித்தட்டு மக்களுக்காக, தமிழகத்திலே இருக்கின்ற மாபெரும் இயக்கம்தான் இந்த இயக்கம். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே அந்த வல்லமை உண்டென்றால், அதனோடு இணைந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் ஆனாலும், எங்களோடு இணைந்திருக்கின்ற மற்ற தோழமைக் கட்சிகளானாலும், குறிப்பாக பாட்டாளி மக்கள் கட்சியானாலும், சிறப்பாக இந்த மாவட்டத்திலே உதயமாகி இருக்கின்ற கொங்கு நாடு முன்னேற்றக் கழகமானாலும், இவர்களெல்லாம் இணைந்த இந்தக் கூட்டமைப்பு ஏழை மக்களுக்காக எல்லாத் தரப்பு மக்களுக்காகவும், அவர்களுடைய உரிமைகளை பெற்றுத் தருவதற்காக அமைக்கப்பட்ட கூட்டமைப்பு என்பதை நான் மறக்க மாட்டேன். நீங்களும் மறந்து விடக்கூடாது. இப்போது இந்தத் தேர்தலிலே நடைபெறுகின்ற பிரச்சாரத்தைப் பார்க்கிறோம் ஒன்றை மறந்து விடக் கூடாது.

ஏறத்தாழ பத்திலிருந்து பதினைந்து கட்சிகளைக் கொண்ட ஒரு கூட்டணி, ஜனநாயக முற்போக்குக் கூட்டணி, இந்தக் கூட்டணியிலே இருக்கின்ற அத்தனை பேரும், யாரை முதலமைச்சராக ஆக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்? உங்களுக்குத் தெரியும். அடியேனைச் சொல்கிறார்கள், அடியேன் ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவன். ஆகவே பழக்கப்பட்ட மாட்டையே வண்டியில் பூட்டுவோம் என்பதைப்போல ஐந்து முறை முதலமைச்சராக இருந்த என்னை, ஆறாவது முறையும் வண்டி இழுக்க வா என்று எனக்கு வரவேற்பு

தருகிறார்கள். ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். எதிரணியில், இந்த அணியில் சுட்டிக் காட்டுவதைப் போல யார் முதலமைச்சர் என்று நேரடியாக திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்களா என்றால் இல்லை. காட்ட முடியாது. காட்டினால் மறு நாள் பத்திரிகைகளிலே புகைப்படம் வரும். அடி தடி, ரகளை என்ற புகைப்படம் வரும். நான் பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை. நான் பொதுவாக இதுபோன்ற பெரிய நிகழ்ச்சிகளானாலும், அல்லது சிறிய நிகழ்ச்சிகளானாலும் அரசியல் அரங்கில் தேவைப்படாமல் யாருடைய பெயர்களைச் சொல்லியும் யாரையும் நான் புண்படுத்த விரும்பவில்லை. மன்னிக்க வேண்டும், யாரையும் புண்படுத்த விரும்பவில்லை என்பதை விட, யாரையும் விளம்பரப்படுத்த விரும்பவில்லை. (பலத்த கை தட்டல்).

என்ன சொன்னார்கள்? நான் முதலமைச்சரானால் வீட்டுக்கு வீடு அரிசி மூட்டையைத் தூக்கிக்கொண்டு வந்து அளந்து போடுவேன்! நான் முதலமைச்சர் ஆனால் வீட்டுக்கு வீடு எண்ணைக் கலையத்தை தூக்கிக் கொண்டு வந்து எண்ணை ஊற்றுவேன். நான் முதலமைச்சரானால் என்று இப்படி ஆனால், ஆனால் என்று சொன்னவர்கள் ஆவேன், ஆகவே என்னை ஆதரியுங்கள் என்று சொல்லத் தலைப்பட்டார்கள். இப்பொழுது யார் முதலமைச்சர் அந்த அணியில்? இது கேள்விக் குறியல்லவா? இங்கே திட்டவட்டமாக எல்லோரும் சொல்லி விட்டார்கள், நீதான் முதலமைச்சர் என்று உங்களையெல்லாம் சாட்சிகளாக வைத்துக் கொண்டு, ஆறாவதாக அமையப் போகின்ற தி.மு.கழகத்தினுடைய முதலமைச்சர் கருணாநிதிதான் என்று அறிவித்து விட்டார்கள். அப்படி அங்கே இருக்கின்ற இரண்டு தலைவர்கள், ஒருவர் ஆண் தலைவர், இன்னொருவர் பெண் தலைவர். இந்தத் தலைவர்கள் யாராவது ஒரு மேடையில் – யாருக்கும் சந்தேகம் வேண்டாம். இன்னார்தான் முதமைச்சர் என்று இதுவரையிலே சொன்னார்களா என்றால்,

ஒருவேளை இதற்கு பிறகு கருணாநிதி சொல்லிவிட்டார், அதற்காகச் சொல்ல வேண்டும், சொன்னாலும் தவறு, சொல்லாவிட்டாலும் தவறு என்று பெயரைச் சொன்னால், சொல்லலாம்.

ஆனால் நம்முடைய அணியைப் பொருத்தவரையில் உறுதியாக இருக்கிறோம். காரணம் இந்த அணியிலே இருப்பவர்கள் எல்லாம் என்னை நம்புகிறவர்கள். நான் அவர்களை நம்புகிறவன் (பலத்த கை தட்டல்), எப்படி நம்புகிறார்கள்? அனுபவத்தின் காரணமாக நம்புகிறார்கள். கடந்த கால ஆட்சியில் நாங்கள் செய்த சாதனைகளை, நாங்கள் அளித்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றியதைப் பார்த்துவிட்டு நம்புகிறார்கள். தம்பி இளங்கோவன் பேசும்போதுகூட சொன்னார், இவர்களால் இந்த டி.வி.யை தர முடியுமா? என்று அவரும், ப.சிதம்பரமும் மற்ற பொருளாதார மேதைகளும் பேசியதாகவும், பிறகு நான் அதை நிறைவேற்றத் தொடங்கியதையும் இங்கே இளங்கோவன் பூரிப்போடு குறிப்பிட்டார்.

ஆனால் நீங்கள் ஒன்றை மறந்துவிடக் கூடாது. அது எப்படி சாத்தியமாயிற்று என்பது எந்த முறையில் நிறைவேற்றப்பட்டது என்பதெல்லாம் எனக்கு மாத்திரமல்ல, நம்முடைய ஜி.கே. மணி வந்திருக்கிறார் இங்கே, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அவரைப் போன்றவர்கள் எல்லாம் தி.மு.கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், ஒரு நாலைந்து பேர், கம்யூனிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர்கள் இருவர், வேறு பல கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள், இவர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு அந்த குழுதான் இந்த ஏலங்களை அவ்வப்போது நடத்தி, இத்தனை டி.வி. பெட்டிகள் இந்த வகையில் வேண்டும் என்பவைகளையெல்லாம் விளம்பரப்படுத்தி, அப்படி விளம்பரப்படுத்தப்பட்ட பிறகு நாங்கள் அவற்றை வழங்குகிறோம் என்று உலகம் முழுவதும் உள்ள பல நிறுவனங்கள் முன் வந்து, அப்படி வந்த நிறுவனங்களுடைய மேலாளரை யெல்லாம் அழைத்து, பொதுவாக நான் அமர்ந்து

அனைத்துக் கட்சித் தலைவர்கள் – அனைத்துக் கட்சித் தலைவர்கள் என்றால் மன்னிக்க வேண்டும் அ.தி.மு.க.விலே யாரும் வர மாட்டார்கள், அதனால் நான் அழைத்தும் வராத அந்தத் தலைவர்களைத் தவிர, அழைத்து வந்த தலைவர்களான மணி போன்றவர்கள் பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, வேறு பல கட்சிகள், காங்கிரஸ் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இந்த கட்சியினுடைய தலைவர்களெல்லாம் வந்து அமர்ந்து, யார் யார் விண்ணப்பித்திருக்கிறார்களோ, நாங்கள் 10 ஆயிரம் டி.வி. எங்களால், இந்த அரசுக்கு தர முடியும், அதனுடைய விலை இவ்வளவு என்று அந்த நிறுவனங்கள் சொன்னால், அவைகளையெல்லாம் பரிசீலித்து அந்தக் கமிட்டியினுடைய அனுமதியைப் பெற்று அவைகளுக்கு ஆர்டர் கொடுத்து அவைகளை யெல்லாம் பெற்று உங்களுக்கு வழங்கி இருக்கிறோம். இவ்வளவு நாணயமான முறையிலே அந்த டி.வி. பெட்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இதை உடனிருந்து பார்க்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், என்னை மேலும் நம்பினார்கள் என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. எனவேதான் அவர்களுடைய நம்பிக்கை வீண் போகாமல் கடந்த காலத்திலே வாக்குறுதிகளை நிறைவேற்றினோம். அதைப்போலவே குழந்தைகளுக்கு நோய் – நொடி வந்தால் அதை தீர்ப்பதற்கு முடியாமல் தாய், தந்தையர் வாடிய நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்து, மருத்துவத் துறையிலே இன்னும் பல முன்னேற்றங்களைச் செய்ய வேண்டும் என்று அளித்த வாக்குறுதியை நிலைப்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவக் கல்லூரிகள், ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவத் துறை மேம்படுத்துவதற்கான சாதனைகளை, வசதிகளைக் கொண்ட எல்லா விதமான ஏற்பாடுகளோடும் துணை புரிகின்ற நிலையோடு கொண்ட சேவகி, சேவகர் களையெல்லாம் வைத்துக்கொண்டு மருத்துவ மனைகள், அதைப் போலவே பெருந்தலைவர் காமராஜர் ஒரு ஏழைப்

பையனைப் பார்த்து கேட்டார் ஏன் நீ அழுக்குச் சட்டையோடு, கந்தல் துணியோடு, மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறாய் என்று பாதையிலே போகும்போது காரை நிறுத்தச் சொல்லிக் கேட்டார். அந்த பையன் சொன்னான் – எனக்கு படிப்பதற்கு வசதி இல்லை, பணமில்லை, என் தாய் தந்தையர் கேட்டால் பணம் கொடுக்க மறுக்கிறார்கள். காரணம் அவர்களுக்கு சம்பாத்தியம் இல்லை என்றான். உடனே அவர் பக்கத்திலே இருந்த சுந்தரவடிவேலு என்ற கல்வி அதிகாரியை அழைத்து, இது என்ன கொடுமை – சுதந்திர நாட்டில் ஒரு ஏழை பையன் ஏன் படிக்கவில்லை என்று கேட்டால், படிப்பதற்கு பள்ளிக்கூடம் இல்லை. இருந்தாலும் அங்கே போவதற்கு என் தாய் தந்தையர் அனுமதிப்பதில்லை. அனுமதிக்காததற்கு காரணம், நான் வீட்டிற்கு வந்து பட்டினிதான் கிடக்க வேண்டும், அப்படித்தான் என் தாய் தந்தையர் என்னை பழக்கி இருக்கிறார்கள் என்று சொல்லுகிறான். இந்த நிலைமை மாற வேண்டுமானால் உடனடியாக கிராமந்தோறும் ஆரம்பக் கல்வி நிலையங்களை திறந்திட முயற்சி செய்யுங்கள் என்று ஒரு உத்தரவை பெருந்தலைவர் காமராஜர் இட்டார். அந்த உத்தரவின்படி ஆயிரக்கணக்கான ஆரம்பப் பள்ளிகள் உருவாயின. அந்த ஆரம்பப் பள்ளிகளில் ஆதிதிராவிடர் வீட்டுப் பிள்ளைகள் என்றாலும் அந்தணர் வீட்டுப் பிள்ளைகள் ஆனாலும் எல்லா சாதி பிள்ளைகளும் படிக்கக் கூடிய வசதி வாய்ப்புகள் இவைகள் எல்லாம் உருவாக்கப்பட்டன. அப்போதுதான் தந்தை பெரியார் அவர்கள் 'கல்விக் கண் திறந்த காமராஜர்' என்று அடைமொழியோடு அவரை வாழ்த்தினார். ஆனால் ஒரு அரசு கொண்டு வந்த திட்டங்களை, அடுத்து வருகின்ற அரசுகள் தொடர்ந்தால்தான் அந்த திட்டங்கள் வாழ முடியும். அடுத்த வந்த நாங்கள் பெருந்தலைவர் காமராசர் கொண்டு வந்த கல்வித் திட்டத்தை, அவர் சத்துணவு கொடுத்து மாணவர்களை ஈர்த்து, அவர்களுடைய பசி, பட்டினிகளைப் போக்கி, அவர்கள் நலமோடு வாழ்ந்து, வளமோடு கல்வி பெற அவர் எடுத்த அந்த முயற்சியைப் பார்த்து அதே முறையைப் பின்பற்றுவதற்காகத்தான்

தி.மு.கழக அரசு, சத்தணவு என்றால் அந்த உணவிலே சத்து கொடுக்கின்ற முட்டையும் இருக்க வேண்டுமென்று ஒரு முட்டை வழங்கி சத்துணவுத் திட்டத்தை தி.மு.கழக ஆட்சி கொண்டு வந்தது.

இது காமராசர் கொண்டு வந்த திட்டமாயிற்றே, அதைத் தொடர்ந்து அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடர்ந்த திட்டமாயிற்றே, ஆகவே இந்தத் திட்டத்தை ரத்து செய் என்று சொல்லுகின்ற மட்டமான அறிவு, மட்டமான புத்தி தி.மு.க.விற்கு இல்லாத காரணத்தால், சரி காமராஜரும் சத்துணவு தந்தார், எம்.ஜி.ஆரும் சத்துணவு என்றார், இவர்கள் இரண்டு பேரையும் தொடர்ந்து இது உண்மையான சத்துணவாக ஆக்க ஒரு முட்டை சேர்த்துக் கொடுங்கள், பிறகு அடுத்த தேர்தல் அறிக்கையில் இரண்டு முட்டை, பிறகு மூன்று முட்டை, பிறகு நான்கு முட்டை, இப்போது வாரம் முழுவதும் முட்டை, முட்டை! முட்டை!! முட்டை!!! என்று ஐந்து முட்டைகள் வழங்குகிறோம். முட்டைகள் சாப்பிடாத சைவக் குழந்தைகளுக்கு வாழைப் பழம். இப்படி பிள்ளைகளை ஊட்டி வளர்த்து அவர்களுக்கு ஆரம்பத்திலே கல்வி ஊட்டிய அரசுதான் தி.மு.கழக அரசு.

அதற்கு பிறகு அவர்களுக்கு மேற்படிப்பு, உயர் வகுப்புப் படிப்பு என்றெல்லாம் எத்தனையோ தேவைப்படுகிறது. இன்றைய தினம் தமிழகத்திலே எத்தனை கல்லூரிகள், எத்தனை கல்வி நிலையங்கள், ஆரம்பப் பள்ளியிலே தொடங்கிய இந்த அறிவு கடல் எந்த அளவுக்குப் பெருகி, தமிழகத்திலே இன்றைக்கு இந்தியாவினுடைய மத்திய அமைச்சர்களே புகழாரம் சூட்டக்கூடிய அளவிற்கு கல்வி வளர்ச்சியிலே மற்ற மாநிலங்களோடு போட்டி போடுகின்ற மாநிலமாக தமிழகம் இருக்கிறது என்றால் அதற்கு தி.மு.கழக அரசு காரணம் என்பதை யாராவது மறுக்க முடியுமா, அல்லது மறக்க முடியுமா? அப்படிப்பட்ட கல்வியை வளர்ப்பது மாத்திரமல்ல – இன்றைக்கு பத்திரிகையிலே பார்த்தேன், தொழிலை நசுங்கச் செய்து விட்டார்கள்

– தொழிலே இல்லை. தொழில் திட்டங்கள் அறவே இல்லாமல் போய்விட்டது. நான் வந்துதான் தொழிலை ஆரம்பிக்கப்போகிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் அந்த அம்மையார் அவர்கள் கூறியிருக்கின்றார்கள், நான் விளக்க விரும்பவில்லை. இன்றைக்கு தமிழகத்திலே ஏறத்தாழ 50 ஆயிரம் கோடி ரூபாய்க்கான தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. கழக ஆட்சிக் காலத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, அண்ணா அவர்களுக்கு பிறகு நான் அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகும் சரி, அமெரிக்காவில் இருப்பவர்கள், கொரியாவில் இருப்பவர்கள், ஜப்பானிலே இருப்பவர்கள், இங்கிலாந்திலே இருப்பவர்களெல்லாம் நாடி, ஓடி, தேடி வருகிறார்கள் என்றால் தமிழ் நாட்டிலே தொழில் தொடங்கத்தான் வருகிறார்கள். அப்படிப்பட்ட தொழில் தொடங்குவதிலே கூட, வெளிநாடுகளிலே உள்ளவர்கள் போட்டிப் போடுகின்ற அளவிற்கு தொழில் வளர்ந்திருக்கிறது. அந்தத் தொழிலை ஏதோ நசிக்கிவிட்டோம், தொழிலே இல்லை என்றெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர் பேசுகிறார் என்றால் அது உண்மையா அல்லவா என்பதை நீங்கள் ஊரிலே இருக்கின்ற அறிவாளர்கள், அரசியல் மேதைகள் ஆகியோரைக் கேட்டுத் தெரிந்துக்கொள்ளுங்கள். தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு முனைப்பாக தொழில் வளர்ந்திருக்கிறதா இல்லையா அல்லது தேய்ந்து போய் விட்டதா என்பதை அவர்கள் மூலமாக நீங்கள் தெரிந்து கொண்டால் தொழில் வளர்ச்சியிலே தி.மு.க. புரிந்திருக்கின்ற சாதனையை நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

தொழில் மாத்திரமல்ல, ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்பது எல்லாத் திட்டங்களையும் கொண்டதாகும். ஒரு நாடாளுமன்ற உறுப்பினரோ ஒரு சட்டமன்ற உறுப்பினரோ அல்லது ஒரு இயக்கத்தினுடைய தலைவர்களோ அல்லது சமூகத்தினுடைய பிரதிநிதிகளோ அவர்களுக்காக இருக்கின்ற அமைப்புகளோ,

அவர்களுக்காக சொந்தமாக என்ன கூறுவார்கள், பொதுவாகத்தான் கூறுவார்கள். எங்களுக்கு வாய்க்கால் வேண்டும், எங்களுக்கு வசதியான நில புலங்கள் வேண்டும். எங்களுக்கு நல்ல சாலை வேண்டும், எங்களுக்கு கல்லூரி வேண்டும், இதுதான் ஒரு அரசிடம் மக்கள் எதிர்பார்ப்பார்கள். அவைகளெல்லாம் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்து கொடுத்து வருகிறதா இல்லையா?

சேலம் இரும்பாலைத் திட்டம் – அந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தவர் அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள். அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு தலைமை ஏற்றவன் நான். அந்தத் திட்டத்திற்கு இடையிலே சில முட்டுக்கட்டைகள் வந்து, அந்தத் திட்டத்தை குறைவான அளவிற்குத்தான் நிறைவேற்ற முடியும் என்ற ஒரு சூழ்நிலை வந்தபோது, நான் மத்திய சர்க்காரோடு வாதாடி, அவர்கள் இன்றைக்கு அந்தத் திட்டத்தையும் பெருமளவில் நிறைவேற்ற முன்வந்திருக்கிறார்கள்.

சேலம் இரும்பாலைத் திட்டம் போல – பல திட்டங்கள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே நிறைவேற்றப் பட இருக்கின்றன. நிறைவேற்றிக் கொள்ள ஆதரவு பெருகியிருக்கின்றன. அதற்கான தொழிலாளர்கள் அமைப்புகள், அதற்கான பெரிய பெரிய ஆலை அரசர்கள் இவர்களெல்லாம் வந்தும் கூட, எங்களுடைய கொள்கை தனியாரிடத்திலே பெறுவதைவிட, அரசின் சார்பாக தொழில் நடத்தினால் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள் என்ற அந்தக் கொள்கையை அறவே விட்டு விடாமல் முடிந்த அளவு அந்தக் கொள்கைக்கான வெற்றியைப் பெற, பல முயற்சிகளிலே திராவிட முன்னேற்றக் கழக அரசுகளும் சரி, காங்கிரஸ் பேரியக்க அரசும் சரி இரண்டு அரசுகளும் இணைந்து இன்றைக்கு பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக தமிழகத்திலே வளர்ந்து வருகின்ற தொழிலை யாரும் மாய்த்து விட முடியாது.

எங்கு பார்த்தாலும் தொழிற்சாலைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஒரேயொரு குறை நிறைய தொழிற்சாலைகள் உருவாகிற காரணத்தால் மின்சார பற்றாக்குறை. தொழிற்சாலைகள் என்றால் அதற்கு மின்சாரம் தேவை. இங்கே அதிக தொழிற்சாலைகள் – இந்த ஐந்தாண்டு காலத்திலே உருவாகி விட்ட காரணத்தால் அந்தத் தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டிய மின்சாரத்தினுடைய அளவும் குறைந்து விட்ட காரணத்தால், அதை நிறைவு செய்ய மத்திய அரசோடு தினமும் பேசிக் கொண்டிருக்கிறோம்.

மத்திய அரசும் அக்கறையோடு கவனிக்கின்ற கூடங்குளம் மின்சார உற்பத்தி நிலையம் அது இன்னும் பணியைத் தொடங்கவில்லை. அதைப்போலவே பல திட்டங்கள் மாவட்டந்தோறும் இருக்கின்ற திட்டங்கள். நெய்வேலி – அதனுடைய விரிவாக்கம் இன்னும் முடிவடையவில்லை. இவைகளெல்லாம் முடிவடைந்தால் மின்சாரப் பற்றாக்குறை தீரும். ஒரு அரசு மின்சாரத்தைப் பொறுத்தவரையில் – நேற்றைக்குக் கூட சொன்னேன். இன்றைக்கும் சொல்கின்றேன். மின்சாரப் பிரச்சினைகளை எதிர்காலத்திற்குத் தேவையான – இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகு எத்தனை மெகாவாட் மின்சாரம் நமக்குத் தேவை என்பதை இன்றைக்கே கணித்து, அதற்கேற்றவாறு மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க வேண்டும். அதுதான் ஒரு நல்ல அரசின் முயற்சியாக இருக்க முடியும்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப் பேற்ற இந்த ஐந்தாண்டு காலத்தில், ஏற்கனவே பொறுப்பிலே இருந்த அ.தி.மு.க. அரசு மின் திட்டங் களை எதிர்காலத்திலே நிறைவேற்றி எத்தனை மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய மின் ஆலைகளை நிறுவ முடியும் என்று கணக்கிட்டு அதற்கான வேலைகளை தொடங்கியதா என்றால், இல்லை. நாம்தான் இப்போது தொடங்கியிருக்கிறோம்.

நான் உங்களுக்குச் சொல்கிறேன். இப்பொழுது தொடங்கப்பட்ட அந்த மின்சார உற்பத்தி நிலையங்கள் – இன்னும்

மூன்றாண்டு காலத்திலே முடிவடைந்து உங்களுக்கு போதும் போதும் என்கின்ற அளவுக்கு மின்சாரம் கிடைக்கத்தான் போகிறது (பலத்த கைதட்டல்). ஒருவேளை அப்படி கிடைக்கப் போவதை எதிர்பார்த்து நாங்கள் ஆட்சிக்கு வந்தோம் பார்த்தீர்களா? மின்சாரம் வந்து விட்டது என்று சொல்லக்கூடிய சந்தர்ப்பவாதிகள்கூட இன்றைய தினம் உங்களிடத்திலே வாக்கு கேட்கலாம்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் மக்கள் நன்றாக இருக்க வேண்டும். யார் வேண்டுமானாலும் ஆட்சிக்கு வரலாம். கருணாநிதியே அப்படி சொல்லி விட்டானே, இவர்கள் வந்தால் என்ன என்று மோசம் போய்விடாதீர்கள், ஏமாந்து விடாதீர்கள். யார் வந்தால், நமக்கு தொண்டாற்றக் கூடியவனாக, யார் வந்தால் நமக்கு கடமை புரிபவராக, யார் வந்தால் நம்முடைய கட்டளைக்கு கீழ் படிபவனாக இருக்க முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

கோபக்காரர்கள் வந்தால் ஒரு நாட்டை பரிபாலிக்க முடியுமா? கோபம் என்றால் சாதாரண கோபமா? அன்றைக்கு சோனியா காந்தி அம்மையாரையே பார்த்து, 'பதிபக்தி' இல்லாதவர் என்று சொன்னவர், இன்றைக்கு இந்தியாவினுடைய பிரதமராக இன்னார் வரவேண்டும் என்று சொல்வார்களானால் அல்லது தமிழகத்தினுடைய முதலமைச்சராக நான்தான் இருப்பேன் என்று மார்தட்டிக் கொள்வார்களேயானால், சுயமரியாதை உள்ள எந்தத் தமிழனாவது, எந்த மனிதனாவது அதை தமிழ்நாட்டில் அனுமதிக்க முடியும் என்று கருதுகிறீர்களா? முடியாது. நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய தலைவியாக இருப்பவர் – இருந்து கொண்டு இருப்பவர் – இருந்தவருடைய மருமகள் சோனியா காந்தி அம்மையார் அவர்கள். அவர்களைப் பற்றி பேசாத பேச்சா? அவர்களைப் பற்றி சொல்லாத வார்த்தைகளா? அவைகளையெல்லாம் சொல்லிவிட்டு எந்த முகத்தைக் கொண்டு அவர்களை வரவேற்க நான் தயார் என்று சொல்கிறார்கள் என்பது எனக்கு இன்னமும் புரியவில்லை.

ஆகவேதான், உங்கள் சார்பாக நான் கேட்கிறேன். நான் விளக்க விரும்புகின்றேன். ஒரு நாட்டினுடைய தலையெழுத்தை நிர்ணயிப்பது அந்த நாட்டு மக்களாகத்தான் இருக்க வேண்டும். யாரோ ஒருவர் இருந்து விட முடியாது. இன்னும் சொல்லப் போனால் என்னைப் போன்ற ஒருவன் ஒரு நாட்டின் தலையெழுத்தை நிர்ணயித்து விட முடியாது. தலை இருந்தால் மாத்திரம் அது முடியும் என்று பொருளல்ல. தலைக்குள்ளே இருக்க வேண்டியது இருக்க வேண்டும். அவைகளெல்லாம் இருந்தால்தான் ஒரு நிர்வாகத்தை நடத்த முடியும். ஒரு ஆட்சியை கொண்டு செலுத்த முடியும். இவைகளெல்லாம் இல்லாமல் நான் ஆட்சிக்கு வருவேன் என்று சொல்வதும் – பொதுமக்களுக்கு மத்தியிலே விகாரமாக – விரசமாக நடந்து கொள்வதும், யாரை வேண்டுமானாலும் அடிப்பேன், நீ யார் கேட்பது என்று சொல்வதும் (பலத்த கைதட்டல்), நாளைக்கு சட்டசபையிலே சபாநாயகரைக் கூட அடித்து விட்டு, "என்னுடைய சபாநாயகர்தானே, அப்படித்தான் அடிப்பேன்'' என்று சொல்லமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்.

நான் கேட்கிறேன், எதிரியை அடிப்பது – அதுவே குற்றம். நான் அடித்தது எதிரியை அல்ல. என் நண்பனைத்தான் அடித்தேன் என்றால், அதை யாரும் ஏற்றுக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும், சட்டம் அதை அனுமதிக்காது. சட்டம் தமிழகத்திலே இப்பொழுது இருக்கிறதா இல்லையா என்பது என்னைப் பொறுத்தவரையிலே சந்தேகம்தான் ஏற்படுகிறது. மன்னிக்க வேண்டும். முதலமைச்சராக இருக்கிற போது தமிழகத்திலே சட்டம் இருக்கிறதா என்பதைப் பற்றி சந்தேகப்படுகிறாயே நியாயமா என்று கேட்டால், நான் முதலமைச்சர் என்பது நீங்கள் சொல்லும்போதுதான் எனக்குத் தெரிகிறது. ஏனென்றால் தம்பி இளங்கோவனுக்குத் தெரியும். எமர்ஜென்சி காலத்துக் கொடுமைகள் தெரியும்.

இங்கே வீற்றிருக்கக் கூடிய நம்முடைய அன்பிற்குரிய கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கெல்லாம் தெரியும். நெருக்கடி காலத்தில் பெயரைக் கூட சொல்ல முடியாது. அண்ணா சமாதிக்கு வந்தவர்கள் யார்? என்று பத்திரிகைகளிலே பட்டியல் போட முடியாது. அண்ணா சமாதியிலே வந்து மலர் வளையம் வைத்து வணங்கினார்கள் இவர்களெல்லாம் என்று பெயர் போட முடியாது. போட்டால் பத்திரிகைக்கும் வழக்கு. போட்டவனுக்கும் வழக்கு. வந்தவன் மேலும் வழக்கு. அதனால், நான் "முரசொலி'' பத்திரிகையில் அண்ணா சமாதிக்கு வந்தவர்கள், வராதவர்கள் என்று போடுவதை விட, அவர்களுடைய பெயர்களை மாத்திரம் தொகுப்பாகப் போட்டு, நேற்றைய நிகழ்ச்சிக்கு இவர்களெல்லாம் வரவில்லை என்று போட்டதால்தான் பத்திரிகையும் தப்பியது, அவர்களும் தப்பினார்கள். இது எமெர்ஜென்சி கொடுமைகளிலே ஒன்று.

எமர்ஜென்சிக் காலத்திலே இந்தியாவையே வழி நடத்திய தலைவியாக இருந்த அன்னை இந்திரா காந்தி இந்தக் கொடுமைகளெல்லாம் அவர்களுக்குத் தெரியாமல் – கீழே உள்ள அதிகாரிகளால் நடைபெற்றது என்பதை சென்னை கடற்கரையில் நடைபெற்ற லட்சக்கணக்கான மக்கள் திரண்ட கூட்டத்திலே ஒப்புக் கொண்டே பேசினார்கள். என்னுடைய ஆட்சிக் காலத்தில் எமர்ஜென்சியில் இவைகளெல்லாம் நடந்ததாக கருணாநிதி சொன்னார். ஆனால், இவ்வளவு கொடுமைகளும் நடந்ததற்கு யாரும் காரணமல்ல, நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மாவட்டத்து அதிகாரிகள், அவர்களுக்குக் கீழே உள்ள அதிகாரிகள், இப்படி அடிப்படையிலே உள்ள அதிகாரிகள்தான் மக்களை கொடுமைப்படுத்தினார்கள் என்று சொல்லி விட்டு, அந்த பெருந்தன்மை படைத்த அம்மையார் அவர்கள், அதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு எமர்ஜென்சி கொடுமை இருந்தது. இன்றைக்கும் நடக்கிறது.

ஒரு பத்து ரூபாய் நண்பர்களிடத்திலே கொடுத்து சில்லரை வாங்கிக் கொண்டு வா என்றால், அவர் அதை எடுத்துக் கொண்டு கடைக்குப் போனால் போலீஸ்காரர் பிடித்துக்கொண்டு, நீ யாருக்கு கொடுப்பதற்கு வாங்கிக் கொண்டு போகிறாய் என்று பிடித்துக் கொள்கிறார். அப்படிப்பட்ட கொடுமை மேல்மட்டத்திலே போட்ட அதிகாரத்தால் அல்ல, அதைப் பயன்படுத்திக் கொண்டு இன்றைக்கு ஒரு அடையாளம் தெரியாத, அடையாளம் காட்ட முடியாத, பெயர் சொல்லாத, விளம்பரம் இல்லாத ஒரு எமர்ஜென்சி நாட்டில் நடைபெறுகிறது. தமிழகத்தில் நடைபெறு கிறது. அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியை உடைக்க, கூட்டணியிலே இருப்பவர்களை தளர்க்க – அவர்களை பயமுறுத்த இந்த நெருக்கடிக் கால கொடுமை இங்கே வீசப்படுகிறது. இவைகளையெல்லாம் நாங்கள் நிதானமாக பார்த்துக் கொண்டிருப்போம். அந்த நெருக்கடி காலத்திலே இவைகளையெல்லாம் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள்தான் நாங்கள். எனவே ஒரு முறை நெருக்கடியால் எங்கள் ஆட்சியைப் பறித்து விட்டால், அடுத்த முறை ஆட்சிக்கு வர மாட்டோம் என்று பொருள் அல்ல, நாங்கள் இந்த நாட்டிலே தமிழன் இருக்கிற வரையில் – தமிழனுடைய உள்ளத்திலே சுயமரியாதை உணர்வு இருக்கிற வரையில் எங்களுடைய அணிக்குத் தோல்வி கிடையாது, தோல்வி கிடையாது, என்றைக்கும் வெற்றி தான் என்பதை எடுத்துக் கூறி, அந்த வெற்றிச் சிகரத்திலே ஏறி நிற்க வெண்தாடி வேந்தர் பெரியார் அவர்கள் வாழ்ந்த இந்த ஈரோடு நகரத்தில் சபதங்கள் மேற்கொள்ளுங்கள் என்று உங்களை யெல்லாம் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

சேலத்தில் லட்சக்கணக்கானோர் திரண்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் வேண்டுகோள்!

சேலத்தில் லட்சக்கணக்கானோர் திரண்ட மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம் 1.4.2011 அன்று மாலை போஸ் மைதானத்தில் நடை பெற்றது. இந்தக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

சேலம் – நாமக்கல் – தருமபுரி மாவட்டங்களில் கூட்டணிக் கட்சிகளின் சார்பிலே வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்ற அன்பிற்குரிய நண்பர்களே, தாய் மார்களே, பெரியோர்களே, என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே,

நேரம் போதாமையால், வேட்பாளர்களையெல்லாம் தனித் தனியாக அழைத்து – நானும் அறிமுகம் செய்து கொண்டு, அவர்களையும் உங்களுக்கு அறிமுகப்படுத்த இயலவில்லை. ஆகவே அவர்களையெல்லாம் நீங்கள் மிக நெருக்கமாகக் காண வேண்டுமேயானால் நான் எடுத்துக் காட்டியதைப் போல், வரவிருக்கின்ற சட்டப்பேரவைத் தேர்தலில் உங்களுடைய வாக்குகளை, அவர்களுக்கு உரிய சின்னங்களுக்கு அளித்து, அவர்களுடைய வெற்றிப் புன்னகை சிந்துகின்ற படங்கள் ஏடுகளிலே வரும்போது பார்த்துக் களியுங்கள் என்று உங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மேடையிலே பேசியவர்கள், பல்வேறு தோழமைக் கட்சிகளினுடைய தலைவர்கள், எனக்கு முன்பு பேசிய மாவட்டக்

கழகத்தினுடைய செயலாளரும், இந்த மாவட்டத்தினுடைய கழகத் தளபதியுமான தம்பி வீரபாண்டி ஆறுமுகம் உட்பட அனைவரும் – வெற்றிப் பாதையை நெருங்கி விட்டோம் என்கின்ற நம்பிக்கையை உங்களுடைய இதயங்களிலே விதைத்து, என்னுடைய இதயத்திலும் விதைத்திருக்கின்றார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுது யாரும் புதுப் பொருளோ, குதர்க்கமான அர்த்தமோ கொள்ளக் கூடாது என்கின்ற முன்னுரையோடு சொல்லுகின்றேன்; திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுது தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு எமெர்ஜென்சியை சந்தித்துக் கொண்டிருக்கிறது. நெருக்கடி கால நிலை மீண்டும் திரும்பி வந்தது போன்ற ஒரு சூழலை தமிழகத் திலே காணுகின்றோம். அன்றைக்கு நடைபெற்ற நெருக் கடி காலக் கொடுமைகள், பின்னர் அன்றைக்கு இந்தியா வினுடைய தலைவியாக இருந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடத்திலே எடுத்து விவரித்துச் சொல்லப்பட்டு, யார் யார் சிறையிலே அடைக்கப்பட்டார்கள், யார் யார் சித்திரவதைகளுக்கு ஆளானார்கள், எப்படியெல்லாம் எழுத்துரிமை, பேச்சுரிமைகளெல்லாம் பறிக்கப்பட்டன என்று விலாவாரியாக எடுத்துச் சொல்லப்பட்டு, அன்னை இந்திரா காந்தி அவர்கள், "இவ்வளவு நடந்திருப்பது எனக்குத் தெரியாது, ஏனென்றால் நான் எமெர்ஜென்சியைப் பிரகடனப் படுத்தினேனே தவிர, இப்படியெல்லாம் அதிகாரிகள் நடந்து கொள்வார்கள் என்றெல்லாம் அவர்களுடைய நடவடிக்கைகளை கூர்ந்து கவனிக்க இயலாமல் போய் விட்டது. எனினும் நான் இன்றைக்குத் தமிழகத்திலே சென்னை கடற்கரையிலே இந்த மேடையிலே நின்று கொண்டு சொல்கின்றேன்; எனக்குத் தெரியாமல் என்னுடைய அதிகாரிகள் ஆங்காங்கு நடத்திய அக்கிரமங்களுக் கெல்லாம், அடக்குமுறைகளுக்கெல்லாம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்" என்று (பலத்த கைதட்டல்) அன்றைக்கு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்னார்கள்.

இன்றைக்கு, இந்த எமெர்ஜென்சி – "டிக்ளேர்" செய்யப்படாத எமர்ஜென்சி – பிரகடனப்படுத்தப்படாத நெருக்கடி நிலை. இதிலே என்னென்ன நடைபெறுகிறது என்றால், வீரபாண்டி ஆறுமுகத்தின் வீட்டிற்குக் கொடுக்கப்பட்ட காவல்துறை பந்தோபஸ்து குறைக்கப் படுகிறது, அல்லது அறவே அகற்றப்படுகிறது. வீர பாண்டியாவது மாநில அமைச்சர். நான் இதில் ஏற்றத் தாழ்வு பார்க்கவில்லை. மத்தியிலே அமைச்சராக இருக்கின்ற – மதுரை மாவட்டத்திலே கழகத்தை விறுவிறுப் பாக நடத்திச் செல்கின்ற மத்திய அமைச்சர் தம்பி மு.க. அழகிரிக்கு இருந்த பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப் பட்டிருக்கிறது.

ஒரு சாதாரண மனிதர், தனக்கு ஆபத்து இருக்கிறது – உயிருக்கு ஆபத்து இருக்கிறது, ஆகவே எனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று அவரோ, அல்லது அவரைச் சார்ந்தவர்களோ அல்லது அவரது ஊரிலே உள்ள சிலரோ அல்லது அவர் சார்ந்துள்ள இயக்கத்திலே உள்ள சிலரோ மேலிடத்திற்கு – அதிகாரிகளுக்கு, இவருக்கு போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்று விண்ணப்பித் தால், உடனடியாக அந்தப் பாதுகாப்பைத் தர கடமைப்பட்டது அந்த அரசும், அரசின் கீழ் வேலை பார்க்கின்ற அதிகாரிகளும்.

அப்படி மதுரைப் பகுதியிலே உள்ள அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக எடுத்துக் கூறப்பட்டு அழகிரிக்கு தரப்பட்ட பாதுகாப்பு, அவர் வீட்டுக்குள்ளே இருந்தாலும் கூட வெளியிலே வந்தாலும் தரப்படுகின்ற பாதுகாப்பு நேற்றைய தினம் அறவே விலக்கிக் கொள்ளப்பட்டது என்றால், நான் தமிழகத் திலே இருக்கின்ற அதிகாரிகளைக் கேட்கின்றேன்; உங்களுக்கு இந்த உத்தரவை இட்டது யார்? நாடாளுகின்ற தகுதி படைத்தவர்களா? நாட்டை ஆண்டுகொண்டிருக் கின்ற பிரதமரா? இல்லை. இவர்களுக்கு உத்தரவிட்டது யார் என்று எனக்குத் தெரியும்.

நான் பார்க்கின்றேன், ஒரு கூட்டத்திலே, எதிர்க்கட்சி யினர் நடத்துகின்ற கூட்டத்திலே நூறு போலீசார், இருநூறு போலீசார் இருக்கிறார்கள். இங்கே எண்ணிப் பார்க்கிறேன், எத்தனை போலீசார் என்று! எனக்குத் தெரிகிறது. ஒரு முதலமைச்சரை, எதிர்க்கட்சிக்காரர் பேசு வதைப் போல, பேச வேண்டிய நிலைக்கு ஆளாக்கியிருக் கிறார்கள் என்றால், நான் உங்களையெல்லாம் கேட்கின் றேன், என்னை கடந்த காலத்திலே முதலமைச்சராக இரு என்று தேர்ந்தெடுத்தீர்களே, அது தவறு என்றுதானே இன்றைக்கு உள்ள அதிகாரிகள் – தமிழகத்திலே உள்ள அதிகாரிகள் – குறிப்பாக போலீஸ் அதிகாரிகள் இத்த கைய நிலையை தமிழகத்திலே உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தி.மு.கழகம் – தம்பி வீரபாண்டி எடுத்துச் சொன்ன தைப் போல், தன்னுடைய கொள்கைகளை, லட்சியத்தை யாரிடத்திலும், எவரிடத்திலும் என்றைக்கும் அடமானம் வைத்து விட்டு, தான் வாழ வேண்டும் என்று விரும்புகின்ற கட்சியல்ல. நாங்கள் காணாத அடக்குமுறையா? நாங்கள் பார்க்காத நெருக்கடியா? நாங்கள் அனுபவிக்காத சித்திரவதைகளா? இந்த சேலம் மாவட்டத்தினுடைய செயலாளராக இருக்கின்ற ஆறுமுகத்தை என்ன பாடு படுத்தியது, நெருக்கடி காலக் கொடுமை என்று எனக்குத் தெரியாதா?

இன்றைக்கு துணை முதலமைச்சராக பவனி வருகின்ற மு.க.ஸ்டாலின், நெருக்கடி காலத்திலேதான் சிறைச்சாலை யில் அடிக்கப்பட்டு, இன்னமும் உடல்நலம் பெறாத சூழ்நிலையில் நாட்டில் உலவிக் கொண்டிருக்கிறார். ஆகவே, நெருக்கடிகளோ, அல்லது அடக்குமுறைகளோ எங்களுக்குப் புதிதல்ல. இன்னும் சொல்லப்போனால், எங்களை வளர்த்தது, எங்களை இன்னமும் வாழ வைத்துக் கொண்டிருப்பவை. எங்களை நிலையாக தமிழ் மண்ணிலே நிறுத்தக் கூடியவை. அதற்காக நாங்கள் பயப்படவில்லை. ஆனால்,

ஏதோ இந்தத் தேர்தலிலே தி.மு. கழகத்தை வீழ்த்தி விடலாம் என்று பல முனைகளிலும் – எல்லா விதமான உபாயங்களையும் எதிரிகள் கையாண்டு பார்க்கிறார்கள்.

இன்றைக்குக் கூட கருத்துக்கணிப்பு வெளியிட்டிருக் கிறார்கள். கருத்துக் கணிப்பினுடைய லட்சணம் என்ன என்று எங்களுக்குத் தெரியும். முன்புகூட கருத்துக் கணிப்பு வெளியிட்டார்கள். நம்முடைய நண்பர் தங்கபாலு இங்கே சொன்னதைப் போல, பெரிய பெரிய ஆடம்பரமான விளம்பரங்களை யெல்லாம் பெற்று – பத்திரிகை உலகத்தினுடைய ஜாம்பவான்கள், செய்தி சேகரிப்பதிலே சிங்கங்கள் என்றெல்லாம் பெயர் பெற்ற பத்திரிகைக்காரர்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது – நாடாளுமன்றத்திற்கு இரண்டு பேர் கூட தி.மு.க. விலே வெற்றி பெறமாட்டார்கள். தி.மு.க. கூட்டணிக்கு – தி.மு.க. காங்கிரஸ் கூட்டணிக்கு இரண்டு இடம் கூட கிடைக்காது என்றுதான் கணித்தார்கள். ஆனால் எத்தனை இடங்கள் கிடைத்து என்பதும், இன்றைக்கு மத்தியிலே காங்கிரஸ் ஆட்சியை நிலை நிறுத்தக்கூடிய அளவிற்கு அந்தக் கூட்டணி அன்றைக்கு வெற்றி பெற்றதும் எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான்.

எனக்குத் தெரியும். எப்பொழுதும் எந்தெந்தக் கருத்துக் கணிப்பாளர்கள் இந்தத் தேர்தலிலே இந்தப் புள்ளி விவரங்களைச் சொல்லி காசு சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விவரமெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். தேர்தல் முடிந்த பிறகு அவர்களுடைய பெயர்களையெல்லாம் நான் வெளியிடத் தயாராக இருக்கிறேன்.

தி.மு.க. கூட்டணி வெற்றி பெறுவதற்கு வழி இல்லை என்று கருத்துக் கணிப்பாளர்களை விட்டு எழுதச் செய்கிறார்கள், பேசச் செய்கிறார்கள், வெளியிடச் செய்கிறார்கள். நான் அவைகளை நுணுகிப் பார்த்தேன். அவர்களை முந்திய நிலையில் உணர்ந்து

பார்த்தேன். யார் யாரை இது சம்பந்தமாக தொடர்பு கொண்டால் உண்மைகள் வெளிவரும் என்ற அந்த வழிமுறைகளைக் கையாண்டு பார்த்தேன். ஒன்றுமில்லை. தேர்தலிலே நிற்கின்ற எதிர்க் கட்சியினுடைய தலைவர்கள், எதிர்க்கட்சியினுடைய நண்பர்கள், தேர்தல் செலவுக்காக பணம் வசூலிப்பது ஒரு புறம் இருக்கட்டும், தேர்தலிலே மக்களுக்கு தி.மு.க. கூட்டணியைப் பற்றி ஒரு நம்பிக்கை யின்மையை உருவாக்குவோம் என்று திட்டமிட்டு, அதற்கான ஆட்களைப் பிடித்து பெரிய பத்திரிகையாளர்கள், பெரிய நிறுவனங்கள், ஏற்கெனவே பெயரை கெடுத்துக் கொண்டிருப்பவர்கள் – அவர்களெல்லாம் நம் மீது கொண்டுள்ள அசூயையின் காரணமாக – நாம் ஆட்சிக்கு வந்தால் அடித்தட்டு மக்களைத்தான் கவனிப்போம். ஐஸ்வரிய சீமான்களை கவனிக்க மாட்டோம். நாம் ஆட்சிக்கு வந்தால் சாக்கடையிலே புரண்டு கொண்டிருக்கின்ற சாதாரண மனிதர்களுக்குத்தான் வாழ்வளிப்போம். நாம் ஆட்சிக்கு வந்தால் திட்டங்களை நிறை வேற்றுவோம், தீமைகளை வீழ்த்துவோம், நாம் ஆட்சிக்கு வந்தால் உயர்ந்து, உயர்ந்து, உயர்ந்துகொண்டே போகின்ற உப்பரிகைச் சீமான்களுக்கு வாழ்வளிக்க மாட்டாம். நாம் உருண்டு புரண்டு கதறி அழுது உண்பதற்கு வழி யில்லையே என்று ஓலைக் குடிசையிலே ஒன்னரைச்சாண் பாயிலே படுத்து உறங்குகின்ற பாட்டாளிகளுக்கு வாழ் வளிப்போம். ஆகவே இவர்களுடைய ஆட்சி நம்மைப் போன்ற பூஷ்வாக்களைக் காப்பாற்றாது, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்பது இவர் களுடைய மூல மந்திரமாக இருக்கின்ற காரணத்தால், இது ஏழைகளின் ஆட்சியாக இருக்கும். எனவே இப்பொழுதே மக்களிடத்தில் இருந்து அவர்கள் பெற்றிருக்கின்ற நம்பிக்கையைக் குலைத்து இதை வீழ்த்தி விட வேண்டும் என்று பஞ்சாங்கம் பார்க்கிறார்கள். பத்திரிகையிலே பொய் எழுதுகிறார்கள்.

தயவு செய்து இங்கே குழுமியிருக்கின்ற பல்லாயிரக் கணக்கான மக்கள் அத்தகைய ஜோசியங்களை, கருத்துக் கணிப்புகளை நம்பமாட்டீர்கள், நம்ப வேண்டாம் என்று

கேட்டுக்கொள்கின்றேன். திருமணம் முடிவாகி, நாள் பார்த்து, பத்திரிகையும் அடித்து எல்லோரும் வாருங்கள் மணமக்களை வாழ்த்த என்று அழைப்பும் விடுத்துள்ள நிலையில், யாரோ ஒரு பொறாமை கொண்டவன் – ஐயர் "இந்தப் பெண்ணுக்கும் இந்தப் பையனுக்கும் திருமணம் நடந்தால் அவர்களுடைய வாழ்க்கை நன்றாக இருக் காது'' என்று சொல்லி, திருமணத்தை நிறுத்த முயற்சிப் பதைப் போல இன்றைக்கு கருத்துக் கணிப்புகளை சில பேர் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதனை நம்ப வேண்டாம் – நம்பிக் கெட வேண்டாம் என்று நான் தமிழ்நாட்டு மக்களை மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

நாங்கள் நிறைவேற்றிய – நிறைவேற்ற இருக்கின்ற திட்டங்களைச் சொல்லி, உங்களிடத்திலே வாக்கு கேட் கிறோம். ஆனால், எதிர்க்கட்சியினர் எதைச் சொல்லி வாக்கு கேட்கிறார்கள்? கருணாநிதி யார் தெரியுமா? ஒரு காலத்தில் திருவாரூரிலே இருந்து ஓசி ரயில் ஏறி சென்னைக்கு வந்தவர் என்று என்னை இகழ்ந்து உரைக்கிறார்கள். நான் அதை இகழ்ச்சியாகக் கருதவில்லை. ஏனென்றால், ரயிலிலே – ஓசி ரயிலிலே வந்து சென்னையிலே பிழைப்பு நடத்தினேனா இல்லையா என்பது எல்லோருக்கும் தெரியும். ஏதோ நான் ஓசி ரயிலில் வந்தவனைப் போலவும், என் பக்கத்து கம்பார்ட்மென்ட்டிலே இந்த அம்மையார் இருந்ததைப் போலவும் (பலத்த கைதட்டல்) மக்களிடத்திலே பிரச்சாரம் செய்கிறார்கள். பதிலுக்குப் பதில் பேச ஆரம்பித்தால், நான் கூட தேவை இல்லை. எங்கள் இயக்கத்திலே இருக்கின்ற ஒரு சாதாரண தொண்டன் இதற்கு பதில் அளிப்பான். ஆனால், இதுபோன்ற தேர்தல் காலங்களில் Character Assassination என்று சொல்லப் படுகின்ற – ஒருவருடைய தனி நிலைமைகளை விமர்சித்து, இழிவுபடுத்திப் பேசுவது முறையல்ல என்பதை நான் அண்ணாவிடத்திலே – தந்தை பெரியாரிடத்திலே கற்றுக் கொண்டவன். ஆகவேதான், அந்த நிலைக்குச் செல்ல விரும்பவில்லை.

சேலத்திற்கு வந்தால் எனக்கு முன்னால் பேசிய நண்பர்களெல்லாம் எடுத்துக் கூறியதைப் போல, சேலத்தினுடைய பெருமைகள் என்ன? சேலத்தினுடைய புகழ் என்ன? சேலத்திற்குத் தேவையான கோரிக்கைகள் என்ன? அவைகளை நிறைவேற்றக் கூடிய வழிகள் என்ன? என்பதை உங்களோடு விவாதித்து, முடிவுகள் செய்வது தான் நாகரிகமான அரசியல் முறையாகும்.

நான் சேலம் மாநகரத்திலே வசித்தவன் – வாழ்ந்தவன் என்பது உங்களுக்குத் தெரியும். (பலத்த கைதட்டல்) நான் இன்றைக்கு இந்த மேடைக்கு வரக்கூடிய நிலையிலே இல்லை. இருந்தாலும் வந்தேன். காரணம், இன்று மாலை 4 மணிக்கெல்லாம் என்னுடைய மூத்த மகன் மு.க.முத்து மிகக் கடுமையான நிலையிலே உடல் நலம் பாதிக்கப் பட்டு, சென்னையிலே அப்பல்லோ மருத்துவமனை யிலே சேர்க்கப்பட்டு உயிர் பிழைப்பது கேள்விக்குறி என்ற நிலையிலே மருத்துவர்கள் சொல்லி, அதன் பிறகு என் மனதை திடப்படுத்திக் கொண்டு, உங்களைவிட எனது மகன் உயிர் பெரிதல்ல, உங்களை விட என் குடும் பம் பெரிதல்ல, என்று எண்ணித்தான் இன்று இந்த மேடைக்கு வந்திருக்கின்றேன். எனவே, நீங்கள் எல்லோ ரும் அமைதி காத்து நான் சொல்லுகின்ற செய்திகளை யெல்லாம் நெஞ்சிலே தேக்கி வைத்து, அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சிலவற்றை இங்கே சொல்ல விரும்புகின்றேன்.

சேலம் மாநகரத்தின் மையப் பகுதியில் ஒரு ஆறு ரொம்ப காலமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அதற்கு ரொம்ப அழகான பெயர் – "திருமணிமுத்தாறு"– 'திரு' என்றால் – அழகிய – 'மணி' என்றால் மணி மணியான – 'முத்தாறு' என்றால் முத்து புரளுகின்ற ஆறு. முத்து நிறைந்த ஆறு என்று 'திருமணிமுத்தாறு'க்கு பொருள் உண்டு. நான் அந்தக் காலத்திலே சேலத்திலே வாழ்ந்த போது இந்த திருமணிமுத்தாறைப் பற்றி தம்பி ஆறுமுகத் திடத்திலே பலமுறை பேசியிருக்கிறேன். சேலத்திற்கு எவ்வளவோ சிறப்புகள் உண்டு.

ஆனால் இந்தத் திருமணி முத்தாறு தான் சேலத்திற்கு ஒரு திருஷ்டிப் பரிகாரமாக உள்ளது. இதைச் செம்மைப்படுத்தி, கண்குளிர பார்க்க வேண்டும் என்று நான் சொல்லியிருக்கின்றேன். அப்படி சொன்ன போதெல்லாம் ஏறத்தாழ 1996ஆம் ஆண்டு களில் அந்தப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. பிறகு தி.மு.கழக ஆட்சியில் 1996–ல் தொடங்கி 2001 வரையில் 5 கோடி ரூபாய் செலவிட்டு, அந்த திருமணிமுத்தாறை – அதனுடைய அபிவிருத்திக்காகச் செம்மைப் படுத்தப்பட்டு, அதற்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள் யார் என்று உங்களுக்குத் தெரியும். அம்மையாருடைய ஆட்சியில் அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டு, திருமணிமுத்தாறா? இந்தத் திட்டத்தை யார் தொடங்கியது. கருணாநிதி தொடங்கி வீரபாண்டி ஆறுமுகம் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டதும், அப்படி யானால், அந்தத் திட்டங்களை நிறுத்து என்று சொல்லி, உத்தரவிட்டு, அதற்குப்பிறகு ஒரு ஐந்தாண்டு காலம் அந்தப் பணி நடைபெறாமல் மறுபடியும் திருமணி முத்தாறு பழைய சாக்கடையாக – பழைய பாசி படிந்த ஓடையாக இருந்து, மீண்டும் 2006–ல் தி.மு.கழக ஆட்சி வந்தபோது அடிக்கல் நாட்டப்பட்டு; திருமணி முத்தாறை திருத்துகின்ற வேலை தொடங்கப்பட்டு அதற்கான 9 கட்டப் பணிகளில் இதுவரையிலே மூன்று கட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு எஞ்சிய பணிகளின் வேலை முன்னேற்றத்தில் இருக்கின்றன என்று எனக்குக் கூறப்படுகிறது.

இதைச் சொல்வதற்குக் காரணம் – இந்த ஒன்றை மாத்திரம் நீங்கள் கவனித்தால் போதும். இந்த ஆட்சி இருந்த போது என்ன செய்தது? அந்த ஆட்சி வந்தால் என்ன நடக்கும்? இந்த ஆட்சி இருந்த போது கவனிக்கப் படாமல் இருந்த திருமணிமுத்தாறு கவனிக்கப் பட்டு, அது செம்மைப்படுத்தப்பட்டு, ஐந்து கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு – அப்பா, பரவாயில்லையே, திருமணி முத்தாறை திருத்தி விட்டார்களே என்று மக்கள் நினைத்தார்கள். ஆனால்

அடுத்து அ.தி.மு.க. ஆட்சி, அம்மையார் தலைமையிலே வந்தது. வந்தவுடன் என்ன செய்தார்கள் என்றால், அந்தத் திட்டத்தையே நிறுத்தி விட்டார்கள். இரண்டாவது கட்டம், வளர்ச்சிக் கட்டம் நடைபெறவே இல்லை. மீண்டும் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் வரவேண்டியிருந்தது. வந்தது. வந்து இன்றைக்கு அதை நடத்திக் கொண்டிருக் கின்றது. இந்த ஒரேயொரு உதாரணத்தை மாத்திரம் நான் சொல்கிறேன்.

திருமணிமுத்தாறை ஒழுங்குப்படுத்த, அதற்கு உயர் வளிக்க, அதை உபயோகப் படுத்த தி.மு.க. திட்டமிட்டு நிறைவேற்றத் தொடங்கியது. இடையில் வந்த அ.தி.மு.க. ஆட்சி அம்மையார் ஜெயலலிதா தலைமையிலே உள்ள ஆட்சி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதை நிறுத்தி விட்டது. அதனால் மீண்டும் திருமணி முத்தாறு பாசி பிடித்த தண்ணீர் நிரம்பிய ஓடையாக ஆகி விட்டது. இப்போது மீண்டும் தி.மு. கழக ஆட்சி இரண்டாம் கட்டப் பணிகளைத் தொடங்க 31 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிட்டு 2006இல் அடிக்கல் நாட்டி எஞ்சியப் பணிகள் கொஞ்சம் தான் என்ற அளவில் திருமணி முத்தாறு அழகுபடுத்தப் பட்டிருக்கிறது. பயன்படுத்து வதற்கு ஏற்ற வகையிலே செய்யப்பட்டிருக்கிறது, இது ஒரு உதாரணம் போதாதா? சேலத்திற்கு திருமணி முத்தாறை ஒழுங்குப்படுத்தியது தி.மு.க., ஒழுங்குப் படுத்தப்பட்ட திருமணிமுத்தாறை அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சியிலே அலங்கோலப் படுத்தினார்கள். அலங்கோலப்படுத்தப்பட்ட திருமணி முத்தாறு திட் டத்தை மீண்டும் வந்த தி.மு.கழக ஆட்சி யிலே செம்மைப்படுத்தினார்கள், மக்களுக்கு பயன்படக் கூடிய அளவிற்கு அதை ஒழுங்குப்படுத்தினார்கள் என்ற ஒன்று போதாதா?

திருமணிமுத்தாறு திரும்பவும் திருமணி முத்தாறு பணிகள் எப்படி மாறி, மாறி மக்களால் இன்றைக்கு கவனிக்கப்படுகிறதோ

அதைப்போலத்தான் தி.மு.கழக ஆட்சியின் திட்டங்கள் அவைகளையெல்லாம் தீர்த்துக் கட்ட இடையில் வந்த அ.தி.மு.க. ஆட்சி – மீண்டும் அந்த ஆட்சி வர வேண்டும், என்று ஏன் விரும்புகிறார்கள் என்றால், இருக்கிற நல்லத் திட்டங்களை எல்லாம் நாசமாக்குவதற்கு – மக்களுக்கு பயன்படுகின்ற காரியங்களை எல்லாம் நிறுத்த – நிறுத்தவில்லையா? சத்துண வில் குழந்தைகளுக்கு ஒரு முட்டை போடுங்கள் என்று நான் உத்தரவிட்டேன். கொடுக்கப்பட்டது, அடுத்து ஜெயலலிதா ஆட்சி வந்ததும், அந்த முட்டையை நிறுத்தி விடவில்லையா? அதற்கு பிறகுதானே இப்பொழுது குழந்தைகளுக்கு உடல் வலுவாக இருக்க வேண்டு மேயானால் ஒவ்வொரு நாளும் குழந்தைகளுக்கு படிக் கின்ற நேரத்திலே வருகின்ற குழந்தைகளுக்கு ஒரு முட்டை என்பதற்கு பதிலாக இரண்டு முட்டை, அடுத்த தேர்தல் அறிக்கையிலே மூன்று முட்டை, இப்பொழுது நான்கு முட்டை, ஐந்து முட்டையோடு – வாழைப்பழம் இவ்வளவும் தருகின்ற இந்த ஆட்சி உங்களுக்கு வேண்டுமா? இந்த முட்டைகளையே நிறுத்தி விட்ட ஆட்சி உங்களுக்கு வேண்டுமா? என்பதை தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (வேண்டாம்... வேண்டாம்... என்று மக்கள் கூறினர்)

தி.மு.கழக தேர்தல் அறிக்கை – இப்பொழுது வெளி வந்து என்னுடைய நண்பர்களெல்லாம் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல மக்களுடைய மனதைக் கவர்ந்து முதலிலே தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கை 'கதாநாயகன்', இந்தத் தேர்தலிலே வெளியிட்டிருக்கிற தேர்தல் அறிக்கை 'கதாநாயகி' என்றெல்லாம் பேசப் பட்டபோது கதாநாயகன், கதாநாயகி இருந்தால் போதுமா நாங்கள் 'வில்லன்' வர வேண்டாமா? என்று வில்லன்களாக வந்தவர்கள் இன்றைக்கு இந்த கழகத்தினுடைய வெற்றியை தடுப்பதற்கு ஏதேதோ செய்து பார்க்கிறார்கள்.

எனக்கு பயமாகக் கூட இருக்கிறது. கொஞ்சம் அச்ச மாகக் கூட இருக்கிறது, இவரை எதிர்த்து சட்டசபை யிலே பேசினால் என் கன்னம் என்ன ஆகுமோ, என் தலை என்ன ஆகுமோ, அருகில் பாய்ந்து வந்து என்ன செய்வார்களோ என்று எண்ணிப் பார்த்து, பிறகு அச்சமில்லை, அச்சமில்லை "வீரபாண்டிகள்'' எல்லாம் பக்கத்திலே இருக்கும்போது, நமக்கு என்ன அச்சம்? என்று எண்ணிக் கொண்டேன். ஏனென்றால் அரசியல் நாகரிகம் அந்த அளவிற்கு இன்றைக்கு நாசமாகி விட்டது. அரசியல் நாகரிகத்தை குலைக்கின்ற வகையில் அதிகாரிகளே கூட உடன்படுகிறார்கள்.

நான் தமிழகத் திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அதிகாரிகளுக்குச் சொல்கின்றேன். அதிகார வர்க்கத்திலே பிரதானமாக இருக்கின்ற போலீஸ் இலாக்காகாரர்களுக்கு சொல்கிறேன், நான் எழுதிய 'உதயசூரியன்' நாடகத்தில் போலீஸ்காரர்களுடைய நல் வாழ்வுக்காகவே ஒரு காட்சி அமைத்தேன், அப்போது போலீஸ் காரர்களுக்கு மாதத்திற்கு எண்பது ரூபாய் சம்பளம். அதிலே அவர்கள் வாழ்க்கையை எப்படி நடத்தமுடியும் என்பதற்காக அந்த நாடகத்திலே ஓரங்கக் காட்சி ஒன்றை வைத்து அதிலே மனைவியிடம் பேசுவார், மனைவி சமைத்திருப்பாள் – "இதுதானா சாப்பாடு? தொட்டுக்க ஒன்றுமில்லையா?'' என்று போலீஸ்காரர் கேட்பார், அதற்கு மனைவி சொல்வார் "என்ன இருக்கிறது தொட் டுக் கொள்ள, நான்தான் இருக்கிறேன், என்னைத் தொட்டுக் கொள்'' என்று சொல்லுவாள். அப்படி இருந்த நிலைமாறி 80ரூபாய் சம்பளத்திலே காவலர்கள் வாழ வேண்டி இருந்த நிலை மாறி, இன்றைக்கு எத்தனை ஆயிரம் ரூபாய் அவர்கள் சம்பளம் பெறுகிறார்கள். அந்தக் காவலர்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளட்டும். எங்களை பார்த்து கம்பைத் தூக்குகின்றவர்கள் – எங்களைப் பார்த்து தடை விதிக்கின்றவர்கள் – எங்களுடைய கார்களுக்கு வழிவிட மறுக்கிறவர்கள், எங்களுடைய

கார்கள் அலுவலகத்திலே இருந்தால்கூட அந்த கார்களை உள்ளே விடவும், வெளியே விடவும் எங்களிடத்திலே அனுமதி பெறவேண்டும் என்று எங்களுக்கு ஆணை இடுகின்றவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்கு முதல் கமிஷன் – போலீஸ் கமிஷன் – முதல் தடவையாக அமைக்கப்பட்டது தி.மு.கழக ஆட்சியில், தமிழ் நாட்டில்தான். அதற்குப் பிறகு ஒரு ஐந்தாண்டு காலம் கழித்து நாங்கள் மீண்டும் பொறுப்பேற்ற பிறகு போலீஸ்காரர்களுடைய கஷ்டங்களைப் போக்க அவர்களுடைய உரிமைகளைப் பெற்றுத் தர, அவர்களுடைய சம்பளத்தை அதிகமாக்க, இரண்டாவது போலீஸ் கமிஷன் அமைத்ததும் தி.மு.கழக ஆட்சியிலேதான். இரண்டோடு விடவில்லை, இப்பொழுது மூன்றாவது போலீஸ் கமிஷன் என்று நியமித்து அதனுடைய பரிந்துரைகளையெல்லாம் ஏற்று, அவர்களுக்கு தேவைப்படுகின்ற சம்பளங்களை, தேவைப்படுகின்ற வசதி வாய்ப்புகளை அவர்கள் வைக்கின்ற உரிமைகளை யெல்லாம் கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டிருப்பதும் இந்த மூன்றாவது போலீஸ் கமிஷன் பரிந்துரைப்படிதான். இதையெல்லாம் செய்தது யார்? கருணாநிதி யல்லவா? தி.மு.கழகத்தினுடைய தலைவர், முதலமைச்சராக பொறுப்பேற்று செய்கின்ற காரியங்கள் இவை. அந்த "போலீஸ் கம்பு'' என்னையே தாக்குகிறது என்றால் அந்த போலீஸ் கம்பு என்னுடைய தோழர்களையே தாக்கு கிறது என்றால், அந்த போலீஸ் கம்பு எங்களையே சிறையிலிடுகிறது என்றால் நான் அதற்காக பழி வாங்க மாட்டேன். அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன், அதற்காக நான் பொறுமை இழக்க மாட்டேன். காரணம், காலம் மாறும், கட்டாயம் இவைகளுக்கெல்லாம் பதில் கிடைக்கும் என்ற ஒரே நம்பிக்கையிலேதான் நான் இருக்கின்றேன். நான் நம்புவதெல்லாம் நண்பர்கள் இங்கே சொன்னதைப் போல கடவுளையோ தெய்வங்களையோ அல்ல, நான் நம்புவதெல்லாம் உங்களைத்தான். (பலத்த கை தட்டல்)

'மக்கள் குரலே மகேசன் குரல்' என்று அண்ணா சொன்னார் என்றால் அதனுடைய உட்பொருள் என்ன? 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று அண்ணா சொன்னாரே அதனுடைய உண்மைப் பொருள் என்ன? என்பதை உணருபவர்கள் நாங்கள், அதனால் ஏழையை சிரிக்க வைப்போம், அவர்களுக்கு வாழ்வளிப்போம், அவர்களுடைய வாழ்வை யாரும் தொட்டு அவர்களை வாழும்படி நாங்கள் செய்வோம். வாடிய பயிரை கண்டபோ தெல்லாம், வாடினேன் என்று கூறிய வடலூர் இராமலிங்கனார் குரலை எதிரொலிப் போம் – எதிரொலித்து மக்களை வாழ வைப்போம். அப் படி வாழ வைக்கத்தான் – அந்த மனித சமுதாயத்திற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற நாங்கள் தொடர்ந்து அதே பாணியிலே பாடுபடுவோம். இதற்காக தம்பி ஆறுமுகம் சொன்னதைப் போல எங்களுடைய கொள்கைகளிலே, எங்களுடைய லட்சியங்களிலே ஒரு சிறு மாசும் ஏற்படுவதற்கு எங்கள் உயிர் இருக்கிற வரை யிலே விட மாட்டோம் – விட மாட்டோம் – விடமாட் டோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

வேலூரில் நடைபெற்ற பிரமாண்டமான தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை

வேலூரில் 2.4.2011 அன்று நடைபெற்ற பிரமாண்டமான தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :–

வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் நான் பேசுவது முதல் முறையல்ல. நான் இந்த மைதானம் கூட்டங்களுக்காக பயன்படுத்தப்படலாம் என்று அறிவிக்கப்பட்ட அந்நாள் தொட்டு இந்நாள் வரையில் வேலூரிலே இந்தக் கோட்டை வெளி மைதானத்தில் உங்களையெல்லாம் சந்தித்து நீண்ட நேரம் உரையாற்றி இருக்கின்றேன். கடந்த இரண்டு மூன்று நாட்களாக இந்த தேர்தலையொட்டி நம்முடைய கழகத்தின் வேட்பாளர்களையும் தோழமைக் கட்சிகளான இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய வேட்பாளர்களையும் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய வேட்பாளர்களையும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய வேட்பாளர்களையும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர்களையும், கொங்குநாடு முன்னேற்றக் கழக வேட்பாளர்களையும், மூவேந்தர் முன்னேற்றக் கழக வேட்பாளரையும் அறிமுகப்படுத்துகின்ற பெரும் கூட்டங்களில் கலந்துகொண்டு இன்று இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு, இரவோடு இரவாக சென்னைக்கு திரும்பி அடுத்தநாள் எனக்கென்று ஒரு தொகுதி இருக்கிறது அல்லவா, அந்தத் தொகுதிக்குச் சென்று எனக்காக வாக்குகளை வழங்குங்கள் என்று அந்த திருவாரூர் தொகுதி மக்களைக் கேட்டுக்கொண்டு அதைத் தொடர்ந்து 5ந் தேதி அன்று இந்தியாவினுடைய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவியும் இந்திய அரசினுடைய

வழிகாட்டியுமான திருமதி. சோனியாகாந்தி அவர்களோடு சென்னை யில் நடைபெறுகின்ற பொதுக்கூட்டத்திலே கலந்து கொண்டு அதற்கு பிறகு என்னுடைய திருவாரூர் தொகுதியிலே தேர்தல் பணியினை ஆற்ற வேண்டிய நிலைமையிலே இருக்கின்றேன்.

நீ கூடவா தேர்தல் பணியாற்ற வேண்டும்? என்று யாராவது கேட்பீர்களேயானால் கடமையைச் செய்வதில் கருணாநிதி எப்போதும் முன்னிருப்பவன் என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. இங்கே நம்முடைய அருமை தம்பி திருமா அதை எடுத்துக் கூறியிருக்கிறார்.

இந்த வேலூர் கோட்டைவெளி மைதானம் என் நெஞ்சை விட்டு அகலாத ஒன்று. இந்த மைதானத்தை ஒட்டி உள்ள இடத்திலேதான் இந்தியாவினுடைய சுதந்திரத்திற்காக தியாகம் செய்தவர்கள், பாடுபட்டவர்கள், உயிரை வழங்கியவர்கள் அவர்களுடைய நினைவின் சின்னமாக நினைவு சின்னம் ஒன்றை தி.மு.கழக ஆட்சி யிலே உருவாக்கி இருக்கிறோம். இந்த வேலூர் மேடை யில் எத்தனை எத்தனை பேரை நான் சந்தித்திருக்கிறேன், எத்தனை பேரோடு மேடையிலே அளவளாவியிருக் கிறேன். நான் அண்மைக் காலமாக எந்த ஊருக்குச் சென்றாலும் அந்த ஊரிலேயிருந்து எனக்கு நெருங்கி பழகிய வர்களாக இருந்த நண்பர்கள், மறைந்து விட்டவர்கள், அவர்களுடைய குடும்பத்தினர் இவர்களை யெல்லாம் சந்தித்து குசலம் விசாரித்து அவர்களுடைய தேவைகளை உணர்ந்து அவற்றை நிறைவு செய்கின்ற அந்தப் பணி யினையும், அந்தத் தொண்டினையும் புரிந்து வரு கின்றேன்.

இதற்கென்ன காரணம் என்று யாராவது கேட்பீர்களேயானால், நான் அவர்களோடு எல்லாம் ஒன்றல்ல, இரண்டல்ல எனக்கு வயது 87 முடிந்து 88 நடக்கிறது. இந்த வயதில் 75 ஆண்டு காலம் என்னுடைய பொது வாழ்க்கை. இந்த பொது வாழ்க்கையிலே நான்

சந்தித்த, எனக்கு அறிமுகமான என்னுடன் உறவாடிய, நான் நட்பு கொண்டாடிய எத்தனை பேர் இப்பொழுது என்னோடு இருக் கிறார்கள், எத்தனை பேர் என்னை விட்டு பிரிந்து விட் டார்கள். என்னை விட்டு என்றால் அதாவது இந்த உலகத்தை விட்டு இயற்கையெய்தி விட்டார்கள், மறைந்து விட்டார்கள்.

இதே மேடையில் இந்த வேலூர் மாவட்டத்தில் ப.உ.சண்முகம் அமர்ந்திருந்த காட்சி என் நினைவுக்கு வருகிறது, இன்றைக்கு அவர் இல்லை. புலவர் கோவிந்தன் தமிழ் முழக்கம் செய்த காட்சி எல்லாம் நினைவுக்கு வரு கிறது, இன்றைக்கு அந்த புலவர் இல்லை. அன்பு நண்பர் திருவண்ணாமலை தர்மலிங்கம், ஆடி ஓடி வேலை பார்த்து இங்கே கூட்டம் நடத்திய அந்தக் காலமெல்லாம் ஞாபகத்திற்கு வருகிறது. அவர் இன்றில்லை. கூட்டத்தை முதன் முதலாக பேசி அமைதிப்படுத்தி எங்களுக்கெல் லாம் வழி விட்டு அதிகக் கருத்துக்களை, அதிலும் சுயமரி யாதை கருத்துக்களை பொழிந்த என்னு டைய அருமை நண்பர் போளூர் சுப்பிரமணியம், இன்று இல்லை. மா.பா. சாரதி , இந்த நகராட்சியினுடைய தலைவராக இருந்து அண்ணாவினுடைய செல்லப் பிள்ளையாக வேலூர் மாவட்டத்திலே திகழ்ந்த அவர் இன்றைக்கு இல்லை. கடோத்கஜனோ பீம சேனனோ என்று புராணிக பாஷை யிலே சொல்லக்கூடிய எதற்கும் அஞ்சாத என் அருமை நண்பர் வி.எம்.தேவராஜ் இன்று இல்லை. சாதுவாக அதேநேரத்தில் கொள்கை உறுதி கொண்டவராக இருந்த திருவண்ணாமலை முருகையன் இன்றைக்கு இந்த மேடையிலே காணப்படவில்லை. வயதான தோற்றம் என்றாலும் வாலிப முறுக்கோடு எண்ணங்களை எடுத்துச் சொல்லக் கூடிய திருப்பத்தூர் சி.கே.சின்னராஜ் இந்த மேடையிலே இல்லை. என்னு டைய இனிய நண்பர் முல்லை வடிவேலு இல்லை. ஏ.எல்.சி. கிருஷ்ணசாமி இல்லை, என்னோடு திருச்சி சிறைச் சாலையிலே, கல்லக்குடி போராட்டத்திலே சிறை வாழ்க்கை அனுபவித்த என்னுடைய அருமைச் சகோதரன்

முல்லை சக்தி இந்த மேடையிலே இல்லை. வி.டி.தேவராஜ் இல்லை, தோப்பூர் திருவேங்க டம் இல்லை, குடியாத்தம் எ.க.துரைசாமி இல்லை, தம்பி துரை முருகன் சொல்வார் எமர்ஜென்சி காலத்தில் சிறைச் சாலையிலே ஒவ்வொரு நாளும் முரசொலியை வாங்கி படித்துவிட்டு, சிறையிலே இருக்கின்ற கழகத் தோழர்கள் எல்லாம் தெரிந்து கொள்ள அதை படித்துக் காட்டிய அவரின் பாங்கினை எல்லாம் சொல்லுவார்.

ஆம்பூர் சம்பங்கி, பார்த்தால் மைனர். ஆனால்மனதில் வைரம் பாய்ந்த உறுதி. திருப்பத்தூர் சுந்தரம் இல்லை, திருப்பத்தூர் சண்முகம் அந்த மீசையும், அந்த முகப் பொலிவும் இவைகளெல்லாம் காணாமல் போய் விட்டன. பாபு ஜனார்த்தனம் இல்லை, வேலம் தம்பி தாசன் இல்லை, ராதா கோவிந்தன் மறைந்துவிட்டார். இப்படி இருந்தவர்களை யெல்லாம் இப்போது நினைப்பதற்குக் காரணம், நான் இங்கு மாத்திரமல்ல, ஒவ்வொரு பெரு நகரங்களிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் இப்பொழுது எல்லாம் கலந்துகொள்கிற நேரத்தில் இவர் களையெல்லாம் நினைவு கூர்ந்து, அவர்கள் எல்லாம் எப்படி கட்சி வளர்த்தார்கள் என்பதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு காரணம், வேறு எதுவும் இல்லை. இன்னும் எவ்வளவு நாளைக்கு நாம் அவர்களை நினைவில் வைக்கப்போகிறோம். இப்போதே 88 ஆகி விட்டது. இன்னும் பத்து ஆண்டு காலமோ, 12 ஆண்டு காலமோ அதற்குள்ளாக அவர்களை எல்லாம் நான் நினைத்து அவர்கள் வழியிலே கொள்கைகளை வளர்த்திட வாருங்கள், வாருங்கள் என்று உங்களையெல்லாம் அழைத்திடத்தான், இங்கே இவைகளையெல்லாம் நினைவு கூர்கின்றேன் (பலத்த கை தட்டல்).

அப்படிப்பட்ட அரிய கருவூலங்கள் கழகத்திலே இன்றைக்கு இல்லை. நம்முடைய கழகத்திலே இருந்து பிரிந்தவர்களைப் போல வேறு பல கட்சிகளிலே உள்ளவர்கள், மறைந்திருக்கிறார்கள். பிரிந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நாம் சேர்த்து நினைத்து அவர்களுக்கெல்லாம் புகழஞ்சலி செலுத்துவதை தமிழ் பண் பாடு

என்று கருதுகிறேன். அப்படி கருதி நடப்பவன், இன்னமும் நடந்து கொண்டிருப்பவன், அதனால்தான் அவர்களைப் பற்றியெல்லாம் இங்கே பேசும்போது உணர்ச்சி வசப்படுகின்றேன். இன்றைக்கு நம்முடையை தம்பி திருமா சொன்னதைப் போல் முந்தாநாள் வந்தவர் கள் நாளைந்து நாட்களுக்கு முன்பு அரசியலைப் பற்றி பேசத் தொடங்கியவர்கள், என்னையும், என்னைப் போன்ற கழகத்தினுடைய தொண்டர்களையும் விமர்சிக் கிறார் கள் என்றால் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

75 ஆண்டுகளுக்கு மேலாக பொது தொண்டாற்றி நம்மோடு இருந்து அடக்கு முறைகளை ஏற்று, சிறைச் சாலைகளையெல்லாம் சித்தரவதைக் கூடங்களாக இருந்தாலும் சிரித்த முகத்தோடு ஏற்று தடைச் சட்டமா? அடக்கு முறைகளா? அவைகளையெல்லாம் பொருட் படுத்தாமல் அஞ்சா நெஞ்சுடன் இந்த சமுதாயத்திற்காக இன்னமும் உழைத்துக் கொண்டிருக்கிற கழகத்தினர், கழக தளபதிகள், பொதுத் தொண்டில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டவர்கள், இவர்களோடு அவர்களை நீங்கள் சற்று பொறுத்திப் பார்த்து இவர்கள் இந்த நாட்டில் அரசியல் நடத்துகிறார்களே என்ன ஆச்சரியம் என்று என்ன வேண்டாமா? எண்ணுவீர்கள்!

ஆனால், அதை மறைப்பதற்கு சில மாய்மாலங்கள் தமிழகத்திலே இன்றைக்கு தோன்றிக் கொண்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சமுதாய இயக்கம். நீதிக்கட்சியினுடைய வளர்ச்சியின் ஒரு கட்டம்தான் தி.மு.கழகம். நீதிக்கட்சி சமூக நீதிக்காக போராடிய கட்சி. சமூக நீதி என்பது சுயமரியாதை இயக்கத்தினுடைய குழந்தை. சுயமரியாதை இயக்கத்தை தமிழ்நாட்டில் வளர்க்கப் பாடுபட்டவர், அண்ணாவை உருவாக்கிய தந்தை பெரியார்.

தந்தை பெரியாரிடத்திலே பாடம் கற்றவர் உங்கள் முன்னால் உட்கார்ந்து கொண்டிருக்கின்ற இந்தக் கருணாநிதி (பலத்த கைதட்டல்). இன்றைக்கு முதலில் ஈரோடு சென்றேன் கூட்டத்திற்கு. பெரியாருடைய இல்லத்திற்குச் சென்றேன். அங்கே பெரியாருடைய குடும்பம்

என்னோடு இணைந்து வந்து என்னை சூழ்ந்து கொண்டது. சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்! ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உட்பட அத்தனை பேரும் என்னை சூழ்ந்து கொண்டார்கள் என்றால் அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு உறவு. அரசியலைத் தாண்டிய ஒரு உறவு. உணர்ச்சிபூர்வமான உறவு. பெரியாருடைய வீட்டுப் பிள்ளைகளாக – பேரப் பிள்ளைகளாக வளர்ந்து அவருடைய அன்பால், அரவணைக்கப்பட்டு, அவருடைய கொள்கைகளை உள்ளத்திலே ஏந்தி இத்தனை ஆண்டுக்காலம் எதற்கும் அஞ்சாமல், எதையும் தாங்கிக் கொண்டு பாடுபட்டுக் கொண் டிருக்கின்ற ஒரு இயக் கத்தை இன்றைய தினம் யார் யாரோ தூசாகக் கருதி இதை நாங்கள் பொடிப் பொடியாக்கி விடுவோம் என் றெல்லாம் பேசுகிறார்கள்.

இன்று மாலையிலே பார்த்தேன், ஒரு பத்திரிகை யிலே. அம்மையார் ஜெயலலிதா அவர்கள் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். யாருக்கு? போலீஸ்காரர்களுக்கு. போலீஸ் அதிகாரிகளுக்கு ஒரு உத்தரவு கொடுக்கிறார். அழகிரியை கைது செய்யுங்கள். எப்படி உத்தரவு இடுகிறார். இன்றைக்கு தமிழகத்தில் தேர்தல் கமிஷன் என்ற பெயரால், ஒரு அறிவிக்கப்படாத எமெர்ஜென்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எமெர்ஜென்சி என்றால் நெருக்கடி என்று உங்களுக்குத் தெரியும். வெளியிலே போனால் உத்தரவு பெற்றுச்செல்ல வேண்டும். திரும்பி வந்தால் உத்தரவு பெற்றுத் திரும்ப வேண்டும்.

எனக்கே சந்தேகம். என்னுடைய நண்பர்கள் மேடை யிலே வீற்றிருக்கின்ற ஞானசேகரன் போன்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அவர்களெல்லாம் புரிந்து கொண் டால்தான் என்னுடைய வேதனை, என்னுடைய கவலை போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய் சேரும். அதனால் தான் சொல்லுகின்றேன். எனக்கே சந்தேகம் நண்பர் களே, தமிழ்ப் பெருங்குடி மக்களே எனக்கே சந்தேகம். என்னை நீங்களெல்லாம் தேர்ந்தெடுத்து முதலமைச்சராக உட்கார வைத்திருக்கிறீர்கள். இப்போது எனக்கு

ஏற்பட்டிருக்கின்ற சந்தேகம் நான் முதலமைச்சரா அல்லவா? தமிழ்நாட்டை என் தலைமையிலே உள்ள தி.மு.கழகம் ஆண்டு கொண் டிருக்கிறதா? அல்லது தேர்தல் ஆணையம் ஆண்டு கொண்டிருக்கிறதா? தேர்தல் ஆணையத்தை நான் பழிக்க மாட்டேன். தேர்தல் ஆணையத்தோடு நான் மோதிக் கொள்ள விரும்ப வில்லை. தேர்தல் ஆணையம் நடுநிலையாகச் செயல்பட்டால் அதை யாரும் எதிர்க்க மாட்டார்கள். யாரும் குறை கூறமாட்டார்கள்.

கண்ணனுக்கு பால் கொடுக்க வந்த பூதகி போல, ஆனால் பால்தானே கொடுக்கிறார் கண்ணனுக்கு என்று எண்ணினால், அந்த பூதகி அந்தக் கண்ணனையே கொன்று விட முனையும்போது, கண்ணன் செய்ய வேண்டிய வேலையை நாமும் செய்தாக வேண்டும் என்ற அந்தச் சூழ்நிலையிலேதான் இதைச் சொல்கிறேன். சட்டப்படி எல்லாம் நடக்க வேண்டும், நியாயப்படி எல்லாம் நடக்க வேண்டும். யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. எனக்கு கிஞ்சிற்றும் அதிலே அபிப்பிராய பேதம் இல்லை. எல்லாம் சட்டப்படி நடக்கட்டும், எல்லாம் நியாயப்படி நடக்கட்டும். உனக்கு உள்ளதுதான் எனக்கும். எந்த நீதி நெறிமுறை அமலாகிற வரையில், நடைமுறையிலே உள்ள வரையில் இதிலே யாருக்கும் அபிப்பிராய பேதமில்லை.

ஆனால், நான் பார்க்கின்ற வேடிக்கை என்னவென்றால், தமிழ்நாட்டிலே எதிர்க்கட்சி அணிகளையெல் லாம் ஒன்று திரட்டி, அந்த அணிக்கு வெற்றி வாகை சூட வேண்டும் என்பதற்காக, சில பேர் – மன்னிக்க வேண்டும் இங்கே யாராவது இருந்தால். பூணூலை உருவிக் கொண்டு பாடுபடுகிறார்கள். கருணாநிதி ஆளக் கூடாது, ஏன்? அவன் ஏழை எளிய மக்களுக்கெல்லாம், அவர்களுடைய முகத்திலே சிரிப்பைக் கண்டு அதிலே இறைவனைக் காண்கின்றான். அவன் அண்ணன் சொன்னதை செய்கிறான். ஆகவே, கருணாநிதி கூடாது. ஏன்? அவன் அவனுடைய அண்ணா சொன்னார் ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்கு

தருகிறேன் என்று. அதை கூட அவர் செய்யவில்லை. இவன் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு ஏழை எளியவர்களுக்குப் போடுகிறான் (பலத்த கைதட்டல்), இந்தத் தேர்தல் அறிக்கையிலே 35 கிலோ அரிசி பரம ஏழைகளுக்குத் தருவேன் என்று உறுதி யளித்திருக்கிறான். இவன் ஆண்டால், இவன் தொடர்ந்து ஆட்சி புரிந்தால், பிறகு நாம் என்றைக்கும் ஆட்சிக்கு வர வழியே ஏற்படாது என்று முடிவு கட்டிக் கொண்டார்கள்.

உதாரணத்திற்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. நான் நம்முடைய கவர்னர் இல்லத்திற்கு ஒரு விழாவிற்குச் சென்றிருந்தேன். அங்கே சின்னச் சின்ன புத்தகங்களாக அச்சடித்து மலையாளத்திலும், தமிழிலும், ஆங்கிலத்தி லும் அச்சடித்துக் கொடுத்தார்கள். நண்பர் ஜேசுதாஸ் அவர்கள் அந்த விழாவிலே இசைக் கச்சேரி நடத்தினார் கள். அந்த புத்தகங்களை வாங்கிப் படித்துப் பார்த்தால், மலையாள மொழியிலும் தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும் ஒரு கதை எழுதப்பட்டிருந்தது. என்ன கதை தெரியுமா? ஓணம் பண்டிகை பற்றிய ஒரு கதை.

ஓணம் பண்டிகை கேரளத்திலே கொண்டாடப்படுகின்ற ஒரு பண்டிகை. அதை தமிழகத்திலும் இப்போது கொண்டாட ஆரம்பித்திருக்கிறார்கள். ஓணம் பண்டிகையினுடைய தாத்பரியம் என்னவென்றால், மாவலி என்ற ஒரு மன்னன் இருந்தான். மகாபலி என்பார்களாம். அந்த மன்னன் பெயர் மாவலி. அவன் மக்களுக்கு நன்மை செய்வதைத் தவிர வேறு எதுவும் தெரியாது. நன்மை செய்து கொண்டே இருப்பான். அவர்களுக்குத் தேவையானவற்றையெல்லாம் வழங்குவான். நியாயமான அரசு நடத்தினான். ஏழை எளியோர்களை காத்தான். அப்படி இருந்த அந்த மன்னன் இதையே தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தால், அவன் இருக்கிற இடத்தை நாம் பிடிக்க முடியாதே என்ற கோபம் தேவர்களுக்கு ஏற் பட்டது. தேவர்கள் என்றால்,

நீங்கள் தேவர் பெருமகனுடைய படத்தை எண்ணிக் கொள்ளாதீர்கள். நான் தேவர் என்று சொல்வது தேவாதிதேவர்கள். அந்த தேவர்களுக்கு பயம் வந்து விட்டது. பூசுரர்கள் அவர்கள். எப்படி மாவலியை வீழ்த்துவது என்று எண்ணி யோசித்து சூழ்ச்சி பின்னி, அவரை நெருக்கி அவரை வீழ்த்தியே விட்டார்கள்.

அவன் சாகும்பொழுது கேட்டான், மூன்றடி மண் தானே என்னிடத்திலே கேட்டீர்கள். நான் தர சம்மதித் தும் கூட, என்னைக் கொன்று விட்டீர்களே என்ற போது, நீ இருந்தால் இன்னும் ஏழை மக்களுக்கு நன்மைகளைச் செய்வாய், பிறகு எங்களுக்கு இந்த ஆட்சியே இல்லாமல் போய் விடும். ஆகவே உன்னை நான் முடிக்கிறோம் என்றார்கள். மாவலி ஒன்று கேட்டான். என்னைக் கொன்றுவிட்டீர்கள் பரவாயில்லை. ஒரேயொரு வரம் கொடுங்கள் என்று கேட்டான். என்ன என்று கேட்டார்? ஆண்டுக்கு ஒரு முறை நான் கேரளத்திலே உள்ள என்னுடைய ஆட்சிக்கு உட்பட்டு வாழ்ந்து கொண்டிருந்த மக்களையெல்லாம் சந்திக்க ஒரு வாய்ப்பு கொடுங்கள் என்று கேட்டான். சரி, சாவதற்கு துணிந்து விட்டான், அதற்கு விரும்பி விட்டான். அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆகவே அந்த வரத்தைக் கொடுப்போம் என்று சொல்லி, ஆண்டுக்கொரு முறை ஓணம் பண்டிகையில் நீ கேரளத்து மக்களையெல்லாம் பார்த்து அவர்களைச் சந்தித்து அவர்களோடு அளவளாவலாம் என்று ஒரேயொரு நாள் கேரளத்திலே ஓணம் கொண்டாடப்படுகிற நாள்.

இப்பொழுது கூட தமிழகத்திலே அந்த ஓணத்தை இங்குள்ள மலையாளிகள் கொண்டாடுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நாம் கூட, இங்கே இருக்கின்ற மலையாளிகளுக்கு ஓணம் பண்டிகையைக் கொண்டாட வசதியாக அன்று ஒருநாள் விடுமுறை தர ஒப்புக் கொண்டிருக்கிறோம். ஓணம் பண்டிகைக்கே அந்த அளவுக்கு நாம் இங்கே வசதி வாய்ப்பு செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நான் இந்தக் கதையைச் சொல்வதற்குக் காரணம், நல்லவன் ஒருவன் இருந்தால், அவன் நல்ல காரியத்தைச் செய்தால், நல்லாட்சி புரிந்தால், அவனுடைய ஆட்சி யிலே மக்களுக்கான நன்மைகளை, நல்ல பல விஷயங்களை நாள்தோறும் செய்து கொண்டிருந்தால், அவனை ஒரு கூட்டம் பொறுத்துக் கொள்ளாது.

ஏனென்றால், அந்தக் கூட்டம் அந்த இடத்திலே வந்து அமர வேண்டும் என்ற ஆசையினால் பொறுத்துக் கொள்ளாது. அதுதான் மாவலியினுடைய வரலாற்றில் நடந்த நிகழ்ச்சி. மாவலி மன்னன் அந்த வரத்தைப் பெற்று, மரணத்தை ஒப்புக் கொண்டான். ஆண்டுதோறும் நாம் கொண்டாடுகின்ற ஓணம் பண்டிகை – அந்தக் கதையினுடைய தாக்கம்தான். அதை நீங்கள் மறந்து விடக் கூடாது.

இப்பொழுது இங்கே தமிழகத்தில், இந்த மாவலி மக்களுக்கெல்லாம் நன்மைகள் செய்து கொண்டிருக்கின்றானே, இலவச அரிசி என்கிறான், இலவச வானொலி, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி என்கிறான், இலவச சிகிச்சை என்கிறான், இலவசமாகவே 108 வாகனம் என்கிறான், இலவசமாகவே இன்னும் எத்தனையோ திட்டங்களையெல்லாம் தீட்டுவேன் என்று சொல்லுகிறான், இவனை விட்டு வைத்தால் இன்னும் ஆயிரம் ஆண்டு காலத்திற்கு நம்முடைய வம்சம் ஆட்சிக்கு வர முடியாது என்று எண்ணித்தான் இங்கே மாவலி கதையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

எனவே மாவலி கதை மீண்டும் தொடர வேண்டுமா? அதை நீங்கள் அனுமதிக்கப்போகிறீர்களா? அந்தக் கேள்விக்கு விடை கிடைத்திடும் நாள்தான் வருகிற தேர்தல். இந்தத் தேர்தலில் தி.மு.கழகமும் தங்களுடைய நேசத்திற்குரிய கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து, கூட்டணி அமைத்து இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் தோழமைக் கட்சிகளோடு கூட்டு சேர்ந்து, போட்டியிடுகின்றது.

எதிரணியிலே அம்மையார் ஜெயலலிதா ஒரு கூட்டணி அமைத்து நம்மை வீழ்த்துவேன் என்று சுய பராக்கிரமத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார். நான் உங்களுக்கெல்லாம் சொல்லுவேன், நாம் யார் அவர்கள் யார், நாம் பெரியாருடைய பரம்பரை, அண்ணாவினுடைய வழித் தோன்றல்கள், நம்மால் இந்த இயக்கத்தை நடத்த முடியும் . ஒன்றை மாத்திரம் சொல்லிக்கொள்ள விரும்பிறேன், ஆட்சியை இங்கிருந்து அபகரிக்கப்பட் டாலும் சுயமரியாதை உணர்வை, திராவிட உணர்வை, என் இதயத்தி லிருந்து யாராலும், எவராலும் கிள்ளி எடுக்க முடியாது (பலத்த கை தட்டல்). அந்த உள்ள உறுதியோடு தான் நாங்கள் இருக்கின்றோம். (மக்கள் தலைவா நீங்கள்தான் முதலமைச்சர் என்று முழக்கமிட்டனர்).

இங்கே இருக்கிற வேட்பாளர்களையெல்லாம் பார்த்தீர்கள், பல்வேறு தோழமைக் கட்சிகளின் வேட்பாளர் கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள், எல்லோரும் இந்த நாடு வாழ வேண்டும், இந்த நாட்டு மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற அந்த நினைப்போடுதான் இந்த தேர்தலிலே போட்டிபோடுகிறார்கள், தேர்தலிலே போட்டுயிடுகிறவர்கள் எதைச் சொல்லி ஓட்டு கேட் கிறார்கள், எந்த வாக்குறுதியை உங்களுக்குத் தந்து ஓட்டு கேட்கிறார்கள்? நாங்கள் நல்லாட்சியைத் தொடரு வோம். இதுவரையில் நாங்கள் நடத்திய ஆட்சியை, கடந்த ஐந்தாண்டு காலமாக நடத்திய ஆட்சியை ஆறாவது முறையாக நாங்கள் பொறுப்பேற்றால் – தொடர்வோம் என்றால் என்னஅர்த்தம்? யார் யாருக்கு இயலாதவர்களுக்கு ஏழைபாழைகளுக்கு பல்வேறு இனியதிட்டங்களை நல்லத் திட்டங்களை வழங்கினோமோ அவைகளைத் தொடர்ந்து வழங்குவோம் என்று பொருள். அதைத்தான் சொல்லுகின்றோம்.

ஆனால் அம்மையார் ஜெயலலிதா தலைமையிலே அமைந்திருக்கிற கூட்டணி என்ன சொல்லுகிறது? என்ன சொன்னது?

நாம் சொல்வதைப்போல அவர்களால் சொல்ல முடியுமா? கடந்த கால ஆட்சியிலே நாங்கள் புரிந்த சாதனைகளையெல்லாம் நீங்கள் மீண்டும் எங்களுக்கு வாக்களித்தால் தொடருவோம் என்று சொல்லுகின்ற துணிச்சல் கருணாநிதிக்கு இருக்கிறது. ஆனால் சொல்லுகிற துணிச்சல் இருக்கிறதோ இல்லையோ,ஜெயலலிதாவுக்கு அந்த வாய்ப்பு இருக்கிறதா என்றால் இல்லை. காரணம், ஜெயலலிதா ஆட்சியில் அவர்களுடைய கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப் பினர்களே தாக்கப்பட்டார்கள். அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், இரவு பகல் என்று பாராமல் வீடு புகுந்து கைது செய்யப்பட்டு சிறைக்கூடங்களுக்கு அனுப்பப்பட் டார்கள். அவ்வளவு ஏன்? நானே என்னுடைய படுக்கை அறையில் இரவு 12 மணிக்கு போலீசார் நுழைந்து என்னை கைது செய்து சென்னை சிறைச்சாலையிலே அடைத்தார்களே, அதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

நான் மீண்டும் அந்த ஆட்சியைத் தொடருவேன், ஆகவே எனக்கு வாக்களியுங்கள் என்று ஜெயலலிதா கேட்கிறார் என்றால்? அந்த ஆட்சி தேவை என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? விரும்புகிறீர்களா? அந்த ஆட்சியில்தானே என்னுடைய ஆட்சியில் அமர்த்தப்பட்ட சாலைப் பணியாளர்கள் 12 ஆயிரம் பேரை வீட்டுக்கு அனுப்பினார்கள், என்னுடைய ஆட்சியிலே அமைக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை சிதைத்து, உடைத்து அந்த திட் டங்கள் எல்லாம் ரத்து செய்யப்படுகின்றன என்று அறிவித்தது அந்த ஆட்சியில்தானே? அந்த ஆட்சி மீண்டும் வரவேண்டும் என்று சொன்னால்? நீங்கள் எல்லாம் வீட்டுக்கு போக வேண்டும், இந்தத் திட்டங்கள் எல்லாம் தேவையில்லை என்று நீங்களே வழி மொழிந்ததாக அர்த்தம்.

நினைவிருக்கிறதா? பெருந்தலைவர் காமராஜர் சாதாரண ஏழை எளிய பிள்ளைகள் படிக்க வேண்டும், அவர்கள் படிக்காமல் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் அந்தக் குழந்தைகளுக்கு சாப்பிடக்கூட உணவில்லை என்று வருத்தப்பட்டு பக்கத்திலே இருந்த கல்வி அதிகாரியை அழைத்து எல்லோருக்கும்

உணவு வழங்கக்கூடிய ஒரு திட்டத்தை கொண்டு வா என்று சொல்லி கல்வி அதிகாரியாக இருந்த நண்பர் சுந்தரவடிவேலு அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குகிற திட்டம்.

அந்த மதிய உணவு வழங்குகிற திட்டம் வந்த பிறகுதான், தமிழ்நாட்டிலே ஆயிரக்கணக்கான ஆரம்ப பாட சாலைகள் உருவாயிற்று. அந்த ஆரம்ப பாட சாலைகளிலே ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு வேலை கிடைத்தது. அவர்கள் உருவாக்கிய பிள்ளைகள் நன்கு பயின்று பட்டம் பெற்று கல்லூரிகளுக்குச் செல்லுகின்ற அளவிற்கு வாய்ப்பு வழங்கப்படுகின்ற சூழ்நிலையில் தி.மு.கழக ஆட்சி வந்தது. பெருந்தலைவர் காமராஜர் கொண்டு வந்த திட்டத்தை அவர் ஆரம்பக் கல்வி வரையிலே பிள்ளைகளுக்கு படிப்பு கொடுத்தார். நாங்கள் கல்லூரி வரையிலே பட்டப்படிப்பு வரையிலே கல்வி தி.மு.கழக ஆட்சியிலே கொடுக்கப்பட்டு அன்றைக்கு ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், இன்றைக்கு ஆங்காங்கு கலைக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் என்று கல்லூரிகள் அமைக்கப்பட்டு எங்கு பார்த்தாலும் கல்வி மணம் கமழ்ந்துக்கொண்டிருக்கிறது.

இதன் விளைவு என்ன? ஒரு சாதாரண குடியானவனுடைய மகன், விவசாயினுடைய மகன், அவன் எங்கே ஆளைக் காண வில்லையே என்று கேட்டால், அவன் இங்கே படிச்சு பட்டம் பெற்று இப்பொழுது பாரீசில் இருக்கிறான். என்ன செய்கிறான், மருத்துவராக இருக்கிறான், என்ன சம்பளம்? மாதம் 10 ஆயிரம், 20 ஆயிரம், லட்ச ரூபாய் சம்பளம். இந்த முன்னேற்றம் எப்படி வந்தது? படிப்படியாக மக்களுக்கான கல்வியை, அந்த தரத்தை உயர்த்த வேண்டும் என்று காமராஜர் கருதினார் பிள்ளைகளுக்கு மதிய உணவு கொண்டு வந்தார், ஒரு அரசு கொண்டு வந்த திட்டத்தை, இன்னொரு அரசு தொடர வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அதை சத்துணவு திட்டமாக ஆக்கினார்.

நான் வந்த பிறகு எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார், வேண்டாம், வேண்டாம் அதை நிறுத்துகிறேன் என்று நான் சொல்லவில்லை, அதற்கு மாறாக சத்துணவு என்றால் உண்மையிலேலே சத்துணவு போடுகின்றேன். ஒரு முட்டையோடு சத்துணவு என்று நான் வழங்கினேன், ஒரு முட்டை இரண்டு முட்டையா யிற்று, இரண்டு முட்டை மூன்று முட்டையாயிற்று, வாரம் ஐந்து முட்டை ஏழை, எளிய குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற அளவுக்கு கல்வித் தரத்தை உயர்த்த, கல்வி கற்றால் மாத்திரம் போதாது, நம்முடைய வீட்டுப் பிள்ளைகள் நலம் பொருந்தியவர்களாகவும் இருக்க வேண்டும். புரதச் சத்து நிரம்பியவர்களாக இருக்க வேண்டும், அவர்கள் இந்தியாவிலே நடைபெறுகின்ற போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி வீரர்களாக தங்கமெடல் பெற்றுத் திரும்புகிறவர்களாக இருக்க வேண்டும் என்றெல்லாம் உயர்ந்து இருக்கிற கல்வி நிலைமை, நாட்டின் நிலைமை, அரசின் நிலைமை இவைகளை எல்லாம் தயவு செய்து எண்ணிப் பாருங்கள். இது தொடர வேண்டுமா? இல்லை, இல்லை இவைகள் எல்லாம் தொடரக்கூடாது, மீண்டு அந்த அம்மையார் வர வேண்டும், முன்பு எப்படி நீங்கள் வழங்கிய முட்டைய நிறுத்தி விட்டார்களோ அதைப்போல எல்லா முட்டைகளையும் நிறுத்தி விட்டு, அந்த பையன் அடிக்கடி வாங்குகிறானே பள்ளிக்கூடத்திலே அந்த ஒரு முட்டைக்குத்தான் இனிமேல் மதிப்பு அது வழங்கப்படும் என்று சொல்வீர்களேயானால் அதை அனுமதிப்பீர்களேயானால் நீங்கள் அவர்களை ஆதரித்து விட்டு போங்கள், எங்களை மறந்துவிடுங்கள், எங்களை விலக்கி விடுங்கள் கவலை இல்லை.

ஆனால் நீங்கள் எங்களை மறந்தாலும், எங்களை நீங்கள் விலக்கி விட்டாலும், எங்களை நீங்கள் துரத்தி விட்டாலும், எங்களை நீங்கள் தோல்வியடையச்செய்து விட்டாலும் நாங்கள் உங்களை மறக்க மாட்டோம். உங்களை விட மாட்டோம், உங்களை உலகத்தின் உச்சத் திலே உட்காரவைத்து, "செந்தமிழ்நாடெனும் போதினிலே இன்பத் தேன்

வந்து பாயுது காதினிலே என்று பாடிய பாட்டை நிரூபிக்கிற வரையில் நாங்கள் உங்களுக்காக பாடுபட்டுக் கொண்டே இருப்போம், உங்களுக்காக நாங்கள் இருப்போம், இங்கே வீற்றிருக்கிற என்னுடைய தம்பிமார்கள், என்னுடைய அருமை நண்பர்கள், இந்தக் கூட்டணியினுடைய வேட்பாளர்கள், இவர்கள் எல்லாம் வெற்றி பெறத்தான் போகிறார்கள், இவர்களுடைய வெற்றி நிச்சயம் என்பது உங்களுடைய முகத்திலே எழுதியிருக்கிறது. அந்த வெற்றிக்கு அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

வட சென்னையில் லட்சக்கணக்கானோர் திரண்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் ஆற்றிய உரை!

சென்னை, ஏப். 5 –

சென்னை – அயனாவரத்தில் 4.4.2011 அன்று நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

டெல்லியிலே இருந்து நாம் எதிர்பார்ப்பது எல்லாம் தாமதமாக வருவதைப் போல (சிரிப்பு) நம்முடைய நண்பர் குலாம் நபி ஆசாத் அவர்களும் இங்கே தாமதமாக வந்து சேர்ந்திருக்கிறார். தாமதமாக வரும் என்றாலும் கூட, தரமாக வரும் என்பதற்கு அடையாளம் இன்று நடைபெறுகின்ற இந்தக் கூட்டம். அவர்கள் தாமதமாக வரக்கூடிய சூழலை – விமானம் சரியான நேரத்திற்கு புறப்படாததுதான் காரணம். ஆனால், இந்த தாமதத்தை நான் விரும்புகிறேன். ஏனென்றால், இந்த மேடையிலே நம்முடைய கழகத்தினர் – தேர்தலில் போட்டியிடுகின்ற எல்லா கட்சியினுடைய வேட்பாளர்களெல்லாம் பேசுவதை – நீண்ட உரையாற்றுவதை கேட்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைப்பதற்குக் காரணமே ஆசாத் அவர்கள் தாமதமாக வந்ததுதான். இல்லாவிட்டால், அவரவர் களும் ஐந்து நிமிடம்பேசிவிட்டு, அடுத்து கலைஞர் பேசுவார் என்று போய் விடுவார்கள். நல்ல வேளையாக நம்முடைய ஆசாத் அவர்கள் தாமதமாக வந்தார், தாமதத்திற்கு அவர் காரணமல்ல, விமானம் காரணம். இருந்தாலும் வந்துவிட்டார், வந்து நறுக்கு தெறித்தார் போல என்பார்களே, அதைப் போல – இந்த ஆட்சியை மீண்டும் தொடரச் செய்ய என்னென்ன காரணங்கள் என்பதை

எடுத்துச் சொல்லி அந்தக் காரணங்களால் இந்த ஆட்சி அடுத்த முறையும் தொடர வேண்டும் – ஆறாவது முறையும் தொடர வேண்டும் (பலத்த கைதட்டல்) என்று உரைத்திருக்கின்றார்.

இந்தியாவினுடைய வலிவு, இந்தியாவினுடைய மாநிலங்களிலே ஒன்றாக இருக்கக் கூடிய தமிழகத்திலே உருவாக வேண்டிய பொலிவு, இந்த இரண்டையும் உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மேடையிலே அமர்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியானாலும், தி.மு.கழக மானாலும் அல்லது கூட்டணிக் கட்சிகளிலே உள்ள வேட்பாளர்களுடைய வேட்கையானாலும் அமைந்திருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு நல்ல நிலை உருவாக வேண்டும் என்பதற்கு அடையாளமாக இந்தத் தேர்தல் கூட்டணி அமைந்திருக்கிறது. தேர்தல் கூட்டணி வேறு இடங்களிலும் அமைகின்றன. ஆனால், இங்கே அகில இந்திய அளவிலே உள்ள காங்கிரஸ் கட்சியும், திருமதி சோனியா காந்தி அவர்களுடைய வழிகாட்டுதலுக்குரிய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும், அந்தக் கட்சியினுடைய காவலர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வெற்றிக்காக பாடுபடுகிற – பணியாற்றுகிற தங்களுடைய எண்ணங்களை வெளியிடுகின்ற ஒரு சூழல் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்றால், நான் அகில இந்தியாவிலே ஒற்றுமை – ஒருமைப்பாடு – இறையாண்மை இவைகளெல்லாம் காப்பாற்றப்பட வேண்டும் – இவைகளுக்கெல்லாம் மதிப்பளிக்க வேண்டும் என்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அந்த இறையாண்மையும், ஒருமைப்பாடும், ஒற்றுமையும் காப்பாற்றப்பட வேண்டும் என்று நான் சொல்வது இந்த சட்டமன்றத் தேர்தலுக்காக அல்ல. தி.மு.கழகத்தை உருவாக்கிய நம்முடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமைப்பாடு, இறையாண்மை இவற்றை இந்தியாவிலே காப்பாற்ற வேண்டிய கடமை நமக்கெல்லாம் இருக்கிறது என்பதை பலமுறை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

அப்படிப்பட்ட அண்ணாவினுடைய பொன் மொழியை தேர்தலுக்காக நாம் மறந்து விடுபவர்களல்ல. தேர்தல் நேரத்திலே அந்த

மொழியை மேலும் வலுப்படுத்த, நாம் பாடுபடக் கூடியவர்கள், பணியாற்றக் கூடியவர்கள். அந்த வகையிலேதான் இன்றைக்கு இந்தத் தேர்தலில் நாமும் காங்கிரஸ் கட்சியும், பாட்டாளி மக்கள் கட்சியும், வேறு பல தோழமை இயக்கங்களும் ஒன்றாக இணைந்து ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்ற அறப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறோம். இந்தப் போராட்டத்திலே நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது (பலத்த கைதட்டல்). ஆறாவது முறையல்ல, ஏழாவது முறை – எட்டாவது முறை என்றெல்லாம்கூட வந்தாலும்கூட எந்த முறை யானாலும் அந்த முறையில் – சமுதாயத்திற்கு – மக்களுக்கு – நாட்டுக்கு – மாநில முன்னேற்றத்திற்கு என்ன நம்மால் விளையக் கூடிய நன்மைகள் என்பதை எண்ணிப் பார்ப்பதுதான் – மக்களுக்காக உருவாக்கப்பட்ட கட்சி என்று சொல்லிக் கொள்கிற ஒரு கட்சியினுடைய கடமையாக இருக்க முடியும். குறிக்கோளாக இருக்க முடியும். அந்தக் குறிக்கோளையும், நோக்கத்தையும் கொண்ட இயக்கங்களில் தலைசிறந்த இயக்கமாக தி.மு.கழகமும், தி.மு.கழகத்திற்கு அணுசரணையாக இந்திய தேசிய காங்கிரசும் இன்றைக்கு விளங்குகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. அத்தகைய இணைப்பு – இத்தகைய கூட்டணி இங்கே உருவாகியிருக்கிற அதே நேரத்தில் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் மாநிலக் கட்சிகளின் கூட்டணி அல்ல. மாநிலக் கட்சிகள் மாத்திரம் இருக்கிற கூட்டணி அல்ல. இந்தக் கூட்டணியில் மாநிலக் கட்சிகளும் இருக்கின்றன. சமுதாயக் கட்சிகளும் இருக்கின்றன. சமுதாய இயக்கங் கள் இருக்கின்றன. இந்தக் கூட்டணியிலே தி.மு.கழகம் போன்ற மாநிலக் கட்சிகள் மாத்திரமல்ல, இதற்கு ஒரு இணைப்பாக இருக்கின்ற தேசியக் கட்சியான காங்கிரசும் நம்மோடு இருக்கிறது. எனவேதான் நமக்குத் தேவையானவற்றையெல்லாம் மாநிலக் கட்சி பொறுப்புக்கு வரும்போது மக்களுக்குச் சேவை செய்ய என்னென்ன தேவை என்று கருதுகிறோமோ, அவைகளையெல்லாம் அந்த மாநிலக் கட்சிகளாலேயே உருவாக்கிக் கொள்ள முடியாது. மாநிலக் கட்சிகள் இதுபோன்ற

தேர்தல்களிலே மத்தியிலே இருக்கின்ற கட்சிகளோடும் உறவு கொண்டு – அந்த ஆட்சியோடு தொடர்பு கொண்டு மக்களுக்குத் தேவையான காரியங்களைச் சாதிக்க இந்த இணைப்பும் தேவை. நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய இணைப்பை, கூட்டணியை திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புவதற்குக் காரணமே அவர்களோடு சேர வேண்டும், அவர்களோடு இணைய வேண்டும், பெரிய கட்சி காங்கிரஸ் கட்சி, அந்தக் கட்சியோடு இருந்தால்தான் நமக்குப் பெருமை என்ற அந்த நோக்கம் மாத்திரம் அல்ல. அந்தக் கட்சியோடு கூட்டு சேர்ந்து, இங்கே ஆட்சி அமைத்தால்தான், கூட்டு சேரும்போது தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் என்னோடு சேர்ந்து பல வாக்குறுதிகளை யெல்லாம் வழங்கினீர்களே, நண்பர் ஆசாத் அவர்களே மறந்து விட்டீர்களா, அப்படி வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டாமா என்று உரிமையோடு கேட்பதற்கு இந்தக் கூட்டணி பயன்படும் என்று நான் கருதுகிறேன். (கைதட்டல்)

எங்களுடைய இந்த உரிமையை மீண்டும் வலியுறுத்த, வலியுறுத்திப் பெற, பெற்றதை மிகைப்படுத்த இந்தக் கூட்டணி உருவாகியிருக்கிறது என்றுதான் நான் கருதுகின்றேன். ஏதோ தேர்தலுக்காக இன்னார் முதலமைச்சராக வேண்டும் என்பதற்காக, இவர்கள் எல்லாம் அமைச்சர்களாக ஆக வேண்டும் என்பதற்காக, இவர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகவேண்டும் என்பதற்காக யாரோ சிலருக்கு பதவி வேண்டும் என்பதற்காக உருவான கூட்டணி அல்ல – அப்படி எந்தக் கூட்டணியும் உருவாகவும் கூடாது.

உருவாகியிருக்கின்ற இந்தக் கூட்டணி, தன்னால் ஆக வேண்டிய காரியங்கள், தன்னைவிட பெரிய கட்சி – அந்தக் கட்சியினுடைய ஆதரவுடன்தான் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால் அந்த உதவியை, அந்தத் துணையை நிராகரித்துவிட முடியாது.

எனவேதான், ஏன் காங்கிரசோடு கூட்டணி சேர்ந்தாய்? என்று யாராவது கேட்பார்களேயானால் அது என் இஷ்டம் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. அது மக்களுக்கான கூட்டணி என்பேன். எனக்காக அல்ல. மக்களைக் காப்பாற்ற, மக்களுக்குத் தேவையான சேவைகளைப் புரிய, நாட்டுக்குத் தேவையான நல்ல பல திட்டங்களைத் தீட்ட எனக்கு இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியோடு உறவு தேவைப் படுகிறது. (கைதட்டல்) அந்த உறவு கடந்த காலத்திலே எத்தகைய உதவிகளையெல்லாம் தமிழகத்திற்குச் செய்திருக்கிறது என்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

தமிழ் செம்மொழி ஆயிற்று – தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து தரப்பட்டது என்றால், அதற்காக நடைபெற்ற போராட்டம் எத்தனை ஆண்டுகாலம் தமிழ்நாட்டில் நடந்தது? 100 ஆண்டு கால வரலாறு. சூரிய நாராயண சாஸ்திரி தன்னுடைய பெயரைக்கூட தனித் தமிழில் பரிதிமாற்கலைஞர் என்று மாற்றிக் கொண்டார். நூறாண்டு காலம் தமிழுக்கு இந்த அந்தஸ்து தேவை எங்களுக்கு செம்மொழி அந்தஸ்து தேவை, இந்த மொழி உலகத்திலே இருக்கிற 6 மொழிகளிலே ஒரு மொழி. அந்த 6 மொழிகளும் இன்றைக்கு உயர்தனி மொழி என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கிறபோது, தமிழ் செய்த பாவம் என்ன என்று கேட்டுப் போராடியவர் பரிதிமாற் கலைஞர். அவருடைய பாதையைப் பின்பற்றி திராவிட முன்னேற் றக் கழகம் நூறாண்டு காலம் போராடி இப்பொழுதுதான் அதற்கு விடிவுகாலம் ஏற்பட்டது. இந்த விடிவு காலத்தை ஏற்படுத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சராக இருக்கின்ற நான், டெல்லியிலே மத்திய அரசிலே பிரதமர் மன்மோகன்சிங் அவர்களையும், மத்திய கல்வி அமைச்சராக இருந்த அர்ஜூன் சிங் அவர்களையும், திருமதி சோனியா காந்தி அவர்களையும் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்று செம்மொழி அந்தஸ்து தேவை என்று ஒரு முறைக்கு இரு முறை வலியுறுத்திய பிறகு, அம்மையார் அவர்கள் அந்த அந்தஸ்தைப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து அந்த மகிழ்ச்சியை எனக்கு மாத்திரமல்ல –

தமிழகத்து மக்களுக்கெல் லாம் உருவாக்கித் தந்தார்கள். உருவாக்கித் தந்துவிட்டு, அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். ‘‘கருணாநிதி அவர்களே! செம்மொழித் தகுதி தமிழுக்குக் கிடைத் திருக்கிறது என்றால், அது உங்கள் கூட்டணியிலே இருக்கின்ற மற்ற கட்சிகளையெல்லாம்விட அதற்கான தனிப்பெருமை தேடிக் கொள்ளக்கூடிய உரிமையும், அந்தப் பெருமையும் உங்கள் ஒருவருக்கே உரியது” என்று எனக்கு சோனியா காந்தி அம்மையார் எழுதிய கடிதத்தை இப்பொழுதும் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றேன்.

காரணம் என்ன? ஒரு மொழிக்கு ஏற்பட்ட ஆக்கம். அதைக்கூட முன்பிருந்த அரசுகளில் பெற முடியாத சூழ்நிலை. அதை பெற முடிந்தது என்றால், காங்கிரசோடு நாம் கொண்ட அந்த உறவுதான் அதற்குக் காரணம்.

இங்கே பேசினார்கள், மெட்ரோ ரயில், அது மாத்திரமல்ல, நிறைவேறாமல் முழுமையடையாமல் இருக்கின்ற சேதுசமுத்திர திட்டம் இவைகளெல்லாம் கிடைப்பதற்கான எழுச்சியை உருவாக்கியதும், கிடைக் கும் என்ற ஆதரவை நமக்கு வழங்கியதும் மத்திய சர்க்கா ரோடு நாம் கொண்டுள்ள தொடர்புதான் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. மத்திய அரசு நம்மோடு உறவாக இருக்கின்ற காரணத்தால். நமக்கு நம்முடைய மாநிலத் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய இந்த வாய்ப்பு அமைந்திருக்கிறது. அந்த வாய்ப்பை முரட்டுத் தனமாகவோ, முட்டிக் கொள்கிறேன் பார் என்று சொல்லியோ நாங்கள் பெற விரும்பவில்லை. வகைப்படுத்தி, வழிப்படுத்தி, சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டிய இடத்திலே எடுத்துச் சொல்லி, நிதானமாக, நேர்மையாக அந்தத் திட்டங்களை நாம் இன்றைக்கு பெற்றுக் கொண்டிருக்கின்றோம்.

தி.மு.கழகத்தைப் பொறுத்தவரையில் அறிஞர் அண்ணா அவர்கள் மறைவதற்கு முன்பு ஒரு இறுதிக் கடிதம் “காஞ்சி” ஏட்டில் எழுதினார். அந்த இறுதிக் கடிதத்தில் குறிப்பிட்டார்,

“மாநில சுயாட்சிதான் நான் விரும்புகின்ற மருந்து. அதை நிறைவேற்றாமல் நான் என்னுடைய கண்களை மூடுகிறேனே என்பதற்காக கவலைப்படுகிறேன் என்றாலுங்கூட என்னுடைய சந்ததியினர் அதற்காக போராட வேண்டும், பாடுபட வேண்டும்’’ என்று குறிப்பிட்டுவிட்டு அப்பொழுது சொல்கிறார், “மத்திய சர்க்காரிடத்திலே மாநில சுயாட்சி என்பதற்காக, மோதிக் கொள்ளக்கூடிய அந்த நிலையை நான் என்றைக்கும் எடுக்க மாட்டேன்.” – அப்பொழுது குறிப்பிடுகிறார். “என்னுடைய நண்பர் – கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் – அவருடைய பெயரைக் குறிப்பிட்டு அண்ணா அந்தக் கடிதத்திலே எழுதுகிறார். “அவரைப் போல மத்திய அரசோடு நான் மோதிக் கொள்ள விரும்பவில்லை. ஆனால், அப்படி மோதிக் கொள்வதால் மக்களுக்குத்தான் நஷ்டம் என்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். வாதிட்டு, அவர்களை நம் வழிக்குக் கொண்டு வந்து நம்முடைய தேவைகளைப் பெறவே நான் விரும்புகிறேன்” என்று உரிமை உள்பட அனைத்தையும் பெறமுடியும் என்ற நம்பிக்கையோடு அண்ணா அவர்கள் அந்தக் கட்டுரையை – “காஞ்சி’’ பத்திரிகையிலும் வெளியிட்டு, “அதுதான் என்னுடைய கடைசி விருப்பம்” என்பதை நமக்கெல்லாம் சொன்னார்கள்.

அந்தக் கடைசி விருப்பத்தை நிறைவேற்ற, மத்திய அரசோடு மோதிக் கொள்ள அவர் விரும்பவில்லை. மத்திய அரசோடு உடன்பாடு கொள்ளத்தான் அவர் விரும்பினார். இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற கம்யூனிஸ்ட் மாத்திரமல்ல, மேற்கு வங்கத்திலே இருக்கின்ற கம்யூனிஸ்ட் மாத்திரமல்ல, இந்தியாவிலே இருக்கின்ற எந்தக் கம்யூனிஸ்ட் ஆனாலும், ‘விலைவாசி உயர்ந்து விட்டதா? கருணாநிதி என்ன செய்கிறார்?’ என்று கேட்கின்ற நேரத்தில், நான் விலைவாசியை குறைக்க என்னென்ன செய்திருக்கிறேன் என்ற – நான் தீட்டி நிறைவேற்றிய திட்டங்களையெல்லாம் எடுத்துச் சொல்கிறேன். ஆனாலும், அவர்களுக்கு நான் சொல்வதில் திருப்தி ஏற்படவில்லை.

அவர்களுக்கு எப்பொழுது திருப்தி ஏற்படும் என்றால், அவர்களுக்கு மத்திய சர்க்காரை திட்டினால்தான் – விலைவாசி உயர்வுக்குக் காரணம் மத்திய அரசுதான் என்று சொன்னால்தான் அவர்களுக்கு நிம்மதி. அதை நான் சொல்லவில்லை. மத்திய சர்க்காரை குறை கூற – மத்திய அரசை நான் வம்புக்கு இழுக்க விரும்பவில்லை என்பதை புரிந்து கொண்ட காரணத்தால்தான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆனாலும், இந்திய கம்யூனிஸ்ட் ஆனாலும், உன்னோடு கூட்டணிக்கே வரவே தயாராயில்லை என்று உரைத்துவிட்டு, தனியாக மத்தியிலே இருக்கின்ற அரசோடு மோதிக் கொண்டிருக்கின்றார்கள்.

நான் இன்றைக்குக் கூட, மத்திய சர்க்காரை பற்றி குறை கூறி அறிக்கை விட்டோ அல்லது பேசியோ, எழுதியோ தங்கள் பத்திரிகையிலே வெளியிட்டிருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கட்டுரை ஒன்றை பார்த்தேன். "கருணாநிதி மத்திய சர்க்காருக்கு அடிமையாகி விட்டார், எதற்கெடுத்தாலும் இங்கிருந்து டில்லிக்குப் பறக்கிறார், டெல்லிக்கு விமானம் மூலம் பறப்பதுதான் அவருக்கு வேலை'' இது கம்யூனிஸ்ட் கட்சியினுடைய குறைபாடு. நான் டெல்லிக்கு செல்வதே கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பிடிக்கவில்லை. டெல்லிக்கு சென்றாலே – டெல்லியிலே இருப்பவர்களுக்கு அடிமையாகி விட்டோம் என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன், கணக்கெடுக்கலாமா? ஒரு ஆண்டுக்கு எத்தனை முறை கருணாநிதி டெல்லிக்கு செல்கிறான், எத்தனை முறை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் டெல்லிக்கு செல்கிறார்கள் என்று கணக்கெடுத்து – அந்த பயணங்களின் எண்ணிகைகளைப் பார்த்தால் யார் நூறு முறை அங்கே அடிமையாகிக் கிடக்கிறார்கள்? யார் ஒரேஒரு முறை நட்பு ரீதியாக டெல்லிக்குச் சென்றார்கள் என்று பார்த்தால் கணக்குத் தெரியும்.

நான் மத்தியிலே இருந்து மாநிலத்தினுடைய தேவைகளை நட்பு ரீதியாகப் பெற விரும்புகின்றேன். யாரையும் மிரட்டி – உருட்டி அல்ல.

நட்புரீதியாகத்தான் பெற விரும்புகின்றேன். உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கை கொடுப்போம். இது தி.மு.கழகத்தினுடைய பெரும் முழக்கம். இதிலிருந்து நாங்கள் அணுவளவும் விலகியதில்லை. அப்படி விலகாத காரணத்தால்தான், இன்றைக்கு தி.மு.கழகமும், இந்திய தேசிய காங்கிரசும் எங்கள் கூட்டணியிலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளும் இந்தத் தேவைகளை – நம்முடைய அணியின் மூலமாக அமைதியாகப் பேசி – உரிமைகளைக் கேட்டுப் பெறலாம், உரிமை முழக்கத்தை உத்வேகமாக செய்கின்ற நம்முடைய திருமாவளவன் உள்ளிட்ட அத்தனை பேரும் தி.மு.கழகத்தை இன்றைக்கு இந்தப் பிரச்சினையிலே நாம் பேசித் தீர்ப்போம், நட்புரீதியாக – நாட்டின் தேவைகளை நிறைவேற்றுவோம் என்று எண்ணியிருக்கின்ற காரணத்தால், அவர்களும் நம்மை நம்புகிறார்கள், நாங்கள் உங்களை நம்புகிறோம், நீங்கள் எங்களை நம்புங்கள், நம்புகிறீர்கள். இடையிலே யார் யாரோ வந்து நம்முடைய நம்பிக்கை தளையை அறுத்திடலாம் என்று கருதினால், அது கனவாகி விடும் என்பதை அவர்களுக்கு எச்சரித்து, இந்த உறவு நீடிக்க, உரிமைகள் நிலைநாட்டப்பட, தமிழ்நாட்டினுடைய தேவைகள் நிறைவு செய்யப்பட நம்மோடு உறவு கொண்டிருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய உறவு மேலும் மேலும் வலுப்பட்டால்தான் இவைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொள்ள முடியும். நாம் எத்தனை இடம் பெற்றோம், அவர்கள் எத்தனை இடம் பெற்றார்கள் என்பதல்ல, நாம் பெறுகின்ற அத்தனை இடங்களையும் காங்கிரஸ் பெறுமேயானால் சம உரிமையோடு நாம் நம்முடைய தேவைகளையெல்லாம் நிறைவு செய்து கொள்ள முடியும். சற்று ஏறத்தாழ இடங்களினுடைய எண்ணிக்கை இருக்குமேயானால் அப்பொழுது இடங்களல்ல, இதயங்களினுடைய ஒற்றுமை, அவைகளை வைத்து நாம் இந்த மக்களுடைய தேவைகளை நிறைவு செய்ய நம்மால் முடியும் என்பதை எடுத்துச் சொல்லி இந்த இனிமையான நேரத்தில் நம்முடைய அருமை நண்பர் – மத்திய அமைச்சர் ஆசாத் அவர்கள் இங்கே வருகை தந்து நம்மையெல்லாம் மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்ற

அளவுக்கு பல செய்திகளை எடுத்துச் சொன்னதற்காகவும், நம்முடைய திட்டங்களை பாராட்டியதற்காகவும் இந்தக் கூட்டத்தின் சார்பாக அவருக்கு நன்றியைக் கூறி, நீங்கள் பாராட்டினால் மாத்திரம் போதாது, அடுத்தும் இந்த ஆட்சிதான் அமைய வேண்டும் என்றால், அப்படி அமைகின்ற ஆட்சியிலே நாங்கள் நிறைவேற்றுகின்ற திட்டங்களை, ஆதரித்து நாங்கள் கோருகின்ற திட்டங்களை எல்லாம் நிறைவேற்றித் தர வடக்கேயிருந்து நீங்கள் எங்களுக்கு நண்பராக அரும்பணியாற்றிட வேண்டும் என்று அருமை நண்பர் காங்கிரஸ் கட்சியினுடைய பொதுச் செயலாளர் ஆசாத் அவர்களைக் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

லட்சோபலட்சம் பேர் திரண்ட சென்னை தீவுத்திடல் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை!

தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தலில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து 5.4.2011 சென்னை தீவுத்திடலில் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி சிறப்புரையாற்றிய பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:–

இன்றைய தினம் சென்னை மாநகருக்கு வந்து இங்கு வழங்கும் உரையின் மூலம், தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் இந்தத் தேர்தலிலே எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளினை விடுப்பதற்காக வந்துள்ள நம்முடைய திருமதி சோனியா காந்தி அவர்களைத் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் வருக, வருக என்று நான் வரவேற்கிறேன். (கைதட்டல்)

அவர்கள் இந்தத் திடலுக்கு வந்து வாழ்த்தும் போதெல்லாம், அந்த வாழ்த்து வீணானது இல்லை – பலித்தே இருக்கிறது. (பலத்த கைதட்டல்) அதைப்போல, இன்றைக்கு திருமதி சோனியா அவர்கள் இந்த மைதானத்திலே வழங்குகின்ற வாழ்த்து வீணாகாமல் தமிழ்நாட்டை காப்பாற்றுகின்ற – தமிழ் நாட்டை தூக்கி நிறுத்துகின்ற – தமிழ்நாடு சட்டமன்றத்தில் நல்ல ஜனநாயகம் தழைக்கின்ற வகையில் அமையும்.

இந்த நேரத்தில் ஒரு சில கோரிக்கைகளை அவர்களிடத்தில் வைக்க விரும்புகிறேன். என்னதான் நான் ஒரு கட்சியினுடைய தலைவராக – கூட்டணியினுடைய அமைப்பாளராக இருந்து – இந்தத் தேர்தலுக்கு ஆதரவு காட்டுகின்ற பணிகளைச் செய்தாலும் கூட,

இந்தப் பணிகளிடையே வந்த இடத்தில் அம்மையாரிடத்திலே சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் விட்டு விட்டால், அது மாநிலத்திற்கே நான் இழைத்த குற்றமாக ஆகிவிடும் என்பதால், அவற்றைச் சொல்ல விரும்புகின்றேன்.

மாநிலங்களுக்கிடையேயான நதிகளைத் தேசிய மயமாக்குவது மத்திய அரசின் அதிகார வரம்பிற்குள் இருப்பதாக அரசமைப்புச் சட்டம் மத்திய பட்டியலில் 58–வது பதிவில் காணப்படுகிறது. மாநிலங்களுக் கிடையே நீண்ட காலமாக நிலவி வரும் நதிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நதிகளை தேசியமயமாக்குவது மட்டுமே நீண்ட கால தீர்வாக அமையும் என்பதால், அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முதற்கட்டமாக தென்னக நதிகளையாவது இணைப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். அதற்கான முழு நிதி உதவிகளை மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்று அம்மையார் அவர்கள் மூலமாக நான் மத்திய அரசை கேட்டுக் கொள்கின்றேன்.

செம்மொழி தகுதி நம்முடைய தமிழ் மொழிக்கு அளிக்கப்பட்டதை நான் சொல்லி உங்களுக்கு புரிய வைக்கவேண்டிய அவசியம் இல்லை. செம்மொழி தகுதியை நூறாண்டுக் காலமாக நம்முடைய தமிழகம் கோரி வந்தது. சூரியநாராயண சாஸ்திரி அவர்கள் அறிவித்த அந்தக் கோரிக்கை, திட்டம் – அவர் பரிதிமாற்கலைஞர் என்று தன்னுடைய பெயரையே மாற்றிக்கொண்ட காலத்திலும் கூட நிறைவேறாமல் பல்லாயிரக்கணக்கான தமிழ் புலவர்கள் – தமிழறிஞர்கள் எல்லாம் கேட்டும் நடைபெறாமல், தி.மு.கழக ஆட்சியில் நான் பொறுப்பேற்றக் காலத்தில் அம்மையார் அவர் களைச் சந்தித்தபோது – என்ன வேண்டும் தமிழ்நாட்டுக்கு என்று அவர்கள் கேட்டபோது, நான் எல்லாவற்றையும் விட சிகரம் போன்று ஒரு கோரிக்கை இருக்கிறது, அம்மையார் அவர்களே, அதுதான் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்ட போது,

உடனடியாக அதற்கு ஒப்புக்கொண்டு தமிழைச் செம்மொழியாக அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பு எவ்வளவு மகத்தானது, மாபெரும் அறிவிப்பு, சரித்திர பிரசித்தி பெற்றது என்பதை நான் விளக்க வேண்டிய அவசியம் இல்லை. தமிழர்கள் அனைவரும் அம்மையார் அவர்களை அதற்காக இன்னமும் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். நானும் வாழ்த்துகின்ற அதே நேரத்தில் இன்னொன்றையும் கேட்டுக்கொள்கின்றேன். இப்படி உங்களாலேயே செம்மொழி தகுதி வழங்கப்பட்ட தமிழ் மொழியை மத்தியிலே ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. "உனக்கு இடம் கொடுத்தால் இதையெல்லாம் கேட்கிறாயே?" என்று அவர்கள் எண்ணிவிடக்கூடாது. நான் உரிமையோடு, அதே நேரத்திலே தமிழ் மொழியின் பெருமைகளை யெல்லாம் அவரிடத்திலே எடுத்துச்சொல்லி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், அவர்களே அறிந்த அந்த உண்மையை உணர்த்தி, தமிழ் மொழி இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆவதற்கான அந்தப் பெருமையை, உரிமையை எங்களுக்கு வழங்க வேண்டும் என்றும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

கல்வி மாநில பட்டியலில் இல்லாமல், அது மத்திய அரசு பட்டியலிலே இடைக்காலத்தில் இணைக்கப்பட்டு விட்டது. அதை மீண்டும் மாநிலப் பட்டியலிலே இணைக்க வேண்டும் – சேர்க்க வேண்டும் என்று பல காலமாக சான்றோர்கள், ஆன்றோர்கள், பெரியோர்கள், அரசியல் வித்தகர்கள், கல்வியாளர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை நிறைவேற்றுகின்ற வகையில், மத்திய அரசால் நியமிக்கப்பட்ட கோத்தாரி குழுவும் பல கல்வி வல்லுநர்களும் வலியுறுத்துகிறபடி, கல்வியை மாநில அரசு பட்டியலிலே சேர்க்க உரிய அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் தங்கள் மூலமாக மத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியா இலங்கையுடன் 1974ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும், மீன் வலைகளை உலர்த்துவதற்கும் அங்குள்ள தேவாலயங்களில் வழிபடுவதற்கும் இருந்த உரிமைகள் 1976ஆம் ஆண்டு திரும்பப் பெறப்பட்டன கச்சத்தீவில். இதன் காரணமாக, அடிக்கடி கச்சத் தீவின் அருகே மீனவர்கள் கொல்லப்படுவதும், தாக்கப்படுவதும் சிறை பிடிக்கப்படுவதும் தொடர் நிகழ்ச்சிகளாக ஆகிவிட்டன – அதிகரித்து விட்டன. எனவே, கச்சத் தீவை திரும்பப் பெறுவதற்கு மத்திய அரசு உதவிட வேண்டும் என்று நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இது உரிமைப் பிரச்சினைக் கூட அல்ல – தமிழர்களுடைய உயிர் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால், இதிலே தாங்கள் தலையிட்டு ஆவன செய்ய வேண்டும்.

தமிழர்களின் நீண்ட கால கோரிக்கை, சேது கால்வாய்த் திட்டம். நான் தொடர்ந்து வலியுறுத்தியதன் காரணமாக 2.7.2005 அன்று தொடங்கப்பட்டு பணிகள் நிறைவடைகின்ற நேரத்தில் மதவாத காரணங்களைக் காட்டி, அது தடை செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்திலே நிலுவையில் உள்ள வழக்கினை மத்திய அரசு காலம் தாழ்த்தாமல் நடத்தி முடித்து இத்திட்டத்தை மீண்டும் தொடங்கி விரைவாக முடிக்க வேண்டும் என்று அம்மையார் மூலமாக கேட்டுக்கொள்கின்றேன்.

தென் மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு முக்கியமான முல்லைப் பெரியாறு பிரச்சினை உச்சநீதி மன்றத்திலே நிலுவையிலே உள்ளது. அதைப்போலவே காவேரி பிரச்சினையிலும் நடுவர் மன்ற தீர்ப்புகளுக்குப் பிறகும் நடுவர் மன்றத்திலும் உச்சநீதிமன்றத்திலும் இதுகுறித்து வழக்குகள் நிலுவையிலே உள்ளன. பாலாறு பிரச்சினையும் உச்சநீதிமன்றத்திலே உள்ளது. நீதிமன்றங் களிலே இவ்வளவு வழக்குகள் ஒத்தி வைக்கப்படுவதை – வாய்தாக்கள் வாங்கப்படுவதை – தள்ளி வைக்கப்படுவதை மிகப்பெரும்பாலும்

நீதிக்கு புறம்பான வகையிலே செயல்பட்டுள்ளன என்ற உண்மையை உணர்ந்து ஒழுங்கான முறையிலே – உரிய முறையிலே இந்த வழக்குகள் நடைபெறுவதற்கு என்ன செய்யலாம் என்று அமைச்சர்களையும் – வழக்கறிஞர் குழுக்களையும் கலந்தாலோசித்து இந்த நேரத்திலே ஒரு முடிவு எடுத்தால்தான் இந்தியாவிலே அராஜகம் – அநாகரிகமான செயல்கள், இவைகள் எல்லாம் ஏற்படாமல் அமைதியைக் காக்க முடியும் என்பதை அறிவுரையாக அல்ல, ஒரு எச்சரிக்கையாக நான் அம்மையார் மூலமாக மத்திய அரசுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழக ஆட்சிக் காலத்தில் பவுத்த மதத்தை தழுவிய தலித் மக்களுக்கு ஆதிதிராவிடர் பெறுகிற அனைத்து சலுகைகளும், உரிமைகளும் அளிக்கப்பட்டது. அது போல தலித் கிறிஸ்தவர்களும் ஆதிதிராவிடர் பட்டியலில் இடம் பெறுவதற்கு மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறோம். கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களில் சிறுபான்மை சமுதாயத்தினர் உரிய இடங்களை பெறுவதற்கு ஏதுவாக நீதி அரசர் ரங்கநாத் மிஸ்ரா ஆணையத்தின் பரிந்துரைகளை விரைவில் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்தி நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என்று அம்மையார் மூலமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஈழத் தமிழர்களுக்கு சிங்களர்களுக்குச் சமமான உரிமையையும் ஆட்சியியலில் சம பங்கினையும் அளித்து ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்கு மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் பல முறை வலியுறுத்தியதற்கிணங்க அந்த முயற்சிகளை நிறைவேற்றவில்லை என்றாலும் கூட அவைகளை நிறைவுபடுத்த வேண்டிய கடமையும், பொறுப்பும் அந்த இலக்கை அடையவும் அம்மையார் அவர்களுக்கு உண்டு என்ற காரணத்தால் அதை விரைவிலே முடித்து தமிழர்களுடைய நெஞ்சங்களில் பால் வார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தத் தருணத்தில் தேர்தல் நேரத்தில் வாக்குகளை கேட்க, ஆதரவை திரட்ட வந்த இந்த நேரத்தில் இத்தனைக் கோரிக்கைகளா என்று கேட்பீர்களேயானால் எந்த நேரத்திலும் கோரிக்கை வைக்க எனக்கு உரிமை உண்டு, அதை நிறைவேற்ற அம்மையார் அவர்களுக்கு கடமை உண்டு என்பதால்தான் இந்த கோரிக்கைகளை இந்த சமுத்திரம் போன்ற கூட்டத்தின் சார்பாக நான் இங்கே வைத்து உறவுக்குக் கை கொடுக்கின்ற இந்த கூட்டணி உரிமைக்குக் குரல் கொடுத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்து, எங்களையெல்லாம் மகிழ்வித்த அம்மையார் அவர்களுக்கு இந்த மாபெரும் கூட்டத்தின் சார்பாக நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

திண்டிவனத்தில் நடைபெற்ற பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை

திண்டிவனத்தில் 8.4.2011 அன்று நடைபெற்ற பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

திண்டிவனம், செஞ்சி, மைலம் ஆகிய மூன்று தொகுதிகள் – முக்கனிகள் என்று கூறப்படுகிற அளவிற்கு – பா.ம.க. சார்பில், இங்கே வீற்றிருக்கின்ற தலைவர்களின் ஆதரவையும், பல்லாயிரக்கணக்கில் கூடியிருக்கின்ற தாய்மார்கள், பெரியவர்கள் அனைவருடைய ஆதரவையும் கோரி வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையோடு குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் பார்த்து நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

நம்முடைய டாக்டர் அய்யா அவர்கள் இந்தக் கூட் டம் – கூட்டத்தில் கலந்து கொள்கின்ற கட்சிகள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆட்சிப் பொறுப்பை அளிப்பதற்காக நடைபெறுகின்ற கூட்டம் என்று குறிப்பிட் டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு தனி அமைப்புக்கு அல்ல, இந்த நாட்டிலே அடித்தட்டு மக்களை வாழ வைக்கிற – நலிந்த மக்களை வாழ வைக்கிற, ஏமாற்றப்பட்ட மக்களுக்கு ஏற்றம் தருகிற இயக்கம் எந்த இயக்கமோ அந்த இயக்கத்திற்கு – அந்த இயக்கத்தோடு தொடர்பு கொண்டு தொடருகின்ற இயக்கங்களுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டவர்கள்.

என்றென்றும் துணை நிற்பவர்கள் என்ற அளவிலே தான் இந்த மேடையிலே வீற்றிருந்த தலைவர்கள் – ஒலித்தது பல குரல் என்றாலும், அது என் குரல் என்றாலும், டாக்டர் அய்யா குரல் என்றாலும், தம்பி

திருமாவளவன் குரல் என்றாலும், காதர் மொய்தீன் அவர்களின் குரல் என்றாலும், எல்லா குரலும் ஒரே குரல்தான். இந்தக் குரலுக்குச் சொந்தக்காரர்கள் இந்த மேடையிலும் சரி, கூட்டத்திலும் சரி பல பகுதிகளாகப் பிரிந்து இருக்கலாம், ஆனால் எல்லோரும் ஓர் குலம் என்று பாடியதற்கு ஏற்ப அதை அப்படியே திருப்பிப் பார்த்தால் இங்கே வீற்றிருக்கின்ற அனைவருக்கும் ஒரே குரல், அந்தக் குரல் தமிழகத்திலே ஏழை எளிய மக்களை, பாட்டாளி மக்களை, அடித்தட்டு மக்களை கைதூக்கி விடுகின்ற குரல், அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர்கள்தான் இங்கே வீற்றிருக்கின்றோம்.

காரணம், நான் அந்தக் குரலுக்குச் சொந்தக்காரனாக இருக்கிறேன் என்றால், நான் அல்லது என்னுடைய சமுதாயம், என்னுடைய வர்க்கம், என்னுடைய இனம் அடித்தட்டாக, கேவலமாக, இழிவாக நடத்தப்பட்ட இனம். அதைப்போலவே தம்பி திருமாவளவனுடைய இனம் தலைதூக்கக் கூடாது என்று தரைமட்டமாக ஆக்கப்பட வேண்டும் என்று சில தடியெடுத்தவர்களால் வீழ்த்தப்பட்ட இனம்.

அதைப் போலத்தான் என்னுடைய அருகிலே அமர்ந்திருக்கின்ற நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் டாக்டர் அய்யா அவர்களுடைய இனமும், எங்களுடைய இனத்தைச் சேர்ந்தது தான். "இனம் இனத்தைச் சேரும் என்பதற்கேற்ப நாங்களெல்லாம் இன்றைக்கு ஒன்றுபட்டிருக்கிறோம். இங்கே திருமா பேசும்போது சொன்னார், டாக்டர் அய்யா பேசும்போதும் சொன்னார், பா.ம.கட்சியையும், விடுதலைச் சிறுத்தைகளையும் கைகோர்க்க வைத்து, இணைய வைத்து இந்தக் கூட்டணியை நான் உருவாக்கினேன் என்று எனக்குப் புகழாரம் சூட்டினார்கள்.

நான் அதை ஒத்துக் கொள்கிறேன். ஏனென்றால் இந்த இரண்டு சக்திகளும் ஆதிக்க சக்தியை வீழ்த்தக்கூடிய அருமையான சக்தி – வல்லமை பொருந்திய சக்தி. சக்தி என்றாலே வல்லமைதான். ஆனால் அப்படிப்பட்ட வல்லமை பொருந்திய சக்திகள் இரண்டு

சக்திகள். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, அடிமைகளாக ஆக்கப்பட்ட, உனக்கு இதுதான் கதி – உனக்கு இதுதான் விதி என்று எழுதி வைக்கப்பட்ட – சாஸ்திர சம்பிரதாயங்களால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, எழ முடியாமல், தலையை தூக்கினால், தலையை தட்டி கீழே வீழ்த்துகின்ற அளவிற்கு தர்பார் நடந்த இந்த மண்ணில், அண்ணல் அம்பேத்கரும், அவருடைய அழுத்தமான கருத்துக்களை, ஆரியத்திற்கு எதிரான கருத்துக்களை, ஜாதித் திமிர், மதவாதம் இவைகளுக்கெல்லாம் அன்று காப்பரண்களாக இருந்த நிலைமைகளையெல்லாம் உடைத்தெறிந்த அந்தக் கருத்துக்களை எதிரொலித்தவர் தமிழகத்திலே தந்தை பெரியார் அவர்கள்.

அந்தப் பெரியாரின் பிள்ளைகள் நாங்கள் என்ற காரணத்தால், அம்பேத்கரை அரவணைத்துக் கொண்டோம். அவருடைய கொள்கைகளை அரவணைத்துக் கொண்டோம். எனக்கும் அம்பேத்கருக்கும் நேரடியான பழக்கம் கிடையாது. "உன் வயது என்ன? அம்பேத்கரின் வயது என்ன? நேரடியான பழக்கம் இல்லை என்று சொல்கிறாயே? என்றால் நான் தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக பொறுப்பேற்ற காலத்திலேயே எனக்கு அம்பேத்கரைத் தெரியும்.

ஏனென்றால், அண்ணல் அம்பேத்கரை தந்தை பெரியார் அவர்கள் சென்று பம்பாய் நகரத்திலே பார்த்திருக்கிறார். பார்த்து, இந்தியாவிலே இருக்கின்ற சமூகங்களுடைய ஏற்றத்தாழ்வுகள், இந்தியாவிலே இருக்கின்ற பல சமூகங்களை தங்களுடைய பாதங்களிலே போட்டு மிதிக்கின்ற ஆதிக்க சக்திகள், இவைகளைப் பற்றியெல்லாம் நெடுநேரம் விவாதித்து இருக்கிறார், பம்பாய் நகரத்தில். திரும்பி வந்து எங்களிடத்திலே அண்ணல் அம்பேத்கரைப் பற்றி பெரியார் அவர்களும், அவரோடு பம்பாய்க்கு சென்றிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதுமுதல் எனக்கு அம்பேத்கரிடத்திலே ஒரு தனி காதல் (பலத்த கைதட்டல்). ஏனென்றால்,

எந்தப் பெரியார் எனக்கு சுயமரியாதை கருத்துக்களை என்னுடைய இதயத்திலே தெளித்தாரோ, அந்தப் பெரியாருடைய கருத்துக்களும், அண்ணல் அம்பேத்கருடைய கருத்துக்களும் ஒன்றுபட்டு இருப்பதை காணும்போதுதான் எனக்கு அந்த காதல் அவர் மீது மலர்ந்தது (பலத்த கைதட்டல்).

அந்தக் காதல் எப்படி வெளிப்பட்டது என்பதற்கு நான் சில சான்றுகளைச் சொல்ல விரும்புகின்றேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக நான் பொறுப்பேற்று தமிழகத்தின் முதலமைச்சராக அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு பதவி ஏற்றிருந்த அந்தக் காலகட்டத்தில் ஒரு நாள் நாளிதழ்களைப் புரட்டிப் பார்த்தபோது, ஒரு ஆங்கில நாளேட்டில் வந்த செய்தியைப் பார்த்தேன். என்ன செய்தி என்றால், மராட்டிய மண்டிலத்திலே சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம். என்ன தீர்மானம்? அம்பேத்கர் பெயரால் மராட்டியத்தில் ஒரு பல்கலைக் கழகத்தை அமைப்பது என்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். இது சட்டசபையிலே விவாதத்திற்கு வருகிறது. அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பத்தாண்டு காலம் ஆகிறது. இன்னும் அமல்படுத்தப்படவில்லையே, செயல்படுத்தப்படவில்லையே, அம்பேத்கர் பல்கலைக் கழகத்தை இன்னும் காணவில்லையே என்று மராட்டிய மண்டிலத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட மக்கள் – இந்த மக்களெல்லாம் புரட்சி செய்து அது பற்றி சட்டமன்றத்திலே – மகாராஷ்டிர சட்டமன்றத்திலே விவாதம் வருகிறது. அது பத்திரிகைகளிலே வந்ததை நான் படித்துப் பார்த்தவுடன், ஆச்சரியப்பட்டேன்.

அம்பேத்கர் இந்தியாவிற்கே பெருமை சேர்த்தவர். அரசியல் சட்டத்தை இந்திய நாட்டுக்கு அளித்தவர். மாமேதை. அந்த மேதையின் பெயரால் ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதற்கு மராட்டிய மண்டிலத்திலே ஏன் தயக்கம்? என்ற வினா என் உள்ளத்திலே எழுந்தவுடன் நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ள அமைப்புகளுக்கெல்லாம் கடிதம் எழுதி – ஒரு அறிக்கை வெளியிட்டு,

"அம்பேத்கர் பெயரால் அவர் பிறந்த மராட்டிய மாநிலத்தில் ஒரு பல்கலைக் கழகம் வைப்பதற்கு என்ன தயக்கம்? உடனடியாக அதை அமைக்க வேண்டும், இல்லையேல் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திலே அதற்காக கிளர்ச்சி நடத்தும் என்று அறிக்கை விடுத்தேன் (பலத்த கைதட்டல்).

அந்த அறிக்கை வெளிவந்தவுடன் இரண்டு நாள் கழித்து மராட்டியத்தினுடைய கவர்னர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். "உங்களுடைய அறிக்கையை நான் பத்திரிகைகளிலே பார்த்தேன். உடனடியாக ஏற்ற நடவடிக்கை எடுப்பேன். அந்தப் பல்கலைக் கழகம் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மராட்டிய கவர்னர் எனக்குக் கடிதம் எழுதினார். யார் அந்த கவர்னர் என்று பார்த்தால், தமிழகத்திலும் கவர்னராக இருந்த திரு. அலெக்சாண்டர் அவர்கள். கண்ணியவான். கடமையில் கருத்தாக இருப்பவர். இது போன்ற பிரச்சினைகளில் அரசியல் நெடி கொள்ளாதவர்.

அவர் மீண்டும் எனக்கு கடிதம் எழுதி, "நாங்கள் அம்பேத்கர் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். உங்களுக்கு அதுபற்றிய உறுதி வேண்டுமானால் – அந்தப் பல்கலைக் கழகத்தை நிறுவதற்கான மராட்டிய அரசினுடைய உத்தரவு – ஜி.ஓ. அதனுடைய நகலையும் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதினார்கள். அதைப் பார்த்த பிறகுதான், மராட்டியத்திலே அம்பேத்கர் பல்கலைக் கழகம் தோன்ற வேண்டும் என்று உருவான கிளர்ச்சியை நாங்கள் நிறுத்திக் கொண்டோம். மராட்டிய கவர்னருக்கு நன்றிக் கடிதம் எழுதினேன். இந்த மராட்டியத்திலே உன்னதமான அந்தப் பல்கலைக் கழகம் எழும்பியிருக்கிறது என்றால், அதற்கு இந்தக் கருணாநிதியினுடைய பங்கும் (பலத்த கைதட்டல்) கொஞ்சம் இருக்கிறது.

இதைச் சொல்வதற்குக் காரணம், ஏதோ ஒவ்வொரு மாநிலத்திலும் பல்கலைக் கழகம் வர இவன்தான் காரணம் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறான் என்று நீங்கள் கருத வேண்டும்

என்பதற்காக அல்ல. அந்த உணர்வு எப்படி வந்தது? ஏன் வந்தது? அம்பேத்கருடைய பெயர் இல்லாமல் இன்னொருவர் பெயராக இருந்தால் இந்நேரம் எத்தனை பல்கலைக் கழகங்களை உருவாக்கியிருப்பார்கள். அந்த உணர்வு பட்டுப் போகாத காரணத்தால்தான் அந்தக் கேள்வி இன்னமும் நம்மைப் போன்றவர்களினுடைய இதயத்திலே இருக்கின்ற காரணத்தால்தான் அந்த உணர்வு வந்தது. அந்த உணர்வின் அடிப்படையிலே தான் அந்தக் கிளர்ச்சியை தமிழகத்திலே நாங்கள் தொடங்க நேரிட்டது.

அப்படி தொடங்கிய காரணத்தால்தான் மராட்டியத்திலே அம்பேத்கர் பல்கலைக் கழகம் தோன்றியது. மராட்டியத்திலே மாத்திரமல்ல, அதற்கு முன்பே தமிழகத் தில் – திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அம்பேத்கர் பெயரால் சட்டக் கல்லூரிகள், அம்பேத்கர் பெயரால் பல்கலைக் கழகங்கள் இவைகளெல்லாம் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் முகிழ்த்து, அதை வெளியிலும் சொல்லியிருக்கிறோம், விளம்பரப் படுத்தியிருக்கிறோம். அறிவிப்பும் வெளியிட்டிருக்கிறோம். அப்படி வெளியிட்ட பிறகு, நான் எங்கே அம்பேத்கர் பல்கலைக் கழகத் திற்கு அலுவலகம் அமைப்பது என்று எண்ணியபோது, உங்களுக்குச் சொல்கிறேன்; தமிழக முதலமைச்சர் வாழ்வதற்காக சென்னை கிரின்வேஸ் சாலையில் மிகப் பெரிய பிரம்மாண்டமான ஒரு கட்டிடத்தைக் கட்டி அது முதலமைச்சருக்கு என்று அந்தத் துறையின் அமைச்சர் தம்பி துரைமுருகன் அறிவித்தார். அதை வந்து பாருங்கள் என்று சொன்னார். பார்த்தேன். என்றைக்கு குடி வருகிறீர்கள் என்று கேட்டார். நாளைக்குச் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு, மறுநாள் ஒரு ஆர்டர் போட்டேன், "எனக்கு நீ காண்பித்த அந்த பங்களா அம்பேத்கர் பல்கலைக்கழகத்தினுடைய அலுவலகமாக பயன்படும், அது எனக்குத் தேவையில்லை என்று சொன்னவன்தான் இந்தக் கருணாநிதி.

ஆகவே, ஆதிதிராவிட மக்களுக்கும், அவர்களுடைய அரும்பெரும் தலைவர் – அரசியல் சட்டமேதை அம்பேத்கருக்கும்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள தொடர்புகளை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற காரணத்தால்தான் இதைச் சொன்னேன். இப்படிப்பட்ட சமுதாய – அரசியல் சீர்திருத்த இயக்கம் தான் தி.மு.கழகம். அந்தக் கழகத்தோடு இன்றைக்கு இணைந்து கூட்டணி அமைத்திருக்கின்ற நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரானாலும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவரானாலும் நாங்கள் தொடர்ந்து இந்த அணியை அமைக்க வில்லை என்பதற்காக, அந்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம். தொடர்ந்திருந்தால் – நானும் டாக்டரும் கொண்ட அந்த உறவு தொடர்ந்திருந்தால் எத்தனையோ விசித்திரங்களை புதுமைகளை தமிழகத் திலே நாங்கள் உருவாக்கியிருக்க முடியும். அதைப்போல எனக்கும் திருமாவளவனுக்கும் உறவு உருவாகியிருந்தால் உறவுக்குக் கைகொடுத்திருந்தால், உரிமைக்குக் குரல் கொடுத்திருந்தால் இடையிலே அதற்கு தடைகள் ஏற்படாமல் இருந்திருந்தால் இன்றைக்கு தமிழகத்திலே எத்தனையோ சமத்துவ – சமதர்ம திட்டங்கள் மலர்ந் திருக்கும். நான் மறக்கவில்லை. நான் மறுக்கவும் இல்லை.

இப்பொழுது இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் அவைகளெல்லாம் மீண்டும் தொடர வேண் டும். நம்முடைய பெரியவர் இங்கே உரையாற்றினாரே முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில், பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்கள் – அவர்களுடைய இயக்கமும் திராவிட முன்னேற்றக் கழகமும் கொண்டிருந்த இறுகிய அந்த நட்பும், அதற்கு இடையிலே ஏற்பட்ட தொய்வும் நீங்கள் அறிந்ததுதான். அவர் மறந்ததல்ல.

ஆனால் இஸ்லாமிய சமுதாயத்தை ஒரு அமைப்பின் மூலமாக நாங்கள் தெரிந்து கொள்வதை விட, நலிந்த சமுதாயத்தை, ஆதி திராவிட சமுதாயத்தை ஒரு அமைப்பின் மூலமாக நாங்கள் அறிமுகப்படுத்திக் கொள்வதைவிட, அதிலே தலைவர்களாக இருக்கின்ற திருமா போன்றவர்களை, டாக்டர் அய்யா போன்றவர்களை அறிந்திருக்கிற காரணத்தால், அவர்களும் என்னை உணர்ந்திருக்கிற

காரணத்தால், புதிதாக நாங்கள் எந்த லட்சியங்களையும், கொள்கைகளையும் பேசி இந்த நாட்டிலே அடித்தட்டு மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய அவசியம் ஒன்றும் கிடையாது.

ஏற்கனவே நாங்கள் புரிந்து கொண்டிருப் பதை நிலையாக இனிமேலாவது அதைக் கட்டிக் காத்து எந்தவிதமான சிக்கலும், பிரச்சினையும் எங்களுக்குள் வராமல் நீங்களும் பார்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் இன்றைக்கு எங்களை நம்பி வாக்களிக்கிறீர்கள் என்றால், பல்லாயிரக்கணக்கிலே குழுமியிருக்கின்ற தமிழ்ப் பெரு மக்களே, திராவிடப் பெருங்குடி மக்களே, வாக்காளப் பெருமக்களே, பிற்படுத்தப்பட்ட மக்களே, தாழ்த்தப் பட்ட மக்களே நீங்களும் எங்களை கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஒன்றாக இருந்தீர்களே, என்ன வந்தது உங்களுக்குக் கேடு? என்று எங்களை கேட்கின்ற அளவிற்கு உரிமையோடு எங்களை நீங்கள் நடத்த வேண்டும்.

நீங்கள் அப்படி நடத்தினால்தான் நாங்களும் ஒழுங்காக இருப்போம். நாங்கள் ஒழுங்காக இருந்தால்தான் உங்களுடைய உரிமைகளுக்காகப் போராட இதுபோல ஓரணியில் நிற்க முடியும். நாங்கள் ஓரணியில் நின்றால் தான் இன்றைக்கு இந்தியாவை, தமிழகத்தை காப்பாற்ற முடியும்.

இன்றைக்கு நாட்டைக் காப்பாற்றுவது மாத்திரமல்ல, மொழியைக் காப்பாற்றுவது மாத்திரமல்ல, நம்முடைய நாகரிகத்தைக் காப்பாற்றுவது மாத்திரமல்ல, நம்முடைய கலையை, கலாச்சாரத்தை இவற்றையெல்லாம் காப்பாற்றுவதற்கு அரும்பாடுபட வேண்டியிருக்கிறது.

உங்களுக்கு நான் இங்கே ஒரு கோரிக்கை வைக்கிறேன் என்று டாக்டர் அய்யா அவர்கள் சொன்னார்கள். நான் அதிர்ச்சி அடையக் கூடிய கோரிக்கையை வைத்து விடுவாரோ என்ற பயத்தோடு அவரைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். நான் அதிர்ச்சி அடைய

வேண்டிய ஒன்றும் இல்லை. இட ஒதுக்கீடு பற்றித்தான் சொன்னார்கள். இது எனக்கும் அவருக்கும் சகஜமான ஒன்று. நான் அவர் சொல்லி, இதுபோன்ற விஷயங்களில் என்றைக்கும் மறுத்ததில்லை. அவருக்குத் தெரியாதா? (பலத்த கைதட்டல்).

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இடஒதுக்கீட்டிற்கான போராட்டத்தை நடத்தி 25 பேருடைய மண்டை உடைந்தது, அந்தப் போராட்டத்திலே. வன்னிய சமுதாயத்தினுடைய மக்களின் மண்டை உடைந்தது. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய மக்கள் மண்டை உடைந்தது. பலியானவர்கள் ஏறத்தாழ 25 பேர். அந்த பலியானவர் களுக்கு எல்லாம் நினைவுச் சின்னங்கள் எழுப்பியதும், அந்த பலியானவர்களின் குடும்பங்களுக்கு எல்லாம் இன்று வரையில் மாதந்தோறும் இழப்பீட்டுத் தொகை தந்து கொண்டிருப்பதும் இந்தக் கருணாநிதி தலைமையிலே உள்ள திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான்.

நான் தேர்தலுக்காகச் சொல்லவில்லை. அவர்களு டைய குடும்பங்களுக்கு 750 ரூபாய், 1000 ரூபாய் என்றெல்லாம் மாதந்தோறும் அளித்து விட்டு, அதை அடிக்கடி உயர்த்திக் கொண்டிருப்பவனும் நான்தான். அவர்களுடைய வீட்டிலே இருக்கின்ற பிள்ளைகள், அவர்களுடைய வம்சாவளிகள் இவர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கக் கூடிய வகையிலே, நான் அந்தக் குடும்பங்களை என்னுடைய குடும்பம்போல் பாவித்து, இன்றள வும் அவைகளுக்காக என்னை, என்னுடைய ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தவன் – நடத்திக் கொண்டிருப்பவன் – நடத்திக் கொண்டு இருக்கப் போகிறவன் (பலத்த கைதட்டல்).

நம்பிக்கையோடு சொல்கிறேன், நீங்களெல்லாம் இருக்க, நீங்கள் இவ்வளவு பேர் வீற்றிருக்கும்போது எனக்கு என்ன நம்பிக்கை குறைவு? நான் நம்பிக்கையோடுதான் இருக்கிறேன். கடல் போன்ற இந்தக் கூட்டத்தைப் பார்த்த பிறகு, பெருங்கூட்டமாக அல்ல,

உணர்ச்சிமிக்கக் கூட்டம் (கைதட்டல்). சாதாரண உணர்ச்சி அல்ல. ஜாதிய உணர்ச்சி என்று நான் சொல்ல மாட்டேன். ஜாதிய உணர்ச்சி அல்ல. இது நீங்களும் நானும் ஒரே உறவு, நீங்களும் நானும் சகோதரர்கள், என்னுடைய உடலில் ஓடுகிற ரத்தமும், உங்களுடைய உடலில் ஓடுகிற ரத்தமும் உடன்பிறப்புக்களின் ரத்தம் என்ற அந்த உடன்பிறப்பு உறவு. இப்படிப் பொதுப்படையாக சொல்லிவிட்டால் இடஒதுக்கீடு என்னவாவது என்று யாரும் கேட்கக் கூடாது (சிரிப்பு). இட ஒதுக்கீட்டை நாங்கள் கைவிட்டுவிடவில்லை. இன்றைக்கு இருக்கின்ற இடஒதுக்கீடு இஸ்லாமியர்களுக்குக் கூட மூன்றரை சதவிகிதம் என்றிருப்பதை அதிகமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பரிசீலித்து நல்ல முடிவெடுப்போம் என்று சொல்லியிருக்கிறோம்.

அதைப்போல, தனியாக மிக மிக பிற்படுத்தப்பட்டவர்களில் – அதை குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் வன்னியப் பெருங்குடி மக்களுக்கு (கைதட்டல்) என்று தனி இடஒதுக்கீடு வேண்டாமா என்று கேட் டால், நான் சொல்கின்ற இடஒதுக்கீட்டில் இதுவும் அடங்கும். இதையும் நான் சேர்த்துக் கொள்வேன். நிச்சயமாக இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்று கூறி உங்களிடையே இருப்பதிலே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. உங்களோடு இருப்பதிலே என்னுடைய குடும்பத்தாரோடு இருப்பது போன்ற மகிழ்ச்சி. என்னுடைய நண்பர்களோடு இருப்பது போன்ற மகிழ்ச்சி. என்னுடைய சமுதாயத்தோடு இருக்கின்ற மகிழ்ச்சி. நம்முடைய இனத்தோடு இருக்கின்ற மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இருக்கப் போவதில்லை. அப்படிப்பட்ட மகிழ்ச்சியோடு உங்களையெல்லாம் சந்தித்ததிலே மிகுந்த பெருமை கொண்டு இந்த அளவில் விடைபெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

விழுப்புரத்தில் நடைபெற்ற பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை

விழுப்புரத்தில் 8.4.2011 அன்று நடைபெற்ற பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

விழுப்புரத்தில் எத்தனையோ கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கின்றேன். எத்தனையோ நிகழ்ச்சிகளைப் பார்த்திருக் கின்றேன். எத்த னையோ மாநாடுகள் இந்த இடத்திலே நடந்து, அதிலே கலந்து கொண்டிருக்கின் றேன். ஆனால், இன்று அவற்றையெல்லாம் வெல்லக் கூடிய அளவிற்கு மாநாடா, பொதுக்கூட்டமா என்ற ஐயத்தை விளைவிக்கின்ற அளவிற்கு மக்கள் கடலே விழுப்புரத்திலே திரண்டிருப்பதைப் பார்த்து நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இது நாம் பெற இருக்கின்ற வெற்றிக்கு அடையாளம் என்பதை உணருகின்றேன். நேரம் அதிகம் இல்லாத காரணத்தால், நம்முடைய திருமா அவர்களும், டாக்டர் அய்யா அவர்களும், காதர் மொகிதீன் அவர்களும் சில நிமிடங்களில் தங்களுடைய உரையை முடித்துக் கொண்டிருக்கிறார்கள். நானும் இன்று காலையிலே சென்னை மாநகரத்திலே பல வீதிகளில் வேன் மூலமாக பிரச்சாரத்திலே ஈடுபட்டு, வருகிற வழியெல்லாம் வேனை நிறுத்தி ஆங்காங்கு குழுமியிருக்கின்ற ஆயிரக்கணக்கான வாக்காளப் பெருமக்களை, பொதுமக்களைச் சந்தித்து அவர்களிடத்திலே திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திய

தேசிய காங்கிரசும், பாட்டாளி மக்கள் கட்சியும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கும், விடுதலைச் சிறுத்தைகள் இயக்கமும், கொங்குநாடு முன்னேற்றக் கழகமும், மூவேந்தர் முன்னேற்றக் கழகமும், பெருந்தலைவர் மக்கள் கட்சியும் கலந்து உறவாடி உருவாக்கி யிருக்கின்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பில் பல கருத்துக்களை எடுத்து வைத்து விட்டு, விழுப்புரத்திற்கு வந்திருக்கின்றேன்.

விழுப்புரம் எனக்குப் புதிய ஊர் அல்ல. உங்களுக்குத் தெரியும். விழுப்புரத்திலே உள்ளவர்களுக்கெல்லாம் தெரியும். நான் விழுப்புரத்து மேடையிலே இன்றைய தினம் சற்று கண்கலங்க வீற்றிருக்கின்றேன். காரணம் இந்த மேடையிலே நான் பேசுகிற காலத்தில் வீற்றிருந்து என்னை உற்சாகப்படுத்திய அந்நாள் விவசாய அமைச்சர் ஏ.கோவிந்தசாமி இன்றைக்கு இல்லை. எதற்கும் கலங்காமல் இயக்கம் நடத்திய என்னுடைய அருமை நண்பர் விருத்தாசலம் செல்வராஜ் இன்று இல்லை. சீறும் புலியாய், பாயும் சிறுத்தையாய் பணியாற்றிய வீரர் எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி இன்று இல்லை. அறிஞர் அண்ணா அவர்களால் கறுப்பு இளவரசர் என்றும், என்னுடைய அருமைத் தோழர் என்றும் அழைக்கப் பட்ட கடலூர் வழக்கறிஞர் இளம்வழுதி இன்று இல்லை. எழுத்தாளர் தில்லை வில்லாளன் இன்று இல்லை. அரசியல் கருத்துக்களை ஆராய்ந்து யோசனை கூறுகின்ற என்னுடைய அருமை நண்பர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி இன்று இல்லை. அந்த முறை இல்லாவிட்டாலும் கூட என்னை "அத்தான் அத்தான் என்று அழைத்து அன்பு காட்டிய அருமை நண்பன் பொன் சொக்கலிங்கம் இல்லை.

இந்த விழுப்புரத்தை கட்டியாண்ட நகராட்சித் தலைவராக வீற்றிருந்த சண்முக உடையார் இன்று இல்லை. நான் திண்டிவனத்திற்கு அருகே விபத்துக்குள்ளாகி, பிழைக்கமாட்டேன் என்று மருத்துவர்களெல் லாம் கைவிட்டப் பிறகு தரையில் புரண்டு அழுது என்னை சென்னைக்கு அழைத்துச் சென்ற திண்டிவனம்

தங்கவேல் இன்று இல்லை. குறிஞ்சிப்பாடி சாம்பசிவம் இன்றைக்கு இல்லை. விழுப்புரம் கோபால் இல்லை. வீரராய், தீரராய் எந்த அடக்குமுறைக்கும் கலங்காத தோழராய் இந்தப் பகுதியிலே வாழ்ந்த பண்ருட்டி மணி – பண்ருட்டியினுடைய நகராட்சித் தலைவர் அவர் இன்றைக்கு இல்லை. அழகுவேல் இல்லை, வேங்கை மாறன் இல்லை. முத்துவேல் இல்லை. நெல்லிக்குப்பம் சபாபதி இல்லை. இவர்களெல்லாம் இந்த மேடையிலே இல்லை. ஆனால் அவர்களெல்லாம் ஊட்டிய உணர்வாக இன்றைக்கு நான் உங்கள் முன்னால் உட்கார்ந்து கொண்டிருக்கின்றேன். அவர்களுடைய நினைவோடு இங்கே அமர்ந்திருக்கின்றேன்.

எத்தனை எத்தனை தோழர்கள், எத்தனை எத்தனை இளைஞர்கள், எத்தனை எத்தனை முதியவர்கள் வளர்த்த இயக்கம் இந்த இயக்கம். என்னுடைய அருமை நண்பர் திருமாவளவன் இங்கே பேசும்போது எதிர்க் கட்சியினுடைய தலைவரைப் பற்றி அவருக்கு அது தெரியுமா? இது தெரியுமா? என்றெல்லாம் கேட்டார். சரித்திரம் தெரியுமா? என்று கேட்டார். திராவிட இயக்கத்தினுடைய மூலம் தெரியுமா? என்று கேட்டார். திராவிட இயக்கத்தை வளர்த்தவர்கள் யார் யார் தெரியுமா என்று கேட்டார்? இதற்கெல்லாம் ஒரே பதில் வந்திருக்கும் கேள்வி வடிவத்தில். திராவிட இயக்கம் என்றால் என்ன? என்று யாரிடத்திலே இவர் கேட்டாரோ, அவரிடத்திலே இருந்து பதில் வந்திருந்தால் நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை.

திராவிட இயக்கத்தை அழிக்க இன்றைக்கு கொடுவாள் எடுத்து புறப்பட்டிருக்கிற ஒரு அம்மையார், திராவிட இயக்கத்தை அழித்தே தீருவேன், பெரியார் உருவாக்கிய சுயமரியாதையை, அண்ணா உருவாக்கிய இலட்சிய தாகத்தை அந்தக் கொள்கைகளை யெல்லாம் அறவே புரட்டிப் போட்டு இந்த இயக்கத்தை அழிப்பதுதான் என் வேலை என்று புறப்பட்டிருக்கிற ஒரு அம்மையார் உங்களிடத்திலே

ஆதரவு கேட்கிறார் என்றால், எதற்கு? ஆட்சி செலுத்துவதற்காக அல்ல? இந்த ராஜ்யத்தை பிடிக்க வேண்டும் என்பதற்காக அல்ல? அவருடைய மூல நோக்கம் திராவிட இயக்கத்தை வீழ்த்த வேண்டும் என்பதுதான். அந்த நோக்கத்திற்கு ஆதரவாக பெரும் படை – பத்திரிகைப் படை அவரிடத்திலே இருக்கிறது. அந்தப் படையை நாம் ஒன்றும் செய்வதற்கில்லை.

காரணம் ஜனநாயகத்திலே பத்திரிகை சுதந்திரத்தை என்றைக்கும் நாம் கட்டுப்படுத்துவதில்லை. பத்திரிகை சுதந்திரத்தை நாம் வளர்த்தவர்களே தவிர, அதை சிதைத்தவர்கள் அல்ல. அந்தச் சுதந்திரம் இருக்கிறது என்ற ஒரே காரணத்தால் எதை வேண்டுமானாலும் எழுதுகிறார்கள், எந்த செய்தியை வேண்டுமானாலும் போடுகிறார்கள். இங்கே நம்முடைய தம்பி திருமா எடுத்துரைத்ததுபோல், என்னைப் பற்றி அவர்கள் எழுதியிருந்த செய்திகள், எழுதுகின்ற கதைகள், என்னைப் பற்றி செய்கின்ற பிரச்சாரங்கள் இவைகளெல்லாம் என்னை எதுவும் செய்துவிடவில்லை. நான் அதற்கு மாறாக வளர்ந்து கொண்டே இருக்கின்றேன்.

அவர்கள் வசை பாடட்டும், அண்ணா ஒரு முறை சொன்னார் சட்டமன்றத்தில். எதிர்க்கட்சிக்காரர்கள் அண்ணாவைத் தாக்கிப் பேசும்போது முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அண்ணா சொன்னார், "என்னை இவ்வளவு காலம் திட்டித் திட்டித்தான் இங்கே கொண்டு வந்து உட்கார வைத்திருக்கிறீர்கள். இன்னும் திட்டுகிறீர்களே என்னை எங்கே கொண்டு போய் உட்கார வைப்பதற்காக" என்று கேட்டார். அதையேதான் நானும் கேட்க விரும்புகின்றேன். இவர்கள் என்னைத் திட்டாவிட்டால், இவர்கள் என்னை வசைபாடாவிட்டால் நம்முடைய டாக்டர் வாயால் இவ்வளவு வாழ்த்து கிடைக்குமா? இவர்கள் என்னைக் கேவலமாகப் பேசாவிட்டால், நம்முடைய திருமாவளவனுடைய வாயினால் இவ்வளவு பாராட்டு எனக்கு கிடைத்திருக்குமா, நம்முடைய காதர்மொகிதீன் தான் இவ்வளவு போற்றி புகழ்ந்திருப்பாரா?

அம்மையார் அவர்களே என்னை நன்றாகத் திட்டுங்கள், வசைமாரி பொழியுங்கள், நீங்கள் திட்டத் திட்ட, நீங்கள் வசைமாரி பொழிய பொழிய எனக்கு அன்பால், பாசத்தால், பூரிப்பால் உறவால் உண்மையான இதயத்தால் புகழ்பாட, புகழ்மாரி பொழிய டாக்டர் அவர்களும் திருமாவளவன் போன்றவர்களும் இருக்கின்றார்கள். எனவேதான் அவைகளையெல்லாம் நான் பொருள்படுத்துவதில்லை. இந்த அன்பு – இந்த உறவு இருந்தால் போதும் – இந்த உறவு இன்று நேற்றல்ல புல் முளைத்த காலம் முதல் அது தருவாக வளர்ந்து உலகிற்கு நிழல் தருகின்ற காலம் என்ற அளவிற்கு மாபெரும் வளர்ச்சி, இவைகளெல்லாம் ஏற்பட்டிருக்கிறதே – அந்த வளர்ச்சிக்கான வகையில் என்னை பாராட்டியவர்கள், என்னைத் திட்டியவர்கள், என்னை வசை பொழிந்தவர்கள் யாராக இருந்தாலும் இன்றில்லாவிட்டால் நாளை – எனக்கு பிறகு என்னை வாழ்த்தத்தான் போகிறார்கள் (பலத்த கை தட்டல்)

என்னை இழிவுபடுத்தியவர்களெல்லாம் ஒரு காலத்திலே என்னை கேவலப்படுத்தியவர்களெல்லாம் அதற்காக கண்களிலே கண்ணீர் துளிகளை ஏந்திக் கொண்டு வந்து வருந்திய காலத்தை நான் பார்த்திருக்கின்றேன். நான் அதற்காக கவலைப்பட வில்லை. வருந்த வில்லை. அதனால்தான் வாழ்க வசவாளர்கள் என்று அண்ணா சொன்ன அந்த வைர வாக்கியத்தை திரும்பத் திரும்பச் சொல்ல விரும்புகின்றேன். நமக்கு அது பெரிதல்ல, எனக்கு இவர்கள் வாழ்த்தினாலும் வாழ்த்தா விட்டாலும், இவர்கள் நம்மை தாக்கினாலும் தாக்கா விட்டாலும் என்னுடைய உற்றார் உறவு இதோ பக்கத் திலே அமர்ந்திருக்கிறது. என்னுடைய உற்றார் உறவினர்கள் என் எதிரே அமர்ந்திருக்கின்றீர்கள். உங்களை விடவா, உங்களைவிட்டா நான் அவர்களுடைய உறவை நாடப்போகிறேன், இல்லை.

இதே விழுப்புரத்தில் 1945ஆம் ஆண்டுக்கு முன்பு பெரியார் தலைமையில், அண்ணா தலைமையில் “சாந்தா அல்லது பழனியப்பன்

என்ற சுயமரியாதை பிரச்சார நாடகங்களை நடத்தியபோது நாடகத்திற்கு அதிகம் பேர் வருவார்கள் என்று எதிர்பார்த்தாலும் ஆயிரம் பேர் வருவார்கள் என்று எதிர்பார்த்தாலும் 100பேர் தான் வந்தார்கள், 200 பேர் தான் வந்தார்கள். அப்பொழுது காலை நேரத்திலே நாங்கள் நாடகம் நடிக்கிற நேரம் போக ஒரு பத்து பதினைந்து நடிகர்கள் என் தலைமையில் இங்குள்ள ஒரு ஓடையிலே குளிப்பதற்காகச் செல்வோம். குளித்துவிட்டு வரும்போது நாங்கள் கட்டியிருந்த போட்டிருந்த ஆடைகளை அல்லது வேட்டிகளை ஒருவர் கையிலே ஒருவர் பிடித்துக்கொண்டு, வெய்யில் சூட்டிலே அவைகளைக் காயவைத்துக் கொண்டே வருவோம்.

இதையெல்லாம் பார்த்த விழுப்புரம்வாசிகள் சிலர் எங்களைப் பற்றி என்ன சொன்னார்கள் தெரியுமா? பெருமையாகச் சொன்னார்கள். நான் பெருமையாகத் தான் அதைக் கருதுகிறேன், கடைத் தெருவுக்குப் போனால் பேசிக்கொண்டார்கள், நாகப் பட்டினத்திலிருந்து "நாற்பது – ஐம்பது பறப்பசங்க வந்திருக்காங்க, அவுங்க எல்லாம் எவ்வளவு அருமையா நாடகம் நடத்துராங்க தெரியுமா? என்று சொன்னார்கள். அந்த வார்த்தை என் நெஞ்சிலே நெருப்பை கொளுத்தியதாக இருந்தாலும்கூட அதைப் பெருமையாக எடுத்துக் கொண்டு – அந்த வார்த்தையை கேட்கின்ற துணிவையும் – அந்த வார்த்தையை கேட்கின்ற பொறுமையையும் எனக்கு உருவாக்கிய தந்தை பெரியாரை, பேரறிஞர் அண்ணாவை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசனை எல்லாம் அப்போது நான் எண்ணிக்கொண்டேன். அப்படிப்பட்ட வார்த்தைக்குப் பதிலாக நாலைந்து பிரமாணப் பையன்கள் வந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருந்தால் நான் வருத்தப்பட்டிருப்பேன். நான்கைந்து பிள்ளைமார் பசங்க வந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருந்தால் நான் வருத்தப்பட்டிருப்பேன்.

என்னைப் பார்த்து இழிவாகச் சொல்ல வேண்டும் என்பதற்காக சொன்னார்களே, அந்த இழிவான வார்த்தைகளை நான் இன்றைக்கும் ஏற்றுக்கொள்பவன், அன்றைக்கும் ஏற்றுக்கொண்டேன். அதை ஏற்றுக் கொண்ட காரணத்தினால்தான் இன்றைக்கு உங்களால் முதலமைச்சர் என்று அழைக்கப்படுகிறேன். ஒரு கட்சியினுடைய தலைவர் என்று அழைக்கப்படுகிறேன் – ஒரு இயக்கத்தினுடைய தளபதி என்று அழைக்கப்படுகிறேன் – பெரியாரின் மாணவன் – அண்ணாவின் தம்பி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றேன்.

நான் நம்முடைய டாக்டருக்கு, நம்முடைய திருமாவளவனுக்கு, காதர் மொய்தீன் அவர்களுக்கெல்லாம் உறவினராக இருப்பதற்கு என்ன காரணம்? நாங்கள் மூன்று பேரும் யார்? நானும் காதர் மொய்தீன் அவர்களும் மதத்தால் வேறுபட்டவர்கள் – நானும் திருமாவளவன் அவர்களும் வகுப்பால் வேறுபட்டவர்கள் – நானும் டாக்டர் ஐயா அவர்களும் சமுதாயத்தால் வேறுபட்டவர்கள் – இப்படி வேறுபாடுகளை எல்லாம் ஒருமைப்பாடாக ஆக்கிய பெருமை யாருக்கு? தந்தை பெரியாருக்கு – அவர் உருவாக்கிய சுயமரியாதை இயக்கத்திற்கு – அந்த இயக்கத்தின் சார்பிலே இந்த ஊரிலே நாடகம் நடத்தி பகுத்தறிவு பிரச்சாரத்தை நடத்தி – சாதாரண நாடகமாக நடத்தப்பட்ட அந்தப் பிரச்சாரத்தை நடத்தியபோது 100 பேர், 200 பேரை பார்த்த எனக்கு இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான மக்களை இந்தத் திடலிலே பார்க்கும்போது நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோமா இல்லையா?

சுயமரியாதை இயக்கம் வெற்றி பெற்றிருக்கிறதா இல்லையா? அந்த வெற்றிக்கு அடையாளம்தான் இங்கே வீற்றிருக்கின்ற உங்களுடைய கையொலி. அந்த வெற்றிக்கு அடையாளம்தான் உங்களுடைய வாழ்த்து முழக்கம். அந்த வெற்றிக்கு அடையாளம்தான் நாங்கள் வரும்போது எங்களை கண்குளிரப் பார்த்து, எங்கள் காது குளிர நீங்கள் அளிக்கின்ற வாழ்த்துக்குரல்கள்.

எனவே இப்படிப்பட்ட ஒரு அருமையான – மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்வது நமக்கு காரியம் பெரியது, வீரியம் பெரிதல்ல. என்ன காரியம் பெரியது? ஜனநாயகக் கடமை ஆற்றவேண்டிய காரியம், அந்தக் காரியத்திற்கு இந்த பகுதியிலே நாம் யார் யாரை இப்பொழுது நியமிக்கிறோம்.

விழுப்புரத்திலே தம்பி பொன்முடியையும் – விக்கிர வாண்டியிலே இராதாமணியையும் – சங்கராபுரத்திலே உதயசூரியனையும் – வானூர் தொகுதியிலே புஷ்பராஜையும் – திருக்கோவிலூர் தொகுதியிலே தங்கத்தையும் – ரிஷிவந்தியம் தொகுதியிலே என்னுடைய பழைய நண்பர் சிவராஜ் அவர்களையும் – காங்கிரஸ் கட்சியினுடைய தூண் அவர் இந்த வட்டாரத்திலே. இன்றைக்கு ஓமந்தூரார் வளாகம் இருக்கிறது என்றால் நான் ஒரு முறை இங்கே வந்தபோது, நானும் பொன்முடியும் அவருடைய வீட்டிற்கு சென்றிருந்தோம். இந்த வட்டாரத்திற்கு எப்போது வந்தாலும் எனக்கு வேண்டுகோளை வைப்பவர் அவர். அவர் மட்டுமல்ல எல்லோருமே! நம்முடைய டாக்டர் உட்பட, ஏதாவது கோரிக்கை வைப்பார்கள். அன்றைக்கு அவர் வைத்த கோரிக்கை நீங்கள் ஓமாந்தூராருடைய சிலையை – மண்டபத்தை எங்கள் ஊரிலே பிறந்தவர் என்ற காரணத்தால் – இங்கு வந்து அதை அமைத்து அதை திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். உடனடியாக அதை ஒத்துக்கொண்டு அதற்கான ஏற்பாடுகளை அன்றைக்கு நாங்கள் செய்தோம். அன்றைக்கு முதலமைச்சராக இருந்த காரணத்தால் உடனடியாக அது ஏற்றுக் கொள்ளப்பட்டு அத்தகைய ஏற்பாடு நடைபெற்றது. அதை அவர் மறந்திருக்க மாட்டார் என்று கருதுகின்றேன். எனவே ரிஷிவந்தியம் தொகுதியில் காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே கை சின்னத்திலே போட்டியிடுகின்ற சிவராஜ் அவர்களுக்கு அந்தக் கோரிக்கையை நான் நிறைவேற்றியதற்கு ஞாபகமாக வாக்களிக்க வேண்டுகிறேன். இப்பொழுது விடுதலைச் சிறுத்தைகள் போட்டியிடுகின்ற உளுந்தூர்

பேட்டையிலும் , கள்ளக்குறிச்சியிலும் மெழுகுவர்த்தி சின்னத்திலே முறையே முகமது யூசுப், பாவரசு ஆகியோருக்கு உங்களுடைய வாக்குகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மணி பத்து ஆகிவிட்டது. தேர்தல் ஆணையம் மிக மிக கடுமையாக இருக்கிறது. முதலமைச்சராகிய உனக்குக் கூடவா? என்று கேட்பீர்கள், என் பாட்டனுக்கும் அதுதான். நான் முதலமைச்சராக இருந்தாலும் சட்ட திட்டங்களுக்கு விதிமுறைகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டியவன், ஆனால் தேர்தல் ஆணையம் விதிமுறைகளுக்கு உண்மையிலே உட்பட்டு நடக்கிறதா? என்ற கேள்விக்கு நான் பதவியிலே இருக்கின்ற இந்த நேரத்திலே பதிலளிக்க விரும்பவில்லை. இந்த பதவி நிலைப்பதற்கு நீங்கள் வழிவிட்டால் பதவியை நீங்கள் நிலைக்க வைத்தால் அதற்கு பிறகு கேட்க வேண்டியவைகளை யெல்லாம் கேட்க வேண்டிய இடத்திலே கேட்பேன் என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

புதுவையில் லட்சக்கணக்கில் திரண்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் உரை

புதுவையில் 9.4.2011 அன்று நடைபெற்ற பிரம்மாண்டமான தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

இந்தக் கூட்டத்திலே உங்களுக்கு வேண்டுகோள் விடுத்துவிட்டு, அடுத்து நான் சிதம்பரம் வரையில் கார் பயணம் செய்து, வழியெங்கிலும் சந்திக்கின்ற வாக்காளப் பெருமக்களையும், தோழமைக் கட்சிகளின் தலைவர்களையும் பார்த்துவிட்டு, நாளைக்கு – எனக்கு என்று ஒரு தொகுதி இருப்பது உங்களுக்குத் தெரியும் – திருவாரூர் தொகுதி, அந்த தொகுதியிலே பணியாற்ற செல்ல வேண்டும்.

இங்கே பெருந்திரளாகக் கூடியிருக்கின்ற உங்களை யெல்லாம் காணும்போது உங்களிடமிருந்து விரைவில் பிரிந்து செல்ல மனம் இல்லைதான். இருந்தாலும் தேர்தல் நேரத்திலே தெரிவிக்க வேண்டிய கருத்துக் களை – தெரிவிக்க வேண்டிய வேலை இருப்பதாலும் அவசியம் இருப்பதாலும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்தத் தேர்தலில் தமிழ்நாடு – புதுவை இந்த மாநிலங்களில் தேர்தல் கமிஷன் என ஒன்று எங்களையெல்லாம் கண்காணித்து வருகிறது. தேர்தல் கமிஷனுடைய கண்காணிப்பு தேவையற்றது என்றோ, கூடாது என்றோ, அதை எதிர்த்தோ எந்த ஒரு வார்த்தையும் சொல்ல நான் விரும்பவில்லை.

ஆனால், நான் நேற்று விழுப்புரத்திலே கூட்டத்தை முடித்து விட்டு, அங்கே தங்கியிருந்து இங்கே வந்திருக்க வேண்டும். கூட்டத்தை

முடித்து விட்டேன். ஆனால் வழக்கம்போல் தங்குகின்ற அரசு விருந்தினர் மாளிகையிலோ அல்லது அரசுக்குச் சொந்தமான ஒரு மண்டபத்திலோ அல்லது இடத்திலோ நான் தங்கவில்லை. காரணம் அதற்கு தேர்தல் கமிஷனுடைய அனுமதி வேண்டும். நான் முதலமைச்சர். ஆனால், நான் தங்குவதற்கு நான் ஆளுகின்ற என்னுடைய மாநிலத்தில் அரசுக்குச் சொந்தமான ஒரு இடத்தில் தங்குவதற்கு அனுமதி இல்லை. இதை நான் நம்முடைய மத்திய அமைச்சர் அருகிலே இருக்கிற காரணத்தால், அவருடைய காதுக்கும் இது போகட்டும் என்பதற்காகச் சொல்கின்றேன். பிறகு எங்குதான் நீ தங்கினாய் என்று கேட்டால், நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை – திராவிட இயக்கத்தை ஆரம்பித்து எத்தனை ஆண்டு காலம் ஆகிறது என்று உங்களுக்குத் தெரியும். இந்த புதுச்சேரியிலே அடி உதைபட்டு ரத்தம் சிந்தி கட்சி வளர்த்தவன் நான் (பலத்த கைதட்டல்). எனவே எங்கே தங்கினாய் என்றெல்லாம் நீங்கள் கேட்கத் தேவை யில்லை. இதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் இப்படியெல்லாம் மாவட்டந்தோறும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்டிடங்களைக் கட்டி, அங்கே எங்களைப் போன்ற தலைவர்கள் சென்றால் தங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன.

விழுப்புரத்திலே கலைஞர் மாளிகை என்று ஒரு இடம் உருவாக்கப்பட்டிருந்ததிலே நாங்கள் தங்கியிருந்து விட்டு மாலையிலே புறப்பட்டு இங்கே வந்தோம். சரி வழியிலாவது ஒரு இடத்தில் மாலைச் சிற்றுண்டி சாப்பிடுவதற்கு ஒரு இடம் உண்டா என்றால் இல்லை. வழியில் நாங்கள் வந்த வேனை நிறுத்திக் கொண்டு சாலையிலே போனவர்களெல்லாம் எங்களைச் சுற்றி – வேனைச் சுற்றி நாங்கள் சாப்பிடுகின்ற காட்சியை அவர்கள் பார்க்கின்ற வகையில் சாப்பிட்டு முடித்து விட்டு பிறகு இங்கே வந்து சேர்ந்திருக்கிறோம்.

இதெல்லாம் தேர்தல் நேரத்தில் தேர்தல் ஆணையத்தினுடைய கட்டுப்பாட்டின்படி நாங்கள் நடக்க வேண்டும் என்ற காரணத்தால்

இப்படியாகி இங்கே வந்து சேர்ந்திருக்கிறோம். தேர்தல் ஆணையத்தை குறை கூறுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. தங்களுக்கு உள்ள அதிகாரத்தை யார் யார் எப்படி எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

தேர்தல் ஆணையத்தினுடைய பெரிய அதிகாரி களை தமிழ்நாட்டிலே இருந்த முதலமைச்சர்கள் – கடந்த கால முதலமைச்சர்கள் என்ன பாடுபடுத்தினார்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களுக்கும் தெரியும். சேஷன் என்ற ஒரு தேர்தல் ஆணையர் இருந்தார். தேர்தல் கமிஷன் அவருடைய வல்லமையோடு, அவருடைய ஆற்றலோடு, அறிவார்ந்த திறமையோடு நடந்த அந்தக் காலத்தில் இந்தியா முழுவதும் உள்ள மந்திரிகள், மக்கள் பிரதிநிதிகள் சேஷன் அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சேஷன் தமிழ்நாட்டிலே தேர்தல் நேரத்தில் – நாம் ஆட்சியில் இருந்த போது அல்ல – அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் தமிழ்நாட்டிலே சற்று கடுமையாக, நியாயமாக நடந்து கொள்ள முற்பட்டபோது அன்றைக்கிருந்த அரசாங்கத்தால் அவர் என்ன பாடுபட்டார் என்பது எனக்குத் தெரியும். நம்முடைய மத்திய அமைச்சர் நாராயணசாமி அவர் களுக்கும் நன்றாகத் தெரியும். மறந்திருப்பாரேயானால் ஞாபகப்படுத்துகிறேன்.

தேர்தல் ஆணையர் சேஷனை விமான நிலையத்திலிருந்தே வெளியே வர முடியாமல் அவர் எங்கும் போக முடியாமல் விமான நிலையத்திலேயே ஒளிந்திருந்து, பிறகு அங்கிருந்து அவர் காரிலே ஏறிக் கொண்டு வேக வேகமாக தாஜ் கோரமண்டல் ஓட்டலிலே போய் தங்கி யிருந்த நேரத்தில் துரத்திக் கொண்டே வந்த ஒரு கும்பல் அந்த ஓட்டலைச் சுற்றி வளைத்துக் கொண்டு ஓட்டலிலே நிறுத்தப்பட்டிருந்த கார்களையெல்லாம் அடித்து நொறுக்கி, அதற்குப் பிறகு போனால் போகிறது என்று, போலீசார் அவரைக் காப்பாற்றி வெளியே அனுப்பினார்கள். இது மறந்து போன செய்தியாக இருக்கலாம். ஆனால்

நடந்த செய்தி என்பதை நானறிவேன். நண்பர் நாராயணசாமி அவர்கள் அறிவார்கள். நாடறியும்.

இதைச் சொல்வதற்குக் காரணம், தேர்தல் கமிஷன் என்றால் அப்படித்தான் அடிக்க வேண்டும். உதைக்க வேண்டும் என்று யாரும் சொல்லிக் கொள்வதற்காக அல்ல. தேர்தல் கமிஷன் இடத்திலே எப்படி நடந்து கொள்ள வேண்டும், அவர்கள் என்னதான் தவறு இழைத் தாலும் கூட, அவர்களை எப்படி நடத்த வேண்டும், எந்த அளவுக்கு அவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்று உணர்ந்துள்ள அரசு இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிறது. புதுவையிலே இருக்கிறது, எங்களுக்கெல்லாம் தலைமையிடமாக டெல்லியில் இருக்கிறது. நான் மறுக்கவில்லை. நாங்கள் தங்குவதற்குக் கூட ஒரு முதலமைச்சருக்கு அல்லது ஒரு அமைச்சருக்கு சர்க்காருடைய இடத்தை தரக்கூடாது என்கின்ற அளவிற்கு, அதற்கு சில கண்டிஷன்களை யெல்லாம் போட்டு – தங்கலாம், ஆனால் அவரைப் பார்க்க யாரும் வரக்கூடாது என்று கூறுகிறார்கள்.

இதில் இன்னொரு வேடிக்கை உங்களுக்குத் தெரியும். இப்போது நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட் விளையாட்டில் நம்முடைய இந்தியா மகத்தான வெற்றியைப் பெற்றது (பலத்த கைதட்டல்). நான் தொடர்ந்து அந்தப் பந்தயத்தை பார்த்துக் கொண்டிருந்தவன். எப்பொழுதும் கிரிக்கெட் விளையாட்டிலே அவ்வளவு ஆர்வமும், பற்றும் உண்டு. ஆகவே நம்முடைய நாட்டு வீரர்கள் ஜெயிக்க வேண்டும் என்பதிலே மிகுந்த ஆர்வம் எனக்கு உண்டு என்பது நான் சொல்லித் தெரியவேண்டி யதில்லை. ஆனாலும் கடைசியாக இறுதிப் போட்டியில் ஆடியவர்கள் இந்தியா – இலங்கை. இதில் இந்தியா ஜெயிக்க வேண்டும் என்பதிலே, இலங்கை தோற்க வேண்டும் என்பதிலே நான் மிகுந்த ஆர்வம் உடை யவனாக இருந்திருப்பேன் என்பதை என்னை உணர்ந்தவர்கள் நிச்சயமாக

அறிவார்கள். நான் எண்ணியபடியே முடிவு ஏற்பட்டது. இந்தியா வென்றது. இந்தியாவினுடைய வீரர்களுக்கு – அந்தக் குழுவிற்கு நம்முடைய அரசின் சார்பில் – இந்திய அரசின் சார்பில் மகிழ்ச்சி தெரிவித்து வாழ்த்து தெரிவித்து பரிசும் வழங்கப்பட்டது. தங்கக் கோப்பையும் பெற்றார்கள். அதற்குப் பிறகு ஒவ்வொரு மாநிலமும் தங்களுடைய மகிழ்ச்சியை தெரிவிக்க, அவர்களால் இயன்ற தொகையை – இயன்ற பரிசுகளை வெளியிட்டு அவர்களையெல்லாம் வாழ்த்தி னார்கள். நாம் சும்மா இருக்க முடியுமா? நானும் நமது வைத்தியலிங்கமும் கூட இப்பொழுது முதலமைச்சர் இல்லை. நானும் அவரும் முதலமைச்சர் இல்லை. முதலமைச்சர் என்கின்ற பதவியில் தேர்தல் கமிஷனிற்கு கீழே வேலை பார்க்கின்ற இரண்டு பேர். அவ்வளவுதான். ஏனென்றால் எனது நிலைமைதான் அவருக்கு. அவரது நிலைமைதான் எனக்கு. எனக்கு அதிலே ஒரு சந்தோஷம். நமக்கு மாத்திரமல்ல அந்த நிலை. புதுவை மாநில முதலமைச்சருக்கும் அதுதான் நிலை என்பதில் எனக்கு ஒரு சந்தோஷம் (சிரிப்பு).

நான் இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு ஏதாவது பரிசளிக்க வேண்டுமே என்று நம்முடைய மாநிலத்தின் சார்பாக – தமிழ்நாட்டின் சார்பாக அவர்களுக்கு – தமிழ்நாட்டில் இருந்து போய் விளையாடிய அஸ்வின் என்ற வீரருக்கு ஒரு கோடி ரூபாய் தமிழக அரசின் சார்பிலே பரிசு அறிவித்து, ஒட்டுமொத்த அந்தக் குழுவுக்கு மூன்று கோடி ரூபாய் சேர்த்து மொத்தம் நான்கு கோடி ரூபாய் அந்தப் போட்டியிலே வென்றவர் களுக்கு பரிசாக அறிவித்து, அப்படி அறிவித்ததை அவர்களுக்கு நான் வழங்க வேண்டும் என்பதற்காக, அந்தக் குழுவை தொடர்பு கொண்டு – அந்தக் குழுவிற்கு தந்தி கொடுத்து, அதிலே தலைமை வகித்த ஆட்டக்காரரான தோனி அவர்களுக்கும் தந்தி கொடுத்து, அவருக்கும் வாழ்த்து தெரிவித்து, நம்முடைய வாலிபர் அஸ்வின் அதிலே ஆடி வெற்றி பெற்றிருக்கிறார், அவருக்கும் வாழ்த்து தெரிவித்தேன்.

இப்போது உள்ள முறைப்படி தேர்தல் அறிவிப்புக்குப் பிறகு விதிக்கப்பட்ட முறைப்படி அதை நான் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் வழியாக அந்த தேர்தல் ஆணையத்திற்கு அறிவிக்கச் சொன்னால், அவர்கள் அதை ஒத்துக் கொண்டு என்ன நிபந்தனை போட்டார்கள் என்றால், சரி கொடுக்கலாம், ஆனால் அதை அந்த வீரர்களுக்கு முதலமைச்சர் நேராக நிகழ்ச்சியெல்லாம் வைத்து, புகைப்படம் எடுத்து வழங்கக் கூடாது என்று நிபந்தனை போட்டார்கள்.

நான் வழங்கலாமாம். நான் கொடுக்கலாமாம். ஆனால் அதை புகைப்படமாக எடுக்கக் கூடாது. அதை காட்சியாக்கக் கூடாது என்று சொன்னார்கள். நான் ஒத்தி வைத்திருக்கிறேன். கொடுப்பதை ஒத்தி வைக்கவில்லை. நிகழ்ச்சி நடப்பதா இல்லையா என்பதை 13ஆம் தேதிக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். அடுத்த மாதம் 13ஆம் தேதிக்குப் பிறகு ஓட்டுக்கள் எல்லாம் எண்ணிய பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்தி வைத்திருக்கிறேன் என்பதை உங்களுக்கு நான் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

இது கிரிக்கெட் வீரர்களுக்கு பரிசளிக்கின்ற விஷயத்தைப் பொறுத்தது. ஒரு முதலமைச்சராக இருக்கிற எனக்கு தமிழ்நாட்டு மக்களால் – ஆறு கோடி மக்களிலே பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டு தமிழகத்தினுடைய ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பவனுக்கு இதுதான் நிலை. அவர்களைக் கேட்டால் பிரதமருக்குக் கூட இதுதான் நிலை என்று கூட சொல்வார்கள். நான் அதற்காகத்தான் ஆரம் பத்திலே சொன்னேன், தேர்தல் கமிஷனுக்கு என்று இருக்கின்ற விதிமுறைகளை நான் மீற விரும்பவும் இல்லை. குற்றம் சாட்டுகிற அளவிற்கு என்னுடைய தரத்தை தாழ்த்திக் கொள்ளவும் நான் விரும்பவில்லை.

இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், அடுத்தடுத்து வருகின்ற தேர்தல்களிலாவது – இந்தத் தேர்தலில் இருந்தாலும்

இல்லாவிட்டாலும், அடுத் தடுத்து வருகின்ற தேர்தலிலாவது தேர்தல் கமிஷனை நியமிக்கும்போது அதனுடைய அதிகாரங்கள் என்ன? எந்தளவுக்கு அது அதிகாரங்கள் பெற்றதாக இருக்க வேண்டும் என்பதை மத்திய அரசு சிந்தித்து செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். மத்திய அரசு சிந்தித்து எங்களுக்கு வேண்டியவர்களையே தேர்தல் கமிஷன் மெம்பர்களாக, தலைவர் களாக போட வேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன். நியாயம் தவறாதவர்களை, நடுநிலையாளர்களை, உத்தமர்களை நீங்கள் அங்கே நியமிப்பதிலே எந்தவிதமான ஆட்சே பணையும் கிடையாது. யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். அதுமாதிரியான நபர்களை நீங்கள் நியமித்து விட்டால், பிறகு இதைப் பற்றி யெல்லாம் கவலைப்படத் தேவையில்லை. இது எல்லாம் சாதாரண விஷயங்கள். ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற ஒரு முதலமைச்சர் ஒரு வெற்றியைக் கொண்டாட இந்தியத் திருநாட்டினுடைய வெற்றியைக் கொண்டாட உரிமை கிடையாது என்று சொல்வது வியப்பாக இருக்கிறது. இதையெல்லாம் இந்தத் தேர்தல் கமிஷனுக்கு அதிகபட்சமாக என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேனேயல்லாமல் வேறல்ல.

இப்போது இந்தியாவிலே இரண்டு நாட்களாக ஒரு பரபரப்பான செய்தி. அது தீர்க்கப்பட்டு விட்டது. நம்முடைய அன்னா ஹசாரே என்ற ஒரு பெரியவர் சாகும்வரை உண்ணாவிரதம் என்று சங்கல்பம் செய்து கொண்டு உண்ணாவிரதம் இருந்து – இதயம் படைத்த நம்முடைய இந்திய ஆட்சியாளர்கள் அவரை சாக விட்டுவிடக் கூடாது என்பதற்காக, அவருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதாக உறுதியளித்திருக்கிறார்கள். என்ன கோரிக்கை அது? "லோக்பால்'' மசோதாவை உடனடியாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும். ஏற்கெனவே அப்படியொரு மசோதா வரப்போகிறது என்று அறிவிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்படாமலே இருக்கிறது. அது

ஊழலை, லஞ்ச லாவண்யத்தை கண்டுபிடித்து, அப்படி குற்றம் செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க, தண்டிக்க அதிகாரம் படைத்த ஒரு குழு – லோக்பால். அதை உடனடியாக நிறைவேற்றுகி றோம், அதற்குள்ள வரைமுறைகளையெல்லாம் வகுக்கிறோம் என்ற உறுதியை அரசு அளிக்க வேண்டும் என்று கேட்டு, உண்ணா நோன்பிலே உட்கார்ந்து இரண்டு மூன்று நாட்களாக, நாமெல்லாம் அவர் என்ன ஆவாரோ என்கின்ற கவலையிலே ஆழ்ந்து, இன்றைக்கு அவர் உண்ணாநோன்பை கைவிட்டிருக்கிறார்.

காரணம், இளகிய இதயம் படைத்த நம்முடைய இந்திய அரசினுடைய – இந்திய அரசை ஆண்டு கொண் டிருக்கக்கூடிய காங்கிரசினுடைய தலைவி சோனியா காந்தி அம்மையார் அவர்களுடைய நல்லெண்ணத்தின் அடிப்படையில் – நம்முடைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும் மற்றும் அமைச்சர்களும், நம்முடைய நாராயணசாமி போன்ற வர்களெல்லாம் இடம்பெற் றிருக்கிற அமைச்சரவை யிலே உள்ளவர்களும் கசிந்துருகி அவருடைய உயிரைக் காப்பாற்றுவோம், ஏனென்றால் ஹசாரே நல்லதைத் தான் சொல்கிறார், தவறான வழியை ஒன்றும் அவர் சொல்லவில்லை. அதை நிறைவேற்றுவதிலே எந்தவிதமான மறுப்பும் இல்லை என்று இன்றைக்கு அதை அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பெரியவர் உயிர் பிழைத்து இருக்கிறார். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, அவருடைய உயிரைக் காப்பாற்றிய இந்தியப் பேரரசுக்கு என்னுடைய பாராட்டுக்களை இந்த மாபெரும் பொதுக் கூட்டத்தின் மூலமாக தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அரசு – மாநில அரசு – புதுவை மாநில அரசு இதற்கு அக்காள் அரசோ, தங்கை அரசோ – அண்ணன் அரசோ, தம்பி அரசோ தமிழகத்திலே உள்ள அரசு – எனக்குத் தெரியாது. அதுவும் மாநில அரசுதான். மாநிலங்கள் எல்லாம் இன்னும் சில உரிமைகளையும்,

அதிகாரங்களையும் பெற்று மக்களுக்கு நேரடியாக தொண்டு புரிகின்ற நிலையைப் பெற வேண்டும் என்பது என் தலைமையிலே இருக்கின்ற தி.மு.கழகத்தினுடைய கொள்கை. மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்பது எங்களுடைய முழக்கங்களிலே ஒன்று. அந்த முழக்கத்தை வென்றெடுத்து தர வேண்டும் என்று நாங்கள் பல்லாண்டு காலமாக மத்திய பேரரசை கேட்டுக் கொண்டிருக்கின்றோம். அதைப்போலவே, தாய் மொழியாம் தமிழ் புதுச்சேரியிலே இருக்கின்ற நீங்கள் பேசுவதும் அதே தமிழ்தான். தமிழகத்திலே இருக்கின்ற நாங்கள் பேசுவதும் அதே தமிழ்தான். இந்தத் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து வேண்டும் என்று நான் மட்டுமல்ல, சூரிய நாராயண சாஸ்திரியார் – தன்னுடைய பெயரை பரிதிமாற் கலைஞர் என்று தூய தமிழிலே மாற்றிக் கொண்ட அந்தப் பெரியவர் நூறாண்டு காலத் திற்கு முன்பே இந்தக் கருத்தை வெளியிட்டு தொடர்ந்து போராடியும் கூட – வெள்ளைக் காரன் இந்தியாவிற்கு சுதந்திரத்தைக் கூட கொடுத்தான். ஆனால் செம்மொழி அந்தஸ்தை நமக்குக் கொடுக்க யாரும் தயாராக இல்லை என்ற நிலை இருந்தும் கூட, அதை செய்து முடித்து – நமக்கு அந்தத் தொகுதியை – தமிழ் இனிமேல் செம்மொழிதான் என்கின்ற அந்த அந்தஸ்தை வழங்கிய அன்பிற்குரியவர், நன்றிக்குரியவர், தியாகச்சுடர் திருமதி சோனியா காந்தி அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதற்காக நான் போராடினேன், வாதாடினேன். அவரைக் காணுகின்ற நேரத்தில் எல்லாம் அவர் சென்னைக்கு வந்தாலும்சரி, நான் டெல்லிக்குப் போனாலும் சரி, அவரைச் சந்திக்கும்போதெல்லாம் செம்மொழியைப் பற்றியே பேசுவேன். அவர்களும் சிரித்துக் கொண்டே உடனடியாக கவனிக்கிறேன் என்று சொல்வார்கள். கவனித்து முடித்து செம்மொழி அந்தஸ்து பெறப்பட்டு, கோவையிலே செம்மொழி மாநாடும் நடத்திய பிறகு இப்போது பார்த்தால் அந்த செம்மொழியை மேலும் வளர்க்க உலகத்திலே செம்மொழி தகுதி பெற்ற மொழிகள் ஆறு இருக்கின்றன. அதனுடன் நம்முடைய தமிழ் மொழியையும் இணைக்க

நடைபெறுகிற முயற்சியில் – உங்களுக்குத் தெரியும் – தமிழகத்திலே ஏற்கனவே தலைமைச் செயலகம் இருந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டை – அந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே செம்மொழிக்கான மையத்தையும் திறந்து, அதிலே அதன் வளர்ச்சிக்கான வேலைகளை நாங்கள் ஆற்றிக் கொண்டிருக்கின்றோம். அப்படிப்பட்ட செம்மொழி திட்டத்தை உருவாக்கித் தந்த திருமதி சோனியா காந்தி அவர்களுக்கு நான் நன்றிக் கடிதம் எழுதியபோது, அவர் திரும்ப எழுதினார். எனக்கு நீ நன்றி தெரிவித்திருக்கிறாய். மகிழ்ச்சி. ஆனால், தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்றுத் தந்தது யார்? அதற்காக வாதாடியவர் யார்? அதற்காக என்னிடத்திலே தொடர்ந்து வலியுறுத்தியவர்கள் யார்? என்ற அந்த உண்மை – அந்த சரித்திரம் யாராலும் மறுக்க முடியாத அளவிற்கு – உன் பெயரின் அடிப்படை யிலேதான் அமைந்திருக்கிறது என்று எனக்கு அம்மையார் அவர்கள் எழுதிய கடிதத்தை நான் இன்னமும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்.

இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் மொழி உரிமைக்கு, மொழியின் தகுதிக்கு இன்னும் சொல்லப் போனால் கடந்த 5ஆம் தேதி அன்று சென்னைத் தீவுத்திடலிலே சோனியா காந்தி அவர்கள் வந்து பேசியபோது, அந்த அடிப்படையிலே ஒரு கோரிக்கை வைத்தேன். நீங்கள் தமிழை செம்மொழியாக ஆக்கி விட்டீர்கள். நன்றி. அதை ஆக்கியது மாத்திரம் போதாது, இந்தியாவினுடைய ஆட்சி மொழிகளிலே ஒன்றாகவும் தமிழை நீங்கள் ஆக்க வேண்டும் அம்மையார் அவர்களே என்று கேட்டிருக்கிறேன். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் மாநிலம் அதற்குரிய உரிமைகளையும், தகுதிகளையும் பெற்றிருக்கிற அதே நேரத்தில் அவைகளை முன்வைத்து மத்திய அரசோடு அவைகளை வளர்ப்பதற்கு வாதாட, போராட வலிமை உள்ள கட்சி இருக்க வேண்டுமென்றால் அந்த கட்சி தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகம். அதைப் போலவே புதுவையிலே திராவிட முன்னேற்றக் கழகம். அதன் தலைமையிலே

மாநிலங்களில் இணைந்து செயல்படுகின்ற காங்கிரஸ் கட்சி மற்ற மற்ற கட்சிகளெல்லாம் இங்கே இந்தக் கோரிக்கைகளை – மாநிலத்திலே இருக்கின்ற கோரிக்கைகளை மத்தியிலே வைத்து வென்றெடுக்க வேண்டும். இந்தத் தேர்தலிலே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள், எங்களிடத்திலே வாக்குகள் கேட்கிறீர்களே? வாக்களித்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டால், புதுவைக்கு என்று எத்தனையோ கோரிக்கைகள் இருக்கின்றன. புதுவைக்கு தனி அந்தஸ்து வேண்டும் என்று நீண்ட நாட்களாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதையெல்லாம் தொடர்ந்து வற்புறுத்தலாம். அது நடைபெறுவதற்கு நாட்கள் ஆனாலும் ஆகலாம். உடனடியாக நடந்து தீர்ந்தாலும் தீரலாம். அதையும் மறந்து விடக்கூடாது. எனவே நமக்கு கோரிக்கைகள் இல்லாமல் இல்லை. அந்தக் கோரிக்கைகளையெல்லாம் வைப்பதற்கு ஏற்ற இடம் மத்திய அரசுதான். மாநில அரசு தானாக எதையும் செய்து விட முடியாது. நாம் மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டவர்கள். கட்டுப்பட்டவர்கள் என்பது வேறு, அடிமைப்பட்டவர்கள் என்பது வேறு. அடிமைப்பட்டவர்கள் அல்ல நாம். உறவுக்குக் கை கொடுப்போம், அதே நேரத்தில் உரிமைக்குக் குரல் கொடுப்போம் (கைதட்டல்).

இது இன்று நேற்றல்ல, சோனியா காந்தி அம்மையாருடைய மாமியார் இந்திரா காந்தி அவர்களுக்கு தமிழகத்தின் தலைநகர், சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் – அவர்கள் இந்தியாவிலே பதினான்கு வங்கிகளை யெல்லாம் தேசிய மயமாக்கியபோது – அதைப் பாராட்டி, 14 பரிசுகளை அவருக்கு அளித்தபோது நான் சொன்னேன், அம்மையார் அவர்களே நாங்கள் உறவுக்குக் கை கொடுப்போம், அதே நேரத்திலே உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னேன். இன்றைக்கும் உறவுக்குக் கை கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம். உரிமைக்குக் குரல் கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம். உரிமை என்பது தமிழ்நாட்டின் மீனவர்கள்

இலங்கையிலே உள்ள சிங்களப் படையினரால் இன்னமும் கொல்லப்படுகிறார்களே அவர்களெல்லாம் கரையோரத்திலே ஒதுங்குகின்ற மீன்களைப் போல அவர்களுடைய பிணங்கள் ஒதுங்குகின்றனவே; அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நாம் நடத்திய போராட்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. நாம் எழுப்பிய கோரிக்கைகள் சாதாரணமானவைகள் அல்ல. நாம் விடுத்த கண்டனங்கள் குறைவானவை அல்ல. அவைகளையெல்லாம் மீண்டும் மீண்டும் இலங்கையிலே இருக்கின்ற கொடுமைகளிலிருந்து தமிழன் விடுபட வேண்டும் என்பதற்காக தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்துவோம். நமக்கு ஆதரவுக் கரம் நீட்டக்கூடிய அரசு மத்திய அரசு ஒன்றுதான். அந்த அரசைத்தான் நாம் வலுப்படுத்த வேண்டும்.

எனக்கு நினைவிருக்கிறது. நம்முடைய மறைந்த காங்கிரஸ் தலைவர்களிலே ஒருவரான என்னுடைய அருமை நண்பர் மூப்பனார் அவர்கள் உருவாக்கிய புதிய கட்சிக்கு அவர் பெயர் வைத்தபோது கட்சியினுடைய பெயர் கூட பெரிதல்ல, அவர் அப்போது சொன்னது மாநிலங்கள் வளமாகவும், மத்திய ஆட்சி பலமாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் அவர் வைத்த முழக்கம். அந்த முழக்கத்தில் இருந்து நாங்கள் மாறுபடவில்லை. மத்திய ஆட்சி பலமாக இருக்க வேண்டும். மாநில ஆட்சிகள் அந்த பலத்தை பயன்படுத்திக் கொண்டு சுதந்திரமாக இன்னும் அதிக அதிகாரங்களைப் பெற வேண்டும் என்பதிலே எங்களுக்கு எந்தவிதமான மாறுபாடும் இல்லை. அந்த மாறுபாடு இல்லாத சூழ்நிலையில் நடைபெறுகின்ற இந்தத் தேர்தலில் நம்முடைய தோழமைக் கட்சிகள் எல்லாம் புதுவையிலே கூட்டணி சேர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இந்தக் கூட்டணியை உருவாக்குவதில் எனக்கும் பங்குண்டு. நம்முடைய மத்திய அமைச்சர் நாராயணசாமி அவர்களுக்கும் பங்கு உண்டு. புதுவை முதலமைச்சருக்கும் பங்குண்டு. புதுவை தி.மு.க. அமைப்பாளர் தம்பி ஜானகிராமனுக்கும் பங்கு உண்டு. தோழமைக் கட்சிகளிலே உள்ள தோழமையிலே உள்ள எல்லா

கட்சிக்காரர்களுக்கும் பங்கு உண்டு. விடுதலை சிறுத்தைகளின் தலைவர்களுக்கும் பங்கு உண்டு. இவர்கள் எல்லோரும் சேர்ந்து உருவாக்கியிருக்கின்ற இந்தக் கூட்டணிக்கு – திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னமான உதயசூரியன் சின்னத்திற்கும் காங்கிரஸ் கட்சியின் சின்னமான கை சின்னத்திற்கும், பா.ம. கட்சியின் சின்னமான மாம்பழம் சின்னத்திற்கும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சின்னமான மெழுகுவர்த்தி சின்னத்திற்கும் உங்களுடைய மேலான ஆதரவை வழங்க வேண்டும், வழங்கி இந்தக் கூட்டணியை வெற்றி பெறச் செய்து புதுவையினுடைய எதிர்கால நல்வாழ்விற்கு ஒன்றுபட்ட குரலிலே ஒலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அடுத்த பல நிகழ்ச்சிகள் இருக்கின்ற காரணத்தால் இந்த அளவில் விடைபெற்றுக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

கடலூரில் கடலெனத் திரண்ட மக்களிடையே தலைவர் கலைஞர் ஆற்றிய உரை

கடலூரில் 9.4.2011 அன்று நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

கடந்த இத்தனை நாட்களாக தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலே கலந்துகொண்டு நேற்றும் இன்றும் பகல் முழுவதும் பயணம் செய்து பல்லாயிரக்கணக்கான மக்களை, வாக்காளர்களை வழி நெடுகிலும் சந்திக்கின்ற வாய்ப்பை பெற்று, இன்று கடலூரில் – இது "கடலூர்''தான்(கைதட்டல்) என்பதை மெய்ப்பிக்கின்ற வகையிலே குழுமியிருக்கின்ற மாநாடு போன்ற இந்த மகா சமுத்திரத்தில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம்முடைய திருமாவளவன் அவர்கள் குறைந்த அளவில் பேசி எனக்கு நீண்ட நேரம் பேசுகின்ற வாய்ப்பை வழங்கி இருக்கிறார். ஆனால் ஒன்று, அவர் நிரம்ப நேரம் பேசினாலும், குறைந்த நேரம் பேசினாலும் எவ்வளவு நேரம் பேசினார் என்பதை விட சிங்கத்தின் கர்ஜனை (கைதட்டல்) நீண்ட நேரம் இருந்தால் நன்றாக இருக்குமா? குறைந்த நேரமே இருந்தால் நன்றாக இருக்குமா? அது குறைந்த நேரமானாலும், நீண்ட நேரமானாலும் சிங்கத்தின் கர்ஜனை கர்ஜனைதான். அதை இங்கே நான் கேட்டேன். (பலத்த கைதட்டல்)

தி.மு.கழகம் இந்த தேர்தலில் அமைத்துள்ள இந்தக் கூட்டணியில் காங்கிரஸ் பேரியக்கம், பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, கொங்குநாடு முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மூவேந்தர் முன்னேற்றக் கழகம்,

பெருந்தலைவர் மக்கள் கட்சி என்ற இத்தனையும் இடம் பெறுகின்ற அளவிற்கு இந்த மாவட்டத்தில் ஒன்பது வேட்பாளர்கள் "நவரத்தினங்கள்'' என்பார்களே? அந்த நவரத்தினங்களை ஒரே மோதிரத்திலே அமைத்து அழகு பார்ப்பதைப்போல இன்றைக்கு இந்த அணியின் சார்பில் இந்த மாவட்டத்தில் நாம் 9 பேரை நிறுத்தி உங்களுடைய அன்பான ஆதரவை கேட்டு ஆங்காங்கு நம்முடைய பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறோம்.

திருமாவளவன் பேசும்போது சொன்னார்; இந்த அளவிற்கு ஆதரிக்கிறோம் என்பதை ஓங்கி சொல்வதை விட, நம்மால் ஆதரிக்கிறவரையில் வெற்றி பெறச் செய்கிற வரையில் நாம் உழைக்க வேண்டும் பாடுபட வேண்டும் – பணியாற்ற வேண்டும். தி.மு.கழகத்தின் சார்பில் இன்னாரை நிறுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு அதற்கு பிறகு அவருக்கு வெற்றிக்கு பணியாற்றாமல் இருப்பது சரியல்ல. அப்பொழுதுதான் அது முழுமை யடையும். பெயர்களை அறிவிப்பது என்னுடைய வேலை. பட்டியலைத் தயாரிப்பது உங்களுடைய வேலை. தயாரிக்கப்பட்ட பட்டியலிலே உள்ளவர்களை யெல்லாம் எந்தெந்த அணியிலே அவர்களையெல்லாம் பொருத்து வது என்பதும் அப்படி பொருத்தப்பட்டவர்கள் எவ்வாறு இந்தத் தேர்தல் யுத்தத்திலே பொருத்துவது என்பதையும் நிர்ணயிக்கிற அதற்கான வழிகாட்ட அதை வகைப்படுத்த நாம் எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சிகள் வீணாகிவிடாக்கூடாது.

இதை வீணாக்குவதற்காக இன்றைக்கு என்னென்ன ஏற்பாடுகள் நாட்டில் நடைபெறுகிறது என்பதை நான் சற்று நேரத்திற்கு முன்பு புதுவையிலே பேசிய ஒரு பெரிய நிகழ்ச்சியில் எடுத்துக்கூறினேன். ஒரு தேர்தலில் தவறுகள் நடக்கக்கூடாது. பணம் கொடுத்து வாக்கு களை பெறக்கூடாது. அதிக ரூபாயை செலவழித்து அட்டகாசங்கள் புரியக்கூடாது. தவறான வழிகளை மேற் கொள்ளக்கூடாது. இதெல்லாம் தேர்தல் கமிஷனுக்கு மாத்திரமல்ல –

எல்லா பெரிய மனிதர்களுக்கும் – மகான் களுக்கும் – அவர்கள் வழங்க வேண்டிய அறிவுரைதான். அதை இன்றைக்கு இந்தியாவிலே தேர்தல் கமிஷன் வழங்குவது மாத்திரமல்ல; கடைப்பிடிக்கிறது. அதற்கு அடங்கி நடக்க வேண்டியது அரசியல் கட்சிகளின் கடமை. அதை நான் மறுக்கவில்லை. ஆனால் எதற்கும் ஒரு அளவு இருக்கிறது. அந்த அளவு கடக்கக்கூடாது – எல்லை கடக்கக்கூடாது என்பதிலே நான் மாத்திரமல்ல இங்கே வீற்றிருக்கிற நம்முடைய கூட்டணிக் கட்சித் தலைவர்களெல்லாம் ஒன்றுபட்டு ஒரேவிதமான கருத்தை உடையவர்கள்.

"நரிக்கு நாட்டாண்மை கிடைத்தால் கெடைக்கு இரண்டு ஆடு கேட்கும்'' என்பது பழைய காலத்திலே கிராமங்களிலே சொல்லப்படுகிற பழமொழி. அதைப் போல் தங்களுக்கு கிடைத்த அங்கீகாரத்தை நரிக்கு கிடைத்த நாட்டாண்மையைப் போல் கெடைக்கு இரண்டு ஆடு கேட்கிற வகையிலே அந்த அதிகாரத்தை செலுத்திக் கொண்டிருப்பவர்களை நான் உச்சத்திலே இருப்பவர்களை சொல்லவில்லை – உச்சத்திலே இருப்பவர்கள், அடுத்து இருப்பவர்கள், அடுத்து இருப்பவர்கள், அவர்களுக்கும் கீழே இருப்பவர்கள் என்று இவர்கள் செய்கிற அதிகாரத்தை பார்க்கும்போது என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

நான் யார்? உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றும் பதவியிலே இருக்கிற முதலமைச்சர். அடுத்து இப்பொழுது 13 ஆம் தேதி போடப்படுகின்ற ஓட்டுக்களை எல்லாம் எண்ணிப்பார்த்து நாம் அதிக வாக்குகளை பெற்றிருந்தால் மீண்டும் முதலமைச்சர். பெறாவிட்டால் வீட்டுக்கு போக வேண்டியவன். அதுவரையில் நான் முதலமைச்சர்தான். அரசியல் சட்டப்படி தேர்தல் ஆணையத்தினுடைய பார்வையின்படி! ஆனால் ஒன்று சொல்லுகிறேன், உங்களுக்கு வியப்பாக இருக்கும்.

நான் நேற்று விழுப்புரத்திலே கூடிய கடல் போன்ற கூட்டத்திலே பேசி விட்டு இரவு தங்குவதற்கு எங்கே இடம் என்று கேட்டபோது, பொன்முடி சொன்னார், அரசாங்கத்தினுடைய இடம் எதுவும் உங்களுக்கு தர முடியாது என்று சொல்லி விட்டார்கள். வி.ஐ.பி. கெஸ்ட் அவுஸ் எதுவும் உங்களுக்கு ஒதுக்கவில்லை. ஆனால் நம்முடைய கட்சி அலுவலகத்திலே நீங்கள் இரவு தங்கிக்கொள்ளலாம் என்று சொன்னார். அதைவிட பூரிப்பான செய்தி எதுவும் கிடையாது. ஏனென்றால் நம்முடைய வியர்வையால், உழைப்பால், நம்முடைய முயற்சியால் கட்டப்பட்ட மாளிகை தி.மு.கழகத்திற் கென்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொன்று கட் டப்பட்டிருக்கிறது. அப்படி கட்டப்பட்ட மாளிகை யிலே தங்கு என்று சொன்னதும் மிகுந்த மகிழ்ச்சி எனக்கு, நம்முடைய சொந்த இடத்தில், நம்முடைய கட்சி இடத்தில் நாம் தங்கப் போகிறோம் என்ற உணர்வோடு , மகிழ்ச்சியோடு அங்கே தங்கினேன்.

ஆனால் என்னுடைய நினைவு நாம் முதலமைச்சராயிற்றே, நமக்கு ஏன் இந்த கடலூரில் ஒரு டிராவலர்ஸ் பங்களா அல்லது அரசாங்கத்திற்கு தொடர்புடைய ஒரு விடுதி ஒதுக்கப்படாததற்கு என்ன காரணம்? தேர்தல் கமிஷனுடைய கண்டிப்பு. நான் அதை பொருட்படுத்த வில்லை. ஏனென்றால் இந்த இயக்கத்தை நடத்துவதற்கு ஊர் ஊராகச் சுற்றி, கிராமங்கள் பல கடந்து நகரங்கள் பலவற்றிலும் வலம் வந்து, தூங்குவதற்கு இரவு நேரத்திலே துண்டை விரித்துக்கொண்டு ஒரு மரத்தடியிலே தூங்கியவன்தான், இந்த கருணாநிதி. எனவே நான் மாளிகை வேண்டும், மெத்தை வேண்டும், இவைகள் எல்லாம் இல்லாவிட்டால் சரிப்படாது என்று சொல்ல மாட்டேன். சொல்லவில்லை. அங்கே தங்கியிருந்தோம், யாராவது வந்து குறுக்கே வழியிலே வந்திருந்தால் பார்த்திருப்பீர்கள். இங்கே வருகிற வழியில் கையிலே கொண்டு வந்த மாலை நேரத்து சிற்றுண்டியை அருந்து வதற்குக் கூட எனக்கு இடம் இல்லை. வேனிலேயே அமர்ந்து

யாரும் பார்க்காமல் என் கூட வந்தவர்கள் துண்டை எடுத்து மறைத்துக் கொண்டு அங்கேயே சாப்பிட்டு விட்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்தேன். இவைகளெல்லாம் செய்யலாமா என்று இருந்தாலும் கூட அது இழிவல்லவா? நம்முடைய பெருமைக்கு குறைவல்லவா என்று நினைப்பவன் அல்ல நான். என்னை விட மோசமாக, என்னை விட கேவலமாக, என்னை விட இழிவாக நடத்தப்படுகின்ற கூட்டம் இந்த நாட்டிலே இருப்பது எனக்குத் தெரியும். அதை நினைத்து இவைகளையெல்லாம் மறந்து விட்டு, வேனிலே உட்கார்ந்தே சாப்பிட்டு விட்டு வந்தேன்.

வேனிலே இருந்து இறங்கிய உடனே சொன்னார்கள், என்னுடைய செயலாளர் சண்முகநாதன் சொன்னார் – ஒரு பொதுக் கூட்டத்திலே ஜெயலலிதா அம்மையார் பேசியிருக்கிறார், புலனாய்வுத் துறையிலே அதிகாரியாக பணியாற்றுகின்ற ஒருவர் அமைச்சர் ஒருவருடைய உறவினர் என்றும், அந்த உறவினரை இன்னமும் இந்த கருணாநிதி புலன் ஆய்வுத் துறையிலே அதிகாரியாக வைத்துக் கொண்டிருக்கிறார் என்றும், உடனடியாக அவரை அந்த இடத்திலே இருந்து அகற்ற வேண்டும் என்றும் பேசியிருக்கிறார் அதாவது உத்தரவிடுகிறார். யாருக்கு? சசிகலாவுக்கா அல்ல. யாருக்கு உத்தர விடுகிறார்? தேர்தல் கமிஷனருக்கு உத்தரவிடுகிறார். அதே புலனாய்வு துறையிலே இருந்த மூத்த அதிகாரி அண்மையில் மாற்றப்பட்டு அவர் இன்றைக்கு விடுமுறையிலே சென்றிருக்கிறார்.

அதற்கடுத்து இன்னொரு அதிகாரி – அவருக்குக் கீழே அதிகாரியாக வேலை பார்த்து வந்தவர். அவரும் கருணாநிதியிடம் இருக்கக் கூடாது, அவரும் அவருக்கு தூது போவார், அவரும் ஒருவேளை யுக்திகளை சொல்லிக் கொடுப்பார், ஆகவே அந்த அதிகாரியையும் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்று அம்மையார் திட்டமிட்டிருக்கிறார். என்ன நடக்குமோ என்று எனக்குத்

தெரியாது? ஒருவேளை அந்த அதிகாரியும் மாற்றப்பட்டாலும் மாற்றப்படலாம். மாற்றப்பட்டாலும் அதற்காக நான் கவலைப்பட மாட்டேன். ஏனென்றால் எந்த அதிகாரியும் இல்லாமல் வாழ்க்கையை ஆரம்பித்தவன்தான் நான்.

யாரும் இல்லாமல் இந்த இயக்கத்தை நடத்திக் கொண்டிருப்பவன்தான் நான். அப்போதெல்லாம் அதிகாரிகளை வைத்துக் கொண்டு இந்த இயக்கத்தை நடத்தவில்லை. என்னோடு வந்து கொடியேற்றியவர்கள் அதிகாரிகளா? எனக்கு ஒலி பெருக்கி வைத்துக் கொடுத் தவர்கள் அதிகாரிகளா? எனக்கு மேடை போட்டு கொடுத்தவர்கள் அதிகாரிகளா? என்னுடைய தோழன், என்னுடைய தொண்டன், அவன் தன்னுடைய முதுகை வளைத்து அந்த முதுகில் (பலத்த கைதட்டல்) ஏறி பேசு அண்ணா என்று சொல்லி அதை மேடை யாக்கி இயக்கக் கூட்டங்களை நடத்தியவர்கள் நாங்கள்.

நானும் சரி, என்னுடைய அருமை நண்பர் திருமாவளவனும் சரி, நாங்களெல்லாம் இந்த இயக்கத்தை அடித்தளத்திலே இருந்துதான் தொடர்ந்து நடத்த ஆரம்பித்தோம். எனவே நான் அதற்காகக் கவலைப் படவில்லை. நான் சொல்வது எதற்காக என்றால், நான் சொல்கிறேன், ஆணையிடுகிறேன், நாளைக்கே அந்த அதிகாரி மாற்றப்பட வேண்டும் என்று அம்மையார் விரும்புகிறார் என்றால், எவ்வளவு தைரியம், எந்த அளவுக்கு அந்த அதிகாரிகளிடத்திலே அவருக்கு ஆதிக்கம் இருக்கிறது. நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. கவலைப்பட மாட்டேன். ஆனால், நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக சொல்கிறேன். எதற்கெடுத்தாலும் தேர்தல் ஆணையம் சம்மதிக்க வில்லை. உங்களுக்குத் தெரியும்.

உலகப் புகழ் பெற்ற கிரிக்கெட் போட்டியில் இந்தியா மகத்தான வெற்றியைப் பெற்றது (பலத்த கைதட்டல்). வெற்றியைப் பெற்றிருக்கிறது என்பதைச் சொல்லும் போதே இந்தளவுக்கு மகிழ்ச்சியடைகிறீர்களே,

நாள் தோறும் இந்திய கிரிக்கெட் வீரர்களுடைய சாதனைகளைப் பார்த்து பார்த்து வியப்படைகிற நான், இரவு 12 மணி வரையிலே கூட எந்த நாட்டிலே கிரிக் கெட் நடந்தாலும் அந்த நாட்டிற்குப் போகா விட்டா லும் நம்முடைய டி.வி. பெட்டிகள் மூலமாக கிரிக் கெட்டைப் பார்த்து மகிழ்கிற நான், இந்தியாவிற்கு மகத் தான வெற்றி – அதுவும் எப்படிப்பட்ட வெற்றி! இலங்கையை முறியடித்து (பலத்த கைதட்டல்) பெற்ற வெற்றி! அந்த வெற்றியை இந்திய அரசு கொண்டாடு கிறது. இந்திய அரசு அவர்களுக்குப் பரிசு கொடுக்கிறது. மாநில அரசுகள் அவர்களுக்கு பரிசுகள் வழங்குகிறது. அந்த மாநிலங்களெல்லாம் வெகுமா னங்கள், பரிசுகள் கொடுக்கும்போது நாம் கொடுக்க வேண்டாமா என்று தோன்றி, நானும் அந்த கிரிக்கெட் குழுவுக்கு ஒரு மூன்று கோடி ரூபாய் (பலத்த கைதட்டல்), அதிலே ஆடி வெற்றி பெற்ற நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த அஸ்வின் என்ற விளையாட்டு வீரருக்கு ஒரு கோடி ரூபாய் என்று நான்கு கோடி ரூபாயை அரசின் சார்பில் தருகிறோம் என்ற செய்தியை பத்திரிகைக்கு கொடுத்தேன்.

ஆனால், என்னுடைய செயலாளர்கள் சொன்னார் கள் – தலைமைச் செயலகத்திலே உள்ள செயலர்கள். நான் தலைமைச் செயலகம் என்று சொல்வதற்காக மன்னிக்க வேண்டும். ஏனென்றால் நான் தலைமைச் செயலகத்திற் குப் போய் இருபது நாட்களா யிற்று. என்றைக்கு முதலமைச்சரை விட – அவரை அடக்கக் கூடிய அதிகா ரங்களைப் பெற்றவர் தேர்தல் ஆணையர் என்றால், அவர் தவறாகவும் அதிகாரத்தைச் செலுத்தலாம். சரியாகவும் செலுத்தலாம். ஆனால் அதற்கு அடங்கித்தான் நடக்க வேண்டும் என்று சொன்ன பிறகு, நான் கோட்டைக்குச் சென்று உட்காருவது முறையல்ல என்று நான் செல்வது இல்லை. நான் அந்த ஆணையை – அந்த சட்டத்தை – அந்த விதியை தவறு என்று சொல்லவில்லை. இந்த மூன்று கோடி ரூபாய் அந்த கிரிக்கெட் குழுவிற்கும், ஒரு கோடி ரூபாய் அஸ்வினுக்கும் தருகிற கோப்பினை நான் தலைமைச் செயலாளருக்கு அனுப்பி என்னுடைய

கையெழுத்தையும் போட்டு, தலைமைச் செயலாளர் இதை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று உத்தரவு அனுப்பிய போது, அவர்கள் தேர்தல் கமிஷனைக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கி றார்கள், கொடுப்பது சரி, ஆனால் அந்த விளையாட்டு வீரர்களை முதலமைச்சர் அழைத்து அதை அவருடைய கையால் கொடுக்கக் கூடாது. நான் கொடுத் தால் அது தேர்தல் பிரச்சாரமாக இருக்குமாம். உலகம் பூராவும் இருக்கிற மக்கள் பார்த்து கைகொட்டி, வாழ்த்தி அவர்களைப் பாராட்டிய அந்த செய்தியை நான் சொல்லக் கூடாதாம். அப்படி நான் கொடுத்தாலும் அதை யாரும் போட்டோ எடுக்கக் கூடாதாம்! இப்படி ஒரு ஆர்டர். இதுபோன்ற உத்தரவு தேர்தல் கமிஷனால் போடப்பட்டது என்றால், எனக்கே சந்தேகம். யார் முதலமைச்சர்? நான்தானா? என்று எனக்கே ஒரு சந்தேகம் வந்து விட்டது.

நான் இப்போதும் சொல்கிறேன், தேர்தல் கமிஷன் தேவை. தேர்தல் கமிஷனை மதிப்பவன் நான். ஆனால் ஏற்கனவே தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த ஜெய லலிதா அம்மையார் தேர்தல் கமிஷனை எப்படி மதித்தார் என்பது எனக்குத் தெரியும். இங்கே வீற்றிருக்கிற அனைவருக்கும் தெரியும். ஆனால் இன்றைக்கு நாம் தேர்தல் கமிஷனோடு சுமூகமாகப் போனாலும், ஒவ்வொன்றையும் அவர்களைக் கேட்டுச் செய்ய வேண்டும் என்ற நிலைமையிலே இருந்தாலும் கூட வெளிப்படையாக முதலமைச்சராக தான் ஆகிவிடு வோம் என்ற தைரியத்தில் – அந்த தெம்பில் இப்போதே உத்தரவிடுகிறார் அவர். உடனடியாக சில அதிகாரிகளை வேலையிலிருந்து நீக்கு என்று. நல்ல வேளை உடனடி யாக கருணாநிதியை முதலமைச்சர் பதவியிலிருந்து நீக்கு என்று சொல்லாமல் போனாரே? அப்படி சொல்லி யிருந்தால் எல்லோரும் கேட்பீர்கள் நன்றாகத்தானே நேற்று வரை இருந்தார், இப்போது என்ன ஆயிற்று என்று கேட்பீர்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இன்றைக்கு தேர்தல் கமிஷனால் ஏற்பட்டிருக்கும்போது, தேர்தல் கமிஷன் இதுபோன்ற குறைகளை திருத்திக் கொள்ள

வேண்டும், நான் மத்திய சர்க்காருக்குச் சொல்கி றேன், தேர்தல் கமிஷன் நினைத்தால் பிரதமரைக்கூட அவர்கள் கண்டிக்கலாம். பிரதமர் கூட தேர்தல் கமிஷ னுக்கு அடங்கி நடக்க வேண்டியதுதான். விதிமுறை அதுதான். ஆனால் அப்படிப்பட்ட விதிமுறைகளை, அப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை, அப்படிப்பட்ட அதிகாரங்களைப் பெற்றிருக்கின்ற ஒரு மகத்தான நிறுவனம் – புனிதமான நிறுவனம் என்று சொல்லப்படு கின்ற அந்த தேர்தல் கமிஷனை எப்படி அமைப்பது? யார் யாரைக் கொண்டு அமைப்பது? எந்த வகையிலே அமைப்பது? அதற்குள்ள அதிகாரங்களை எப்படி அமல்படுத்துவது என்பதை யெல்லாம் இனியாவது ஏற்படுத்த மத்தியிலே இருக்கிற சர்க்கார் முன்வர வேண்டும் என்று இந்த மாபெரும் கூட்டத்தின் சார்பாக நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

ஏனென்றால், தம்பி இள.புகழேந்தி ஒரு வழக்கறிஞரும் கூட. அவர் சட்டமன்றத்திலே பேசுகிறபோது ஒவ்வொரு ஆதாரங்களையும் புள்ளி விவரங்களோடு எடுத்து வைத்து முழங்கக் கூடியவர். அவருக்கு என்று ஒரு வரலாறு உண்டு. இங்கே நம்முடைய கூட்டணிக் கட்சிகளால் நிறுத்தப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒரு சிறு வரலாறு உண்டு. அந்த வரலாறு தெரிந்து தான், அதை மனதிலே வைத்துக் கொண்டுதான், இன்னார் வேட்பாளர் இந்தத் தொகுதிக்கு என்று நாங்கள் இன்றைக்கு தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிலே ஒருவர்தான் இந்த மாவட்டச் செயலாளர் தம்பி பன்னீர் செல்வம். பன்னீர் செல்வம் யார் என்பது எனக்குத் தெரியும். அவர் "வேங்கைக்குப் பிறந்த சிறுத்தை.'' பன்னீர் செல்வத்தின் அப்பாவிடமே பழகியவன் நான். நானும் அவருடைய அப்பா – நான் சொன்னேனே சிறுத்தை என்று – இந்த சிறுத்தையைப் பெற்ற அந்த வேங்கை என்னுடைய தோளிலே கை போட்டுக் கொண்டு, நான் அவருடைய தோளிலே கை போட்டுக் கொண்டு சாலையிலே நடந்து கொண்டு என்ன கிருஷ்ணமூர்த்தி என்று

நான் அவரை பேர் சொல்லி அழைப்பது உண்டு. அந்த கிருஷ்ண மூர்த்தி இன்றைக்கு இல்லை. ஆனால் அவருடைய வீரதீர குணத்தை யெல்லாம் கொண்டுள்ள பன்னீர் செல்வம் இங்கே இருக்கிறார். அவரை வேட்பாளராக இங்கே நியமித்து நாங்களெல்லாம் ஆதரித்துக் கொண்டிருக்கி றோம்.

புகழேந்தி, நான் இங்கே புகழேந்தி வேட்பாளராக நியமித்திருக்கிற நேரத்தில் ஏதோ சிறு சலசலப்பு. பத்திரிகைகளில் எல்லாம் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார்கள். பத்திரிகைகள் கூட அதைப் பெரிதுபடுத்துகின்றன. பெரிதாக ஒன்றும் இல்லை என்று நான் கேள்விப்பட்டேன். அப்படியிருந்தாலும்கூட நான் உங்களுக்கு ஒரு விளக்கம் அளிக்க வேண்டும். கடந்தமுறை யாரை தேர்தலிலே வேட்பாளராக நிறுத்துவது என்று நாங்கள் சிந்தித்தபோது புகழேந்தியை அதற்கு முன்பு சட்டமன்ற உறுப்பினராக ஆக்கியிருந்தோம். சட்டமன்றப் பணிகளை அவர் ஆற்றிக்கொண்டிருந்தார்.

அந்தநேரத்திலே தேர்தல் வந்து புது வேட்பாளரை போடலாம் என்றபோது புகழேந்தி எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. நான் விட்டுக்கொடுக்கிறேன் என்று பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்தான் – புகழேந்தி விட்டுக் கொடுத்தான் என்கிறேன் 'ன்' விகுதி போட்டு சொல்வதற்குக் காரணம் என்னுடைய பிள்ளை அவன். (பலத்த கைதட்டல்) இளவழுதியும் நானும் எப்படி பழகினோம், எப்படி அண்ணன் தம்பியாக பழகினோம் என்பதெல்லாம் வரலாறு. என் தாயார் இறந்தபோது இளம்வழுதிக்கு 102 டிகிரி காய்ச்சல். கடலூரிலே இருக்கிறார். என் தாயார் இறந்து விட்டார்கள், காலையிலே ஒரு கார் கோபாலபுரம் வாசலிலே வந்து நிற்கிறது. இளம்வழுதி வந்திருக்கிறார் என்றார்கள் போய் பார்க்கிறேன். காரில் முணங்கிக்கொண்டே படுத்திருக்கிறார். ஏன்யா இங்கே வந்தே என்று கேட்டேன், அம்மா இறந்துட்டாங்க – வராம எப்படியிருக்க முடியும் என்று சொன்னார். அப்படி அந்த நேரத்திலே கூட என் நண்பன், என் உயிர் தோழர்களிலே

ஒருவரான இளம்வழுதி இருந்தார். அந்த இளம்வழுதியினுடைய மகன் புகழேந்தி என்கிறபோது அந்த புகழேந்திதானே முன் வந்து நீங்கள் இங்கே வேட்பாளரை மாற்றுவதாக இருந்தால் நான் விட்டுக் கொடுக்கிறேன் என்று சொன்னார். அதற்கு பிறகுதான் இதுவரையிலே இங்கே எம்.எல்.ஏ.வாக இருந்த நண்பரை வேட்பாளராக இங்கே ஆக்கி அவரை வெற்றிபெற வைத்தோம். புகழேந்தி அதற்காக முகம் கோணவில்லை. எந்த வார்த்தையும் எதிர்த்து பேசவில்லை. எங்களோடு சேர்ந்த ஒத்துழைத்து அவர் வெற்றிக்கு பாடுபட்டார், இப்பொழுதும் அதைப்போல நடக்க வேண்டும் என்று எண்ணித்தான் புகழேந்தியை நீ இந்த எம்.எல்.ஏ. பதவிக்கு போட்டியிடு என்று சொன்னேன், அப்பொழுது கூட அவர் சொன்னார் ஏற்கெனவே ஒருவர் இருக்கிறாரே எம்.எல்.ஏ.வாக என்ற போது போன முறை அவருக்கு நீ விட்டுக் கொடுக்கவில்லையா? என்று சொல்லிவிட்டு நான் அவரையும் அழைத்து இதே கடலூரிலே அல்ல, வேறு இடத்திலே அவரை அழைத்து என்னய்யா கோபமா என்று கேட்டேன். ஐயோ எனக்கு கோபம் எல்லாம் இல்லை என்றார். சரி கோபம் இருந்தால் இப்பொழுது சொல்லிவிடு வேறு எத்தனையோ வாய்ப்பு வரும் உனக்கு. எனவே இந்தத் தடவை நீ வருத்தப்படாமல் தம்பி புகழேந்திக்கு விட்டுக் கொடு, ஏனென்றால் அவர் ஏற்கெனவே விட்டுக் கொடுத்தவர், உனக்காக என்று சொன்னேன். சரி என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். பிறகு பார்த்தால் இங்கே கதை மாறிப் போயிற்று. பிறகு யாரோ விட்டுக்கொடுத்தவரிடம் போட்டுக்கொடுத்து கதையை மாற்றிவிட்டார்கள். ஆனால் நான் சொல்கின்றேன், கடலூர் மக்கள் நான் இவ்வளவு சொன்ன பிறகும் பகிரங்கமாக கருணாநிதி, இவ்வளவு பெரிய மைதானத்திலே, இவ்வளவு பெரிய உண்மையைச் சொன்னபிறகும், நான் இந்த இயக்கத்திற்காக இளமை முதல் பாடுபட்டு உழைத்த இளம்வழுதியினுடைய மகனை நாம் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு நீங்கள் அனைவரும் உங்கள் ஆதரவைத் தருவீர்கள் என்று நம்பித்தான் இந்த விஷயத்தில் உங்களுக்கு சற்று திறந்த நிலையிலே சொன்னேனே தவிர, வேறல்ல.

இந்த மாவட்டத்தில் நான் முதலிலே சொன்ன பன்னீர்செல்வம், புகழேந்தி, சபா இராஜேந்தின் அவரும் சட்டமன்றத்திலே அரும்பணியாற்றியவர். நம்முடைய வேல்முருகனுடன் சேர்ந்து, வேல் முருகன் எப்படி பேசுவாரோ அதைப்போல தொகுதிக்காக பல பிரச்சினைகளை எடுத்துக்கூறக்கூடியவர். வேல்முருகன் பார்த்தால் பசுவாக இருப்பார், பாய்ந்தால் புலி மாதிரி இருக்கும். அதை இங்கேயே கண்டீர்கள். அப்படிப்பட்ட வேல்முருகன், புவனகிரியிலே பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே அறிவுச்செல்வன். காட்டுமன்னர் கோவிலில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் – அவரை என்ன சொல்வதன்று புரியவில்லை. ஆஸ்தானப் புலவரா? ஆஸ்தானக் கவிஞரா? அல்லது ஆஸ்தான அமைச்சரா? என்று புரியவில்லை. நம்முடைய காட்டுமன்னார்கோயில் விடுதலைச் சிறுத்தைகளுடைய வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கிறார் ரவிக்குமார். திட்டக்குடி விடுதலைச் சிறுத்தைகளின் வேட்பாளராக சிந்தனைச் செல்வன், மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தினுடைய வேட்பாளராக ஸ்ரீதர் வாண்டையார் – அவர் இங்கேயே சொன்னார். நான் வைத்த கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்த முதலமைச்சர் என்று பாராட்டினார். இதுபோன்ற பாராட்டுக்கள் பலவற்றை ஸ்ரீதர் வாண்டையார் போன்றவர்களிடத்திலேதான் பெற முடியும். பெறுவேன் என்ற நம்பிக்கையோடு சிதம்பரம் தொகுதியிலே அவருடைய வெற்றிக்கு நீங்கள் எல்லாம் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

விருத்தாசலத்திலே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய வேட்பாளர் நீதிராஜன். இந்தக் கட்டத்திலே அவருக்கு பொருத்தமான பெயர். எல்லோரும் வழங்க வேண்டிய நீதி . அந்த நீதியை வழங்கக் கூடிய நீதிராஜனாக அவர் காங்கிரஸ் கட்சியினுடைய வேட்பாளராக கை சின்னத்திலே நிற்கிறார். நீதி தராசை பிடிக்கக்கூடிய கை இந்த கை. இந்தக் கைக்கு உங்களுடைய மேலான ஆதரவை வாக்குகள்

வழங்கி வெற்றி பெறச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் ஒரு முறை வேட்பாளர்களை அவர்களுடைய சின்னங்களோடு படிக்கிறேன்.

குறிஞ்சிப்பாடி – எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் – உதயசூரியன்.

கடலூர் இள. புகழேந்தி – உதயசூரியன்

பண்ருட்டி – சபா ராஜேந்திரன் – உதயசூரியன்

நீதிராஜன் – கை சின்னம்

வேல்முருகன் – பாட்டாளி மக்கள் கட்சி – மாம்பழம்

புவனகிரியிலே அறிவுச்செல்வன் – மாம்பழம்

காட்டுமன்னார்கோவிலில் – ரவிக்குமார் – மெழுகுவர்த்தி

திட்டக்குடியிலே சிந்தனைச்செல்வன் – மெழுகுவர்த்தி

சிதம்பரம் ஸ்ரீதர் வாண்டையார்– உதயசூரியன்

இந்த சின்னங்களுக்கெல்லாம் நீங்கள் வாக்களித்து அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். நேரம் அதிகமாகி விட்டது. என்னைப் பொருத்தவரையில் திருமாவளவனுடைய உடம்பையும், என்னுடைய உடம்பையும் பார்த்தால் அவருக்குத் தாங்கும், எனக்குத் தாங்காது. எனவே வெற்றி கரமாக இந்தக் கூட்டத்தை நடத்திக்கொடுத்த உங்கள் அனைவருக்கும் நம்முடைய கூட்டணிக் கட்சித் தலைவர் களுக்கும் நன்றியினை தெரிவித்து, வாழ்க ஜனநாயகம், வெல்க நம்முடைய முற்போக்குக் கூட்டணி என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

திருவாரூர் தேர்தல் பிரச்சாரத்தில் தலைவர் கலைஞர் வேண்டுகோள்

திருவாரூர் தொகுதியில் போட்டியிடும் தலைவர் கலைஞர் அவர்கள் திருவாரூர் பேருந்து நிலையம் அருகில் 10.4.2011 அன்று கூடியிருந்த பொதுமக்களிடையே தமக்கு வாக்குகள் கேட்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

நீண்ட நாட்களுக்குப் பிறகு – பல ஆண்டு களுக்குப் பிறகு திருவாரூரில் வாக்குகள் கேட்டு வந்துள்ளேன். திருவாரூர் தொகுதியின் வேட்பாளராகப் போட்டியிடுகின்ற நான் உங்களிடம் வாக்குகள் கேட்கும் பணியை தொடங்கியிருக்கின்றேன். ஊரெல்லாம் சுற்றி, உற்றார் உறவினர்கள் எல்லாம் பார்த்துவிட்டு தாயின் மடிக்கே வருவது போல் இன்று வந்திருக்கின்றேன். தாயை நோக்கி வருகின்ற குழந்தையை தாய் அரவணைத்து ஆறுதல் கூறி ஆதரவு தருகிற பாங்கில் திருவாரூர் என்னை ஆதரிக்கும். அரவணைக்கும் என்ற நம்பிக்கையோடு உங்களையெல்லாம் காணுகின்ற வாய்ப்பை நான் தேடிக் கொள்கின்றேன்.

இன்றும் நாளையும் திருவாரூர் தொகுதியிலே உள்ள வாக்காளர்களை பல்வேறு பகுதிகளிலே சென்று சந்தித்து ஆதரவு கேட்டு அதற்கு அடுத்த நாள் வாக்களிப்பதற்காக சென்னை செல்ல வேண்டிய நிலையில் இடையிலே ஓரிரு நாட்கள் உங்களைச் சுற்றி சுற்றி வட்டமிட்டு வாக்கு கேட்கின்ற பணியை மேற்கொள்ள இருக்கின்றேன் (பலத்த கைதட்டல்).

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கிராமங்கள், குக்கிராமங்கள், பட்டிதொட்டிகளெல்லாம் நான் செல்ல வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அங்கெல்லாம் சென்று திராவிட

முன்னேற்றக் கழக ஆட்சி வலுப்பெற – கழக ஆட்சியினுடைய வேருக்கு பலம் ஊட்ட, கழக ஆட்சியின் ஆதரவை சாதனைகளின் விளைவாக தமிழ் மக்கள் பெற்று வருகின்ற பயன்கள் தொடர்ந்திட நான் அயராது பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நேற்றைய தினம் தமிழகத்தின் தலைநகருக்கு வந்த நம்முடைய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற சிறப்பான– செம்மையான திட்டங்களையெல்லாம் பாராட்டி விட்டு வாழ்த்துக் கூறி சென்றிருக்கிறார்.

அதற்கு முன்பு கோவைக்கு வந்த நம்முடைய பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டக் கூடிய மாநிலமாக தமிழகம் விளங்குகிறது என்றும், இதற்குக் காரணம் தமிழகத்தில் நடைபெறுகின்ற தி.மு.கழக ஆட்சி என்றும் குறிப்பிட்டு சிறப்புரையாற்றி சென்றிருக்கிறார். அதற்கு முன்பு கடந்த 5ஆம் தேதி சென்னைக்கு வருகை தந்த சோனியா காந்தி அம்மையார் அவர்கள் நானும் கலந்து கொண்ட கூட்டத்திலே பேசும்போது நான் வைத்த கோரிக்கைகளையெல்லாம் நினைவுபடுத்தி, அந்த கோரிக்கைகள் நிறைவேற, மத்தியிலே அமைகிற அரசும், மாநிலத்திலே அமைய இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசும் ஒன்றுபட்டு பணியாற்றுவோம் என்று சோனியா காந்தி அவர்கள் உறுதியளித்திருக்கின்றார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், பா.ம.க., முஸ்லிம் லீக், விடுதலைச் சிறுத்தைகள், கொங்கு நாடு முன்னேற்றக் கழகம், மூவேந்தர் முன்னேற்றக் கழகம் என இவ்வாறு ஒருங்கிணைந்து சேர்ந்திருக்கின்ற இந்தக் கூட்டணி ஐக்கிய முற்போக்குக் கூட்டணி இந்தியாவை ஆளுகின்ற கூட்டணியினுடைய தொடர்ச்சி – அந்த தொடர்ச்சி கெடாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்தத் தொகுதியிலே வெற்றி பெறச் செய்ய வேண்டுமென நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நான் எனக்காக வாக்குகள் கேட்கவில்லை. உங்களுக்காக வாக்குகள் கேட்கின்றேன் (பலத்த கைதட்டல்). உங்களிலே ஒருவன் நான். உங்களு டைய உற்றார் உறவினர், உடன்பிறப்புக்கள் அத்தனை பேரிடமிருந்து என்னை வேறுபடுத்திப் பார்க்க முடியாத ஒருவன் நான். இந்த ஊரிலேயே விளையாடி, படித்து, இந்த ஊரிலேயே கழகத்தை வளர்த்து, பொதுப்பணியாற்றி, இந்த ஊரிலேயே படித்து, இந்த ஊரிலேயே உங் களுடன் எல்லாம் பழகிய நான் இன்று வாக்குகள் கேட்பதற்குக் காரணம் உங்களையும் என்னையும் வாழ வைக்கிற திராவிட இயக்கத்தை மேலும் மேலும் வளர்ப்பதற்கும் – அந்த இயக்கம் வளர்ந்து இந்த வட்டாரம் வளர்வதற்காக யார் யார் வேர்வை சிந்தினோமோ, யார் யார் ரத்தம் சிந்தினோமோ, யார் யார் பாடுபட்டோமோ, யார் யார் பணியாற்றினோமோ அவர்களெல்லாம் – பலர் இன்று இல்லாவிட்டாலும்கூட இருந்து வருகின்றவர்களை எண்ணிப் பார்த்து இருப்பவர்களையெல்லாம் இரு கரம் கொண்டு அரவணைத்து, அவர்களோடு சேர்ந்து நான் இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் ஆட்சியின் பலன்களை நீங்கள் தொடர்ந்து அனுபவித்து வருகின்றீர்கள்.

நான் அன்று கண்ட திருவாரூர் அல்ல இது. இன்று அறவே மாறிப் போய் இருக்கிறது. இத்தனை கட்டிடங்கள் இல்லாத, இத்தனை மாளிகைகள் இல்லாத, இத்தனை அழகு இல்லாத, இத்தனை ரம்மியமில்லாத திருவாரூர் இன்றைக்கு இப்படி மாறியிருப்பதற்குக் காரணம் நாம் உருவாக்கியிருக்கின்ற ஆட்சிதான் என்பதை நீங்கள் யாரும் மறந்து விட மாட்டீர்கள். அதற்கு நன்றிக் கடனை உங்களோடு நானும் சேர்ந்து ஆற்ற வேண்டியவனாக இருக்கின்றேன்.

நம்முடைய முன்னேற்றம், நம்முடைய வாழ்வு இவைகள் எல்லாம் பெரியாரும், அண்ணாவும் தந்த வரம். இவைகளெல்லாம் நம்மை தொடர்ந்து வாழ வைக்க, நம்முடைய லட்சியங்கள் மேலும் மேலும் விரிவடைந்து நிறைவேற்றப்பட நீங்கள் திருவாரூரிலே

எனக்கல்ல, நமக்கு அளிக்கின்ற ஆதரவு உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து நீங்கள் உருவாக்குகின்ற இந்த வெற்றிச் சின்னம் தமிழகத்தை வாழ வைக்கின்ற சின்னமாக மாறும். தமிழகத்தில் மென்மேலும் வளர்ச்சியை உருவாக்குகின்ற சின்னமாக இயங்கும் என்று குறிப்பிட்டு திருவாரூர்காரன், திருவாரூர்காரர்களிடத்திலே வந்து வாக்கு கேட்கிறான் என்பதை மனதிலே வைத்து, உங்களுடைய அன்பான, பண்பான, உரிமையு டைய வாக்குகளை, உரிமையுடன் எனக்கு அளித்து வெற்றி பெறச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு இப்போது விடைபெற்றுக் கொள்கின்றேன். மீண்டும் மீண்டும் தொடர்ந்து உங்களை சந்திப்பேன். உங்களோடு இருப்பேன். உங்களோடு ஒருவனாக வாழ்வேன் என்று கூறி விடைபெற்றுக் கொள்கின்றேன். மறவாதீர் உதயசூரியன் சின்னம்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

கீழ்வேளூர் தேர்தல் பிரச்சாரத்தில் தலைவர் கலைஞர் அறிவிப்பு

கீழ்வேளூரில் அமைச்சர் உ.மதிவாணனை ஆதரித்து 10.4.2011 அன்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :–

இன்று நானே போட்டியிடுகின்ற திருவாரூர் தொகுதியில் வாக்குகளை வழங்குங்கள் என்று, உடன் பிறப்புக்களை எல்லாம் கேட்டுக்கொண்டு அதற்கிடையே நம்முடைய தம்பி மதிவாணனுக்கு வெற்றியை நீங்கள் தேடித்தர வேண்டும் என்பதற்காக அதற்கு என்னுடைய பணியும் தேவை. என்பதற்காக உங்களையெல்லாம் இந்த நேரத்திலே சந்திக் கின்ற வாய்ப்பு நான் பெற்றிருக்கின்றேன். ஏராளமாக குவிந்திருந்து, எழுச்சி முழக்கத்தோடு என்னை வரவேற்ற உங்களுக்கு என் னுடைய அன்பான நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழகத்தில் எல்லாத் தொகுதி மக்களுக்கும் அவர்களுடைய கோரிக்கைகளை நிறை வேற்றி நல்லரசு நடத்துவது தி.மு.கழகம் என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசி யம் இல்லை. அதை நீங்களே உணர்ந்திருக்கின்றீர்கள். மீனவப் பெருங்குடி மக்களுக்கு உதவி செய்கின்ற வகையில், தி.மு.கழக அரசு என்னென்ன சாதனைகளை புரிந்திருக்கிறது என்பதை நான் ஓரிரு வார்த்தைகளால் எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

விசைப் படகு ஒன்றுக்கு மாதந்தோறும் 1,500 லிட்டர் டீசல் மானிய விலையில் வழங் கப்படுகிறது. நாட்டுப் படகு மீனவர்களுக்கு

300 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படு கிறது. இந்த அளவை விசைப் படகு ஒன்றிக்கு 2000 லிட்டர் டீசல் அளவிற்கும் நாட்டு படகிற்கு 500 லிட்டர் மண் ணெய் என்ற அளவிற்கும் உயர்த்தி வழங்க வழி செய்வோம் என்று இந்த தேர்தல் அறிக்கையில் குறிப் பிட்டிருக்கின்றோம். தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுவிட்டு பிறகு அவற்றை நிறை வேற்றாமல் விட்டு விடமாட்டோம். அதனால் தான் சொன்னதை செய்வோம், செய் வதைத் தான் சொல்வோம் (பலத்த கைதட்டல்) என்று நாங்கள் எங்களுடைய முழக்கத்தையே அவ்வாறு அமைத்திருக்கின்றோம்.

இவைகள் மாத்திரமல்ல, இந்த பகுதி மக்களுடைய கோரிக்கைகளில் ஒன்றான எட்டுக்குடி கிராமத்தில் ஏரியைத் தூர்வாரி அமைப்பது ஒருபிரச்சினை. தண்டியலுடை, மே வொட்டி, கிட்டி, முதலை மேடு ஆகிய 28 ஏக்கர் பரப்பளவு உள்ள இந்த ஓடையில் பகுதிகளையெல்லாம் நான் திருக் குவளை யிலே பிறந்தவன் என்ற காரணத்தால் நன் றாக அறிவேன். திருக்குவளை திருவாரூர் தொகுதி யோடு இணைந்திருக்க வேண்டும்,தொகுதியை பிரித்தவர்கள் திருவாரூர் தொகுதியை இவ்வாறு பிரித்திருக்கிறார்கள். இருந்தாலும் திருவாருரோடு திருக்குவளையிலே பிறந்து திருவாரூரிலே வளர்ந்து இன்று தமிழக மக்களிடையே அன்புக்கும், அவர்களுடைய ஆதரவுக்கும் உள்ளாகி இருக்கின்ற உங்களிலே ஒருவன்தான். (பலத்த கை தட்டல்) உங்களை விட்டு பிரிந்தவனும் அல்ல, உங்களைவிட்டு என்றைக்கும் நான் பிரிந்தவனும் அல்ல, பிரியப் போகின்றவனும் அல்ல, உங்களிலே ஒருவன். உங்களிலே ஒருவன் கேட்கின்றேன், உங்களுடைய ஆதரவை , உங்களுடைய வாக்குகளை தி.மு.கழக ஆட்சி தொடர்வதற்கு அளிக்க வேண்டுமென்று.

இந்த ஆட்சி தொடர்ந்தால்தான் ஏழை எளிய மக்கள் வாழ முடியும். நடுத்தர மக்கள் வாழ முடியும். இல்லாத மக்கள் வாழ முடியும்.

எல்லோருக்கும் நல் வாழ்வு கிடைக்க முடியும். அந்த நிலையை எய்திட தி.மு.கழகத்தை உங்கள் வீட்டு விளக்காகக் கருதி அந்த வெளிச்சத்திலே இந்த கழகத்தை வளர்க்க வாருங்கள், வாருங்கள் என்று கேட்டுக்கொள் கின்றேன்.

நான் முதலிலே குறிப்பிட்ட எட்டுக்குடி ஓடையை தண்டிய ஓடை, மேல ஓடை, கிட்டி முதலை மேடு கொண்ட 25 ஏக்கர் பரப்பளவு உள்ள இந்த ஓடைகளை எல்லாம் இணைத்து தூர் வாரி வடிகால் அமைத்து விவசாயத்திற்கு பயன்படும் வகையிலே ஒரு ஏரி உருவாக்கப்படும் என்று நான் இந்தநேரத்திலே உங்களுக்கெல்லாம் தெரிவித்து எட்டுக்குடியில் நடைபெறுகின்ற காவடி உற்சவம். ஆண்டு தோறும் நடைபெறுகின்ற காவடி உற்சவத்திற்கு நான் அந்த காலத்தில் சென்றிருக்கிறேன். அந்த எட்டுக்குடி புண்ணிய சேஸ்த்திரம் "எட்டுக்குடி முருகனுக்கு வேல், வேல்'' என்ற அந்த பிரார்த்தனைகளை யெல்லாம் நான் கேட்டிருக்கின்றேன். இப்போதும் அவைகள் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அந்த முருகனுடைய பெயரால் அமைந்துள்ள எட்டுக்குடி இன்னொரு புறம் கீழ்வேளூர் , சிக்கல் – முருகன் ஆலயம்தான் – சிங்காரவடிவேலன் இங்கே! எட்டுக்குடி முருகன் அங்கே! இந்த இரண்டு கடவுள்களும் வீற்றிருக்கின்ற இந்த ஸ்தலங்களுக்கிடையே அந்த ஏரியை – 25 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரி ஓடையை இணைத்து புதிய ஏரியை உருவாக்குவோம் என்று கூறி, அந்த ஏரியினுடைய திறப்பு விழாவிற்கு நான் அவசியம் வருவேன். (பலத்தகை தட்டல்) உங்களையெல்லாம் காண்பேன் என்று கூறி விடைபெறுகிறேன்!

மறவாதீர் உதயசூரியன் சின்னம்.

****

திருவாரூர் தொகுதியில்
தலைவர் கலைஞர் பிரச்சாரம்

திருவாரூர் தொகுதியில் 11.4.2011 அன்று வாலவாய்க்கால் ரவுண்டானா அருகில் தலைவர் கலைஞர் அவர்கள் வாக்குச் சேகரித்து ஆற்றிய உரை வருமாறு:–

நடைபெறவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் உங்களுடைய அன்பான அருள்மிகுந்த திருக்கையில் தி.மு.கழக கூட்டணிக்கு வாக்கினை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, யாரை தமிழகத்தினுடைய ஆளுங்கட்சி பீடத்திலே அமர வைப்பது என்று தீர்மானிப்பதற்கு உங்களுடைய நேர்மையான, நியாயமான முடிவை அறிவிக்க அதற்கான ஆதரவினை உங்களிடத்தில் கோர இன்றும் நாளையும் நம்முடைய தொகுதியிலே நான் சுற்றுப் பயணம் முடிவு செய்து , இடையிலே தமிழகம் முழுவதும் உற்றார் உறவினர், சுற்றத்தார் என்றெல்லாம் என்று வாக்குகள் கேட்டதால் இன்று உடன்பிறப்புக்கள் வாழுகின்ற என் தாயின் ஊரிலேயே என் தாயின் ஊரிலேயே – இடத்திலே உங்களுடைய வாக்குகளைக் கேட்க உங்களிடத்திலே வந்திருக்கின்றேன்.

நான் தமிழகத்தின் ஆளும் பொறுப்பை ஐந்து முறை ஏற்று – ஐந்து முறைகளிலும் அருமையான பல திட்டங்களுடைய நம்முடைய கட்சியினுடைய கொள்கை களுக்கு ஏற்ப சமுதாய சமத்துவத் திட்டங்களை ஏழை எளியவர்களுக்கான திட்டங்களை நிறைவேற்றி வருவதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள்.

பாட்டாளிகளுக்கு உழைப்பாளிகளுக்கு வியர்வை சிந்துபவர் களுக்கு என்று உருவான இயக்கம், தி.மு.கழகம். அதையொட்டி தோழமைக் கட்சிகளான இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள்

கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளுடன் தோழமை கொண்டு ஜனநாயக முற்போக்குக் கூட்டணியை உருவாக்கி அதன் வேட்பாளர்களில் ஒருவராக என்ன இந்த திருவாரூருக்கு நியமித்து உங்களுடைய ஆதரவினை கோர, ஆணையிட்டிருக்கின் றார்கள்.

அந்த ஆணையை நிறைவேற்றுகின்ற வகையில் நான் உங்களுடைய ஆதரவு கரம் கிட்டும் என்ற நம்பிக்கையோடு திருவாரூரில் அடியெடுத்து வைத்திருக்கின்றேன். திருவாரூர் எனக்கு புதிதல்ல, நான் பிறந்து வளர்ந்த பகுதி மாத்திரமல்ல – தவழ்ந்து விளையாடிய பகுதி மாத்திரமல்ல – படித்து வாழ்ந்த பகுதி மாத்திரமல்ல – தந்தை பெரியாரிடத்தில் – பேரறிஞர் அண்ணா விடத்தில் – பகுத்தறிவு அமுதம் பருகிய பகுதியும் திருவாரூர் பகுதிதான்.

அத்தகைய திருவாரூரிலிருந்து நீங்கள் என்னை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்குக் காரணம், திருவாரூரிலே நான் வேறு பல தொகுதிகளில் குளித்தலையில் தொடங்கி தஞ்சாவூர், சென்னை என்று பல தொகுதிகளிலே வெற்றிபெற்றிருக்கின்றேன் – தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றேன். ஆனால் தாய் வீட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுவது பிரதானமானது என்பதே எல்லாவற்றையும் விட பாக்கியமானது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். நானும் அறிந்திருக்கின்றேன். அப்படியானால் ஏன் கடந்த தேர்தலில் இங்கே போட்டியிடவில்லை என்றால் அப்பொழுது இது பொது தொகுதியாக இல்லை. தனித்தொகுதியாக மாற்றப்பட்டிருந்தது. நான் வந்து போட்டியிடுவேன் என்பதற்காகவே இந்த தொகுதியை நீண்ட காலம் தனித் தொகுதியாகவே வைத்திருந்தார்கள். இப்பொழுது பொதுத் தொகுதியாக ஆகியிருக்கின்ற காரணத்தால் நான் இந்தத் தொகுதியிலே உங்களுடைய பேராதவைக் கோரி போட்டியிட வந்திருக்கின்றேன். நீங்கள் ஆதரவு கரம் நீட்டினால் பல லட்சக்கணக்கான மக்களுக்கு ஆதரவு கரம் நீட்டுகின்ற இந்த ஆட்சியை நடத்துவதற்கு ஆதரவு கரம் நீட்டியவர்களாக ஆவீர்கள்.

ஆகவே நான் உங்களை பணிந்து கேட்டுக் கொள்கின்றேன். உங்களிடத்திலே அன்போடு கேட்டுக் கொள்கின்றேன். உங்களிடத்திலே இருக்கின்ற அருள் நெஞ்சத்தை எனக்கு வழங்கி என்னை உங்களுடைய வீட்டுப் பிள்ளையாக, உங்களுடைய சகோதரர்களில் ஒருவராக – உங்கள் அண்ணன் தம்பியாக நான் எப்படி உங்களில் ஒருவனோ அதைப்போல என்னை நீங்கள் உங்களில் ஒருவனாக பாவித்து வெற்றியைத் தேடித் தாருங்கள். வெற்றியிலே வெறி கொண்டு அலைபவர்கள் அல்ல நாங்கள்.

வெற்றியை பயன்படுத்தி உங்களுக்காக பாடுபடக்கூடிய பக்குவம் பெற்றவர்கள் – அத்தகைய பக்குவத்தைப் பெற்ற எங்களை உங்களுக்காக பயன்படுத்தக்கொள்ளுங்கள் என்று கேட்கின்றேன். இந்த மண்ணின் மைந்தனாக கேட்கின்றேன், உங்களின் அன்புத் தோழனாக கேட்கின்றேன்.

உங்களுடைய அன்பின் மைந்தனாக கேட்கின்றேன். உங்களுக்கு ஊழியம் புரிய எனக்கு உத்தரவிடுங்கள் என கேட்கின்றேன். உத்தரவிட வேண்டிய இடத்திலே இருக்கின்ற முதலமைச்சர் பதவி என்றாலும் கூட நான் உங்களிடத்தில் உத்தரவிடுங்கள் என்று கேட்கின்றேன்.

இந்த நாடு வாழ, நலிவு தீர நான் இதுவரையிலே ஆற்றியிருக்கின்ற பணிகளைவிட, இன்னும் என்னென்ன பணிகள் ஆற்ற வேண்டும் என்பதை வகுத்தளித்து ஆணையிடுங்கள், அந்த பணிகளை நான் நிறைவேற்றுவதற்கு உத்தரவிடுங்கள் என்று கேட்டு, மிகுந்த குதூகலத்தோடு – எழுச்சியோடு – முகமலர்ச்சியோடு – மன மகிழ்ச்சியோடு இங்கு குழுமியிருந்து என்னை வரவேற்று, வாழ்த்துகின்ற உங்களுக்கு நான் எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை. நன்றியை நீங்களும் நானும் ஒருவருக்கொருவர் பறிமாரிக்கொள்வோம் எனக் கூறி உதயசூரியன் என்றுரைத்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

திருவாரூரில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சார நிறைவு பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அன்பு வேண்டுகோள்!

திருவாரூரில் 11.4.2011 அன்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார நிறைவு பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

நேற்றும் இன்றும் திருவாரூர் பகுதியில் வாக்கு கேட்கின்ற அரும்பணியினை ஆற்றிவிட்டு விரைந்து இந்தக் கூட்டத்திலே கலந்து கொள்ள வேண்டும் என்று சரியான நேரத்திலே வந்து உங்களையெல்லாம் காணுகின்ற வாய்ப்பை பெற்றிருக்கிறேன். தோழமைக் கட்சியைச் சார்ந்த நல்ல சொற்பொழிவாளர்கள் மேடையிலே இருந்தும் கூட வேட்பாளராகிய நான் வேண்டுகோள் விடவேண்டும் என்பதற்காக அவர்களெல்லாம் விட்டுக் கொடுத்து உங்களோடு என்னை பேச வைத்ததற்காக நன்றி கூறிக்கொள்கிறேன்.

நான் திருவாரூர் மேடையில் எத்தனையோ கூட்டங் களில் பேசியிருக்கிறேன். எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றியிருக் கிறேன். எத்தனையோ விழாக்கள், வைபவங்கள் இவற்றிலெல்லாம் கலந்து கொண்டு உங்களோடு அளவளாவி யிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு மணவறைக்கு வந்த புதுப்பெண்ணைப் போல நான் உங்கள் முன்னால் உட்கார்ந்திருக்கிறேன். காரணம், மற்றவர்களுக்கெல்லாம் ஆதரவு கேட்டு, துணை நின்று ஒவ்வொரு வேட்பாளருடைய பெயரையும் சொல்லி அவர்களை ஆதரிக்க வேண்டுமென்று மாநிலம் முழுவதும் – மாவட்டந்தோறும் –

வட்டங்கள் நீங்கலாக நான் வாக்கு கேட்க முற்பட்டு பல்லாயிரக்கணக் கானவர்களை ஒன்றல்ல இரண்டல்ல பல தேர்தல்களில் சந்தித்திருக்கிறேன்.

என்னை 1957ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா அவர்கள் நீ தேர்தலிலே போட்டியிடு என்று ஆணையிட்ட போது, எந்தத் தொகுதி என்பதைப் பற்றி ஆய்வு செய்து நாகப்பட்டினம் தொகுதியிலே அப்பொழுது போட்டி யிடுவதற்காக வந்து நண்பர் களையெல்லாம் கலந்து ஆலோசித்து சென்னைக்கு சென்று அண்ணா அவர்களிடத்திலே நாகப்பட்டினம் தொகுதியில் நான் நிற்கிறேன் என்று சொன்னபோது, அண்ணா சொன்னார் –"வேண்டாம். நீ அங்கே நிற்பதாக இருந்தால் உன்னுடைய சொந்த ஊரான திருவாரூர் தொகுதியில் தான் நிற்க வேண்டும். அது தனித் தொகுதியாக ஆக்கப்பட்டுவிட்ட காரணத்தால் குளித்தலையிலே நில்'' என்றார். அன்று முதல் இன்று வரை அண்ணா பேச்சுக்கு என்றைக்குமே எதிர் பேச்சு பேசாத நான் சரி என்று ஒத்துக்கொண்டு குளித்தலையிலே போட்டியிட்டு வெற்றி பெற்றேன்.

அதற்கு பிறகு தொடர்ந்து 11 தேர்தல் என்று கருதுகிறேன். எல்லாவற்றிலும் – பல்வேறு தொகுதி களிலே தஞ்சை, சென்னை போன்ற தொகுதிகளில் போட்டியிட்டு 11 முறை நான் சட்டமன்ற உறுப்பின ராக வெற்றி பெற்று சட்டசபைக்கு சென்றிருக்கிறேன். இப்பொழுது நீங்கள் என்னை அனுப்பி வைத்தால் 12வது முறையாக சட்டமன்றத்திற்கு என்னை நீங்கள் அனுப்பி வைத்ததாக பொருள். 12 என்பது தஞ்சை மாவட்டத்திலே மிக முக்கியமான எண். பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை தான் மாமாங்கம் வரும். மாமாங்கத்தை ஞாபகப்படுத்தும்போது உங்களுக்கு என்ன நினைவு வரும் என்று நான் ஞாபகப்படுத்த விரும்பவில்லை; அதை விட்டு விடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தி னுடைய தொண்டனாக நான் அறிஞர் அண்ணா அவர்களால் அடையாளம் காணப்பட்டு, தந்தை

பெரியார் அவர்களால் பகுத்தறிவு ஊட்டப்பட்டு, இந்தத் திருவாரூரில் இப்போது நோயுற்று நலிவுற்று மேடையிலே என்னை வா என்று அழைத்தாரே தென்னன் அவரோடு விளையாடிய தெருதான் இந்த கீழவீதி. அவர் மாத்திரமல்ல என்னோடு படித்த பார்ப்பன மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த கீழவீதியிலே என்னோடு சேர்ந்து விளையாடியிருக்கிறார்கள். அவர்களிலே பலர் இன்றைக்கு இல்லை. ஆனால், அவர்களுடைய நினைவு என்றைக்கும் எனக்கு இருக்கும்.

இன்றைக்குக்கூட வழியிலே "போர்டு ஹை ஸ்கூல்" மாணவர்களுடைய புகைப்படம் ஒன்றை பல ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த புகைப்படம் ஒன்றை ஒரு சிறுமி வழியிலே எனக்குப் பரிசாக தந்தார். அதை பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு பார்த்தால் அது போர்டு ஹை ஸ்கூலிலே எந்த நண்பர்களோடு நான் அன்றைக்கு இருந்தேன் என்பதையெல்லாம் தெரிவிக்கின்ற படம். எவ்வளவோ நினைவுகள் எனக்கு. அந்த வயதிலே பள்ளியிலே படிக்கும்போது இந்தி கற்பிக்க வந்த ஆசிரியரை நானும் சில நண்பர்களும் சேர்ந்து கொண்டு கேலி செய்தும், நாங்கள் உங்களிடத்திலே – உங்களிடத்திலே அல்ல; யாராக இருந்தாலும் அவர்களிடத்தில் இங்கே வந்து திணிக்கப்படுகின்ற கட்டாய இந்தியை படிக்க மாட்டோம் என்று துணிவாக உரைத்ததும், "ஓடி வந்த இந்தி பெண்ணே கேள்; நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்லவே" என்று பாடிக் காட்டியதும் எனக்கு நினைவிற்கு வருகிறது.

இப்படி அரும்பு பிராயத்திலே பள்ளிக்கூடத் திலேயே அய்யாவினுடைய கொள்கை, அண்ணா வினுடைய இலட்சியம் இவைகள் மனதில் பதிந்து – நான் சுயமரியாதைக்காரனாக மாணவப் பருவத் திலேயே என்னுடைய வாழ்க்கையைத் தொடங்கினேன். இப்பொழுதும் சுயமரியாதைக்காரன் தான். சுயமரியாதைக்காரன் என்ற காரணத்தால்தான் நான் ஆத்திகர்களுக்கோ பக்தர்களுக்கோ யாருக்கும் எந்த நேரத்திலும் எந்தத் தீங்கும் இழைப்பவன் அல்ல;

கொள்கை வேறு, ஆக்கம் வேறு. திருவாரூர் தேர் எத்தனை ஆண்டு காலமாகிவிட்டது அது செய்யப் பட்டு. அது ஓடாமல் கிடந்ததும் உண்டு. ஏழத்தாழ 30 ஆண்டு காலம் அந்தத் தேர் ஓடாமல் இருந்ததை நீங்கள் அறிவீர்கள். அதைப் பற்றி நான் சட்டமன்றத்திலே முதலமைச்சராக வீற்றிருந்தபோது – இப்பொழுதும் அப்படித்தான் இருக்கிறேன் – தம்பி காளிமுத்து எதிர்க்கட்சியிலே இருந்தார். எம்.ஜி.ஆர். கட்சியிலே அப்போது அவர் இருந்தார். அவர் என்னைப் பார்த்து, "தேரோட்டம் இன்றைக்கு திருவாரூரில் நடக்கிறதா?" என்று கேட்டார். தெரியவில்லை என்றேன். "ஏரோட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே தேரோட்டம் ஏன் உனக்கு தியாகராஜா" என்று பாடினீர்களே இன்றைக்கு அந்தத் தேரோட்டத்தை அனுமதிக்கிறீர்களா என்று கேட்டார். நான் சொன்னேன், இப்பொழுது தேர் ஓடுகிறது. நாங்கள் அனுமதிக்கிறோம். நானே அதற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறேன் என்றேன். உடனே கேட்டார் அவர், அது எப்படி? அன்றைக்கு மாணவர் பருவத்திலே "ஏரோட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே தேரோட்டம் ஏன் உனக்கு தியாகராஜா" என்று கேட்டீர்களே இப்பொழுது என்ன ஆயிற்று. நான் அந்தப் பாட்டை எழுதும் பொழுது ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித் தவித்தார்கள் அந்த ஆட்சியில், அவர்களெல்லாம் இன்றைக்கு நல்ல முறையில் இருக்கிறார்கள். அவர்கள் நன்றாக வாழ்கிறார்கள். ஆகவேதான், "ஏரோட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே தேரோட்டம் ஏன் உனக்கு தியாகராஜா" என்று கேட்டது அந்த மக்கள் ஏங்கித் தவித்துக் கொண் டிருந்த காலத்திலே – இன்றைக்கு அந்த மக்கள் ஏங்கித் தவிக்கவில்லை. ஆகவே தேர் ஓடுவதில் தவறில்லை. அது மதவாதிகளுடைய கொள்கை – ஆத்திகர்களுடைய கொள்கை – அதை நான் தடுக்கமாட்டேன், எதிர்க்க மாட்டேன் என்று குறிப்பிட்டேன்.

சொல்வதற்கு காரணம், ஆட்சி வேறு; ஆட்சி யாளர்களுடைய கொள்கை வேறு. அந்தக் கொள் கையை நடைமுறைப்படுத்த – அந்தக்

கொள்கையை மக்களிடத் திலே எடுத்துச் சொல்ல – அதைத் திணிக்காமல் அந்தக் கருத்துக்களை சொல்ல வேண்டுமேதவிர திணிக்கக் கூடாது என்பது என்னு டைய வாதம். அந்த வாதத்திலே எந்தக் கொள்கையிலும் யாரிடத்திலும் நாங்கள் திணிக்காமல் இருக்கின்ற காரணத்தினால்தான் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், நான் அவருக்கு பிறகு அந்த பொறுப்பை ஏற்றபோதும் – எங்கேயும் நாங்கள் எங்களுடைய சுயமரியாதைக் கொள்கையை திணித்து ஆத்திகர்களுடைய மனதை புண்படுத்தியதில்லை. எனவே இப்பொழுதும் ஆரூரிலே வாழ்கின்ற ஆன்மீக மக்களுடைய மனதை நான் புண்படுத்தவில்லை. எதிர்காலத்திலேயும் புண்படுத்த மாட்டேன் என்பதை உறுதியாக சொல்லிக் கொள்கிறேன். அவர்களாகவே புரிந்து கொண்டு தெளிவடைய வேண்டுமேயல்லாமல், பகுத்தறிவு என்பது பாலைப் போல, தேனைப் போல ஊட்டப்படுகின்ற ஒன்றல்ல. பகுத்தறிவு என்பது பரப்பப்படுவது. அதை ஏற்றுக் கொள்கிற மனிதர்கள் பகுத்தறிவுவாதிகளாக மாறுகிறார்கள். ஏற்றுக் கொள்ளாதவர்கள் நாங்கள் உங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்னாலே நாங்கள் அதை திணிக்கின்ற வகையிலே என்றைக்கும் நாங்கள் ஈடுபட்டதில்லை. அதனால் சிலவற்றுக்கு சட்டம் தேவைப்படுகிறது.

தமிழ்நாட்டில் இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் வழிபடுகின்ற கோயில்களில் எல்லோரும் சென்று அந்த கோயிலிலே வழிபடவேண்டும். அதிலே சாதி வேறுபாடு கூடாது என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இன்றைக்கும் நாங்கள் அமல்படுத்தி வருகின்றோம். கடைப்பிடித்து வருகின்றோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கடவுளுக்கு எதிரி அல்ல; ஒருவேளை வேண்டுமானால் கடவுள் எங்களுக்கு எதிரியாக இருக்கலாம். நாங்கள் கடவுளுக்கு எதிரி அல்ல. என்னைக் கேட்டார்கள், நீங்கள் கடவுளை ஏற்றுக் கொள்கிறீர்களா

என்று கேட்ட போது நான் சொன்னேன்; கடவுளை நான் ஏற்றுக் கொள்வது முக்கியமல்ல, பிரச்சினையே அது அல்ல. கடவுள் என்னை கொள்கிற அளவுக்கு நான் நடந்து கொள்கிறேனா என்பதுதான் பிரச்சினை. எனவே ஆத்திக – நாத்திக ?– விவகாரம் அந்த அளவோடு என்னைப் பொருத்தவரையிலே முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட ஒன்று. ஆனால் ஒரு மனிதனுடைய சுயமரியாதையை – ஒரு மனிதனுடைய தன்மானத்தை குலைக்கின்ற எந்த ஒன்றையும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஏற்றுக் கொள்ளாது. அந்தக் கழகத்திலே ஒரு சிப்பாயாக இருக்கின்ற நானும் ஏற்றுக் கொள்ளமாட்டேன். இந்த ஊரிலே பிறந்தேன்; இந்த ஊரிலே பிறந்தேன் என்றால் திருவாரூருக்குள்ளேயே பிறந்தேன் என்று அர்த்தமல்ல. இதோடு இன்னும் சேர்க்கப்படாமல் இருக்கின்ற திருக்குவளை பகுதியிலே இருந்து வந்தவன் நான். திருக்குவளையிலே பிறந்தேன். என்னுடைய தந்தை ஆத்திகர் – நெற்றி நிறைய திருநீர் பூசியிருப்பார். அப்படிப்பட்டவர், என்னை எங்கள் சமுதாயத் தினுடைய முறைப்படி எனக்கு இசை கற்றுக்கொடுக்க இசைத் தொழிலிலே ஈடுபடுத்த விரும்பினார். நானும் என் தந்தையின் பேச்சைக் கேட்டு இரண்டு நாள் எனக்கு இசைக் கற்பிக்கின்ற ஆசானிடம் சென்றேன். இரண்டு நாள் கழித்துப் பார்த்தல், ஒரு பெரிய முதலாளி, முதலாளி என்று சொல்ல முடியாது. முதலாளி போல காட்டிக்கொள்ளக் கூடியவர். அவர் தெரு வழியாக சென்றார், அப்பொழுது என் தந்தை எழுந்து வணக்கம் சொன்னார். அதுகூட பரவாயில்லை என்று எனக்கு பட்டது. அடுத்தது என் தந்தை தன் தோளில் கிடந்த துண்டை இடுப்பிலே கட்டிக்கொண்டு, வணக்கம் செலுத்தினார். அதைப் பார்த்தவுடன் எனக்கு பகீர் என்றது. ஏன் இப்படி செய்ய வேண்டும் என்ற கேள்வி என் நாடி நரம்பெல்லாம் புகுந்து என்னைக் குடைந்தது. எனக்கு கிடைத்த பதில் அவர்கள் எல்லாம் பெரிய மனிதர்கள், பெரிய சாதிக்காரர்கள், நாம் அவர் களுக்கெல்லாம் மரியாதை செலுத்த கடமைப்பட் டவர்கள். ஆகவே எழுந்து நின்று மரியாதை செலுத்துவது மாத்திரமல்ல. மேலே

இருந்த துண்டை எடுத்து இடுப்பிலே கட்டிக்கொள்வதுதான் முறை என்றார். நான் உடனடியாக என் தந்தையை பார்த்து, எனக்கு இசையைக் கற்றுக்கொடுக்க வேண்டாம். எனக்கு இசை தேவையில்லை. நான் தன்மானத்தோடு வாழ விரும்புகிறேன். இந்த சமுதாயத்தையே கீழ்த்தரமாக ஆக்குகின்ற ஒரு நிலையை நான் விரும்பவில்லை. ஆகவே என்னை விட்டுவிடுங்கள் என்று இசையை விட்டு விட்டேன்.

இசைத் தொழில் கேவலமான தொழில் அல்ல. ஆனால் இசைத் தொழிலிலே ஈடுபடுபவர்கள் பெரிய மனிதர்களுக்கு, பெரிய சாதிக்காரர் களுக்கு அடிமைகளைப்போல நடக்க வேண்டும். என்ற அந்த கருத்தை என்னால் ஏற்க முடியவில்லை. இன்று வரையில் அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் காரணமாகத்தான் நான் படிக்க வைக்கப்பட்டு, படிப்பிலே நான் நடைபெற்ற தோல்வில் தோல்வியுற்று அதற்கு பிறகு ஏதாவது ஒரு வேலை பார்க்கலாம் என்று எண்ணியபோது வேலைக்கும் நான் என்னை தகுதிப்படுத்திக் கொள்ளாமல் ,அதன் காரணமாக அறிவியக் கத்தில் சுயமரியாதை இயக்கத்தில் திராவிட இயக்கத்தில் என்னை ஒரு தொண்டனாக அன்றைக்கே ஆக்கிக்கொண்டேன்.

நான் தொண்டனாக இருந்தபோது அந்தக் காலத்திலே கான்பகதூர் கலிபுல்லா சாஹிப் அவர்கள் தலைமையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநாடு திருவாரூரிலே விஜயபுரத்தில் நடந்தபோது அந்த மாநாட்டினுடைய தொண்டர் படையிலே நான் ஒருவனாக இருந்தேன். முஸ்லிம் லீக் மாநாட்டி னுடைய தொண்டர் படையில் நான் ஒருவனாக இருந்தேன்.

அதை அடுத்துதான் தந்தை பெரியாருடைய பழக்கமும், நட்பும் பரிவும், அவருடய பாராட்டுதலும் அவருடைய அரவணைப்பும், அதே போல அறிஞர் அண்ணாவுடைய அன்பும், பாசமும், பற்றும் என்னை

பிணைத்துக் கொண்ட காரணத்தால் நான் இந்த இயக்கத்தின் முன்னணி பிள்ளைகளில் ஒருவனாக ஆனேன்.(பலத்த கை தட்டல்)

இந்த இயக்கத்திலே யார் யார் இருந்தார்கள்? இப்போது அவர்கள் எல்லாம் எங்கே போய் விட்டார்கள்? அவர்கள் எங்கும் போய் விடவில்லை. மறைந்து விட்டார்கள். தளபதி அழகிரிசாமி என்ன,? பொன்னம்பலனார் என்ன? எஸ்.வி. லிங்கம் என்ன? ஏன் திருவாரூரையே எடுத்துக்கொள்ளுங்களேன். தண்ட வாளம் ரங்கராஜன் என்ன? முத்துகிருஷ்ணன் என்ன, சிங்காராயர் என்ன? இவர்கள் எல்லாம் ஒரு காலத்திலே நாங்கள் பேசுகின்ற மேடையிலே அவர்கள் வந்து அமர்ந்து, எங்களை மேலும் மேலும் ஊக்கப்படுத்தி யவர்கள் , அவர்கள் எல்லாம் இன்றில்லை. அவர்கள் எல்லாம் இல்லாவிட்டாலும், அவர்கள் உருவாக்கிய உணர்வுதான் இப்பொது உங்கள் முன்னால் கருணாநிதியாக உட்கார்ந்திருக்கிறேன் (பலத்த கை தட்டல்)

தம்பி டி.ஆர். பாலு இன்றைக்கு தி.மு.கழகத்தி னுடைய பாராளுமன்றக் கட்சியின் குழுத் தலைவர். இவர் இதற்கு முன்பு மத்தியிலே அமைச்சராக இருந்தார். எங்களுடைய ஆற்றல், எங்களுடைய சக்தி, பெருமை இவைகளை சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை. நீங்கள் தஞ்சை மாவட்டத்தைத் தாண்டி கொஞ்சம் திருச்சி மாவட்டம், திருச்சி மாவட்டத்தைத் தாண்டி சேலம் மாவட்டம், சேலம் மாவட்டத்தைத் தாண்டி கோவை மாவட்டம், கோவை யைத் தாண்டி சென்னை என்று வந்தீர்களேயானால் அங்கே இருக்கின்ற நீண்ட நெடும் பாலங்களெல்லாம் பாலு பெயரைச் சொல்லும். (பலத்த கைதட்டல்) ஆனால் அந்த பாலுவினுடைய பணி மேலும் தொடர முடியாமல் ஆனதற்கு என்ன காரணம். மத்திய அரசிலே சேது சமுத்திரத்திட்டம் என்ற மகா. உன்னதமான திட்டத்தை நிறைவேற்ற அண்ணா காலத்தில் இருந்து தொடங்கி அதற்கான ஆயத்தப் பணிகள் எல்லாம் நடை பெறும்பொழுது, சேது சமுத்திரத் திட்டத்தை நிறுத்தியே

ஆக வேண்டும், அது இராமருக்கு ஆகாது என்று சொன்னார்கள். இராமர் எங்கும் வந்து சேது சமுத்திரத் திட்டத்தை வேண்டாம் என்று சொல்ல வில்லை. அந்த திட்டத்தை நிறைவேற்றினால் தமிழகத்திற்கு உலகத்தோடு பெரிய தொடர்பு ஏற்படும். அப்படி ஏற்பட்டால் தமிழ்நாட்டி னுடைய பொருள் உலகச் சந்தையில் விற்பனைக்குப் போகும். உலகச் சந்தையில் இருந்து தமிழ்நாட்டிற்கு விற்பனைக்கான பொருள் வரும். அதனால் ஏற்படுகின்ற வணிகப் பெருக்கம் ஈடு இணையற்ற முறையிலே தமிழகத்தை உலகத்தின் உச்சத்தில் உட்கார வைக்கும் என்று இதைப் பார்த்து பொறாமை கொண்டவர்கள் தான் வேண்டு மென்றே இராமர் மீது பழியை சுமத்தி, இராமர் இந்த பாலத்தை வேண்டாம் என்கிறார் என்றெல்லாம் சொல்லி அந்த பாலத்தினுடைய பணி இன்றைக்கு நின்று போய்விட்டது. இவைகளை யெல்லாம் நினைத்து பார்க்கிறேன். பல்லாயிரக்கணக் கான ரூபாய் செலவழித்து திட்டத்தை நிறைவேற்றிட நம்முடைய பாரதத்தை ஆளுகிற கட்சி காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி அவர்கள் முன் வந்தும் கூட , பிரதமர் மன்மோகன்சிங் அதற்கு உடன் பட்டும் கூட, இவைகளெல்லாம் தொடங்கியும் கூட, ஒவ்வொரு மாவட்டத்திலும் அதற்கான கருத்தாய்வுகள் எல்லாம் நடைபெற்று, பெரும்பான்மையோர் அதை ஏற்றுக் கொண்டும் கூட, இன்றைக்கு நீதிமன்றத்தின் தலையீட்டால் அது நின்றுபோய் கிடக்கிறது.

நான் உங்களுக்குச் சொல்லுவேன், இந்தத் தேர்தலிலே நானும் தி.மு.கழகமும் வெற்றி பெற்றால் நாங்கள் மத்தியிலே இருக்கிற அரசை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி, சேது சமுத்திரத் திட்டம் மறுபடியும் தொடங்கப்பட வேண்டும் என்று கேட்போம். அது தம்பி பாலுவினுடைய அரிய முயற்சி யினால் அந்தத் திட்டம் நிறைவேறி எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கக் கூடிய வகையிலே எல்லா நாடுகளுக்கும் பயன் அளிக்கக்கூடிய வகையிலே அது விளங்கும் என்ற அந்த நிலையையும் நான் உங்களுக்கு இந்த கூட்டத்திலே உறுதியாக அறிவிக்க விரும்புகின்றேன்.

இவைகளையெல்லாம் நான் சொல்வதற்கு காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ எங்களைப் போன்ற சிலபேருக்கு பதவி கிடைக்கும் என்பதற்காகத் தொடங்கப்பட்ட கழகம் அல்ல. எங்களைப் போன்ற சிலர் செத்து மடிந்தாலும் கவலையில்லை, எங்களு டைய மொழிக்கு தகுதி வேண்டும், எங்களுடைய மொழிக்கு பெருமை வேண்டும், எங்களுடைய தமிழுக்கு இப்போதுள்ள சீரும் சிறப்பும் மேலும் பெருகிட வேண்டும் என்பதற்காக தொடங்கப்பட்ட இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம். அந்தக் கழகத்தை வீழ்த்த வேண்டுமென்று திராவிட இயக்கத்தின் உணர்வையே பொசுக்கி விட வேண்டும், அழித்து விட வேண்டு மென்று சிலர் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாலும் கூட, முடியாது. ஏனென்றால் "திராவிட'' என்ற அந்தச் சொல்லை நானோ அல்லது என்னை உருவாக்கிய தந்தை பெரியாரோ உருவாக்கி யதல்ல. "திராவிட'' என்ற சொல் நம்முடைய இலக்கி யங்களிலே இருக்கின்ற சொல். "நீராரும் கடலுடுத்த'' என்ற தமிழ்த் தாய் வாழ்த்திலே கூட, "திராவிட'' என்ற சொல் வருகிறது. "திராவிட'' என்ற சொல் தேசிய கீதத்தில் "திராவிட உத்கல வங்க'' என்று வருகிறது. எனவே எவராலும் "திராவிட'' என்ற சொல்லை அகற்ற முடியாது. அதனால் தான் இன்றைக்கு தமிழ்நாட்டிலே திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இந்தக் கழகங்களுக்குப் பிறகு, புதிது புதிதாக கட்சி ஆரம்பிக்கிறார்களோ – நாளைக்கு ஒரு கட்சி – காலையிலே ஒரு கட்சி – மாலையிலே ஒரு கட்சி – அப்படி கட்சி ஆரம்பிக் கின்ற யாரும் திராவிட என்ற இந்த அடைமொழியை சேர்த்துத் தான் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் "திராவிடத்தை'' ஒத்துக் கொள்கிறார்களோ இல்லையோ – "திராவிடத்தை'' அவர்கள் பாராட்டுகிறார்களோ இல்லையோ – "திராவிட'' என்ற சொல்லை மதிக்கிறார்களோ இல்லையோ – நம்மைத் தாக்குவதற்காக "திராவிட'' என்ற சொல்லை இழித்தும்

பழித்தும் பேசியவர்கள் எல்லாம் கூட இன்றையதினம் அந்தச் சொல்லை தாங்கள் ஆரம்பிக்கின்ற கட்சிகளுக்குப் பயன்படுத்து கின்ற நிலையை நாட்டில் பார்க்கிறோம். அதை நான் குறை சொல்லவில்லை. அந்த நிலை வளரட்டும். எப்படியோ எங்கள் "திராவிடம்'' வளர்ந்தால் சரி. யார் சொன்னாலும் சரி, எங்கள் திராவிடம் ஆங்காங்கு பேசப்பட வேண்டும். எங்கள் திராவிடம் புகழப்பட வேண்டும். உலகத்தின் தொடர்புகளுக்கெல்லாம் ஒரு காலத்தில் திராவிட நாடு தான் – திராவிட நாட்டுக் கப்பல்கள் தான் – தமிழகத்தின் நாவாய்கள் தான் பயன்பட்டன. எங்களை இணைக்கின்ற வரலாறுகள், சரித்திரங்கள் – இவைகள் எல்லாம் – நான் சொல்கிறேன் – திராவிட முன்னேற்றக் கழகம் புதிதாக இன்றைக்கு எழுதியவைகள் அல்ல. இவைகள் எல்லாம் அன்றைக்கு இருந்தவைகளை எடுத்து மக்களுக்குச் சொல்லப்படுபவை.

"திராவிட உத்கல வங்க'' என்ற தாகூர் சொன்னதை எடுத்துச் சொன்னதும் – அதைப் போல திராவிட என்ற சொல் – எங்கெங்கே வருகிறதோ அதையெல்லாம் சுட்டிக்காட்டி – இதைத் தான் நாங்கள் எங்கள் இயக்கத் திற்கு பெயராக வைத்திருக்கிறோம் என்று குறிப்பிடுகிறோம். அப்படிப் பட்ட இயக்கம் திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்தக் கழகத்தை வீழ்த்திவிட – அழித்து விட யாராவது முனை வார்களே யானால், முனைபவர்கள் தான் அழிவார்களே தவிர, இந்த இயக்கம் அழியாது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட் டிருக்கிறேன். அவர்களுக்கு இதை அறிவுரையாக, எச்சரிக்கையாகக் கூட அல்ல, அறிவுரையாகச் சொல்ல விரும்புகிறேன்.

இதிலும் ஒரு போட்டி என்றால் – வெறுப்பின் அடிப்படையிலே அந்தப் போட்டி இருக்கக் கூடாது. இலக்கியப் போட்டி, காவியப்

போட்டி, கலைப் போட்டி, கவிதைப் போட்டி – அதைப் போலத் தான் அரசியலில் இருக்கிற போட்டிகளும் அமைய வேண்டும். இன்றைக்குக் கூட இந்தத் தேர்தலிலே நானும் எதிர்க்கட்சி நண்பரும் போட்டியிடுகிறோம் என்றால் ஒருவருக் கொருவர் சண்டை போட்டுக் கொண்டடல்ல. அப்படி இருக்கக் கூடாது. இந்தத் தொகுதிக்கு யார் நன்மைகளைச் செய்வது, யார் இந்தத் தொகுதியை கவனிப்பது, யார் இந்தத் தொகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு அனுசரணை யாக இருப்பது என்கின்ற அந்தப் போட்டியே தவிர வேறல்ல. நாளைக்கு நானே கூட ஒரு வேளை மீண்டும் முதல் அமைச்சராக உங்களுடைய அன்பால், அருளால் ஆகிவிட்டால் வேறொரு தொகுதியிலே நின்று வெற்றிப் பெற்று வருகின்ற எதிர்க் கட்சி எம்.எல்.ஏக்களை – அவர்கள் எதிர்க் கட்சி எம்.எல்.ஏ.க்கள் ஆயிற்றே என்று நான் வெறுக்க மாட்டேன். அவர்களையும் அனுசரித்து, அவர்களுக்கும் நிலைமைகளை எடுத்து விளக்கி, திருவாரூர் பகுதியிலே, இந்தத் தொகுதியிலே இன்னும் என்னென்ன வேலைகள் நடைபெற வேண்டும், இதுவரையில் நடைபெற்றுள்ள சாதனை கள் போதுமானவைகளா? பாதாளச் சாக்கடை ஆரம்பிக்கப்பட்ட முக்கால் பகுதி யிலே நிற்கிறது, இன்னும் கால் பகுதி நிறைவேற்றப்பட வேண்டும், அதற்கு ஒத்துழைப்பை நல்கக் கோருவேன். என்னோடு சண்டை போட்டவர்கள் – சண்டை போட்டவர்கள் அல்ல, என்னோடு போட்டி போட்டவர்களைக் கூப்பிடாமல் தான் இதைச் செய்வேன் என்று நான் எந்தக் காலத்திலும் அவ்வளவு ஜனநாயகம் தெரியாத வனாக இருக்க மாட்டேன். எல்லோரையும் அனுசரித்து, எதிர்க்கட்சியையும் மக்கள் கட்சி தான், அவர்களும் மக்களுக் காகப் பாடுபடுகிறவர்கள் தான் என்றெண்ணி அவர்களையும் சேர்த்துக் கொண்டு தான் திருவாரூர் தொகுதிக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வேனே அல்லாமல், நீ

தான் என்னோடு போட்டி போட்டு தோற்று விட்டாயே, நீ இந்தப் பக்கம் வராதே என்று சொல்லுகின்ற அளவிற்கு அற்பப் புத்தி படைத்தவனாக நான் இருக்க மாட்டேன்.

எல்லோரையும் அணைத்துக் கொண்டு இந்தத் தொகுதியின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவேன் என்ற உறுதியை உங்களுக்கெல்லாம் அளிக்கின்றேன். நான் மிகச் சாதாரணமானவன். இன்றைக்கு முதல் அமைச் சராக இருந்தாலும் கூட நான் மிகச் சாதாரணமானவன். சட்ட மன்றத்திலே ஒரு நாள், நான் முதல் அமைச்ச ராகப் பொறுப்பேற்ற போது, எதிர்த் தரப்பி லிருந்து ஒரு நண்பர் சொன்னார் – அ.தி.மு.க. வைச் சேர்ந்த நண்பர் சொன்னார் – இது கூசைன சுயமே முடிஎநசஅநவே – ஆங்கிலத்திலே சொன்னால் போதாதென்று தமிழிலும் "மூன்றாம் தர சர்க்கார்'' என்று சொன்னார். உடனே என்னுடைய தோழர்கள் எல்லாம் – சட்டமன்றத்திலே எம்.எல்.ஏக்களாக இருந்த தோழர்கள் எல்லாம் எழுந்து என்ன சொன்னாய்? என்ன சொன்னாய் என்று ஆத்திரத்திலே குதித்தார்கள். நான் அவர்களை யெல்லாம் கையமர்த்தி விட்டு சொன்னேன் – யாரும் பதட்டப்படக் கூடாது, அவர் ஒன்றும் தவறாகச் சொல்லி விடவில்லை. உண்மையைத் தான் சொன்னார். நாம் ஒப்புக் கொள்ளக் கூடிய உண்மையைத் தான் சொன்னார். இது மூன்றாம் தர சர்க்கார் என்றார், பிராமண, ஷத்திரிய, வைசிய, சூத்திர என்று சொல்லப் படுகிற இந்த நான்கு சாதிகளில் அவர் மூன்றாம்தர சர்க்கார் என்று சொல்லும்போது, அதை விட இது நான்காம் தர சர்க்கார் அதாவது சூத்திர சர்க்கார் என்பதைக் குறிப்பிடுவதற்காக சொல்லி யிருக்கிறார்.

அதற்காக நாம் பெருமையடைய வேண்டுமே தவிர அவரைப் பற்றித் தவறாக யாரும் கருதக் கூடாது என்றேன். இதைச் சொல்லி

இது பத்திரிகையிலே வந்த அடுத்த நிமிடம் திருச்சியிலிருந்து இளவல் வீரமணி அவர்கள் மூலமாக தந்தை பெரியார் இதைக் கேள்விப் பட்டு, எனக்கு தொலைபேசி மூலமாக வாழ்த்துக் கூறினார். உனக்கு எவ்வளவு துணிவு, சட்டசபை யிலேயே இது சூத்திர ஆட்சி என்று ஒப்புக் கொண்டு பேசியிருக்கிறாயே, எவ்வளவு தைரியம் இருந்தால் இப்படிச் சொல்லியிருப்பாய் என்றார். எல்லாம் உங்கள் கருணையால் வந்தது அய்யா என்று நான் சொன்னேன்.

நான் என்றைக்கும் என்னைப் பெரிய மனிதாக எல்லோரையும் விட மேம்பட்டவனாகக் கருதிக் கொண்டவன் அல்ல. அதனால் தான் திருவாரூரில் நான் நிற்க வேண்டுமென்று எல்லோரும் வலியுறுத்திய போது – நான் எண்ணிக் கொண்டேன் – இவ்வளவு காலம் வெவ்வேறு ஊர்களில் நாம் நின்று விட்டு – குளித்தலை என்றும், தஞ்சை என்றும், சென்னை சைதாப் பேட்டை என்றும், அண்ணா நகர் என்றும், துறைமுகம் என்றும், சேப்பாக்கம் என்றும் இப்படியெல்லாம் நின்று விட்டு இப்போது திருவாரூரில் நின்றால் எப்படி என்று கேள்வி வந்த போது – அப்போது தான் எனக்கு அந்தக் காலத் திலே நாம் ஒரு வேளை திருவாரூரிலே நின்று விடக் கூடாது என்பதற்காக செய்யப்பட்ட சூழ்ச்சி புரிந்தது. திருவாரூர் தனித் தொகுதியாக இருந்தது. நான் பூர்வீகத் தொகுதி என்று சொல்லிக் கொண்டு நின்றிருக்கலாம். ஆனால் இது பொதுத் தொகுதியாக அப்போது இல்லை. இந்தத் தொகுதி பொதுத் தொகுதியாக இல்லாமல் தாழ்த்தப்பட்டவர்களுக்கான, அரிஜனங் களுக்கான தொகுதியாக ஒதுக்கப்பட்டிருந்தது. இதிலே பொதுத் தொகுதி யிலே நிற்க வேண்டியவர்கள் நிற்க முடியாத நிலைமை இருந்தது. அதனால் தான் நான் இங்கே நிற்க முடியவில்லை. எப்போது இடம் கிடைக்கும் என்று காத்திருந்தேன்.

இப்போது பொதுத் தொகுதியாக ஆகி விட்டது என்று என்றைக்குச் செய்தி வந்ததோ – அன்றைக்கே இங்கே நாம் நின்று தான் தீர வேண்டும், ஏனென்றால் நான் உங்களில் ஒருவன், நீங்கள் என்னோடு உள்ளவர்கள், நான் இங்கிருந்து பத்து கல் தொலைவிலே உள்ள திருக்குவளையிலே பிறந்திருந்தாலும், திருவாரூரிலே தவழ்ந்து விளையாடி, என்னுடைய பால்ய நண்பர்களோடு இங்கெல்லாம் பந்து விளையாடி, இங்கே யிருக்கின்ற ஆஞ்சனேயக் கோவிலில், திராவிட இளைஞர்களின் சங்கத்தைத் தொடங்கி, இந்தத் தெருவிலே தம்பையா என்று ஒரு பெரிய மனிதர் இருந்தார், அவரை அழைத்து நீங்கள் இந்த இளைஞர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டு மென்று நானும் தென்னனும் சென்று கேட்டுக் கொண்டு, அவர் அதற்கு சம்மதித்தவுடன் அப்போதே, அந்த விளையாட்டுப் பருவத்திலேயே இந்தத் தெருவெல்லாம் பதாகைகளைக் கட்டி, "தலைமை தாங்கும் தம்பையாவே வருக, வருக'' என்றெல்லாம் வரவேற்பு வளைவுகளை கட்டி, அவரை வைத்து ஆஞ்சநேயர் கோவில் முன்னே பகுத்தறிவு பிரச்சாரம் நடைபெற்றது. அதை ஆஞ்சநேயரும் தடுக்கவில்லை, தம்பையாவும் தடுக்க வில்லை. காரணம் நாங்கள் எங்களுடைய குறைகளைச் சொன்னோமே தவிர ஆஞ்சனேயரை எதிர்த்துப் பழித்து இழித்து ஏதும் பேசவில்லை. எங்களுக்கு ஒரு இடம் தேவைப்பட்டது. எங்கள் சங்கத்தை வைத்துக் கொள்வதற்காக. ஆஞ்சனேயர் கோவில் அகலமான இடம் கூட அல்ல. கூட்டம் முடிந்த பிறகு நீங்கள் போய்ப் பார்த்தால் கூட தெரியும். இப்பொழுது சொல்கிறேன் – அகலமான இடம் என்று! குறுகிய இடம் தான் அது. அந்த இடத்திற்குள் தான் எங்கள் சங்கத்தை வைத்து – வாரம் ஓரணா சந்தா – இப்போது ஒவ்வொரு கட்சியிலும் என்ன சந்தா என்பதையும் எண்ணிப் பாருங்கள். நாங்கள் நடத்திய சங்கத்திலே வாரம் ஓரணா சந்தா என்று வைத்து நடத்திய அந்தக் காலத்தையும் எண்ணிப்

பாருங்கள். இப்படியெல்லாம் வளர்ந்து – வளர்த்து – கொஞ்சம் கொஞ்சமாக விளைவித்து – இளைஞர் களைத் திரட்டி – வாலிபர்களை யெல்லாம் ஓரணியிலே சேர்த்து – திருவாரூரிலே இருந்த திராவிட இயக்கத்தின் பெரியவர்கள், தீரர்களுடைய அரவணைப்பை யெல்லாம் பெற்று – இந்தத் திருவாரூர் மண்ணிலே உங்களையெல்லாம் கூட்டி வைத்து – நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் – இந்த ஜனநாயகக் கூட்டணியின் ஒரு வேட்பாளராக நிற்கிறேன் – நீங்கள் எல்லாம் எனக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்கின்ற அளவுக்கு வந்திருக்கிறேன்.

என்னை காங்கிரஸ் கட்சியின் பெரும் தலைவி, தியாகத் திருவிளக்கு, சோனியா காந்தி அவர்கள் என்னைப் பாராட்டி – தமிழ்நாடு இந்தியாவில் முதல் மாநிலமாக இருக்கிறது என்று சொல்கின்ற அளவிற்கு என்னை உருவாக்கிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் தருகின்ற ஆற்றலால் – நீங்கள் வழங்கியுள்ள சக்தியால் செய்திடுகிறேன். அதைப் போல – நிதியமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் என்னைப் பாராட்டியிருக் கிறார் என்று பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. இப்படி வட புலத்திலே உள்ள பெரிய மத்திய அமைச்சர்களின் பாராட்டுகளைப் பெறுகின்ற அளவிற்கு வளர்ந்திருக்கிறேன் என்றால் எங்களைத் தொட்டு, முத்தமிட்டு, தவழவிட்டு, எங்களைத் தாலாட்டி, அந்தத் தாலாட்டோடு கலந்தூட்டிய தமிழ் உணர்வு தான் – சுயமரியாதை உணர்வு தான் இந்த வளர்ச்சிக்குக் காரணம் என்பதை எடுத்துக் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

****

தி.மு.க. அறிக்கட்டளை
ஆய்வுத் துறை
நூல்
நிலையம்
சென்னை-18

